## உள்ளே...


1. இதயமெல்லாம் உன் நினைவு 5

2. உன் விழியில் விழுந்தேன் 135

3. என்னுயிர் நீதானே...! 252


# இதயமெல்லாம் உன் நினைவு

## 1

அதிகாலையில்... வானம் பன்னீர் தெளிக்க ஆரம்பித்தது. பூமி, மண் வாசனையை அனுப்பி மழையை வரவேற்கத் தொடங்கியது.

குளித்து உடை மாற்றிக் கொண்டு... பூஜைக்குரிய பூக்களைப் பறிப்பதற்காக பின்புறத் தோட்டத்திற்குள் புகுந்தாள் பார்கவி.

மழை பாடும் பள்ளியெழுச்சியில் ஒவ்வொரு பூக் களும், இலைகளும் சிலிர்த்துப் பரவசமடையும் அழகை... பார்வையால் வருடிக் கொடுத்தபடியே செம்பருத்திப் பூக்களைப் பறித்தாள்.

பவளமல்லி மரத்தை மெல்ல உலுக்கியதும்... முத் தும், பவளமும் சிதறுவது போல் பொலபொலவென்று பவளமல்லிப் பூக்கள் உதிர்ந்து... தங்களது நறுமணத்தை காற்றுக்கு வினியோகம் செய்தன.

ஆழ மூச்செடுத்து சுகந்த மணத்தை ரசித்த பார்கவி, மரத்தின் அடியில் கொட்டிக் கிடந்த பூக்களை அள்ளியெடுத்தாள்.

''ஏய்... கவி! மழையில நனைஞ்சுகிட்டே பூவைப் பறிக்க ஆரம்பிச்சுட்டியா? சாமி படத்துக்கும் உங்கம்மா படத்துக்கும் ஒரு நாள் பூ போடலைன்னா... குடியா முழுகிப் போகும்?

"கூறு கெட்டவ மாதிரி... காலங்கார்த்தால தோட்டத்துல மழையில் நனைஞ்சுட்டு நிக்கிறியே? அக்கம் பக்கத்துல இருக்கிறவங்க பார்த்தா என்ன நினைப்பாங்க?

"விடிஞ்சும் விடியாததுமா மூத்த தாரத்துப் பொண்ணை தோட்டத்துக்கு அனுப்பி மழையில நனைய வைக்கிறாளே சித்திக்காரின்னு... என்னைக் கண்டபடி பேச மாட்டாங்களா?''

''இ... இதோ வந்துட்டேன் சித்தி'' திடுக்கிட்டுத் திணறி பதில் கொடுத்த பார்கவி... மறுகணம் ஓட்டமும் நடையுமாக வீட்டிற்குள் புகுந்து... இடுப்பில் கை வைத்தபடி தன்னை முறைத்துப் பார்த்த சித்தி பூரணியின் மீது பயப் பார்வையை வீசினாள்.

''உன் மனசுல என்னதான் நெனச்சுட்டு இருக்கேன்னு தெரியலையே? தலையை நல்லா துவட்டு... காய்ச்சல் ஜலதோஷம்னு ஏதாச்சும் வந்துடப் போகுது'' அதட்டினாள் பூரணி.

அவளது குரலில் கடுமை வழிந்தாலும்... அந்த கணத்தில் சட்டென்று நெகிழ்ந்து தான் போனாள் பார்கவி.

''சரிங்க சித்தி'' பவ்யமாய் பதிலளித்து விட்டு நகர எத்தனித்தாள்.

''காய்ச்சல், தலைவலி, ஜலதோஷம்னு ஏதாவது வந்து தொலைச்சா நீ வேற சுருண்டு படுத்துக்குவே... ஆபீசுக்கும் மட்டம் போடுவே... சம்பளம் கட்டாகும்.



''பத்தும் பத்தாதுக்கு உன்னையும் நான் கட்டி அழணும். பக்கவாதம் வந்து படுக்கையில விழுந்து கிடக்கிற உங்கப்பனை கட்டியழுது அழுது என் ஜீவனே வத்திப் போகுது.

''இரண்டாம் தாரமா உங்கப்பாவுக்கு கழுத்தை நீட்டி இந்த வீட்டுலே அடியெடுத்து வச்ச நாள்லே இருந்து... என்ன சுகத்தை கண்டிருக்கேன்?

''என் தலையில எழுதி வச்சுட்டானே பகவான்? நான் நரக வேதனையை அனுபவிச்சுத்தானே ஆகணும்?...''

...சித்தி பூரணி தன் மீது காட்டிய அக்கறையில் நெகிழ்ந்து போயிருந்த பார்கவிக்குள் ஏமாற்றம் முற்றுகையிட்டது.

தணலின் மேல் நின்று கொண்டிருப்பதைப் போன்ற அவஸ்தையில் தவித்துப் போனாள்.

சித்தியின் கர்ண கடூரமான குரல்... அவளது செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது.

பூரணியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்ததால்... அவளை ஏறிட்டுப் பார்க்கவே பயமாக இருந்தது.

மெல்ல நகர்ந்து அடுக்களைக்குள் தஞ்சமடைந்தாலும்... அதற்கும் அர்ச்சனை நடக்கும்.

''என்ன நான் பேசிட்டிருக்கேன்... நீ பாட்டுக்கு அடுக்களைக்குள்ளே புகுந்துகிட்டே? 'அவ கத்திட்டு அடங்கட்டும் நம்ம வேலையைப் பார்ப்போம்'னு நெனக்கிறியா?

''என்னை என்னன்னு நெனச்சே? சித்திங்கிற மட்டு மரியாதை இருக்கா? நாய் மாதிரி குலைச்சுட்டுப் போகட்டும்னு நெனக்கிறியாடி?''

பயத்தில் அடுக்களைக்குள் அடைக்கலமானாலும் பிலுபிலுவென்று பிடித்து விடுவாளே சித்தி?

''என்ன மசமசன்னு நிக்கிறே? பாலைக் காய்ச்சி காபி போட்டு சீக்கிரமா குடு.''

''சரிங்க சித்தி! பாலைக் காய்ச்சி காபி போட்டுக் குடுத்துட்டு... நான் ஒரு நடை கோவிலுக்குப் போயிட்டு வந்துடட்டுமா?'' கெஞ்சும் குரலில் கேட்டாள் பார்கவி.

''நாள் கிழமை தவறாம கோவிலுக்குப் போறே... சீக்கிரமா உன்னோட வேண்டுதல் பலிச்சு கடவுள் கண்ணைத் திறக்கிறாரான்னு பார்க்கலாம்.

''பெத்த தாயை முழுசா முழுங்கிட்டு குத்துயிரும் கொலையுயிருமா கெடக்கற தகப்பனுக்கு பாரமா... துரதிர்ஷ்டக் கட்டையா தெண்டத்துக்கு நடமாடறே... துளி அதிர்ஷ்டத்தையும் சேர்த்துக் குடுங்கன்னு கடவுள் கிட்ட வரம் கேளு.''

சித்தி பூரணி வழக்கம் போல் ஒரு பாட்டம் பாடி பார்கவியைக் கரித்துக் கொட்டினாள்.

செம்பருத்திப் பூக்களை சாமி மாடத்தில் வைத்துவிட்டு துரித கதியில் அடுக்களைக்குள் நுழைந்தாள் பார்கவி.

அவளது விழிகளில் கண்ணீர் இமை விளிம்பைத் தொட்டு எட்டிப் பார்த்துவிட்டு உடைப்பெடுத்துக் கொண்டு வழிந்தது.

நாசூக்காய் துடைத்துக் கொண்டவள் சர்க்கரை, டிகாக்ஷன் சேர்த்து காபியை திட்டமாய் கலந்தாள்.

''சித்தி... காபி!'' டம்ளரை அவள் முன் நீட்டினாள்.

''கோவிலுக்குப் போயிட்டு வந்து... என்ன டிபன் பண்ணப் போறே?''

''மாவு இருக்கு சித்தி. இட்லி அவிச்சு தொட்டுக்க தக்காளிச் சட்னி வச்சிடவா?''

''நந்தா இட்லின்னாலே முகத்தை சுளிக்கிறான். அவனுக்கு சேமியா புட்டுன்னா உசிரு... அவனுக்கு புட்டு செஞ்சிடு...''



''ச... சரி சித்தி.''

''நந்தா எழுந்திட்டிருப்பான். காபி எடுத்துட்டுப் போயி அவனுக்குக் குடுத்துட்டு... கோவிலுக்குப் போ'' என்றபடி காபியை உறிஞ்சத் தொடங்கினாள் பூரணி.

பார்கவிக்கு உடல் முழுக்க ஒரு பயம் ஊடுருவியது. ''என்னடி மசமசன்னு நிக்கிறே? சீக்கிரம் போய் காபி கொடுத்துட்டு... கோவிலுக்குப் போயிட்டு வந்து டிபன் வேலையை கவனி'' அதட்டினாள்.

''போறேன் சித்தி.''

அறைக்கதவு திறந்து தான் இருந்தது. கட்டிலில் அமர்ந்தபடி அவ்வளவு காலையிலேயே சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான் நந்தன்.

''தூங்கி எந்திரிச்சதுமே உன்னைத்தான் நெனச்சேன். நீயே வந்துட்டே'' என்று அவளை ஆழமாய் ஊடுருவிப் பார்த்த நந்தனுக்கு வயது முப்பத்தைந்துக்கு மேலிருக்கும். ஆகிருதியான உடம்பு.

பூரணியின் கூடப் பிறந்த தம்பி தான் இவன். அப்பா சண்முக நாதனுக்கு பக்கவாதம் வந்து படுக்கையில் விழுந்ததிலிருந்து... பூரணியின் தம்பிக்கு துணிச்சல் துளிர் விட்டது. அவ்வப்போது வந்து சென்று கொண்டிருந்த நந்தன்... சமீப காலமாய் வீட்டோடு தங்கி விட்டான்.

பூரணிக்கு அடிக்கடி தூபம் போட்டு தூண்டி விட்டுக் கொண்டிருந்தான். இவன் வீட்டோடு தங்கியதும் பூரணியின் அக்கிரமச் செயல்களுக்கு அளவில்லாமல் போய் விட்டது.

பார்கவியை வேலைக்காரியைப் போல் விரட்டி, தான் வேலை வாங்குவது போதாதென்று... வக்கிர மனம்

படைத்த தனது தம்பி நந்தனுக்கும் பார்கவி சேவகம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டாள்.

பெரியவர்களின் பேச்சிற்குக் கட்டுப்பட்டு நடக்கும் பண்பான குணம் கொண்டவள் பார்கவி. எதிர்த்து வாயாடத் தெரியாதவள். பூரணி என்னதான் கொடுமை செய்தாலும்... அவளைத் தன் தாய்க்கு நிகரான ஸ்தானத்தில் வைத்துப் பார்த்துப் பழகி விட்டதால்... அவள் கிழித்த கோட்டை ஒரு போதும் பார்கவி தாண்டியதில்லை.

ஏவிய ஏவலுக்குப் பணிந்து செக்கு மாடாக அவள் உழைத்துக் கொட்டத் தயாராகத்தான் இருந்தாள். ஆனால் நந்தனின் சல்லித் தனமான பார்வையையும் பேச்சையும் தான் அவளால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

''மாமா... காபி'' டம்ளரை மேஜையின் மீது வைக்கப் போனாள்.

சிகரெட்டைத் தரையில் போட்டு நசுக்கியபடி, ''கவி! காபியை என் கையில் கொடுத்தா என்னவாம்?'' என்றான்.

பார்கவி காபியை அவனிடம் நீட்டினாள். டம்ளரை வாங்கும் சாக்கில் அவள் கையை வருடினான். சட்டென்று கையை உருவிக் கொண்டாள்.

தீயை மிதித்து விட்டாற் போல் பதறி... அறையை விட்டு வெளியேற முயன்றாள்.

''இரு, கவி! என்ன அவசரம்? டம்ளரை வாங்கிட்டே போயிடேன்'' என்றதும், பார்கவி தயங்கி நின்றாள்.

உள்ளுக்குள் பயத்தை ஏற்படுத்தும் தோற்றம் நந்தாவுக்கு. ''உட்காரேன்'' காபியை மெல்ல உறிஞ்சினான்.

''ப... பரவாயில்ல.''

''கோவிலுக்குக் கிளம்பணுமா? அக்கா கிட்டே நீ பேசிட்டிருந்ததை நான் கேட்டேன். எனக்காக வேண்டி சேமியா புட்டு பண்ணப் போறியா?''



''உம்!'' என்றாள் முகத்தைப் பார்க்காமல். ''நான் கிளம்பறேன். எனக்கு நிறைய வேலை கிடக்கு'' நகர முற்பட்டாள்.

''பிய்ச்சுகிட்டு ஓடறதிலேயே குறியா இருக்கியே... இந்தா'' டம்ளரை நீட்டினான். வாங்கிக் கொண்டு அவசரமாக வெளியேறினவளைப் பார்த்து ''ஒரு நிமிஷம் கவி'' என்றான்.

''தலைக்குக் குளிச்சிருக்கே... மழையில வேற நனைஞ்சிருக்கே.. இப்படியா துவட்டாம விடறது? பார்... இப்படி இருந்தா உடம்புக்கு ஏதாச்சும் வந்துடுமே?'' செல்லமாய்.. வெகு அக்கறையாய் கோபித்துக் கொள்வது போலிருந்தது நந்தனின் குரல்.

அவன் சொன்னது நிஜம்தான். பின் பக்கம் முதுகும் இடுப்பும் நனைந்து போயிருந்தது. பார்கவிக்கு கூசிப் போனது. அடுத்த கணம் அவள் அங்கில்லை.

புள்ளி மானாய் தாவி ஓடும் அவளை இமை கொட்டாமல் பார்த்தான் நந்தன். அவளது பின்புற உருவத்தைப் பாதிக்கு மேல் மறைத்திருந்தது கூந்தல். அவ்வளவு நீளமான அடர்ந்த கூந்தல்.

தாழம்பூவின் நிறம், கரிய பெரிய விழிகள், சிறிய உதடுகள், நீளமான மூக்கு, குழி வெட்டிய மோவாய், கண்ணாடியாய் பளபளத்த கன்னங்கள்... என்று களை சொட்டிய முகமும், பூசினாற் போன்ற தேகமுமாய்... ஒரு தேவதையாய் ஜொலித்தாள்.

விடு விடென்று நடையை எட்டிப் போட்டு 'வீர பாண்டி' அம்மன் கோவிலை நோக்கி விரைந்தாள் பார்கவி.

நந்தனை நினைத்த மாத்திரத்தில் அவளுக்கு உள்ளுக்குள் உதறலெடுத்தது.

கண்ணும் கருத்துமாய் இமை போல் காக்க வேண்டிய தந்தை சண்முக நாதன், பக்கவாதத்துடன் படுக்கையில் விழுந்து விட்டார்.

எதிர்காலமே சூனியமாய் தெரிந்தது. மனதுக்குள் வெளிச்சப் புள்ளியே இல்லாத அந்தகார இருள் சூழ்ந்து கொண்டிருந்ததால்... துக்கம் பந்தாய் எழும்பி அவளது தொண்டையை அடைத்தது.

## 2

அன்று வெள்ளிக்கிழமை என்பதால் வீரபாண்டி கவுமாரி அம்மன் சன்னதியில் கூட்டம் திமுதிமுத்தது.

அம்மனைக் கண் குளிர சேவித்துவிட்டு கண்ணீர் மல்க பிரகாரத்தை வலம் வந்தாள்* பார்கவி. தூறல் நின்றதும், மேகக் குவியலிலிருந்து எட்டிப் பார்த்தான் சூரியன்.

அப்பா சண்முகநாதன் ஒரு சங்கீத வித்வான். தேனிக்கு அருகில் உள்ள 'வீரபாண்டி' கிராமத்திலிருந்த உயர் நிலைப் பள்ளியில் பாட்டு வாத்தியாராகவும் பணியாற்றியவர்.

இதே கோவிலில் மார்கழி மாதத்தில் பலமுறை அவர் கச்சேரி செய்ததுண்டு. அவர் பாட ஆரம்பித்தால் இசையில் நாட்டமில்லாதவர்கள் கூட மணிக்கணக்கில் உட்கார்ந்து கண்களை மூடி தலையை ஆட்டி... ரசித்துக் கேட்பார்கள்.

கேட்பவர்களின் மனதைக் கட்டிப் போடும் தெய்வீகக் குரலுக்குச் சொந்தக்காரர் சண்முகநாதன்.

பூவோடு சேர்ந்த நாரும் மணப்பது போல... பார்கவியின் தாய் தெய்வானையும் நல்ல சங்கீத ஞானம் கொண்டிருந்தாளாம். இசை வெள்ளத்தில் திளைத்த தம்பதிகளுக்கு பத்து வருடங்கள் கழித்துப் பிறந்தவள் தான் பார்கவி.



தெய்வானை கருவுற்றதும் அவளை தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தாங்கினார் சண்முகநாதன்.

கூடத்து ஊஞ்சலில் கம்பீரமாக அமர்ந்தபடி சண்முக நாதன் தினம் ஒரு ராகத்தில் பாட... கூடத்துத் தூணில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி ரசித்துக் கேட்பாளாம் தெய்வானை.

கருவுற்ற நாளிலிருந்தே இசையைக் கேட்டு ரசித்ததாலோ என்னவோ... பார்கவிக்கும் பிறவியிலேயே சங்கீத ஞானம் வாய்த்து விட்டது.

சிறு குழந்தையாக இருக்கும்போதே இது கல்யாணி ராகமா, பூபாளமா, காம்போதியா, ரஞ்சனியா, ஸ்ரீரஞ்சனியா, சஹானாவா, முராரியா என்று டக்கென்று இனம் பிரித்துச் சொல்லும் அளவுக்கு... இசையில் ஈடுபாடு கொண்டிருந்தாள்.

ஒருமித்த மனம் கொண்டு ஒற்றுமையாய் வாழ்ந்த தம்பதிகள் மீது யார் கண் பட்டதோ தெரியவில்லை காமாலை காய்ச்சலில் இருபது நாட்கள் படுத்த தெய்வானை... பூவோடும் பொட்டோடும் போய் சேர்ந்து விட்டாள். அன்புக்குரிய மனையாளின் மறைவுக்குப் பின்பு சண்முக நாதன், சர்வ சக்தியையும் இழந்து விட்ட தினுசில் நடைப் பிணமாக நடமாடினார்.

நெருங்கிய உறவினர்கள் என்று சொல்லிக் கொள்ளும்படியாக யாரும் கிடையாது. இருந்த ஒன்றிரண்டு சொந்தங்களும் 'காரியம்' முடிந்ததும் கழன்று கொண்டனர். விட்டத்தை வெறித்துக் கொண்டு எத்தனை நாட்கள் அமர்ந்திருப்பதாம்?

மூன்றரை வயதுப் பெண் குழந்தைக்காக வேண்டியாவது... அவர் சம்பாத்தியம் செய்து தானே தீர வேண்டும்? தெய்வானை இருந்த வரையில் அடுப்படி பக்கமே அவர் எட்டிக்கூட பார்த்ததில்லை.

மனிதர் பாவம்! விழி பிதுங்கித்தான் போனார். அந்தப் பகுதியின் கவுன்சிலராக இருந்த வரதராஜன், சண்முக நாதனின் நெருங்கிய நண்பர். அவரது மனைவி காந்திமதி அம்மாளும் தெய்வானையுடன் நெருங்கிப் பழகியவர்.

கணவன் மனைவி இருவருமே சண்முகநாதனின் மீது அபிமானமும் அக்கறையும் கொண்டவர்கள். மனைவியை இழந்து சின்னப் பெண் குழந்தையை வைத்துக் கொண்டு திண்டாடும் சண்முகநாதனை... அவ்வப்போது வந்து பார்த்துச் செல்வதோடு... மறு கல்யாணம் செய்து கொள்ளும்படியும் வற்புறுத்தினர்.

''சண்முகம்! உனக்கு வேணா மனைவிங்கற பந்தம் தேவைப்படாம இருக்கலாம். ஆனா இந்தப் பெண் குழந்தையை மனசுல வச்சுப் பார்க்க வேணாமா?

''பெண் குழந்தைக்கு வளர வளர ஒரு தாயோட கவனிப்பும், அரவணைப்பும் கண்டிப்பா தேவை. இவளோட எதிர்காலத்தை மனசுல வச்சுக்கிட்டாவது ஒரு நல்ல முடிவா எடு.''

எத்தனையோ முறை வற்புறுத்தியும் அசைந்து கொடுக்காத மனிதர்... மகளின் எதிர்காலத்தை முன்னிட்டு, பிடிவாதத்தைத் தளர்த்தி மெல்ல இறங்கி வந்தார்.

இந்த மட்டும் சண்முகநாதன் சம்மதித்ததே பெரிய விஷயம். தரகர் மூலமாக வந்த வரன்களில் ஏழைப் பெண்ணாகப் பார்த்துத் தேர்வு செய்தனர். வயிற்றுப் பாட்டிற்கே திண்டாடும் குடும்பத்திலிருந்து வந்தவள் தான் பூரணி.

நீண்ட காலம் திருமணம் குதிராமல் இருந்த முதிர் கன்னி. இரண்டாம் தாரமென்ன? எட்டாம் தாரமாகக் கூட கழுத்தை நீட்டி தாலி வாங்கிக் கொள்ளத் தயாராக இருந்தவள் தான்.



வறுமையில் உழன்றவள்... கண்டிப்பாக மூத்த தாரத்துக் குழந்தையை அன்பும் பாசமுமாய் வளர்ப்பாள் என்று தான் வரதராஜன் தம்பதியினரும், சண்முகநாதனும் நம்பினார்கள்.

அவர்கள் நம்பியது போலவே... ஆரம்பத்தில் பூரணியும் நல்ல விதமாகவே நடந்து கொண்டாள். அவ்வப்போது அவளைப் பார்க்க வந்து சென்ற பூரணியின் தாயும், அக்காளும் அடிக்கடி அவளது மனதைக் கலைத்து 'வேப்பிலை' அடித்தனர்.

''தோ பாரு பூரணி! வயசான ஆளைக் கல்யாணம் கட்டிக்கிட்டே. ஊரு உலகத்துல இல்லாத குழந்தையைப் பெத்துட்ட தினுசுல மனுஷர் உருகறாரே? சம்பளத்தைக் கொண்டாந்து உன் கையில குடுக்கிறாரா... இல்லையா?

''எல்லாத்தையும் அந்தக் குட்டிக்கே வாரிக் குடுத்துடுவாரு போல... உன் வயத்துலேயும் புழு பூச்சி உருவாகித் தொலைக்க மாட்டேங்குது. கடைசி காலத்துல யாரு உனக்கு கஞ்சி ஊத்துவாங்க? அதிகாரத்தை உன் கையில எடுத்துக்கோ! நீ நிர்வாகம் பண்ணு.

''எல்லாத்தையும் சுருட்டி உனக்கு சேர்த்து வச்சுக்கோ. இல்லன்னா... பிற்காலத்துல நீ ரொம்பவே கஷ்டப் படுவே.''

ஆரம்பத்தில் எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் தான் இருந்தாள் பூரணி. சண்முகநாதனுக்கும் பரிபூரண நம்பிக்கை ஏற்பட்டது. பூரணி கர்ப்பமடைந்தாள்.

அவ்வளவுதான்! அவள் தனது உண்மையான சொரூபத்தைக் காட்டத் தொடங்கினாள்.

எதற்கெடுத்தாலும் சண்டை போட்டாள். பஜாரித்தனமாக கத்தித் தீர்த்தாள். அதிர்ந்து பேசத் தெரியாத

தெய்வானை எங்கே? எட்டு ஊருக்குக் கேட்கும்படி கத்தித் தீர்க்கும் பூரணி எங்கே?

பூரணியின் கர்ண கடூரமான குரலுக்கு பயந்தே... சண்முகநாதன் சட்டென்று அடி பணிய ஆரம்பித்தார். சொந்த வீட்டில் மதிப்பும் மரியாதையுமாக கவுரவமாக வாழ்ந்து பழகி விட்டவர்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு வேடிக்கைப் பொருளாகத் தான் ஆளாவதை சகிக்காமல்... வாய் மூடி மௌனியானார். நல்ல விதமாக எடுத்துக் கூறினால், கேட்டுக் கொள்ளும் பண்பு அவளிடம் இல்லை.

ஆலைச் சங்கு போல கத்தி ஊரைக் கூட்டுபவளிடம் என்னத்தை எடுத்துச் சொல்வது? விட்டால் போதும் என்று விலகவும் அவளுக்கு மிகவும் சவுகரியமாகப் போய் விட்டது.

அதுவரை பெட்டியில் வைத்துப் பூட்டி இருந்த தெய்வானையின் ஐம்பது சவரன் நகைகளும் இடம் மாறி... பூரணியின் உடம்பை அலங்கரித்தன.

சங்கோஜமே இல்லாமல் சதா மொத்த நகைகளையும் மாட்டிக் கொண்டு வளைய வந்தாள். தனக்குப் பிறந்த குழந்தை நித்யாவின் மீது பாசத்தை மழையாகப் பொழிந்தாள்.

ஏழு வயதிலிருந்தே பார்கவி வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விட்டாள். பூரணி வாயைத் திறந்து 'எள்' என்று சொல்வதற்குள் 'எண்ணெயாக' நின்றாள்.

முறைப்படி சங்கீதத்தை தந்தையிடம் கற்றுத் தேர்ந்த துடன் பெரிய குளம் கல்லூரியில் பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயின்ஸும் முடித்து விட்டாள்.

மாலை நேரங்களில் கம்ப்யூட்டர் கிளாஸுக்குச் சென்று சில கம்ப்யூட்டர் கோர்ஸ்களைப் படித்து முடிக்க...



பார்கவி ஆசைப்பட்டபோது பூரணி தடையேதும் சொல்லாமல் பச்சைக்கொடி காட்டியதற்கும் ஒரு காரணம் இருந்தது.

'கண்ணுக்கு லட்சணமாக இருக்கிறாள்... அதோடு நல்ல படிப்பு என்ற தகுதியும் கூடுதலாக இருந்தால்... அதற்கு ஆசைப்பட்டு 'வரதட்சணை வேண்டாம்' என்று கூறி எவனாவது அவளைக் கட்டிக் கொண்டு போவான் அல்லவா? செலவும் மிச்சம்.'

இப்படித்தான் பூரணி திட்டம் போட்டாள். ஆனால் சமீப காலமாக நந்தன், அவளை வேறு விதமாகத் திசை திருப்பி விட்டான்.

"அக்கா! இந்த வீட்டை இந்தாளு சுயமா சம்பாதிச்சுக் கட்டிட்டாரா? இல்லேல்ல? பார்கவியோட அம்மா சீதனமா கொண்டு வந்ததாமே? இது பரம்பரை சொத்து... நேரா பேத்திக்குத் தான் சேரும்.

"இந்தாளு இதை உன் பேருக்கு எழுதி வச்சாலும் அது செல்லாது. உனக்குக் கிடைச்ச அம்பது சவரன் நகைங்க... பேங்குல இந்தாளு போட்டு வச்சிருக்கிற சில லட்சங்கள் இத்தோட நீ திருப்தி பட்டுக்கணும்.

"நித்தியை நல்லா படிக்க வச்சு ஜாம் ஜாம்னு கட்டிக் கொடுக்கணும். உன்னோட கடைசி காலம் வரைக்கும் ஜீவனம் தள்ளறதுக்கு கையிருப்பு இருக்கணும். யோசிச் சியா?" கண்களை இடுக்கிக் கொண்டு அவன் கேட்க பூரணிக்கு பகீரென்றது.

"என்னடா இது? குண்டைத் தூக்கிப் போடுறே? இன்னிக்கு இல்லாட்டியும் நாளைக்கு யார் தலையிலாவது பார்கவியை கட்டப் போறோம். அப்போ... கவியைக் கட்டிக்கப் போறவனுக்கு இந்த வீடு போய் சேர்ந்துடுமா?

''அந்த தறுதலையை நல்லா படிக்க வச்சேனே? சல்லிக்காச செலவு பண்ணாம... எந்த இளிச்ச வாய னாவது தப்பித் தவறி வந்தா தலையில கட்டலாம்னு நான் இருக்கேன். இந்த வீடு வேற அவளுக்கே போயிட்டா என் கதி?

''நித்தி வேற குதிரா வளர்ந்து நிக்கிறா... கடைசியில நாங்கள் நடுத்தெருவுல தான் நிக்கணுமா? இந்த வீட்டை விட்டு என்னால எங்கேயும் போக முடியாது. நந்தா!... நந்தா! நா என்னடா பண்ணுவேன்? ஏதாவது வழி சொல் லுடா?'' குரலில் பதற்றம் வழிந்தோட தம்பியைக் கெஞ்ச ஆரம்பித்தாள் பூரணி.

''ஒரே ஒரு வழி தான் இருக்கு'' பீடிகை போட்ட நந்தனை திகைப்புடன் பார்த்தாள்.

''சீக்கிரமா சொல்லுடா... எனக்குப் படபடன்னு வருது.''

''யாரோ ஒரு மூணாவது மனுஷன்... அவளுக்குத் தாலி கட்டி இந்த வீட்டை எடுத்துக்கிறதுக்கு பதிலா... நானே அவளுக்குத் தாலி கட்டி... இந்த வீடு வேற யார் கைக்கும் போகாம பாத்துக்கலாம் இல்லியா?'' கோணலாக சிரித் தான் நந்தன்.

''அட ஆமாண்டா! இந்த விஷயம் எனக்கு இப்பத் தானே... புத்திக்கு எட்டுது. கவி உனக்குத்தான்! இந்த வீடும் நமக்குத் தான்.''

நிலைப்படியில் நின்றவாறு இதைக் கேட்ட சண்முக நாதனுக்கு காலடியில் தரை நகர்ந்து செல்வது போலி ருந்தது.

திகிலும், பயமும் அவரது உடலெங்கும் பரவின. அதீத அதிர்ச்சியால் தலை சுற்றியது. தடாலென்று கீழே விழுந்து மூர்ச்சையானார்.





# 3

''பார்கவி'' பலத்த சிந்தனையில் மூழ்கியபடி பிரகாரத்தை வலம் வந்து கொண்டிருந்தவள்... சட்டென்று நினைவு கலைந்து திரும்பிப் பார்த் தாள்.

பக்கத்து வீட்டுப் பங்கஜம் நின்று கொண்டிருந்தார். அவருக்கு கிட்டத்தட்ட தெய்வானையின் வயதிருக்கும். தெய்வானையுடன் நகமும் சதையுமாக நெருங்கிப் பழகியவர் என்பதால்... பார்கவியின் மேல் அலாதிப் பிரியமும் பரிவும் காட்டுபவர்.

''எப்போ வந்தீங்க அம்மா?'' பார்கவியின் கண்கள் சிவந்து, அவளது நீண்ட இமைகள் இன்னமும் ஈரத்தில் பளபளத்தன.

விஜயவாடாவில் இருக்கும் தனது மகனின் வீட்டிற்குச் சென்றிருந்தார் பங்கஜம். திரும்பி வருவதற்கு ஆறு மாதங்களாகும் என்று கூறிவிட்டு கணவருடன் சென்ற வர்... கால்களில் வெந்நீர் ஊற்றிக் கொள்ளாத குறையாக இரண்டே வாரங்களில் வந்து நிற்கிறாரே?

உள்ளுக்குள் ஆச்சரியம் முளைவிட அவரை ஏறிட்டாள்.

''நேத்தைக்கே வந்துட்டோம். பிரயாணக் களைப்பில அடிச்சுப் போட்டாப்பல அசந்து தூங்கிட்டேன் கவி. திருப்பதிக்குப் போயிருந்தோம். சாயந்தரம் வேலையை விட்டு வர்றப்போ... வீட்டுக்கு ஞாபகமா வந்து பிரசாதம் வாங்கிக்கோ கவி.''

''சரிங்க அம்மா. நான் சிவன் கோவிலுக்குப் போயிட்டு வீட்டுக்குக் கிளம்பணும். டிபன் வேலை, அப்பாவுக்கு கஞ்சி தயாரிச்சுட்டு நான் வேலைக்கு ஓடணுமே? சாயந் தரம் வந்ததும் நிதானமா நாம்ப பேசலாம்.''

இருளடைந்து சோகம் கப்பியிருந்த முகத்தில் புன்னகை அரும்பியதும்... மின்னல் வெட்டியதைப் போன்றிருந்தது.

''மகராசி! சித்தி கிட்டே சித்ரவதை பட்டுட்டிருக்கே... உனக்கு என்னிக்கு விடிவு காலம் பொறக்கப் போகுதோ தெரியல்லியே?''

''சாயந்தரம் வரும்போது டவுண்லேர்ந்து ஏதாச்சும் வாங்கிட்டு வரணுமா அம்மா? தினப்படி நீங்க சாப்பிட வேண்டிய மாத்திரை எல்லாம் இருக்கா?'' அவளது அக்கறையான கேள்விகள்... பங்கஜத்தின் மனதை நெகிழ வைத்தன.

''ராஜாத்தி! பெத்த பசங்க கூட இவ்ளோ அக்கறையா என்கிட்ட விசாரிச்சதில்ல... பி.பி. சுகர் மாத்திரைகளை வாங்கிட்டு வந்துடு கவி.''

''சரிங்க அம்மா... அப்புறமா பார்க்கலாம்'' அவசர அவசரமாக நடையை எட்டிப் போட்டு சிவன் கோவிலுக்குள் புகுந்து 'கண்ணீஸ்வரமுடையாரை' கண் குளிர தரிசித்து விட்டு வெளிப்பட்டாள்.

படித்துறையைத் தொட்டுத் தழுவிக் கொண்டு சுழித்து சுழித்து சலசலத்துக் கொண்டிருந்தது முல்லையாறு.

கோவிலைச் சுற்றிலும் அடர்ந்த சோலை மரங்கள். பச்சைப் பசேல் என்று கண்ணைக் கட்டிப் போட்டு பரிசுத்தமான குளிர் காற்றைப் பிரசவித்துக் கொண்டிருந்தன.

படித்துறையில் இறங்கி முல்லையாற்றில் கால்களை நனைத்த வண்ணம் நிம்மதியாய் நிச்சலனமாய் சற்று நேரம் அங்கேயே அமர்ந்திருக்க வேண்டும்... என்று ஆலாய்ப் பறந்த மனதைத் தட்டி அடக்கியபடி நடந்தாள் பார்கவி.



சிறுவயதில் திருவிழாக் காலங்களில் அப்பா கச்சேரி செய்து முடித்ததும் அவரது கையைப் பிடித்துக் கொண்டு பெருமிதமாய் கோவில் வளாகத்தில் வலம் வருவாள்.

'கணீர்' என்ற குரலில் பாடி அனைவரது மனங்களையும் இசைப் பிரவாகத்தில் தள்ளிய தந்தை இப்போது பக்கவாதம் வந்து... வலது பக்கம் முழுவதும் செயலிழந்து... வாய் கோணி குழறிக் குழறிப் பேசுகிறார்.

வாதத்தில் குழறிப் பேசுவதால்... அவர் பேசும் வார்த்தைகள் பெரும்பாலும் புரிவதில்லை. மிகவும் பிரயத்தனம் செய்து குழறிப் பேசுகையில்... பார்கவிக்கு துக்கம் பீறிட்டுக் கொண்டு வரும்.

'யாருக்கு என்ன பாவம் செய்தார் அப்பா? எதனால் இப்படியொரு வியாதி வந்தது? யார் கண் பட்டதோ தெரியவில்லையே... தனது தெய்வீகக் குரலையே இழந்து விட்டாரே?

தனக்கென்று இந்த உலகத்தில் இருக்கும் ஒரே ஜீவனின் நிலைமையும் இப்படியா ஆக வேண்டும்? வேதனை தாளாமல் தினமும் நெஞ்சு வெடிக்கும் அளவு மவுனமாகக் கண்ணீர் உகுத்தாள் பார்கவி.

நிலைப்படியில் நின்றபடி பூரணியும் ரங்கனும் அன்று பேசுவதைக் கேட்ட சண்முகநாதன் அதிர்ச்சியின் உச்சக்கட்டத்திற்கே சென்று விட்டிருந்தார்.

'அடப்பாவிகளா? உங்கள் கொடுமைக்கு அளவே கிடையாதா? கடைந்தெடுத்த பொறுக்கிப் பயல் நந்தன்... அருமை மகள் பார்கவியை கல்யாணம் செய்து கொள்ளப் போகிறானா? நான் உயிருடன் இருக்கும்போதே... செல்ல மகள் கதியற்று நிற்கிறாளே? இந்தப் பூரணி என்னதான் நினைத்துக் கொண்டாள்? ஊகூம்! இதற்கு ஒருக்காலும் சம்மதிக்கக் கூடாது.'

வேதனை மேலீட்டால் அவரது உடம்பு பதறி நாடி நரம்புகள் அனைத்தும் 'வெட்' 'வெட்' என்று இழுத்தன. அடுத்த கணமே தடாலென்று வேரற்ற மரம் போல் வீழ்ந்து விட்டார்.

கட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருந்த சண்முக நாதனை ஆராய்ந்து விட்டு டாக்டர் ஊசி போட்டார். கவலையுடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்த பார்கவிக்கு உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்டியது.

''பக்கவாதம் வந்துட்டதும்மா... ரொம்ப காலமா பி.பி. இருந்திருக்கும் போலிருக்கே? தொடர்ந்து மாத்திரை போட்டுக்காம கவனக் குறைவா அவர் இருந்திருக்காருன்னு நெனக்கிறேன். பி.பி. சுகர் இரண்டுமே வரக்கூடாத நோய்கள். அது வந்துட்டதுன்னா... நாம்ப தான் கவனமா அதுக்குத் தகுந்த சிகிச்சை எடுத்துக்கணும்.

''அஜாக்கிரதையா இருந்தா இப்படித்தான்... பெரிசா எதுலேயாவது கொண்டு தள்ளிடும். இல்லன்னா... உயிருக்கே உலை வச்சுடும். உங்கப்பா ஏகத்துக்கும் டென்ஷன் படுவாரா?

''கவலை, கோபம், அதிர்ச்சி, டென்ஷன் இவைகள் எல்லாம் பி.பி. வியாதிக்கு பயங்கரமான எதிரிகள். நான் சில மாத்திரைகள் எழுதித் தரேன். தவறாம குடுங்க.

''அவருக்கு காலையில, மாலையில மறக்காம செயல் இழந்த பாகத்துல ஆயில் தடவி மசாஜ் குடுங்க. கை, காலைப் பிடிச்சு அசைவு குடுங்க... அவரைக் கைத்தாங்கலா பிடிச்சுக்கிட்டு நடக்க வைங்க... இனிமே எல்லாம் உங்க முயற்சியிலேதான் இருக்கு'' நீளமாகப் பேசிவிட்டு நகர்ந்தார் மருத்துவர்.

வேதனையிலும் அசதியிலும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த தந்தையைக் கண்டு விக்கித்து நின்றாள் பார்கவி.



கணவருக்கு பக்கவாதம் வந்து விட்டதே என்று கொஞ்சம் கூட பூரணி விசனப் பட்டதாகத் தெரியவில்லை.

''ஏண்டா நந்தா! இந்த வியாதி வந்தாக்க... நிறைய செலவாகும்னு சொல்வாங்களே? இரத்தக் கொதிப்பு இருக்குன்னு முன்னாடியே இவருக்குத் தெரிஞ்சிருக்கணும் இல்லையா? அதுக்குத் தகுந்த மாத்திரைகளை முழுங்கித் தொலைச்சா என்ன?

''வெள்ளையும் சொள்ளையுமா மடிப்புக் கலையாம கதர் வேட்டி கட்டிக்கிட்டு வலம் வந்தா ஆச்சா? மனுஷனுக்கு ஒரு புத்தி வேணாம்? வியாதி சின்னதா இருக்கும் போதே தக்க வைத்தியம் செஞ்சிருந்தா... கை கால் விழுந்திருக்காது இல்லே?

''துப்பு கெட்ட மனுஷன்! இவ்ளோ பெரிய இக்கட்டை இழுத்து விட்டுருக்காரே இந்த மனுஷன்? இவருக்கு வாழ்க்கைப்பட்டு நான் துக்கப்பட்டது தான் மிச்சம். பாழாய் போன கூறு கெட்ட மனுஷன்.''

''என்ன சித்தி இது? அப்பா ஆசைப்பட்டா... இந்த வியாதியை வரவழைச்சாரு? செலவை இழுத்து விட்டுட்டாருன்னு பேசறீங்களே? அப்பாவுக்கு இது தெரிஞ்சா ரொம்பக் கவலைப்படுவாரு.

''அவருக்கு அது நல்லது இல்லே சித்தி! அப்பாவுக்கு ஏதாச்சும் ஒண்ணு ஆகிட்டா... அந்த இழப்பு எனக்கு மட்டும் இல்ல. உங்களுக்கும் சேர்த்து தான்னு புரிஞ்சுக்காம பேசறீங்களே?'' அழுகைக்கு இடையில் வெடித்தாள்.

''வாடி! என் சக்களத்தி மகளே? இந்த வக்கத்த மனுஷனுக்கு வக்காலத்து வாங்க வந்துட்டா... இவரைக் கட்டிக்கிட்ட நாள்லே இருந்து... எனக்கு எல்லாமே இழப்பு தான். புதுசா இழப்பு வரும்னா.. அது இழவாத் தானிருக்கும்.

"ஆஸ்பத்திரிக்கு நடத்திக் கூட்டிப் போயி... உடம்பைக் காட்டிக்கிற சாதாரண வியாதியா வந்திருக்கு? ஒரு பக்கம் முழுசா விளங்காம படுக்கையில விழுந்தாச்சு. டாக்டரை வீட்டுக்கு வரவழைச்சுப் பார்க்கணும். எவ்ளோ செல வாகும்?

"கட்டுக் கட்டா சம்பாதிச்சு பீரோ கொள்ளாம அடுக்கி வச்சிருக்காரா உங்கப்பா? துட்டுக்கு என்ன பண்றதாம்? பைசா பெறாட்டியும்... பிச்சைக்கார கழுதைக்கு வாயைப் பாரேன்."

அம்மாவின் நகைகள், பேங்கில் உள்ள சில லட்சங்கள், அப்பாவின் பென்ஷன் பணம், பார்கவியின் சம்பளம்... அத்தனையையும் பூரணி தானே ஆண்டு அனுபவிக் கிறாள். இது பற்றி சித்தியிடம் வாயைத் திறந்து எதை யாவது கேட்க முடியுமா?

துக்கத்துடன் கீழுதட்டைக் கடித்துக் கொண்டு... நாக்கின் நுனி வரை வந்து நின்ற வார்த்தைகளை மென்று விழுங்கினாள்.

கன்னத்தில் வழிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு துரித கதியில் நடந்து வீட்டை அடைந்தாள்.

கூடத்தை ஒட்டிய அறையில்தான் அப்பா படுத்துக் கொண்டிருந்தார். அவசரமாக சத்து மாவுக் கஞ்சியைக் காய்ச்சியெடுத்துக் கொண்டு அந்த அறைக்குள் நுழைந் தாள்.

அவசரத்திற்கு சுருட்டிப் போட்ட படுக்கை விரிப்பாய் கட்டிலில் கிடந்தவர், காலடிச் சத்தம் கேட்டு விழிகளை மலர்த்தினார்.

"கஞ்சி சாப்பிடறீங்களாப்பா?" டம்ளரை மோடாவில் வைத்தாள்.



"ஒன்றும் அவசரமில்லை. பாவம்! உன் வேலையை கவனி" என்பது போல் அவர் பரிவுடன் சைகை காட்ட... மெல்ல முறுவலித்து விட்டு அடுக்களையை நோக்கி விரைந்தாள்.

"ஏய்... கவி! நித்திக்கு காபி போட்டுக் குடுத்தியா? எல்லாம் நாந்தான் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கு. மதியத்துக்கு புளியோதரையும், வெங்காயச் சட்னியும் வச்சிடு. நித்திக்கு சேமியா புட்டு வேணாமாம்.

"அவளுக்கு தனியா மூணு தோசை வார்த்துடு. தொட் டுக்க காரசாரமா கொத்தமல்லித் துவையல் செய்துட்டா... குழந்தை நல்லா சாப்பிடுவா... பாவம். சரியா?"

"ச... சரிங்க சித்தி."

அடுக்கடுக்காய் எத்தனை வேலைகள்?

இமைக்கரையைத் தாண்டி வழிந்து செல்லட்டுமா? என்று கண்ணீர் வினவியது.

சிரமப்பட்டு கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு பம்பரமாய் சுழன்றாள்.

கலைந்த கூந்தலை வாரிப் பின்னலிட்டுக் கொண்டு மேசை மேலிருந்த ஹேண்ட் பாக்கில் டிபன் பாக்ஸை திணித்துக் கொண்டாள்.

"நான் வரேன் சித்தி."

கூடத்து ஊஞ்சலில் அமர்ந்திருந்த பூரணி, ஓட்டமும் நடையுமாக தெருவில் இறங்கி நடந்த பார்கவியை கண் கொட்டாமல் பார்த்தாள்.

கவலை ஒரு பக்கம் பார்கவியை ஆட்டிப் படைத் தாலும்... இனம் புரியாத பயமும் அவளது மனதைக் கவ்விக் கொண்டிருந்தது நிஜம்!

சித்தியின் ரூபத்தில் மிகப் பெரிய பிரச்சினை ஒன்று, அவளுக்காக வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்தது.

# 4

இடியாப்பத்தைப் பிட்டு குருமாவில் தோய்த்து வாய்க்குள் திணித்துக் கொண்ட கிரீசன், பரிமாறிக் கொண்டிருந்த அம்மா விசாலத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

நெற்றியில் பளிச்சென்று துலங்கிய குங்குமம், காதுகளில் வைரத் தோடுகள், அவ்வப்போது டாலடித்து அந்த முகத்திற்குப் பொலிவு சேர்த்த வைர மூக்குத்தி, இரு கைகளிலும் டஜன் கணக்கில் தங்க வளையல்கள்...

மேனியை அலங்கரித்த பட்டுச் சேலை, கழுத்தை நிறைத்த நகைகள்... இவையெல்லாம் விசாலம் ஒரு பணக்கார வீட்டுப் பெண்மணி என்று பறை சாற்றிக் கொண்டிருந்தன.

''கொஞ்சம் குருமாவை போட்டுக்கறியா கிரி?''

''வேண்டாம்... போதும் அம்மா! நீங்க உட்காருங்க'' பரிவுடன் அதட்டிய மகனைப் பார்த்து முறுவலித்துவிட்டு மெல்ல அமர்ந்தார் விசாலம்.

கண்களில் கருவளையம்... அந்த அழகிய முகத்தில் ஏகத்திற்கும் ஏக்கம் படர்ந்திருந்தது. தாயின் தோற்றத்திற்கு சற்றும் பொருத்தமில்லாத சோகம்... சதா அந்த விழிகளில் தேங்கிக் கிடப்பதைக் கண்ட கிரீசனுக்கு... உள்ளூர இரக்கம் சுரந்தது.

''அம்மா! நாளைக்கு நான் டெல்லிக்குப் போக வேண்டியிருக்கும்மா... வியாபார விஷயமா ஒரு கருத்தரங்கத்துலே கலந்துக்க வேண்டியிருக்கு... அஞ்சு நாள்லே திரும்பிடுவேன்.''



''வரதுக்கு அஞ்சு நாளாகுமா? என்னப்பா கிரி? நீ கண்டிப்பா போயாகணுமா? உன்னோட உதவியாளரை அனுப்பி வைக்கக் கூடாதா?''

''இல்லம்மா... இதுக்கெல்லாம் உதவியாளரை அனுப்பி வைக்க முடியாது. நான் தான் போயாகணும். சமீபத்துல புதுசா ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியை உங்க பேர்லே ஆரம்பிச்சேனே?

''அந்தப் புது நிறுவனத்தை பெரிய அளவுல கொண்டு வரணும்கிறது தான் என் ஆசை. அது சம்பந்தமா தான் இந்த டெல்லி பயணம்.''

''கிரி! நல்லா முன்னேறணும். வளரணும். சாதிக்கணும்னு நினைக்கிறதிலே தப்பே இல்ல. நீ இப்படி உத்வேகமா இருக்கிறதைப் பாத்துட்டு... எனக்கு உள்ளூரப் பெருமையாவும் இருக்கு... அதே சமயம் ரொம்பவே பயமா இருக்கு கிரி!''

''என்னம்மா இது? பயமா? எதுக்குப் பயப்படணும்? பிரபல தொழிலதிபர் விஸ்வநாதன் சாரோட மனைவி நீங்க... உங்க பேர்லே பல நிறுவனங்கள் இருக்கு...

''வர்த்தக ரீதியா பல சாதனைகள் புரிஞ்சவர் அப்பா. போட்டி கம்பெனிகாரங்களுக்கு அவர் ஒரு 'சிம்ம சொப்பனம்.'

''அப்பேர்ப்பட்ட அப்பா இருக்காரு... நான் இருக்கேன். நாங்க இருக்கறப்போ உங்களுக்கு எதுக்கு பயம்?''

கிரீசனின் குரலில் வாத்சல்யம் ததும்பி வழிந்தது.

''என்னப்பா தெரியாத மாதிரி கேட்கறே? நீ... நீயும் உங்கப்பாவைப் போலவே பேசறே... அதே வேகம், அதே ஆர்வம்... வெற்றியடையணும்கிற வெறி... அ... அவரோட குணம் உனக்கும் வந்துடுமோன்னு... ரொம்பவே பயமா யிருக்கு கிரி!''

மலையைத் தூக்கி வைத்து விட்டதைப் போல... விசாலத்தின் மனம் கனத்தது.

கண்களில் அலை அலையாக கண்ணீர் புரண்டது.

விஸ்வநாதன் மிகப் பெரிய கோடீஸ்வரர், பிரப தொழிலதிபர் என்று தேனி மாவட்டத்திற்கே தெரியும்.

அவர் பரம்பரை பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவர் அல்ல... அடி மட்டத்திலிருந்து அரும்பாடு பட்டு உழைத்து முன்னேறியவர் தான்.

இத்தனைக்கும் அவர் எட்டாம் வகுப்பு வரை தான் எட்டிப் பார்த்தார். படிப்பிற்கும், உழைப்பால் உயர்வதற்கும் சம்பந்தமே இல்லை என்பதை அனுபவத்தில் உணர்த்தியவர்.

தேனியில் கார்கள் பழுது பார்க்கும் ஒரு தொழிற்சாலை கூடத்தில் மெக்கானிக் பயிற்சிக்குச் சேர்ந்தவர்.

வியாபார சூட்சமங்களை, நுணுக்கங்களைத் துல்லியமாகக் கற்றுக் கொண்டு... விரைவில் திறமை மிக்க மேற்பார்வையாளராக மாறினார்.

முதலாளியின் அன்பைக் கவர்ந்து கொண்டதோடு... வியாபார நுணுக்கங்களை விரல் நுனியில் அவர் அடக்கியதும் அசாத்திய துணிச்சலோடு தனியே பிரிந்து சென்று தொழில் தொடங்கினார்.

கையைக் கடிக்காமல் கணிசமான வருமானம் வந்து கொண்டிருந்தது. விசாலத்தை அவர் கை பிடித்த நேரம்... அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டத் தொடங்கியது.

அவர் தொட்டதெல்லாம் பொன்னானது. அயராத உழைப்பு, வெற்றிக் கனியைப் பறிக்க வேண்டும் என்ற வெறி, உத்வேகம்... எல்லாமாகச் சேர்ந்து அவரை உச்சிக்கு உயர்த்தியது.



விசாலம் பில்டர்ஸ், வி.வி. ஹோட்டல்ஸ், வி.வி. போர்டிங் அண்ட் லாட்ஜிங், வி.வி. குரூப் ஆஃப் கம்பெனீஸ், வி.வி. ஜவுளிக் கடைகள்... கம்பம், கம்பம் மெட்டு, குமுளி, மூணாறு, சுருளி போன்ற பகுதிகளிலிருந்த எஸ்டேட்களையும் விஸ்வநாதன் விட்டு வைக்கவில்லை.

பள்ளியில் ஆங்கிலத்தைக் கண்டு அஞ்சி ஓடியவர், ஆசிரியரை வைத்து அந்த மொழியை ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்து விட்டு வந்தவர் போல... மிகத் துல்லியமாகப் பேசக் கற்றுக் கொண்டார்.

பல பொதுநல, அமைப்பிற்கு நிதிகளை வழங்கி 'கொடை வள்ளல்' என்ற பெயர் வேறு!

இலக்கியப் பணி, சமூக சேவைகள் முதலியவற்றில் பங்கெடுத்துக் கொண்டு அந்த அமைப்புகளின் தலைவர் செயலாளர், பொருளாளர் என்ற பல தகுதிகள் வேறு அவரைத் தேடி வந்தன.

வாரத்திற்கு ஒரு கூட்டத்தில் ஏதாவது ஒரு மேடையில் பேசி, மாலை மரியாதை பெற்று வீடு திரும்பும் அந்தஸ்து!

அந்தஸ்து உயர உயர விஸ்வநாதனுக்கு பந்த பாசத்தில் இருந்த பற்று கொஞ்சம் கொஞ்சமாக மங்கி மறையத் தொடங்கியது நிஜம்! ஆணவம் அவரை ஆட்டிப் படைத்தது.

உதவி கேட்டு வந்த உறவுத் தலைகளைக் கண்டாலே... அவருக்கு எட்டிக் காயாக கசந்தது.

கஷ்ட ஜீவனம் நடத்தும் சொந்தக்காரர்களைப் பார்த்தாலே... அவருக்கு பற்றிக் கொண்டு வந்தது.

அவர்களுடன் உறவாடினால் தமது கௌரவத்திற்கு பங்கம் வந்து விடுமோ என்று உள்ளூரத் தவித்தார்.

அந்தத் தவிப்பினால் அவர்களைத் தவிர்க்க ஆரம்பித்தார். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் நல்ல பதவிகளில் இருப்பவர்களுடன் மட்டுமே ஒட்டிக் கொண்டார்.

தமது அந்தஸ்திற்குக் கீழே இருந்த பந்தங்களை துச்சமாகக் கருதி வெட்டி விட்டார்.

கணவரை எதிர்த்து வாயாடத் தெரியாதவர் விசாலம். எடுத்துச் சொன்னாலும் கேட்டுக் கொள்ளும் வகையைச் சார்ந்தவர் அல்ல விஸ்வநாதன்.

சொந்த பந்தங்களுடன் உறவாட முடியவில்லையே என்ற ஏக்கமும் சோகமும் விசாலத்தை உருக்கின.

எம்.பி.ஏ. படித்து விட்டு நிறுவனங்களின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருந்தான் கிரீசன். தந்தையைப் போன்று கறுப்பு நிறம், ஜாடையில் விசாலத்தை உரித்துக் கொண்டு களை பொருந்திய முகத்துடன் வாட்ட சாட்டமாக இருந்தான்.

ஆஸ்திக்கு கிரீசன்... ஆசைக்கு அழகுப் பெட்டகமான அம்ருதா... வெளிப் பார்வைக்கு விசாலத்திற்கு எந்தக் குறையும் இல்லை தான்!

வெளியூர்ப் பயணத்தை முடித்துக் கொண்டு வரும் போதெல்லாம் விதவிதமான நகைகளுடன் தான் வீடு திரும்புவார் விஸ்வநாதன்.

கழுத்து நிறைய நகைகள் மாட்டி பட்டுச் சேலை சரசரக்க வரும் மனைவியுடன் பார்ட்டி, விசேஷங்களுக்குச் சென்று வருவதில் அவருக்கு அலாதி சுகம்!

ஒப்புக்குக் கொலு பொம்மையாக கணவருடன் வளைய வந்தாரே தவிர... விசாலத்திற்கு ஒரு துளியும் விருப்பம் இல்லை. பகட்டையும் படாடோபத்தையும் அறவே வெறுத்தார்.



''அம்மா! என்னத்துக்கு இப்போ கண் கலங்கறீங்க?'' இடது கையை நீட்டி தாயின் கண்ணீரைத் துடைத்தான் கிரீசன்.

சமீப காலமாய் சதா கவலைப்பட்டு... விசாலத்தின் ஆரோக்கியம் சீர் குலைந்து வருவதைக் கண்டு உள்ளுக்குள் புழுவாய் துடித்தான்.

அந்த வேதனை அவனது நெஞ்சை அரித்தது. நெருப்புக் கங்காய் மனம் குமைந்தது.

''நான் உங்க பிள்ளைம்மா! உங்க வேதனையைக் கண் கூடா பார்த்துட்டிருக்கேனே? நிச்சயமா அப்பாவோட குணம் எனக்கு வராதும்மா... நீங்க அதைப் பத்தி கவலைப்படவும் வேணாம்... அநாவசியமா பயப்படவும் வேணாம். சரியாம்மா?''

கலங்கிய விழிகளுடன் மகனை ஒரு தரம் ஊன்றிப் பார்த்துவிட்டு, தயக்கத்துடன் பார்வையைத் தழைத்துக் கொண்டார் விசாலம்.

''வர வர உங்கப்பாவோட நடவடிக்கைகள் சரியாவே இல்ல. அடிக்கடி வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்யக் கிளம்பிடுறாரு...

''முன்னைவிட, அதிகமா குடிக்கிறாரு... 'உடம்பு கெட்டுப் போயிடும்'னு ஜாடை மாடையா சொன்னா... 'ராயல் சொஸைட்டியில இப்படி நடந்துக்கிடறது ரொம்ப சகஜம், அதான் மதிப்பு' அப்படின்னு சொல்றாரு...

''அவரை மாத்த இனிமே யாராலும் முடியாதுப்பா. நீயும் அம்ருவும் என்னோட இரு கண்மணிகள். உங்க ரெண்டு பேருக்கும் மனசுக்குப் பிடிச்ச மண வாழ்க்கை அமையணும். அதான் என்னோட பிரார்த்தனை. அது நடந்துட்டா... நான் நிம்மதியா கண்ணை மூடிடுவேன் கிரி.''

'மனசுக்குப் பிடிச்ச மண வாழ்க்கை' என்றதுமே... கிரீசனின் மனக்கண் முன் அந்த அழகு தேவதை ஒரு கணம் வந்து மறைந்தாள்.

'என் காதலுக்கு அப்பா பச்சைக் கொடி காட்டுவாரா?' உள்ளுக்குள் திகில் ஊறியது.

"அ... அம்மா! எதுக்கு இப்படிப் பேசறீங்க? உங்க நல்ல மனசுக்கு எல்லாம் நல்லபடியா நடக்கும். உங்க பிரார்த் தனை பலிச்சு அந்த சந்தோஷத்துல நீங்க நூறு வருஷம் வாழத்தான் போறீங்கம்மா."

வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் கிரீசன் பேசியதும்... விரக்தியாக முறுவல் பூத்தார் விசாலம்.

விதியும் சிரித்தது. விசாலத்தை மரணப் படுக்கையில் தள்ளி விட தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

# 5

பொன் காலைப் பொழுது! சூரியனின் இளஞ்சிவப்பு வர் ணம் வாரி இறைக்கப்பட்ட வானும், வெண் பஞ்சுப் பொதியாய் மிதக்கும் மேகத் துகள்களும், அதிகாலை சுறுசுறுப்போடு சிறகடித்துப் பறக்கும் பறவை யினங்களும்... அவற்றின் உற்சாகக் குரல்களும் கிரீசனின் மனதைக் கட்டிப் போட்டன.

மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து புறப்பட்ட தென் மேற்குப் பருவக் காற்று... பால்கனியில் நின்றிருந்த கிரீ சனின் முகத்தை இதமாய் ஸ்பரிசித்து, அவனது கேசத்தைச் செல்லமாய் கலைத்து விட்டது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அழகின் ஆக்கிரமிப்பு தான்... எங்கும் பசுமையின் தீற்றல் தான்... வனப்பின் உற்சவம் தான்!



தேனி நகரத்தை விட்டு சற்றுத் தள்ளி... வீரபாண்டி கிராமத்திற்குச் செல்லும் வழியில்... பச்சைப் பசேலென்ற தோட்டத்திற்கு மத்தியில் அந்த பிரமாண்டமான பங்களாவைக் கட்டியிருந்தார் விஸ்வநாதன்.

அழகை ரசித்துக் கொண்டிருந்த கிரீசன்... மெல்லிய இருமல் சப்தத்தைக் கேட்டு சட்டென்று திரும்பிப் பார்த் தான்.

விசாலம் தயங்கியபடி அவனருகே வந்து நின்றார். டெல்லிக்குச் சென்று கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு விட்டு நேற்றிரவு தான் வீடு திரும்பியிருந்தான் கிரீசன்.

"ஒரு குரல் குடுத்தீங்கன்னா... நானே கீழே இறங்கி வந்திருப்பேனே அம்மா?... மூச்சிரைக்க மாடியேறி வரணுமா? எ... என்னம்மா விஷயம்?"

இரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி, ஆஸ்துமா என்று ஏகப்பட்ட வியாதிகளைக் குத்தகைக்கு எடுத்திருந்தார் விசாலம்.

"எனக்காக ஒரு காரியம் செய்யணுமே கிரி... நீ தட்டாம செய்வேன்னு நம்பிக்கையோட தான் பேச வந்திருக் கேன்" குரலில் தயக்கம் தொனித்தது.

"எதுக்கும்மா இந்தப் பீடிகை? என் கிட்ட சொல்றதுக்கு ஏன் தயக்கம்? உத்தரவு போடுங்க... உடனே செய்து முடிக்கிறேன்" படபடத்தான்.

"உனக்கு நம்ப தேவகியை ஞாபகமிருக்கா? என்னோட ஒண்ணு விட்ட தங்கை..."

"உங்களோட சித்தப்பா பொண்ணு தானே? தேவகி சித்தியைப் பார்த்து ரொம்ப காலம் ஆயிடுச்சு... ஆனா அவங்க முகம் எனக்கு மறக்கலைம்மா... அசப்புல அவங்க உங்க ஜாடை... அதனால அவங்களை எனக்கு ரொம்பவே பிடிக்கும்."

''கிரி! அந்தக் காலத்துல நாங்க கூட்டுக் குடும்பமா வாழ்ந்தவங்க... சித்தப்பா பொண்ணாயிருந்தாலும் அவ மேல எனக்கு ரொம்பப் பாசம். கூடப் பிறந்த அக்காள் - தங்கச்சிங்க மாதிரி நகமும் சதையுமா இருப்போம்...'' என்று பேசிக் கொண்டிருந்த விசாலத்தை இருமல் தடை செய்தது.

'லொக்... லொக்... லொக்' என்று புடவைத் தலைப் பால் வாயை மூடி இருமியவர், தொண்டையைக் கனைத் துக் கொண்டு நிமிர்ந்தார்.

''தேவகியை 'பெரிய குளத்துல' தான் கட்டிக் குடுத் தாங்க... பக்கத்துல தானே? நெனச்சா... போக வர இருக்க லாமேன்னு சந்தோஷப் பட்டேன். அவளும் அப்படித் தான் இருந்தா...

''பாவம்! அவளோட வீட்டுக்காரருக்கு கிரகம் சரியில்ல போல... எதைத் தொட்டாலும் நஷ்டம்... குடும்பம் நொடிஞ்சு போயிட்டே இருந்தது... நம்ம வீட்டுக்கு அவ குடும்பத்தோடு வந்து பத்து பதினைந்து நாள் தங்குவா... போகும்போது அரிசி, பருப்பு, புளின்னு பை நிறைய குடுத்து... செலவுக்கு என்னால முடிஞ்ச பணத்தையும் தருவேன்.

''மனசுக்கு எவ்ளோ திருப்தியா இருக்கும் தெரியுமா கிரி? உங்கப்பாவோட அந்தஸ்து உயர ஆரம்பிச்சதும்... நொடிஞ்சு போன தேவகியின் குடும்பத்தைப் பார்த்தாலே... எரிஞ்சு விழ ஆரம்பிச்சாரு...''

''இந்த மாதிரி தொழில்லே நஷ்டப்பட்டு கஷ்டப்படற வங்க கூட... நாம்ப அதிகமா உறவாடக் கூடாது. அவங் களோட தரித்திரம் நமக்கும் ஒட்டிக்கும்... வசதி வாய்ப் போட வாழறவங்களைப் பார்த்தா... அவங்க வயிறு எரிவாங்க... அது நம்ம குடும்பத்துக்கு ஆகாது...' அப்படின்னு உங்கப்பா, தேவகி காதுபடவே பேசிட் டாரு...



''அவ ரோஷக்காரி! அதுக்குப் பிறகு அவ நம்ம வீட்டு வாசற்படியை மிதிக்கவே இல்ல... என்னையும் அவ வீட்டுப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கக் கூடாதுன்னு... உங் கப்பா தடை உத்தரவு போட்டுட்டாரு... இதை நினைச்சு நான் அழாத நாளே இல்லை கிரி...'' தழுதழுத்தார் விசாலம்.

''கவலைப்பட்டு என்னம்மா ஆகப் போகுது... நடக்க வேண்டியதைப் பார்ப்போம்... தேவகி சித்தி... உங்க ஒண்ணு விட்ட தங்கைதானே? அப்பா அவங்க உறவை மட்டுமா வெட்டி விட்டாரு? அவரு கூடப் பிறந்த தங்கச்சி அதான் எங்கத்தை... அவங்களையே தூக்கி எறியலையா? சொல்லுங்க.''

''ஆ... ஆமா... கிரி! ஒரே கல்லுல ரெண்டு மாங்காய் அடிக்கிற மாதிரி... ஒரே சமயத்துல ரெண்டு பக்க உறவை அறுத்து விட்டுட்டாரே? அவரோட தங்கச்சி எங்க அண்ணனைக் கல்யாணம் செய்துக்கிட்டவங்க...

''இந்தப் பக்கம் என்னோட அண்ணா... அந்தப் பக்கம் அவரோட கூடப் பிறந்த தங்கச்சி... இரத்த பந்தம்... ஒண்ணுக்குள்ளே ஒண்ணுன்னு எதையும் நினைச்சுப் பார்க்கலையே கிரி? பசையுள்ள பந்தங்கள் தான் இவர் கூட ஒட்டிக்கிட்டாங்க.

''சமுத்திரம் மாதிரி சொத்து சேர்த்து என்ன பிரயோ ஜனம்? கஷ்ட ஜீவனம் நடத்தற சொந்த பந்தங்களை நாம்ப தானே கை தூக்கி விடணும்? அவங்களோட கண்ணீரைத் துடைச்சு அரவணைச்சு உதவி செய்தா... எவ்வளவு புண்ணியம்?

''அவருக்குத் தெரியாம தேவகிக்கு என்னால உதவி யிருக்க முடியும். ஆனா அவ மானஸ்தி! அந்த உதவியை அவ ஏத்துக்கலை...

''போன வெள்ளிக்கிழமை வீரபாண்டி அம்மன் கோவி லுக்குப் போயிருந்தேன். பெரிய குளத்திலிருந்து தேவகி வந்திருந்தா... எதிர்பாராம சந்திச்சதிலே சந்தோஷம் தான். அவளோட வறுமைக் கோலத்தைப் பார்த்துட்டு நான் கதறிட்டேன்.

''அவளோட சின்னப் பொண்ணு வயசுக்கு வந்துட் டாளாம். பெரியவன் பத்தாம் வகுப்பு படிக்கிறானாம். என் கை பரபரத்துப் போச்சு. சட்டுன்னு என்னோட சங் கிலியைக் கழட்டி.... 'பெரியம்மாவோட பரிசுன்னு சொல்லி குழந்தையோட கழுத்துல போடு'ன்னு திணிச்சேன்.

''மறுத்துப் பேச வாயெடுத்தா... 'ரொம்ப காலம் நான் உயிரோட இருக்க மாட்டேன்டி... அக்காவை இப்படி சித்ரவதை பண்ணாதே'ன்னு நான் சொல்லவும்... தேம்பிக்கிட்டே வாங்கிக்கிட்டா...

''இப்படி உருக்குலைஞ்சு போயிட்டியே அக்கா'ன்னு வேதனைப்பட்டா... கிரி! அவ இந்தளவுக்கு இறங்கி வந்ததே பெரிய விஷயம்.

''பெரிய குளத்துல ஏதோ ஒண்டுக் குடித்தனத்துல தங்கி இருக்காளாம்... அவளோட குழந்தைகளை நல்லா படிக்க வைக்கணும். தேவகியோட கணவருக்கு காச நோயாம். பொட்டிக் கடை வருமானம் போறாம... அக்கம் பக்கத்துல இருக்கறவங்களுக்கு துணி தைச்சுக் குடுத்து காலத்தை ஒட்டறா பாவம்!''

நீர்த்திரையிட்ட விழிகளுடன் கிரியை ஏறிட்டார் விசாலம்.



''கவலைப்படாதீங்க அம்மா! இனி எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன். அவங்க முகவரி இருக்கா அம்மா?''

''இ... இதோ துண்டுக் காகிதத்துலே குறிச்சுட்டு வந்திருக்கேன்... உன்னோட நெஞ்சுல இருக்கற ஈரம் என்னிக்கும் காய்ஞ்சு போகாம இருக்கணும் கண்ணா!'' என்றபடியே நீண்ட பெருமூச்செறிந்தார் விசாலம்.

''உங்க மனசுல இருக்கற குறைகள் எல்லாமே... கூடிய விரைவில் ஒவ்வொண்ணா நிவர்த்தியாகும். நம்புங்க'' என்றதுமே விசாலத்தின் முகத்தில் சந்தோஷ ரேகை மெல்லப் படர்ந்தது.

''தேவகி சித்திக்கு மட்டுமில்ல... உங்க பேர்லே ஒரு அறக்கட்டளை தொடங்கி, கல்வி உதவித் தொகை, ஊன முற்றோருக்கு வேலை வாய்ப்பு, ஏழைப் பெண்களுக்கு திருமணச் செலவு... இது போன்ற காரியங்களை செய்ய லாம்னு இருக்கேன். சந்தோஷமாம்மா?'' கண்களில் கனிவைத் தேக்கி இதமாகக் கேட்டவனைப் பார்த்து... உள்ளூர பெருமிதம் பொங்கியது.

''ரொம்பவே சந்தோஷம் கிரி! இதுநாள் வரை கனன்ற மனசுலே பால் வார்த்திருக்கே...'' முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

''அம்ருதாவுக்கு அப்புறம் தான் உன்னோட கல் யாணம் நடக்கும். உன் கல்யாணத்துக்கு எல்லா உறவுத் தலைகளும் வந்து மனசார வாழ்த்தணும். சொந்த பந்தங்கள் எல்லாரும் ஒண்ணாக் கூடி உறவாடணும். அதான் என் ஆசை.''

மனதில் மகிழ்ச்சி பொங்கியதால் விசாலத்தின் குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

முகத்தில் திருப்தியும் சிறு நிம்மதியும் ஆக்கிரமிக்க... அறையை விட்டு மெல்ல மெல்ல வெளியேறினார் விசாலம்.

'என் மனதில் குடியிருக்கும் அழகு தேவதைக்கு, நான் மாலையிட முடியுமா? அப்பா அனுமதிப்பாரா?'

உள்ளூர முளைத்த கேள்வி கொக்கியாய் வளைந்து அவனது இதயத்தை 'சுருக்' என்று பதம் பார்த்தது.

அப்பா விஸ்வநாதன் விஸ்வரூபமெடுத்து மிரட்டுவது போலிருந்தது.

'அப்பாவுக்கு பயந்து கொண்டு என் காதலை மனதுக் குள்ளேயே புதைத்து விட வேண்டியது தானா?

'அவர் கை காட்டும் பணக்கார சீமாட்டியின் கழுத்தில் நான் தாலி கட்ட முடியுமா?

'ஊகூம்! என்னால் முடியவே முடியாது. இதற்கு என்ன தான் வழி?

'என்னவளை நான் கைப்பிடித்தே ஆக வேண்டும். மனமொத்த தம்பதிகளாக அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும்' என்ற உறுதியான எண்ணம் கிரீசனுக்குள் எழும்பியது.

திரும்பத் திரும்ப மனதுக்குள் சுழன்றது. அலை மோதியது. விக்கித்து நின்றபடி தூரத்தில் தெரிந்த மேற்கு மலைத் தொடரை வெறித்துப் பார்த்தான்.

# 6

இரவும் பகலும் சந்தித்துக் கொள்ளும் அந்திப் பொழுது!

புது மணப் பெண்ணின் கன் னத்தைப் போல் சிவந்திருந்தது மேற்கு வானம்.

பெரும் குலுக்கலுடன் பெருமூச்செறிந்தபடி அந்த நிறுத்தத்தில் வந்து நின்றது அந்தப் பேருந்து. கூட் டத்தைப் பிளந்து கொண்டு பேருந்திலிருந்து உதிர்ந்தாள் பார்கவி.



முன் நெற்றியில் புரண்ட முடிக்கற்றையை புறங் கையால் ஒதுக்கி விட்டு அரக்கப் பரக்க வீட்டை நோக்கி நடந்தாள்.

'பாவம் அப்பா! மதியம் கஞ்சியைப் பருகினாரா? அல்லது உள்ளுக்குள் எதையாவது நினைத்து மருகி வேதனைப்பட்டு... வயிற்றைக் காயப் போட்டு விட் டாரா?

சித்தியும் நித்யாவும் கண்ணும் கருத்துமாக அவரை கவனித்துக் கொண்டால் எவ்வளவு நன்றாகயிருக்கும்?'

காலையில் அவசரமாக அலுவலகத்திற்குக் கிளம்பிச் சென்று வேலை பார்த்துவிட்டு... மாலை வீடு திரும்பும் முன் அப்பாவுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் என்ன செய்வது? என்ற கவலை... உள்ளுக்குள் பந்தாய் மோதி அலைந்தது.

நடையில் காலணிகளை அவசரமாகக் கழற்றிவிட்டு தடுக்கி விழாத குறையாக... கூடத்திலிருந்த அந்த அறைக்குள் புகுந்தாள்.

அவள் நினைத்தது சரிதான்! அப்பா கஞ்சியைப் பருகவே இல்லை.

"அ... அப்பா! கஞ்சியைக் குடிக்கவே இல்லையா? என்னப்பா இது? இப்படி வயித்தை அநியாயத்துக்கு காயப் போட்டீங்கன்னா... உங்க உடம்பு எப்படிப்பா தேறும்?

"பழைய படி தேறி நீங்க நல்லா நடமாட வேணாமா? எனக்கு உங்களை விட்டா... இந்த உலகத்துல வேறு யாருப்பா இருக்காங்க?" கேட்டு முடிப்பதற்குள் பார்கவி யின் அழகிய விழிகளில் வெப்ப ஊற்று நீர் 'குபுக்' என்று பொங்கியது.

"பசியே இல்லைம்மா" என்று சொல்வதற்குள் சண் முகநாதனின் வாய் கோணி, வார்த்தைகள் குழறின.

"வயித்துக்கு ஆகாரம் போட்டாத்தானே உடம்புலே தெம்பு வரும்? இந்த ராகிக் கஞ்சி வேணாம். அஞ்சே நிமிஷத்துல ஓட்ஸ் கஞ்சி காய்ச்சி எடுத்துட்டு வரேன். சூடா குடிங்கப்பா... இதமா இருக்கும்."

அடுக்களைக்குள் நுழைய முற்பட்ட பார்கவியை, சித்தியின் குரல் தடுத்து நிறுத்தியது.

"ஏய்! கவி... சீக்கிரமா எனக்கு காபி போட்டுக் கொண்டா தலைவலி மண்டையைப் பிளக்குது" ஊஞ்சலில் அமர்ந்தபடியே ஏவினாள்.

"சரிங்க சித்தி" அவளது பார்வை தயக்கமாய் நகர்ந்து தங்கை நித்யாவின் மீது படிந்தது.

உலக நினைப்பின்றி தனது தோழியுடன் போனில் சிரித்தபடி வம்படித்துக் கொண்டிருந்தாள்.

உருவத்திலும் சரி, குணத்திலும் சரி... அவள் அப்படியே பூரணியை உரித்துக் கொண்டு வந்திருந்தாள்.

பெற்ற தந்தையின் மீது துளியளவு பாசத்தையும் அக்கறையையும் அவள் காட்டாததை எண்ணி... மனம் கசந்து போனாள் பார்கவி.

ஃபில்டரில் பொடி போட்டு லேசாக அமுக்கி கொதித்த வெந்நீரை ஊற்றினாள்.

ஓட்ஸ் கஞ்சியை கை பொறுக்கும் சூட்டில் ஆற்றிக் கொண்டிருந்தவளின் தோளைத் தொட்டார் காந்திமதி அம்மாள்.

சண்முக நாதனின் நெருங்கிய நண்பர் வரதராஜனின் மனைவி என்பதால் அவரை உரிமையுடன் 'அத்தை' என்று அழைப்பது தான் வழக்கம்.

"அடடே வாங்க அத்தே! வாங்க... உ.... உட்காருங்க" உபசரித்தாள். பார்வையைச் சுழற்றி சித்தி பூரணி தென் படுகின்றாளா என்று பார்த்தாள்.



"சித்தியை தேடறியா பார்கவி? வாசல்லே என்னைப் பார்த்ததுமே சட்டுன்னு எந்திரிச்சு... பின் பக்கத்துத் தோட்டத்துக்குப் போயிட்டாங்க" முறுவலித்தார் காந்திமதி.

"ஸாரி அத்தே."

"ஸாரி என்னத்துக்கு? உன் சித்தியோட குணம் தான் எனக்கு நல்லாத் தெரியுமே? விட்டுத் தள்ளு... இன்னிக்கு பிரதோஷம்... கோவிலுக்குப் போயிருந்தேன்... இந்தா விபூதி! அப்பாவுக்கு இட்டு விடு! சீக்கிரமா அவருக்கு குணமாயிடும். நம்பிக்கையைத் தளர விடாதே... சரியா?" பேசியபடியே அவளது நெற்றியில் விபூதியைக் கீற்றாகத் தடவினார் காந்திமதி.

"இவ்ளோ தூரம் வந்திருக்கீங்க... இருங்க அத்தே! ஒரு கப் காபி சாப்பிட்டுத்தான் போகணும்" பரபரத்தவளின் கையைப் பற்றி நிறுத்தினார்.

"கவி! நான் என்ன மூணாம் மனுஷியா? எனக்கு நீ உபசாரம் பண்ணத் தேவையில்லைடா" என்றபடி அவளது உச்சந்தலையை ஆதுரமாக வருடினார்.

முகத்தில் சாந்தமும் கருணையும் வடிய நின்றவரைக் கண்டதும்... பார்கவிக்கு தனது தாயின் ஞாபகம் தலை காட்டியது.

சட்டென்று அவளது விழிகளில் கண்ணீர்க் குளம் கட்டியது.

"பம்பரமா சுத்தி வீட்டு வேலைகளை முடிச்சுட்டு.. தினமும் நம்ம வீட்டுக்கு ஓடி வந்துடுவே... அரை மணி நேரமாவது என்கிட்டேயே உட்கார்ந்து நான் பண்ற 'கை வேலை'யை கண் கொட்டாம பார்த்துட்டிருப்பே...

"பாவம்! உங்கப்பாவுக்கு உடம்பு முடியாம போனதிலேர்ந்து உன்னால வர முடியலை... போன வாரம் நடந்த இரத்ததான முகாம்லே... நிறைய பேர் கலந்துக்கிட்

டாங்க... கண் சிகிச்சை முகாம், ரத்த தானம் முகாம் நடத்தறப்போ நீ சுறுசுறுப்பா இங்கேயும் அங்கேயும் ஓடி... நல்ல சேவை மனப்பான்மையோட உதவுவே...

''போன வாரம் நீ வராததால எனக்கு வலது கையே ஒடிஞ்ச மாதிரி ஆயிடுச்சு... சரி! அப்பாவை நல்லா கவனிச்சுக்கோ! அதே சமயம் பத்து நிமிஷத்தையாவது ஒதுக்கி... நம்ம வீட்டுக்கு வந்துட்டுப் போ! உனக்கும் கொஞ்சம் 'ரிலாக்ஸ்' பண்ணின மாதிரி இருக்கும். சரியாடா?'' அவளது கன்னத்தை வருடி விட்டு தலையாட்டி விடைபெற்றார்.

காந்திமதி, அந்தப் பகுதியின் மாதர் சங்கத்து தலைவியாக இருந்தார்.

அடிக்கடி கண் சிகிச்சை முகாம், ரத்த தான முகாம் போன்றவற்றை மாதமொரு முறையாவது நடத்த ஏற்பாடு செய்து விடுவார். அந்த மாதிரி தருணங்களில் எல்லாம்... பார்கவி 'தேனீ' போல் சுறுசுறுப்பாக ஓடியாடி உதவுவது வழக்கம்.

வாசல் வரை சென்று காந்திமதியை வழியனுப்பி விட்டு உள்ளே வந்தாள் பார்கவி.

அதுவரை அறைக்குள் பதுங்கிக் கொண்டிருந்த நித்யா சட்டென்று வெளிப்பட்டாள்... தோட்டத்திலிருந்த பூரணிக்கு கேட்கும்படி குரல் கொடுத்தாள்.

''அம்மா! வாம்மா... அந்த பொம்பளை போயிட்டா... வாம்மா... காபி குடிக்கலாம்'' என்று நித்யா கூறியதும் பார்கவிக்கு திக்கென்றிருந்தது.

''நித்தி! பெரியவங்க வீட்டுக்கு வந்திருக்காங்க... அவங்களைப் போய் மரியாதை இல்லாம 'பொம்பளை'ன்னு பேசறே? கொஞ்சம் மரியாதையா பேசிப் பழகும்மா...



அதற்குள் தோட்டத்திலிருந்து நாலே எட்டில் வேகமாக உள்ளே வந்து விட்டிருந்தாள் பூரணி.

''ஏய்... கவி!... நான் கேட்கறேன். பதில் சொல்லு... இந்த சித்தியோட குணத்தைப் பத்தி... கண்டவங்க வீட்டுக்கு உள்ளேயே வந்து பேசிட்டுப் போகுதுங்க...

''இதுக்கெல்லாம் நீ தான் காரணம். 'எங்க சித்தி கொடுமைக்காரி' ராட்சசி, பேய்னு... இல்லாததும், பொல்லாததுமா நீ தான் அவ கிட்ட சொல்லியிருப்பே...''

''ஐயோ... சித்தி! நான் என்னிக்குமே உங்களைப் பத்தி யார் கிட்டேயும் எதுவும் சொன்னதே இல்ல... நம்புங்க சித்தி... அவங்க ஏதோ சாதாரணமா சொன்னாங்க... வேற ஒண்ணுமே இல்ல சித்தி...''

பயத்தில் அவளது உடம்பு தந்தியடித்தது.

''பொய்... சுத்தப் பொய்! அம்மா... உன்னைப் பத்தி அந்தப் பொம்பளை ரொம்பக் கேவலமா பேசிட்டுப் போகுது. நான் நல்லா கேட்டேன்மா.''

பூரணிக்கு வேப்பிலை அடித்தாள் நித்யா.

''ஏய்.. கவி! என்னடி நெனச்சுட்டிருக்கே உன் மனசுல? சம்பாதிக்கிற திமிராடி? பெத்த தாய் மாதிரி கஷ்டப்பட்டு உன்னை வளர்த்து ஆளாக்கின பாவத்துக்கு... நான் கண்டவங்க கிட்டயும் பேச்சு வாங்கறேனே? என் தலையை உருட்டறதுக்கு உனக்கு எப்படிடி மனசு வந்தது? அநாதை நாயே'' கேட்டுக் கொண்டே பார்கவியின் அருகில் வந்த பூரணி... அவளது கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

அறை பட்ட கன்னம் ஜிவு ஜிவு என்று தீயாய் எரிந்தது.

''ஒழுங்கா இருந்துக்கோ! என் பொண்ணை மிரட்டறதுக்கு நீ யாருடி? இதுவே கடைசி தடவையா இருக்கட்டும்.

இல்லே... அழிஞ்சு போயிடுவே... ஞாபகமிருக்கட்டும்'' பலமாகத் தள்ளி விட்டாள் பூரணி.

நிலை தடுமாறி சுவற்றில் வேகமாய் மோதிக் கொண்டாள் பார்கவி. மோதின வேகத்தில் நெற்றியோரம் பெரிய நெல்லிக்காய் சைஸில் ஒரு புடைப்பு போல் வீங்கியது.

கண்களில் பூச்சி பறந்தாற் போலிருந்தது. கண்கள் சொருக மயங்கிச் சரிந்தாள் பார்கவி.

## 7

கிழிந்த நாராக படுக்கையில் சயனித்திருந்த அப்பாவை திகிலுடன் உற்றுப் பார்த்தாள் பார்கவி.

அவரது நெஞ்சுக் கூடு சீராக ஏறித் தாழ்ந்ததைப் பார்த்ததும் தான்... அவளுக்கு உயிர் திரும்ப வந்தது.

''அப்பா... அப்பா'' மெல்லிய குரலில் அழைத்தாள். அவரது கண்ணோரங்களில் கண்ணீர் வழிந்திருந்ததைக் கண்டதும்... அவளுக்கு துக்கம் தொண்டையை நெரித்தது.

கண் விழித்துப் பார்த்தவரை மெல்லக் கைத்தாங்கலாகப் பிடித்து எழுப்பி அமர வைத்தாள்.

அவள் தினமும் கை கால்களை நீட்டி மடக்கி பயிற்சி அளிக்கும்போது... சண்முகநாதன் வலியைப் பொறுத்துக் கொண்டு... மகளின் திருப்திக்காக ஒத்துழைப்பார்.

பரிதாபமாகவும் சங்கடமாகவும் ஏறிட்டவரை கண்டதுமே... பார்கவிக்கு புரிந்து விட்டது. 'பெட் பானை' எடுத்து வைத்தாள்.

பெற்ற மகளாக இருந்தாலும் இந்த மாதிரியான கஷ்டத்தைத் தருகின்றோமே? என்ற குற்ற உணர்வில் அவர் மிகவும் கூசிப் போனார்.



''நான் உங்க பொண்ணுப்பா... என்னைப் பொறுத்த வரை எனக்கு நீங்க அப்பா மட்டுமில்ல... அம்மாவும் நீங்க தான்... தெய்வமும் நீங்க தான்... இந்தக் கடமையை செய்யறதுக்கு நான் ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும்பா!

''நர்ஸிங் படிச்சிருந்தா... இதே மாதிரி பணிவிடைகளை நான் மத்தவங்களுக்கு செய்திருப்பேன் இல்லையா? நீங்களும் என்னை ஒரு மகனா பாவிச்சுக்கோங்க.''

சண்முக நாதனின் கண்கள் பெருமிதத்தில் பனித்தன. பாசத்தில் நெக்குருகிப் போனார். அவளது நெற்றியிலிருந்த காயத்தில் அவரது பார்வை படிந்தது.

பகீரென்ற உணர்வில் அவரது அடிவயிறு சுருண்டு கொள்ள... திகிலுடன் மகளை ஏறிட்டார்.

''அ... அது ஒண்ணுமில்லேப்பா... நேத்தே சொல்லணும்னு இருந்தேன். அவசரமா அடுக்களையிலிருந்து வந்தப்போ... கவனக் குறைவா கதவுல இடிச்சுகிட்டேன். வலி எதுவும் இல்லைப்பா'' முறுவலித்தபடி குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

சோப்புத் தண்ணீரில் நனைத்த தூவாலையால் அவர் முகத்தையும் உடம்பையும் துடைத்து விட்டு... வேறு உடையை மாற்றிவிட்டாள்.

மகள் கொடுத்த காபியை இடது கையால் வாங்கிப் பருகி விட்டு ஆயாசத்துடன் மீண்டும் கட்டிலில் சாய்ந்து படுத்துக் கொண்டார் சண்முகநாதன்.

அடுக்கடுக்கான வேலைகள் அவளை நெட்டித் தள்ளியதால்... கால்களில் சக்கரத்தை மாட்டிக் கொண்டு பறக்காத குறை தான்!

காலைச் சிற்றுண்டி, மதியச் சமையலை முடித்து வைத்து விட்டு... தலை சீவி வேறு பருத்தி புடவையை அணிந்து கொண்டு வெளிப்பட்டாள்.

"ஏய்... கவி!... மதியத்துக்கு என்ன பண்ணியிருக்கே?"

"வத்தக் குழம்பு... தொட்டுக்க பருப்பு உசிலி."

"சரிதான்! டேய்... வாடா நந்தா! பேசிடலாம்" என்றபடி பூரணி கூடத்து ஊஞ்சலில் அமர்ந்து கொண்டாள்.

மாடிப்படி அருகில் 'கொக்கு' போல் காத்திருந்த நந்தா... வேகமாய் அவளருகே வந்தான்.

"உம்! நீ இந்த வீட்டுக்கு மூத்த பொண்ணு... குடும்பப் பொறுப்பு மொத்தமும் உன்னோடது இல்லையா? நித்தியை நல்லாப் படிக்க வைக்கணும். நல்லபடியா அவளைக் கரையேத்தணும். இன்னும் எவ்வளவோ இருக்கு...

"வேலைக்குப் போறே... கை நிறைய சம்பாதிக்கிறே... காதல் ஊதல்னு மனசு மாறி மாலையும் கழுத்துமா எவனையாவது இழுத்துக்கிட்டு வந்துட்டா... எங்க கதி? ஒரு பேச்சுக்கு சொல்றேன்.

"நீ பொறுப்பானவ... அப்படியெல்லாம் செய்ய மாட்டே! தங்கையைக் கரையேத்தற வரைக்கும் உன்னை ஒண்டிக் கட்டையா நிப்பாட்ட எனக்கு மனசு வரலை. அதான்... நந்தாவுக்கும் உனக்கும் கல்யாணம் செய்து வைக்க லாம்னு முடிவு பண்ணியிருக்கேன். சரியா?"

பார்கவிக்கு பக்கென்றிருந்தது. மான் போன்ற மருண்ட விழிகள் அப்பட்டமாய் அதிர்ச்சியையும், வெறுப்பையும் வெளிப்படுத்தின.

நேற்று பூரணி தள்ளி விட்டதால் சுவரில் மோதி, பார்கவி மயங்கிச் சரிந்ததும்... நந்தனும், பூரணியும் ஏகத்திற்கும் பயந்து விட்டனர்.

கீழே விழுந்து வேதனையில் கண்களைத் திறக்க முடியா விட்டாலும்... அவர்களின் பேச்சுக் குரல்கள் ஆழ்ந்த கிணற்றிலிருந்து பேசுவது போன்று சன்னமாக... பார்கவியின் செவிகளில் விழத்தான் செய்தது.



"என்னக்கா இப்படி பண்ணிட்டே? காந்திமதியோட புருஷன் கவுன்சிலர்! செல்வாக்கானவங்க... இவ மேல பாசமா இருக்கிறவங்க... ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சுன்னா... போலீசுக்கு மட்டுமில்ல... மேலிடம் வரைக்கும் போயி உண்டு இல்லைன்னு பண்ணிடுவாங்க... ஏய் நித்தி! தண்ணி கொண்டா..."

பூரணி பார்கவியை கரித்துக் கொட்டும்போதே... அவன் அறையை விட்டுக் கூடத்திற்கு வந்திருந்தான் போலும்.

"டேய்... நந்தா! என்னடா பயமுறுத்தறே?" பூரணியின் அடிவயிற்றில் புளியைக் கரைத்தது போலிருந்தது.

"காலம் கெட்டுக் கிடக்கு... நாம்ப தான் ஜாக்கிரதையா இருக்கணும். நித்தி! மசமசன்னு நிக்காம முகத்துல தண்ணியைத் தெளி" எரிந்து விழுந்தான் நந்தன். அவனது குரலில் பதற்றம் தொற்றி நின்றது.

பார்கவி கண் விழித்ததும், பேயறைந்த முகங்களோடு மூவரும் விலகிப் போனார்கள்.

முகத்தில் வழிந்த நீரைத் துடைத்தபடியே கூடத்துத் தூணோரம் சாய்ந்து அமர்ந்தாள் பார்கவி.

மழையில் நனைந்த புறாக் குஞ்சு போல் அவளது உடம்பு வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது.

'அப்பா உயிருடன் இருக்கும்போதே... இத்தனை வலி அவமானம்! அவருக்கு ஏதாவது ஆகி விட்டால் என் கதி?

'நான் எதற்கு வாழ வேண்டும்?'

மனதிற்குள் விரக்தி முளை விட்டது. அது விருட்சமாய் வளரும் முன் விழிகளை மூடி, பற்களை அழுந்தக் கடித்து அந்த எண்ணத்தைத் தட்டி அடக்கினாள்.

ஆழ மூச்செடுத்து ஆசுவாசப்படுத்திக் கொண்டவளுக்குள் ஒரு உறுதி பிறந்தது.

அப்பாவுக்காக துணிந்து போராட வேண்டும் என்ற உத்வேகம் உதித்தது.

'நாம் பயந்து ஓடும் வரைதான்... நாய் கூட நம்மை துரத்திக் கொண்டு வரும். திரும்பி நின்று தைரியத்துடன் கையை உயர்த்தினாலே... பதுங்கி பயந்து நாய் புறமுதுகு காட்டி ஓடி விடும்...'' என்றோ புத்தகத்தில் படித்த ஞாபகம் வந்தது.

'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்ச மில்லை அச்சமில்லை... அச்சமென்பது இல்லையே' மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டே நெற்றியி லிருந்த வீக்கத்தைத் தடவி விட்டாள் பார்கவி.

''என்ன கவி? பதிலையே காணோம்? இப்படி மவுனமா இருந்தா என்ன அர்த்தமாம்?''

நேற்றைய சம்பவத்தில் மூழ்கிப் போனவளை... பூரணியின் கர்ண கடூரமான குரல் கலைத்தது.

நினைவலைகளிலிருந்து மீண்ட பார்கவி... நிதானமாக சித்தியை ஏறிட்டாள்.

''என்னோட கடமையை... நா என்னிக்கும் மறக்கவே மாட்டேன் சித்தி. அப்பா குணமாகி பழையபடி நட மாடணும். அதான் முக்கியம்... அவர் இப்படி படுத்த படுக் கையா இருக்கறப்போ... இந்த மாதிரி பேச்செடுக்கிறது தப்புன்னு படுது.

''அவர் முதல்லே தேறட்டும். நித்தி நல்லபடியா படிச்சு முடிச்சு கரையேறட்டும். அப்புறமா பாத்துக்கலாம். எனக்கு நேரமாகுது. நான் கிளம்பறேன்.''

பதிலுக்குக் கூட காத்திராமல் விடுவிடுவென்று கூடத்தைத் தாண்டி அடுக்களைக்குச் சென்றாள்.

அப்பாவுக்காக அவள் தயாரித்து வைத்திருந்த சத்து மாவு கஞ்சியை டம்ளரில் நிரப்பி தட்டு போட்டு மூடி...



அவரது அறையில்... கட்டிலுக்கு அருகில் அவர் கைக்கு எட்டும் தூரத்தில் இருந்த டீப்பாயில் வைத்து விட்டு விரைந்தாள்.

அப்பா எப்போது எழுந்து கொள்கிறாரோ... அப்போது அவராகவே டம்ளரை எடுத்துப் பருகிக் கொள்வார்.

தாலி கட்டிய கணவருக்காக பூரணி, மருந்துக்குக் கூட சேவை செய்வதில்லை. தொண்டை வறண்டு தண்ணீர் தாகம் எடுத்தாலோ... ஆத்திர அவசரத்திற்கு உளறிக் குழறி பூரணியின் பெயரைக் கூப்பிட்டு அழைத்தால் அவ்வளவு தான்!

''அடாடா... என்னவாம்? என் பேரை இப்படி ஏலத் துக்கு விட்டுக்கிட்டு இருக்கீங்க? சீவி சிங்காரிச்சு மினுக்கிக்கிட்டு உங்க பொண்ணு வேலைக்கு ஓடிப் போயிடறா... இங்கே நான்தான் உங்களைக் கட்டி அழ வேண்டியிருக்கு... காலம் முழுவதும் உங்களுக்கு சேவகம் பண்ணிப் பண்ணி... நான் செத்தே போயிடுவேன் போலிருக்கே!

என்ன வேணும்? ஆ... தண்ணியா?... இந்தாங்க புடிங்க'' கூறிக் கொண்டே தண்ணீர் சொம்பை நச்சென்று டீப்பாயில் வைத்துவிட்டு நகர்வாள் பூரணி.

இப்பேர்ப்பட்டவளிடம் ஏதாவது உதவி கேட்டால் பெரிய 'லட்சார்ச்சனை' நடக்கும் என்ற பயத்தில்... சண்முகநாதன் சுருண்டு படுத்துக் கிடப்பார்.

வேலையை விட்டு... மாலையில் பார்கவி வீடு திரும்பும் வரை... அவருக்கு அதே கதி தான்!

''அப்பா! கஞ்சி இருக்கு... மதியத்துக்கு சாதத்துல மோர் ஊத்திப் பிசைந்து கரைச்சு வச்சிருக்கேன். தண்ணி, மாத்திரை எல்லாம் எடுத்து வச்சிருக்கேன். நீர் ஆகாரம் தானே? குடிச்சுட்டு ரெண்டு வேளைக்கும் மாத்திரை

போட்டுக்கோங்க... மறந்துடாதீங்கப்பா'' குனிந்து அப்பாவிடம் கனிவாகக் கூறி விட்டு அரக்கப் பரக்க அறையை விட்டு வெளியேறினாள் பார்கவி.

''நா வரேன் சித்தி'' தணிந்த குரலில் கூறி விட்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

''வேலைக்குப் போறே... காதல் ஏற்பட்டு நீ மனசு மாறி விட்டால்?'' சித்தி பயத்துடன் கேட்ட கேள்வி... பார்கவியின் செவிகளில் இன்னமும் ரீங்காரமிட்டுக் கொண்டு தான் இருந்தது.

அவளது இதழ்க்கடையில் சிறு நகை பூத்தது. அவள் மனதில் மொட்டவிழ்ந்து மலர்ந்த காதல் மணத்துக் கொண்டிருந்தது.

அவள் கல்லூரி மாணவியாக இருந்தபோதே... அவளது இதயக் கதவுகள் திறந்து... அந்த வாலிபனைக் குடியேற்றி வைத்திருந்தது.



## 8

காலைக் கதிரவனின் வெளிச்சம் ஜன்னல் திரையைத் தாண்டி... அம்ருதாவின் பூ முகத்தை இதமாக ஸ்பரிசித்தது.

தூக்கம் கலைந்து விழிப்புத் தட்டினாலும்... சட்டென்று எழுந்து கொள்ளாமல் புரண்டு புரண்டு படுத்துக் கிடப்பதில் அம்ருதாவுக்கு அலாதி சுகம் தான்!

குதூகலத்திற்கும், கலகலப்பிற்கும் மறு பெயர் உண்டென்றால் அது அம்ருதாவாகத் தானிருக்கும்.

யாரோ அறைக் கதவைத் திறந்து கொண்டு வரும் சப்தம் கேட்டதும்... செல்லமாய் சிணுங்கியபடி போர்வையை எடுத்து தலை வரை இழுத்து விட்டுக் கொண்டாள்.



''அம்ரு... அம்மு குட்டி!'' அம்மா விசாலத்தின் குரலில் டன், டன்னாய் பாசம் வழிந்தோடியது. அவளது போர்வையை விலக்கி விட்டு... மகளின் நெற்றியை மிருதுவாகத் தடவினார்.

''பிறந்த நாள் வாழ்த்துக்கள்! செல்லம்... நீ அமோகமா இருக்கணும்'' அவளது கன்னத்தில் ஆசையுடன் முத்தமிட்டார். சட்டென்று அவரது கழுத்தைக் கட்டிக் கொண்டாள் அம்ருதா.

''தேங்க் யூ! இந்தா... வட்டியும் முதலுமா திரும்ப வாங்கிக்கோ'' என்றபடி அவரது கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டாள்.

''ஐயோ... போக்கிரி பொண்ணே! கார்த்தால எழுந்து பல் கூட தேய்க்காம... இதென்ன குறும்புத்தனம்?'' விசாலத்தின் புலம்பல்களை காதில் போட்டுக் கொள்ளாமல்... அவரை திணறிடித்து விட்டாள்.

''எங்கே விஸ்வநாதனைக் காணோம்? நீ மட்டும் வாழ்த்த வந்துட்டே விசாலம்?'' நீண்ட இமைகள் பட்டாம் பூச்சியாய் சிறகடிக்க... கயல் விழிகளில் குறும்புத் தனம் மிதக்க... அவள் கேட்ட விதம்... விசாலத்திற்கு குபீரென்று சிரிப்பை வரவழைத்தது.

பொங்கி வந்த சிரிப்பை சிரமப்பட்டு அடக்கியவாறு, ''என்னது இது? பெரியவங்களை பேர் சொல்லிக் கூப்பிட்டுகிட்டு? நாளைக்கு அடுத்த வீட்டுக்கு வாழப் போற பொண்ணு... இனிமே தலையில அடிச்ச மாதிரி பேர் சொல்லாதே. நல்லாயில்லடா அம்மு'' அதட்டினார் விசாலம்.

''ஆமா! நான் கூட நெனச்சேன். நல்லா இல்லையின்னு... அதனால ஒண்ணு பண்ணுவோமா? 'கர்நாடகமா' இருக்கிற, பேரை சுருக்கிட்டு செல்லமா ஸ்டைலா...

'விஸ்வம்' 'விசாலி' அப்படின்னு இனிமே கூப்பிடறேன். சரியா விசாலி? பேர் நாகரீகமா இருக்குல்லே?''

''அடக் கடவுளே! பகவானா பார்த்து தான் உன் திரு வாய்க்கு ஒரு பூட்டு போடணும்'' சிரித்தபடி கூறிய விசாலத்திற்கு மனம் இறகு போல் இலேசானது.

அம்ருதாவின் கட்டிலில் அவளது தலை மாட்டில் வைத்திருந்த 'செல்' அவசரக் குரலில் அழைப்பு விடுத்தது. செல்லில் ஒளிர்ந்த எண்களைக் கண்டதும் முகம் மலர்ந்து எடுத்துப் பேச ஆரம்பித்தாள்.

''நான் பேச மாட்டேன். நீங்க நேர்லே வந்து வாழ்த்த வேணாமா?''

''ஸாரிடா அம்மு! அக்ரிமெண்ட் ஒண்ணு முடியாம இழுத்து அடிச்சுகிட்டே இருக்கு. இல்லேன்னா... பறந்து வந்திருக்க மாட்டேனா? தவிர்க்க முடியாத சூழ்நிலை... அதனால் தான் பல்லைக் கடிச்சுக்கிட்டு மும்பையில உட்கார்ந்திருக்கேன். கோபிச்சுக்காதே... பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' மறுமுனையில் விஸ்வநாதன் ஏகத்திற்கும் குழைந்தார்.

மகள் அம்ருதாவின் மனம் கோணி விடுமே என்ற பதற்றம் குரலில் தொனித்தது. அவளது கண்களில் சிறு தூசு விழுந்தால் கூட... துடிதுடித்துப் போய் விடுவார். அவ்வளவு பாசம்!

விஸ்வநாதன் என்றாலே மற்றவர்களுக்கு 'சிம்ம சொப்பனம்' தான். ஆனால் மகள் அம்ருதா... அவரது ஒட்டு மொத்த அன்பிற்கும் பாசத்திற்கும் உரியவள் என்பதால்... மனிதர் அவள் முன் சரணாகதி ஆகி விடுவார்.

அவருக்கே சர்வாதிகாரியாகி... அன்பினால் அவரை ஆட்டிப் படைத்தாள்.



''தேங்க் யூ! அப்புறம்... உங்க ரெண்டு பேருக்கும் ஒண்ணு சொல்றேன். அடுத்த வருஷம் தம்பதி சமேதரா வந்து தான் வாழ்த்தணும். சரியா விஸ்வம்?''

''விஸ்வமா?''

''ஆமா... அம்மா ரொம்ப குறை பட்டாங்க அப்பா... என்ன விஷயம்னா... உங்களை ஆசையா வாய் நிறைய 'விஸ்வம்'னு... இது நாள் வரை கூப்பிடாம போயிட்டோமே'ன்னு வருத்தப்படறாங்க அப்பா.''

மறுமுனையில் கலகலவென்று விஸ்வநாதன் சிரிக்க... விசாலம் பொய்க் கோபத்துடன் ஒரு தலையணையை எடுத்து மகளை அடிக்க வர... வேகமாய் குதித்து ஓடிய அம்ருதா அறைக்குள் நுழைந்த கிரீசனின் மீது மோதப் பார்த்தாள்.

டக்கென்று அவளது காதைப் பிடித்துச் செல்லமாய் திருகிய கிரீசன், ''என்னம்மா சொன்னா இவ? பெரிய கலாட்டா பண்ணிட்டிருக்கா போலிருக்கே?''

அம்ருதா பேசிய விதத்தை சிரித்தவாறே விவரித்துச் சொன்ன விசாலம் ஆசையாக மகளை ஏற இறங்கப் பார்த்து விட்டு வெளியேறினார்.

''அம்மா சிரிக்கும்போது ரொம்ப அழகா இருக்காங்க இல்லியா அண்ணா?''

''ஆமா... அம்ரு! பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' அவளது கையைப் பற்றிக் குலுக்கினான்.

''தேங்க் யூ... பாத்தியா? வெறும் மெஸேஜ் அனுப்பியிருக்கா... அவளுக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்?''

''யா... யாரைச் சொல்றே?''

''வேற யாரு? என் தோழி பார்கவிதான்! ஃபோன் பண்ணிப் பேசறதுக்குக் கூட அவளுக்கு நேரம் இல்லையா?

இன்னிக்கு அவளை நேர்லே பார்த்து பிலுபிலுன்னு சண்டை பிடிக்கனும்.''

'பார்கவி' என்ற பெயரைக் கேட்டதும்... கிரீசனின் நெஞ்சுக் கூட்டிற்குள் புறா சிறகடித்தது.

மனதிற்குள் சிலுசிலுவென்று சன்னமான நீரோடை பாய்ந்தது.

பாலைவனமாய் வறண்டிருந்த இதயத்தில்... குபீரென்று ஓராயிரம் வண்ண மலர்கள் ஒரு சேர மலர்ந்து சிலிர்த்தன.

ஒரு வருடத்திற்கு முன்பே... அவனது இதயமெனும் சிம்மாசனத்தில் காதல் யுவராணியாய் அமர்ந்து விட்டிருந்தாள் பார்கவி.

அன்று...

பெரிய குளத்திலிருந்த கம்பெனிக்குச் சென்றிருந்தான் கிரீசன். முந்தைய நாள் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட கார் உதிரி பாகங்களின் பட்டியலை சரி பார்த்து விட்டு... பழைய 'ஸ்டாக்' சரியான அளவில் உள்ளதா என்று கண் காணித்து விட்டுத் திரும்பினான்.

திரும்பும் வழியில் தென்பட்ட அந்த சிறு மலையின் மீது அமைந்திருந்த கல்லூரியைக் கண்டதும்... சட்டென்று காரை நிறுத்தினான்.

அந்தக் கலைக் கல்லூரியில் தான் அம்ருதா படித்துக் கொண்டு இருந்தாள். சட்டென்று டிரைவருக்கு போன் செய்தான்.

''இன்னிக்கு நானே அம்ருவை அழைச்சுட்டு வந்துடறேன். நான் வர்ற வழியில அவளோட கல்லூரி இருக்கு. இன்னிக்கு நீங்க வர வேண்டாம் கந்தசாமி அண்ணே.''

''சரிங்க தம்பி'' மறுமுனையில் பவ்யமான குரல் வந்தது.



வியாபார ரீதியாக பல அழைப்புகள் வந்த வண்ணம் இருக்கும் என்பதால்... முதல் வேலையாக செல்போனை அணைத்து பாக்கெட்டில் வைத்தான்.

'திடுதிப்பென்று தன்னைக் கண்டதும் தங்கையின் முகம் ஆச்சரியத்திலும், மகிழ்ச்சியிலும் பூவாய் மலரும். அதைக் கண்டு மகிழ வேண்டும்' என்று எண்ணமிட்டபடி காரின் கதவில் சாய்ந்து நின்று கைகளைக் கட்டிக் கொண்டான்.

ஆனால்... அவனுக்குத் தான் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

தூரத்தில் அம்ருதாவுடன் பேசிச் சிரித்தபடி நடந்து வந்த பெண்ணைக் கண்டதும்... கிரீசனின் இருதயம் ஒரு கணம் நின்று துடிக்க மறந்து... அப்புறம் இயங்கியது.

எங்கேயோ பார்த்த ஞாபகம்...!

அவனது விழிகள் இமைக்க மறந்தன.

கட்டான தேகம், அகன்ற விழிகள், சாந்தமும் கருணையும் ததும்பும் முகம், குழி வெட்டிய மோவாய், கூர் மூக்கு... பசை போட்டு ஒட்டிய தினுசில் அவளது உருவம்... அவனது இதயத்தில் பார்த்த மாத்திரத்தில் ஒட்டிக் கொண்டது.

கட்டுக்கடங்காத நீளக் கூந்தலை 'கிளிப்' போட்டு அடக்கி அப்படியே விட்டிருந்தாள்.

ஜென்ம ஜென்மமாய்... அந்த அழகு தேவதைக்காகவே தான் காத்திருந்தது போன்ற பிரமை ஏற்பட்டது அவனுக்கு!

''யாரிந்த தேவதை... யார் இந்த தேவதை?'' அவனையும் அறியாமல் கிரீசனின் உதடுகள் முணுமுணுத்தன.

அவர்கள் அருகில் நெருங்கி வரவும்... கஷ்டப்பட்டு தன் பார்வையை மரியாதை நிமித்தம் தழைத்துக் கொண்டான்.

''அட... என்ன அண்ணா? அதிசயமா நீ வந்துட்டே?''

''இங்க ஒரு வேலையா வந்தேன். வர்ற வழியிலே உன்னை நானே 'பிக்கப்' பண்ணிடலாம்னு தோணிச்சு. அதான்...'' புன்னகைத்தான்.

''பார்கவி! இவன் என்னோட அண்ணா கிரீசன்... அண்ணா! இவ என்னோட தோழி பார்கவி'' உற்சாகமாய் அறிமுகப் படலத்தை ஆரம்பித்தாள் அம்ருதா.

பரஸ்பரம் இருவரும் ஏறிட்டுப் பார்த்து புன்னகைத்துக் கொண்டபோது... இதயங்கள் தடம் புரண்டு இடம் மாறின.

அதற்குப் பின்பு... வேண்டுமென்றே ஏதாவது ஒரு வேலையை அவனாகவே உருவாக்கிக் கொண்டு... அடிக்கடி அந்தக் கல்லூரி வாசலில் தவமிருக்கத் தொடங்கினான்.

அம்ருதாவின் மற்ற தோழிகள் உரிமையுடன் காருக்குள் அமர்ந்து கொள்வது வழக்கம். ஆனால்... பார்கவியோ ஒரு நாள் கூட காரிலேற மாட்டாள்.

எத்தனையோ முறை அம்ருதா வற்புறுத்தியும்... அவள் சம்மதித்ததில்லை.

''பக்கத்து வீட்டு பங்கஜம் அம்மா... வர்றப்போ நாட்டு மருந்து கொஞ்சம் வாங்கிட்டு வரச் சொன்னாங்க'' என்பாள்.

''காந்திமதி அத்தைக்கு கை வினைப் பொருட்கள் செய்வதற்கு உரிய சாமான்கள் வாங்கணும். இருந்து நிதானமா பார்த்து வாங்கணும். உன்னோட அண்ணா காத்திட்டிருக்கார்... அவரோட நேரத்தை வீணாக்காதே... அம்ரு!... பை'' என்று ஏதாவது சாக்கு போக்கு சொல்லி தட்டிக் கழித்து விடுவாள் பார்கவி.



''சரியான பரோபகாரி இவ... எப்பப் பாரு யாருக்காவது உதவணும்... ஏதாவது செய்யணும்னு நினைக்கிற குணம்... அதுவும் தவிர சுய கவுரவம் ரொம்ப ரொம்ப ஜாஸ்தி! அவ கிட்ட எனக்கு ரொம்ப பிடிச்ச குணமே இதுதான்.

''என்னோட மற்ற தோழிங்க உரிமையா கார்ல ஏறி 'போற வழியிலே இறக்கி விட்டுரு'ன்னு உட்கார்ந்துடுவாங்க...

''ப்ச்! நான் பணக்கார வீட்டுப் பொண்ணு அப்படிங்கிறதால... எதையோ எதிர்பார்த்து என் கிட்ட ஒட்டிக்கிட்ட தோழிங்க ஏராளம்.

''ஆனா... கவி மட்டும் உண்மையான நட்போட என்னை நேசிக்கிறா.... அதனால தான் அவளை எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.

''படிப்புலே நம்பர் ஒன்... அழகா பாடறா... ரொம்ப அழகா ஓவியம் வரைவா தெரியுமா? திறமை, புத்திசாலித்தனம், பொறுப்பு, தன்னடக்கம், உதவுகிற குணம்... மொத்தத்திலே 'அவ ஒரு சகலகலா வல்லி.''

அம்ருதா தனது தோழியைப் பற்றி சிலாகித்துப் பேசிய போது... பார்கவியின் மீதுள்ள மதிப்பு கூடிக் கொண்டே போய்... கிரியின் மனதில் உயர்ந்த ஸ்தானத்தில் அமர்ந்து விட்டாள்.

'தனக்குள் முகிழ்த்த காதல் அவளுக்குள்ளும் மலர்ந்திருக்குமா?' என்ற ஐயம் கிரியின் மனதில் முளை விட்டது.

மறுநாள்... வேண்டுமென்றே வேறொரு காரை எடுத்துக் கொண்டு வந்த கிரீசன்... வழக்கமான இடத்தில் காரை நிறுத்தாமல்... இருபதடி தள்ளி ஒரு புளிய மரத்தடியில் நிறுத்தி விட்டு காருக்குள்ளேயே அமர்ந்து விட்டான்.

அம்ருதா சாவதானமாக ஏதோ பேசிக் கொண்டு வர... பார்கவியின் விழிகள் ஏமாற்றத்துடன் நாலா புறமும் சுற்றிச் சுழன்றன.

அவளது அழகிய முகம் அனிச்ச மலராய் வாடிப் போனது. கிரியைத் தேடித் தவித்தன அவளது விழிகள்!

அவள் தவித்த தவிப்பையும், துடித்த துடிப்பையும்... அம்ருதா அறியாமல் இருக்கலாம்.

ஆனால் கிரீசனுக்குள் உற்சாகம் புதுப் புனலாய் பெருக்கெடுத்தது.

சட்டென்று காரை விட்டு இறங்கினான். பார்கவியின் முகத்தில் விளக்கு போட்டாற் போல் வெளிச்சம்! இருவரது விழிகளும் ஒரு கணம் காதலுடன் மோதிக் கொண்டன.

இதை எதிர்பார்த்து தானே அவனும் தவமாய் தவமிருந்தான். "பார்வை ஒன்றே போதுமே... பல்லாயிரம் சொல் வேண்டுமா?" என்ற பாடல் வரி தான் அவனுக்கு ஞாபகம் வந்தது.

'கண்டிப்பாக பார்கவியும் என்னை நேசிக்கிறாள்' உள்ளூர நிம்மதி பரவியது.

நாடி நரம்புகளில் ஜிவ்வென்று புது ரத்தம் பாய்ந்தது போலிருந்தது.

அந்த வருடத்தோடு அவர்களது கல்லூரிப் படிப்பு முடிந்தது. அதுவரை தான் அந்த தேவதையின் தரிசனம் அவனுக்கு அடிக்கடி கிடைத்தது.

அதன் பின் குடும்பச் சூழ்நிலை காரணமாக... பார்கவி வேலைக்குப் போய் வருகின்றாள் என்பதை அம்ருதாவின் மூலமாக அவன் அறிந்து கொண்டான்.

அப்பா விஸ்வநாதன் கண்டிப்பாக இந்தக் காதலுக்கு முட்டுக்கட்டை போடுவார் என்பதை கிரீசன் நன்கு அறிவான்.



'வாழ்ந்தால் பார்கவியோடு, தான்! இல்லையேல் இப்படியே இருந்துவிட வேண்டியதுதான்.'

அவன் உள்ளுக்குள் முடிவெடுத்துப் பல மாதங்கள் ஆயிற்று.

கிரீசன் மிகவும் கண்ணியமான இளைஞன், தன் அழகு தேவதையின் முகத்தை அவ்வப்போது மனக் கண்ணில் நிறுத்தி ரசித்தான்.

அவளது தெருமுனையிலோ... அலுவலகத்திற்கு அருகிலோ காரை நிறுத்தி அவளைப் பார்க்க முயற்சி செய்ததில்லை.

தன்னால் எந்தவித தர்ம சங்கடமும் தன் தேவதைக்கு நேரிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான்.

"ஹலோ அண்ணா! அண்ணா..." அம்ருதா அவனது தோளைத் தொட்டு அசைத்தாள்.

"என்ன அண்ணா? உன் உடம்பு தான் இங்கே இருக்கு. மனசு எங்கேயோ போயிடுச்சு போல? நின்னுகிட்டே கனவா? எனக்கு வெறும் வாழ்த்து மட்டும் தானா? பிறந்த நாள் பரிசு எதுவும் இல்லையா?"

"குளிச்சுட்டு வா... உனக்காக பரிசு காத்திருக்கு" சிரித்தபடி கூறி விட்டு வெளியேறினான்.

அடுத்த வருடம்... அவனது அன்புக்கு உகந்த தங்கை அம்ருதா... பிறந்த நாளைக் கொண்டாட மாட்டாள் என்று யாருமே நினைத்துப் பார்க்கவில்லை.

## 9

கனினி மங்கையான பார்கவி, கண்ணாடி தடுப்புடன் கூடிய தன் கேபினுக்குள் நுழைந்தாள். தன் பொருட்களை வைத்துவிட்டு அமர்ந்தவளின் அருகே வந்து நின்றாள் மீனா.

- நீ

''வணக்கம் பார்கவி! எப்பவும் எனக்கு முன்னாடியே வந்துடுவே... இன்னிக்கு தாமதமா வந்திருக்கே?'' என்றாள்.

பார்கவியின் கேபினுக்கு பக்கத்தில் தான் அவளுடைய கேபின் இருந்தது. இருவருமே சம வயதுடையவர்கள்.

தன் சுழல் நாற்காலியை அவள் இருக்கும் திசை நோக்கி திருப்பிக் கொண்டாள் பார்கவி.

''வணக்கம்... கிளம்பற நேரத்துல சித்தி ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தின பேச்சை ஆரம்பிச்சிட்டாங்க... அதுக்கு அப்புறமா பேருந்து நிறுத்தத்துக்கு கிட்டே வரும்போதுதான்... அம்ருவோட பிறந்த நாள் பத்தின ஞாபகமே வந்தது.

''அவ 'செல்'லுக்கு முயற்சித்தேன். இணைப்பு கிடைக்கலை. சரின்னு... அவளை வாழ்த்தி ஒரு மெஸேஜ் குடுத்துட்டு பேருந்தைப் பிடிச்சேன். அதான் தாமதம்'' புன்னகைத்து விட்டு சுழல் நாற்காலியை மெல்லத் திருப்பிக் கொண்டாள்.

கணினி பட்டனை தட்டி விட்டாள்.

பார்கவி எப்போதும் இப்படித்தான்! அவளது பேச்சு பட்டுக் கத்தரித்தாற் போன்றிருக்கும். அன்றாட வேலை சீக்கிரம் முடிந்து விட்டால் கூட... வீண் அரட்டைக் கச்சேரிகளில் ஈடுபட மாட்டாள்.

ஏதாவது ஒரு கணினி சம்பந்தமான புத்தகத்தையோ அல்லது கோப்பையோ எடுத்து வைத்துக் கொண்டு அதில் மூழ்கி விடுவாள்.

மீனாவுக்கும் சரி... அவளுடன் வேலை பார்க்கும் இதரப் பணியாளர்களுக்கும் சரி... பார்கவியின் மேல் அலாதிப் பிரியம், மரியாதை!



வேலை மும்முரத்தில் நேரம் பறந்ததே தெரியவில்லை. 'அதற்குள் பகல் ஒரு மணி ஆகி விட்டதா?' பார்கவியின் கண்கள் சுவர்க் கடிகாரத்தில் படிந்து மீண்டன

''உஸ்! அப்பாடி!'' சுழல் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து விழிகளை மூடிக் கொண்டாள்.

சித்தி பூரணி மனக் கண்ணில் தோன்றினாள்.

இன்று மாலை வீட்டிற்குச் சென்றால்... 'பூதாகாரமான பிரச்சினை கண்டிப்பாக வெடிக்கும்' என்று உள்ளூரப் பட்சி எச்சரித்தது.

அடிவயிற்றில் உறுமலாய் 'எனக்கு?' என்ற கேள்வி எழும்பியதும் தான்... அவளுக்கு காலையில் சாப்பிடவில்லை என்ற ஞாபகமே வந்தது.

கைப்பையை எடுத்து திறந்து பார்த்தாள். தண்ணீர் பாட்டில் மட்டுமே இருந்தது. அவசரமாக விழுந்தடித்து ஓடி வந்ததில் மதிய உணவு டப்பாவை மறந்து போய் வீட்டிலேயே வைத்து விட்டாள்.

'மடக்... மடக்' என்று தண்ணீரைத் தொண்டைக்குள் சரித்துக் கொண்டாள்.

''ஹாய்... கவி'' பரிச்சயமான குரலைக் கேட்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சட்டென்று பின்னால் திரும்பியவளின் விழிகள் ஆச்சரியத்தில் மலர்ந்து விரிந்தன.

''அட... அம்ரு! வா... வா... என்ன இவ்ளோ தூரம்?''

''உதைப்பேன் உன்னை... என்ன நினைச்சுட்டிருக்கே உன் மனசுல. ஒரு போன் பண்ணி வாழ்த்தினா குறைஞ்சா போயிடுவே? மெஸேஜ் அனுப்பியிருக்கா பெரிய மனுஷி!

''உன் கூட சண்டை போடத்தான் வந்தேன். நீதான் சின்சியர் சிகாமணியாச்சே? வேலை நேரத்துல வந்தா... நீ

நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டியே? அதான்... மதிய உணவு இடைவேளை நேரத்துல வந்தேன்.''

''எனக்குக் காலையிலே இணைப்பே கிடைக்கலை அம்ரு. ஸாரிடா... நீ என்னிக்கும் நல்லா இருப்பே... உன் மனசுக்கு ஒரு குறையும் வராது.''

பார்கவியின் விழிகளில் மெலிதான ஈரப்படலம் படர்ந்தது.

'அம்ரு! நீ இப்போ கோபமா இருக்கே... நான் சொன்னா நீ நம்ப மாட்டே.... இதோ பாரு! போன மாசமே... உன்னோட பிறந்த நாள் வருதுன்னு ஞாபகம் வச்சிருந்து... இதை கண்ணும் கருத்துமா வரைஞ்சேன்.

''இதை முடிச்சு இங்கேயே கொண்டு வந்து வச்சுட்டேன். ரெண்டு நாள் முன்னாடியே கொரியர்லே அனுப்பியிருப்பேன். வீட்டுலே அப்பாவுக்கு உடம்பு சரியில்லை... படுத்த படுக்கையா இருக்கார். அதே கவலையில இது சுத்தமா மறந்து போச்சு. இந்தா வாங்கிக்கோ'' தழுதழுத்தாள் பார்கவி.

''வாவ்! இந்த ஓவியம் ரொம்ப அழகா இருக்கு கவி.''

குழந்தை கிருஷ்ணர் வெண்ணெய் பானையில் கைகளை நுழைத்துக் கொண்டிருப்பதைப் போன்று சித்தரித்திருந்தாள் பார்கவி.

கொழு கொழு என்று பால் வடியும் கன்னங்களில், இதழ்களில் வெண்ணெய் அப்பியிருந்தது போல் வரைந்திருந்தாள்.

''பால் வடியற முகம்... மழலை மாறாத முகம் ரொம்ப அருமையா வரைஞ்சிருக்கே கவி'' சந்தோஷத்தில் சட்டென்று பார்கவியின் புறங்கையில் 'இச்' பதித்தாள் அம்ருதா.



''உம்! உனக்குக் கூட இன்னமும் முகத்துல பால் வடியுது. தெரியுமா? நீ குழந்தையா இருக்கும்போது இப்படித் தான் இருப்பேன்னு கற்பனை பண்ணி வரைஞ்சேன்.

''கள்ளம் கபடமில்லாம வெள்ளை மனசோட 'அமுல் பேபி' மாதிரி அழகா இருக்கே அம்ரு'', சிரித்தாள் பார்கவி.

''நீ மட்டும் என்னவாம்? தேவதை மாதிரி இருக்கே... தோ பாரு.. இன்னிக்காவது என் பேச்சைக் கேட்பாயா? வா... என் கூட.. பக்கத்து உணவகத்துல சேர்ந்து சாப்பிட்டுட்டு வரலாம்.''

''உணவு இடைவேளை முடியறதுக்குள்ளே நாம்ப வந்துடலாம். நீ மாட்டேன்னு சொன்னா... நான் ரொம்ப வருத்தப்படுவேன்.''

சுட்டு விரலை நீட்டி எச்சரித்தாள் அம்ருதா.

பார்கவிக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது.

''பெர்த் டே பேபி'யோட மனசை நான் நோகடிக்க மாட்டேன். வரேன்.''

''நீ சம்மதிச்சதே பெரிய அதிசயம் தான். வா... வா!'' மனசு மாறிடப் போறே.''

கிட்டத்தட்ட அவளது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினாள் அம்ருதா.

காரில் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்தவனைக் கண்டதும்... பார்கவிக்கு பக்கென்றிருந்தது.

மந்தகாசம் தவழும் முகத்துடன் ஸ்டியரிங் வீலில் கை விரல்களால் தாளம் போட்டபடி கிரீசன் அமர்ந்திருப்பான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

''அ... அம்ரு! நான் இன்னொரு நாள் வரேனே'' அதீத தயக்கத்துடன் வார்த்தைகள் உதிர்ந்தன.

''அவங்க வேற ஏதோ நல்ல டிரைவர் இருப்பான்னு நம்பி வந்துட்டாங்க... என்னை எதிர்பார்க்கலை போலிருக்கு...

''என்னோட 'டிரைவிங்'லே அவங்களுக்கு நம்பிக்கை இல்லை... அதான் இப்படித் தயங்கறாங்க.''

பக்கவாட்டில் திரும்பி பார்கவியின் விழிகளை ஊடுருவியபடி கிரீசன் கேலியாகப் பேசினான்.

''அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல... ஸாரி'' மிடறு விழுங்கியபடி சட்டென்று காரில் ஏறி அமர்ந்தாள்.

காரை உசுப்பிக் கிளப்பிக் கொண்டே... தனக்கு எதிரே இருந்த சிறிய கண்ணாடியில்... பார்கவியின் முகம் நன்றாகத் தெரியும்படி... அதை இடது கையால் மெல்ல சரிப்படுத்தினான் கிரீசன்.

பார்கவியின் விழிகள் அதை கவனிக்கத் தவறவில்லை.

உள்ளுக்குள் மகிழ்ச்சி நீரூற்று பொங்கி உயர்ந்தது.

முதன் முதலில் கிரீசனை சந்தித்த மாத்திரத்திலேயே... தனது உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டிருந்தாள்.

''சேச்சே! இதென்ன முட்டாள் தனம்? எனக்கும் அவருக்கும் ஏணி வச்சாலும் எட்டாதே? எவ்வளவு பெரிய அந்தஸ்து பேதம்? அது ஏன் இந்தப் பேதை நெஞ்சத்திற்குப் புரியவில்லை?''

தன்னைத் தானே அடிக்கடி நொந்து கொள்வாள் பார்கவி.

நாளடைவில் கிரீசனின் உள்ளக் கிடக்கையை அவள் நன்கு அறிந்து கொண்டாள். அவனது அன்பு ததும்பிய முகமும், கனிந்த பார்வையும்... அவளுக்கு ஓராயிரம் கதைகளைச் சொல்லின.



'இந்தக் காதல் நிறைவேறுமா? அல்லது கானல் நீராகி விடுமா?' என்று எண்ணும்போதே... அவளது இதயத்தில் ஓராயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போன்ற வேதனையில்... துடித்து துவண்டு போவாள் பார்கவி.

* * *

''என்ன கவி? உம்முனு இருக்கே? 'பிஸி பேளா பாத்' நல்லா இல்லையா? அது பிடிக்கலேன்னா... பிரிஞ்சி சாதம் எடுத்துக்கோ... ரொம்ப சுவையா இருக்கு.

''அப்பா வியாபார விஷயமா 'மும்பை'க்கு போனார். இன்னிக்கு நேர்ல என்னை வாழ்த்த முடியலை. என் மனசு கோணிடும்னு கிரி அண்ணாவுக்கு ஃபோன் பண்ணி... இன்னிக்கு முழுக்க என் கூடவே இருக்கச் சொல்லிட்டார்.

''கிரி எனக்காக எல்லா ஒப்பந்தங்களையும் ரத்து பண்ணிட்டு வந்துட்டான். மாலையிலே வீட்டுலே பிறந்த நாள் விழா இருக்கு. நம்ம கல்லூரித் தோழிங்க எல்லாரும் வருவாங்க.

''நீதான் வரவே மாட்டியே? இருந்தாலும்... எனக்கு நீதான் முக்கியம். இன்னிக்கு உன் கூட ஒரு அரை மணி நேரமாவது இருக்கணும்னு பிரியப்பட்டு வந்தேன்'' அம்ருதா சளைக்காமல் பேசிக் கொண்டிருந்தாள்.

பார்கவிக்கு பசி பறந்தே விட்டது. ஸ்பூனால் சாதத்தைக் கிளறிய வண்ணம் இருந்தாள். கிரியின் பார்வை அவளது முகத்தில் பதிந்திருந்தது.

இருவருக்குள்ளும் ஒரே வினாடியில் விதை விழுந்து முளை முளைத்து கிளை விரித்து விருட்சமாகி விட்டிருந்தது காதல்!

'காதல் பூ' மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தது.

அது எப்போது பூக்கிறது... ஏன் பூக்கிறது... எதற்காகப் பூக்கிறது என்பதெல்லாம் இலக்கியத்திற்கும் இயற்கைக்கும் இன்னும் விடுகதையாகவே இருக்கிறது.

எதுவும் எழுதப்படாத வெள்ளைத்தாள் போன்ற மனதில் காதல் ஒரே நிமிடத்தில் ஆயிரம் கவிதைகளை எழுதி விட்டுப் போய் விடுகின்றதே!

காதல் என்பதும்கூட ஒரு விபத்துதான் - இரண்டுமே எதிர்பாராதவை.

காதல் செய்த ரசவாத வித்தையை எண்ணி... கிரியும், பார்கவியும் அதிசயத்துக் கிடந்தனர்.

அன்று மாலையில்... பார்கவி எதிர்பார்த்தது போலவே சித்தி அவளது தலையில் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டாள்.

# 10

சூரியன் மேற்கு வானில் வழுக்கத் தொடங்கும்போது... தோட்டத்து மனோரஞ்சித மலர்கள் மணக்க ஆரம்பித்தன.

வேலை முடிந்து வீடு திரும்பிய பார்கவி... அடுக்களையில் தேய்க்கப்படாமல் இறைந்து கிடந்த பாத்திரங்களை அள்ளி கிணற்றடியில் போட்டுத் தேய்த்துக் கழுவினாள்.

இரண்டு பெரிய வாளிகளில் ஊறிக் கிடந்த அழுக்குத் துணிகளைத் துவைத்து... வேப்ப மரங்களுக்கு இடையில் கட்டிய கொடிகளில் காய வைத்து விட்டு கூடத்திற்கு வந்தாள்.

வீட்டு வாசலருகே இருந்த மகிழ மரத்தின் அருகில் வந்து நின்ற பங்கஜத்தையும் அவரது கணவர் சிவ



சாமியையும் பார்த்து விட்டு... பார்கவி அவசரமாக வெளியில் வந்தாள்.

"உள்ளே வாங்கம்மா... ஐயா வாங்க."

"பரவாயில்ல கவி! இன்னிக்கு இரவு ஏழு மணிக்கு நாங்க ஊருக்குக் கிளம்பறோம்.

"திருச்சியில இருக்கிற மூத்த மகனும், விஜய வாடாவில் இருக்கிற இளைய மகனும்... எங்களை அவங்களோட வந்து இருக்கச் சொல்லி வற்புறுத்தறாங்க கவி!

"மருமகள்களும் ரொம்ப அன்பா மரியாதையா இருக்காங்க... பெரியவன் வீடு, கட்டிட்டிருக்கான். வீட்டைக் கட்டிப்பார்... கல்யாணம் பண்ணிப் பார்'னு சொல்வாங்க... பாவம்! அவனுக்கு பணம் தேவைப்படுது.

"இளையவனுக்கு தொழில் கொஞ்சம் மந்தமா இருக்கு. அவனுக்கு ஒரு தொகையைக் கொடுத்தோம்னா... வியாபாரத்தை விருத்தி பண்ணி முன்னுக்கு வந்துடுவான்.

"இவரும் அரசாங்க வேலை பார்த்துட்டு ஓய்வு பெற்று சும்மா தானே இருக்காரு. வங்கியில போட்டு வச்சிருக்கிற பணத்தை சரி சமமா பிரிச்சு பிள்ளைங்களுக்கு கொடுத்திட்டு... திருச்சியிலும் விஜயவாடாவிலும் மாறி மாறி தங்கிக் காலத்தை ஓட்டிரலாம்னு இருக்கோம்.

"பசங்களுக்கு அவசரத்துக்கு கொடுத்து உதவாம... வங்கியில போட்டு வச்சு என்னத்தை அள்ளப் போறோம்? அவங்களுக்கும் நம்மை விட்டா யாரு இருக்காங்க?

"சாவியைக் குடுத்துட்டுப் போறோம். அப்பப்போ வீட்டைப் பெருக்கி சுத்தப் படுத்தி வச்சுடறியா கவி?"

"சரிங்க அம்மா! மறக்காம சாவியைக் கொடுத்துட்டுப் போங்க" என்ற பார்கவிக்கு... நெஞ்சில் பாறாங்கல்லை ஏற்றி வைத்தாற்போல் மனம் கனத்தது.

'காலம் மிகவும் கெட்டு விட்டது. பெற்றவர்களை உள்ளங்கையில் வைத்துத் தாங்கும் பிள்ளைகளைக் காண்பதே அரிதாகி விட்டதே!

'பெரும்பாலான பிள்ளைகள், பெற்றோர்களின் 'கையிருப்பை' சுரண்டுவதற்காகத் தானே பாசமழை பொழிகிறார்கள்?'

'நம் கையில் கடைசி வரைக்கும் பணம் இருந்தால் தான் நமக்கு மதிப்பு.'

சொல்ல நினைத்த வார்த்தைகள் போட்டி போட்டுக் கொண்டு முன்னால் ஓடி வந்து தொண்டையைத் தாண்டாமல்... மவுனம் காத்தன.

''உன்னோட நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராதும்மா'' பரிவுடன் அவளைப் பார்த்து விட்டு நடந்தார் சிவசாமி.

''உள்ளே வந்து ஒரு வாய் காபி சாப்பிட்டுட்டுப் போகலாமே! வாசலோட போறீங்களே?'' ஆதங்கப் பட்டாள் பார்கவி.

''இருக்கட்டும் கவி! நீ சொன்னதே நிறைவா இருக்கு. ரொம்ப நாழி நின்னு பேசிட்டிருந்தா... அதுக்கும் சேர்த்து நீ வாங்கிக் கட்டணுமே?'' தழைந்த குரலில் பேசி விட்டு... தலையாட்டி விடைபெற்றார் பங்கஜம்.

இனம் புரியாத பரிதாபம் அடி மனதில் சுரக்க... நீண்ட பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது.

தலைவலி 'விண் விண்' என்று தெறித்தது. முகத்தை அலம்பி விட்டு வந்து... பால் காய்ச்சி விடலாம் என்று நினைத்தபடியே பின் கட்டுக்குச் சென்றாள்.

நந்தன், சித்தி, நித்யா... என்று யாரும் கண்ணிலேயே படவில்லை.



இந்த மயான அமைதி கூட அடிவயிற்றில் ஒரு கலக்கத்தை உண்டாக்கியது.

'இந்த அமைதிக்குப் பின்னே பெரிய புயல் வீசப் போகின்றது' உள்ளுணர்வு மீண்டும் எச்சரித்துக் கலவரப் படுத்தியது.

முகத்தை அலம்பி விட்டு டவலால் மெல்ல துடைத்த போது... நெற்றிக் காயத்தில் கை விரல் பட்டு 'விண்' என்று வலித்தது.

உணவகத்தில் உணவருந்தும்போது...

அன்பு கனிந்த பார்வையால் வருடிய கிரீசனுக்கு... அவளது நெற்றி வீக்கம் இனம் புரியாத வேதனையை ஏற்படுத்தி விட்டது போலும்!

வேறு வழியின்றி அவனாகவே கேட்டு விட்டான்.

''பார்கவி! உங்க நெத்தியில என்ன பெரிய வீக்கம்? எப்படி காயம் பட்டுச்சு? டாக்டர் கிட்டே காட்டினீங்களா?''

அவனது குரலில் கரிசனமும், பதற்றமும் போட்டி போட்டுக் கொண்டு வெளிப்பட்டன.

''கார்த்தால அவசரமா புறப்பட்டப்போ... கதவுலே கவனிக்காம இடிச்சுக்கிட்டேன். மருந்து தடவியாச்சு. சரியாயிடும். நன்றி!''

''அட... நான் கூட இவ்ளோ நேரம் அதை கவனிக்காம இருந்துட்டேன். ஸாரிப்பா... நான் ஒரு தத்தி'' அம்ருதா குற்ற உணர்வில் புலம்பினாள்.

''டேக் கேர் ஆஃப் யுவர் ஹெல்த் பார்கவி'' மீண்டும் கிரி இதமாகக் கூறியபோது... அந்தக் காயத்தின் வலியும், மனதிலிருந்த வேதனையும் பஞ்சாய் பறந்து போயின.

அந்த நினைவு தந்த சுகத்தில்... பார்கவியின் இதழ்க் கடையில் குறு நகை பூத்தது.

பாத்திரத்தில் பாலை ஊற்றி அடுப்பிலேற்றி விட்டு, அரிசியையும் உளுந்தையும் கழுவிக் களைந்து தனித் தனி பாத்திரத்தில் ஊற வைத்தாள்.

டிகாக்ஷன், சர்க்கரையைத் திட்டமாகக் கலந்து... காபியை நுரை பொங்க ஆற்றுவதற்குள்...

''ஏய்... கவி! இங்கே வாடி'' கர்ஜித்தாள் சித்தி. கூடத்து ஊஞ்சலில் அமர்ந்து வலது கால் பெருவிரலால் தரையில் ஒரு உந்து உந்தினாள் பூரணி.

வேகமாக ஆடிய ஊஞ்சலில் ஒய்யாரமாக அமர்ந்த வாறே பக்கவாட்டில் திரும்பி பார்கவியைப் பார்த்தாள்.

''என்ன? ஒரு நாளும் இல்லாத திருநாளா... சம்பளப் பணத்தை நீயே வச்சுக்கிட்டே?''

''கொடுக்கலாம்னு தான் இருந்தேன். இந்தாங்க'' ஈரக் கைகளை முந்தானையில் துடைத்துக் கொண்டு, மேஜை மீது வைத்திருந்த கைப்பையில் துழாவி அந்தக் காகித உறையை எடுத்து நீட்டினாள்.

ஊஞ்சலில் ஆடியவாறே பணத்தை எண்ணிப் பார்த் தாள். டக்கென்று... ஆடிய ஊஞ்சலை காலை ஊன்றி நிறுத்தினாள்.

''என்ன இது? வெறும் மூவாயிரத்து ஐநூறு ரூபாய் தான் இருக்கு? மீதி மூவாயிரத்து ஐநூறு ரூபாயைக் காணோம்?'' பூரணியின் முகத்தில் கோபம் தாண்டவமாடியது.

பார்கவியின் உடம்பு தந்தியடித்தது. தைரியத்தைத் திரட்டிக் கொண்டு சித்தியை ஏறிட்டாள்.

''அப்பாவுக்கு பக்கவாதம் வந்துட்டே... அவரோட சிகிச்சைக்கு செலவாயிடுச்சு.''

''ஒரு மாசத்துக்குள்ளே... மூவாயிரத்து ஐநூறு செலவா யிடுச்சா?'' அவளது கோபம் உக்கிரமடைந்து உச்சிக்குப் போனது.



''ஆமா சித்தி! டாக்டர் வீட்டுக்கே வந்து சிகிச்சை செய்தாரே? வாரத்துல ரெண்டு நாள் 'பிஸியோ தெரபி' வீட்டுக்கே வந்து செய்யறார் இல்லையா?

''அது மட்டுமா? அப்பாவோட கை, கால்லே தேய்ச்சு உருவறதுக்கு ஆயின்மெண்ட், ஆயில் வாங்கியிருக் கோம். மருந்து, மாத்திரை வேற வாங்க வேண்டியிருக்கே?

''வரதராஜன் சாரோட நண்பர் மருந்துக்கடை வச்சிருக் கார். அங்கே தான் கடனா மருந்து மாத்திரைகளை வாங்கினேன். சம்பளம் வந்ததும்... நேரா பணத்தைக் கொடுத்துட்டு தான் வீட்டுக்கே வந்தேன்.

''டாக்டர் கூட... வரதராஜன் சாருக்கு ரொம்ப நெருங் கினவர். அதனால் நமக்காக கட்டணத்தைக் கூட ரொம்பக் குறைச்சலாத் தான் வாங்கறாரு சித்தி.''

''ஏய் போதும் நிறுத்துடி! ஆ.. ஊன்னா வரதராஜன், காந்திமதி தானா? அவங்க தூண்டி விட்டுத் தான் நீ இந்த ஆட்டம் ஆடறே? யாரைக் கேட்டு இவ்ளோ செலவு பண்றே?

''வீட்டுலே பெரிய மனுஷி ஒருத்தி, அம்மா ஸ்தானத் துலே இருக்காளே... அவகிட்ட அனுமதி கேட்கணும்னு உனக்கு தோணித்தா? கடுகளவாவது மட்டு மரியாதை என் மேல் இருந்திருந்தா... இந்த மாதிரி 'தான் தோன்றித் தனமா' நடந்திருப்பியா?

''பெரிய பெரிய டாக்டர்களை வீட்டுக்கு வரவழைக் கிறதும்... அந்தத் தைலம், இந்தத் தைலம்னு அந்த விளங் காம போன கை கால்லே தேய்க்கிறதும்... 'பிஸியோ தெரபி' என்கிற பேர்லே பணத்தைத் தண்ணியா செல வழிக்கிறதும்... என்ன நினைச்சுக்கிட்டு இப்படி 'தாம் தாம்'னு குதிக்கிறே?

''பக்கவாதம் வந்துட்டா... அப்படியே படுத்துக் காலத்தைத் தள்ள வேண்டியது தான். குணமாகக் கூடிய வியாதியா அது?

''தோ... பாரு! உங்கப்பாவுக்கு வைத்தியம் பண்ண ணும்னு நீ நெனச்சா... 'பொது மருத்துவமனை'யில காட்டு! மாசம் பொறந்தா சம்பளப் பணம் முழுசா என் கைக்கு வந்தாகணும். இல்லேன்னா... என்ன நடக்கும்னு எனக்கே தெரியாது.''

உச்சஸ்தாயியில் கத்தித் தீர்த்தாள் பூரணி.

லுங்கியை மடித்துக் கட்டியபடியே அக்காளின் பின்னால் வந்து நின்றான் நந்தன்.

''நம்ம நிபந்தனையைப் பத்தி சொல்லுக்கா'' தூபம் போட்டான் நந்தன்.

''தோ... பாரு கவி! நந்தனை கல்யாணம் பண் ணிக்கோ... உன் இஷ்டப்படி சம்பளத்துல அப்பாவுக்கு செலவு பண்ணு... நான் தடை சொல்ல மாட்டேன்.

''இதுக்கு நீ சம்மதிக்காட்டி... நானும் வைத்தியச் செலவு பண்றதுக்கு உன்னை அனுமதிக்க மாட்டேன்.

''சம்பளக் கவர் அப்படியே வந்தாகணும். தங்கச்சி யோட படிப்புச் செலவு, வீட்டுச் செலவு எல்லாத்தையும் நீ தான் பாத்துக்கணும். நித்தியைக் கரையேத்தற பொறுப்பு வேற இருக்கு.

''உனக்கு அப்பான்னா ரொம்ப உசிராச்சே? அவரைப் பொது மருத்துவமனைக்குக் கூட்டிட்டுப் போயி சிகிச்சை பண்றதுக்கு உனக்கு மனசு வராதே? அதனால நந்தாவை கட்டிக்கிறதுக்கு... நீ சம்மதிப்பேன்னு நான் நம்பறேன்.''

பாசத்தைக் காரணம் காட்டி அவளை வளைத்துப் போடப் பார்த்தாள் பூரணி.



''நிறுத்துங்க சித்தி! நீங்க என் அம்மா ஸ்தானத்துல இருக்கிறவங்க... அந்த மரியாதை என் மனசுலே எப்பவும் இருக்கும்.

''என்னைப் பெத்த அப்பாவுக்கு... நான் வைத்தியச் செலவு பண்றேன். இதுக்கு யாரோட அனுமதியும் எனக்குத் தேவை இல்லை.

''என் கடமையை நான் செய்றேன். அதை யாராலும் தடுக்க முடியாது. மனைவிக்கு உரிய கடமையை நீங்க மறந்துட்டுப் பேசிட்டிருக்கீங்க...

''பணம் தானா உங்களுக்குப் பிரதானம்? எங்கம்மா வோட நகைங்க... அப்பா வங்கியில போட்டு வச்சிருக்கிற கணிசமான தொகை... அவரோட ஓய்வூதியம்னு எல்லாம் நிறைவாத்தானிருக்கு.

''வீடும் சொந்த வீடு... எந்தச் செலவுக்கும் கையைப் பிசையத் தேவையில்லை. அதைப் பத்தி என்னிக்காவது கணக்கு கேட்டேனா?

''அப்புறம் என்ன கேட்டீங்க? உம்! உங்க தம்பியைக் கல்யாணம் செய்துக்க எனக்கு விருப்பமில்லை சித்தி. என்னை வற்புறுத்தாதீங்க.

''அதுக்கான அதிகாரமும் உங்களுக்கு கிடையாது சித்தி. முடிவா சொல்லிடறேன். இன்னிக்கோட இந்த விஷயத் துக்கு முற்றுப்புள்ளி வச்சுட்டா ரொம்ப நல்லது.''

திடமாக மிகத் தெளிவாக தன் எண்ணத்தை வெளிப் படுத்திய, பார்கவியைக் கண்டதும்... பூரணிக்கு உள்ளூர 'தளபுள'வென்று உலை கொதித்தது.

''அடிப்பாவி! கிராதகி... உனக்கென்ன நெஞ்சழுத்தம்? எடுத்தெறிஞ்சு பேசறே? கணக்கு கேட்கறே? சம்பளப் பணத்தை பாதி கொடுத்துட்டு... கொஞ்சம் கூட உடம்பு

புல்லரிக்காம பட்டிமன்றத்துல பேசற மாதிரி வியாக்கியானம் பண்றே?

''என்ன தைரியம்? நந்தாவுக்கு என்னடி குறைச்சல்?'' ஆத்திரம் தாளாமல் பார்கவியின் கூந்தலைக் கொத்தாகப் பற்றி இழுத்தாள்.

''கையை எடுங்க சித்தி! எனக்கு 21 வயசாகுது. நான் கொத்தடிமை இல்ல... வீட்டு கவுரவம் கருதி இது நாள் வரை வாய் மூடி மௌனமா இருந்தேன். எல்லை தாண்டிட்டீங்க...

''காந்திமதி அத்தை கிட்டே நான் ஒரு வார்த்தை சொன்னா... என்ன ஆகும்னு தெரியும் இல்லியா? ஜாக்கிரதை!''

ரௌத்ரமானாள் பார்கவி.

சித்தியும், நந்தனும், நித்யாவும் நிலை குலைந்து போய் இரண்டடி பின் வாங்கினார்கள். விருட்டென்று அப்பாவின் அறைக்குள் புகுந்து கொண்டாள் பார்கவி.

சண்முகநாதனின் விழிகள் பொங்கிப் பிரவாகமெடுத்தன.

''அப்பா! தைரியமா இருங்கப்பா... இன்னிக்கு தான் எனக்கு உள்ளே உறுதியும் உத்வேகமும் பிறந்திருக்கு.

''தன்னம்பிக்கையும், உறுதியும்... தைரியமும் ஒவ்வொரு பெண்ணுக்கும் அவசியம் தேவை'ன்னு... நீங்க சொல்வீங்களேப்பா?

''வாழ்க்கைன்னா ஒரு லட்சியம் இருக்கணும் இல்லையாப்பா? வாழற வாழ்க்கையில ஒரு அர்த்தம் இருக்கணும். போராடி ஜெயிக்கணும்.

''அதுக்கு... இப்பத்தான் எனக்கு வாய்ப்பு கிடைச்சிருக்கு. நான் ஜெயிக்கணும். வாழ்த்துங்கப்பா... நான் உங்க பொண்ணுப்பா... என்னால எதையும் சமாளிக்க முடியும்பா'' பேசியபடி அவரது கண்ணீரைத் துடைத்து விட்டாள் பார்கவி.



''நல்லா இருப்பே'' அப்பா குழறலாகப் பேசி இடது கரத்தை உயர்த்தி அவளது உச்சந்தலையை வருடினார்.

நித்யா பரபரப்பாக ஓடி வந்து, ''யாரோ வந்திருக்காங்க... கார்லே வந்திருக்காங்க'' என்றாள்.

புருவங்கள் நெரிய முகத்தில் கேள்விக் குறியுடன் எழுந்து நின்றாள் பார்கவி.

## 11

''ஹாய்... கவி!' வெள்ளை நிறப் பருத்தி சுடிதாரில் தேவதையாய் அம்ருதா.

அவளது கையில் பெரிய கூடை. கூடை நிறைய பழங்கள். ஹார்லிக்ஸ் பாட்டில்கள்.

அவளைத் தொடர்ந்து... ஆறடி உயரத்திலிருந்த கிரீசன் நிலைக் கதவு இடிக்காத வண்ணம்... சற்றே குனிந்து உள்ளே வந்தான்.

''வா... வாங்க'' தடுமாறியபடி நாற்காலியை இழுத்துப் போட்டாள் பார்கவி.

''பரவாயில்ல இருக்கட்டும். உங்களுக்கு எப்படியிருக்குப்பா?'' உரிமையாய் கேட்டபடி கட்டிலில் அப்பாவின் கால் மாட்டில் அமர்ந்து கொண்டான் கிரீசன்.

அப்பாவின் கலங்கிய கண்கள் ஆச்சரியத்தில் மின்னின. ''அப்பா!... நான் அம்ருதா. கல்லூரி ஆண்டு விழாவிலே கவி என்னை உங்களுக்கு அறிமுகப் படுத்தினாளே? ஞாபகம் இருக்கா?

''இவன் என்னோட அண்ணா... கிரீசன். உங்களுக்கு உடம்பு முடியாம போச்சுன்னு... எனக்கு இன்னிக்குத்தான்

தெரியும். தைரியமா இருங்க... சீக்கிரம் பழையபடி கம்பீரமா நடமாடத்தான் போறீங்க.''

அப்பாவின் முகத்தில் புன்னகை பூத்தது. ஆர்வம் ததும்ப கிரியையும், அம்ருதாவையும் மாறி மாறிப் பார்த்தார்.

''இன்னிக்கு இவளுக்குப் பிறந்த நாள். வீட்டுலே பெரிய விழாவே நடக்கப்போகுது. இவ இங்க வந் திருக்கா'' பார்கவி பெருமிதத்துடன் கூறினாள்.

''விழா ஏழு மணிக்கு மேல தானே? அப்பாவை விட எனக்கு அது முக்கியம் இல்லை. தெரிஞ்சுக்கோ'' அதட்டி னாள் அம்ருதா.

''பார்கவி!... நான் வேணும்னா பெரிய 'ஸ்பெஷலிஸ்ட்' டுக்கு ஏற்பாடு பண்ணட்டுமா? சிகிச்சை இப்போ எந்த அளவுலே இருக்கு? ஏதாவது அபிவிருத்தி இருக்கா?'' கிரி குறுக்கிட்டுப் பேசினான்.

''டாக்டர். மனோகர் வீட்டுக்கே வந்து 'பிஸியோ தெரபி' தர்றார். இப்போ முன்னை விட நல்ல அபிவிருத்தி ஏற் பட்டிருக்கு... அப்பாவோட நலன்லே ரொம்ப அக்கறை காட்டிப் பேசறீங்க... ரொம்ப சந்தோஷமார்க்கு. அதுவே போதும்.''

பார்கவியின் கண்கள் கொப்பளித்தன.

''அம்ரு! பேசிட்டிரு... காபி போட்டு எடுத்துட்டு வரேன்'' நகரப் போனவளின் கரத்தைப் பற்றினாள் அம்ருதா.

''கவி! நீ ரொம்பக் கொடுத்து வச்சவ... பாசத்தைக் கொட்டற அப்பா உனக்கு கிடைச்சிருக்காரே? எல்லாருக் கும் அந்த கொடுப்பினை வாய்க்காது தெரியுமா?

''எங்கப்பா என் மேல பாசமா இருக்கிற மாதிரி வாய்ப் பந்தல் கட்டறதோட சரி! ஊரைக் கூட்டி தடபுடலா



விருந்து வச்சு பிறந்த நாளைக் கொண்டாடினா... என் மனசு நிறைஞ்சுடும்னு நினைக்கிறியா? ப்ச்...

''பாசம்... பாசம் இருந்தாத்தான் மனசு நிறையும். அன்பானவங்க ஆதரவா கிட்டக்க இருக்கணும். அப்பத் தான் சந்தோஷத்துல மனசு பொங்கும்.

''ஆனா... எங்கம்மாவும் கிரி அண்ணாவும் ரொம்ப பாசமானவங்க. நாங்க மூணு பேரும் உண்மையான பாசத் துக்கு ஏங்கறவங்க'' தழுதழுத்தாள் அம்ருதா.

'நீ நல்லா இருப்பேம்மா' என்ற பாவனையில் சண்முகநாதன் அம்ருதாவின் உச்சந்தலையை வருடினார்.

''நன்றி அப்பா! இன்னிக்கு உங்க ஆசீர்வாதம் கிடைச்சது என் அதிர்ஷ்டம்தான்'' கூறியபடி அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

கிரியும் அவரது பாதங்களைத் தொட்டதும்... பார்கவி உள்ளூர நெகிழ்ந்து தான் போனாள்.

''அப்ப நாங்க வரோம்பா'' கரங்களைக் குவித்து வணங்கிவிட்டு கிளம்ப ஆயத்தமாயினர். பார்வதியை கிரி கடந்து சென்றபோது ஒரு நிமிடம் நின்று நிதானித்து, அவளது முகத்தை ஊன்றிப் பார்த்தான்.

மனதிலிருந்த துக்கமும் வலியும் முகத்தில் வெளிப் பட்டு விடாமல் இருக்க... பார்கவி பிரம பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது. கண்களை ஊடுருவி இத யத்தைத் துளைத்து விடும்படியான பார்வை...!

''எதுவா இருந்தாலும்... என்கிட்ட சொல்லலாம். நான் இருக்கேன் உனக்கு! கவலைப்பட வேண்டாம்'' மெல் லிய குரலில் கூறிவிட்டு நகர்ந்தான் கிரீசன்.

'நான் இருக்கேன் உனக்கு' என்று அழுத்தம் திருத்த மாக அவன் உச்சரித்த விதம்... அவளுக்கு மிக்க சந்தோஷத்தையும் பலத்தையும் அளித்தது.

'உனக்கு' என்று உரிமையாய் ஒருமையில் முதல் முறையாக அழைத்திருக்கிறான்.

சித்தியால் ரணப்பட்டுப் போன இதயத்தில்... அவன் வார்த்தைகள் மருந்து தடவுவது போலிருந்தது. மயிலிற கால் வருடி விட்டதைப் போன்று இதமாக இருந்தது.

வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு... அந்தக் கார் தெருக்கோடியில் சென்று மறையும் வரை நோட்டமிட்டு விட்டு உள்ளே வந்தாள் பார்கவி.

"அப்பா! வரதராஜன் மாமாவையும், அத்தையையும் பார்த்துட்டு வந்துடறேன். அரை மணி நேரத்துல வந்துடு வேன்" வேண்டுமென்றே சித்திக்கு கேட்கும்படி இரைந்து கூறிவிட்டு விரைந்தாள் பார்கவி.

* * *

"அடடே வாம்மா பார்கவி! அப்பா எப்படியிருக்காரு?" நலம் விசாரித்தார் வரதராஜன்.

"நல்லாயிருக்காரு மாமா. அத்தை இல்லையா?" சுற்றிலும் பார்வையால் வலம் வந்தாள் பார்கவி.

சப்பாத்தி மாவைப் பிசைந்து கொண்டிருந்த காந்திமதி, கைகளைக் கழுவிக் கொண்டு, அடுக்களையிலிருந்து வெளிப்பட்டார்.

"கவி... அத்தை கிட்டே பேசிட்டிரு... நான் சண் முகத்தை பார்த்துட்டு வரேன்" வெளியில் கிளம்பி விட்டார் வரதராஜன்.

"என்னம்மா முகமெல்லாம் வாடி சிவந்திருக்கு? அழுதியா? நெத்தியில வேறே வீங்கியிருக்கே? பெரிசா ஏதோ நடந்திருக்கு... பூரணி என்ன பண்ணினா? சொல் லுடா" பதறினார் காந்திமதி.

கீழுதட்டை அழுந்தக் கடித்து பொங்கி வந்த அழு கையை அடக்கினாள். கண்களை மூடி சில விநாடிகள் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு... நடந்ததை யெல்லாம் கொட்டித் தீர்த்தாள்.



"இதென்ன கொடுமையா இருக்கு? கட்டின புருஷன் எக்கேடு கெட்டா எனக்கென்ன?... பணம் செலவழியாம இருந்தாப் போதும்னு உன் சித்தி நினைக்கிறாளே? இவ எல்லாம் ஒரு மனுஷியா?"

"மாச சம்பளத்தை வேற முழுசாக் குடுன்னு அதிகாரம் பண்றாளே? அந்த வீடு உங்கம்மா பேர்ல இருக்கு. நீ என்ன அடிமையா? ஒண்ணு... உன் சித்தியையும் நந் தனையும் வீட்டை விட்டு வெளியேத்து. இல்லேன்னா... அம்மா பேர்லே தான் வீடு இருக்குன்னு சொல்லிப் புரிய வை. கட்டாயக் கல்யாணத்துக்குத் துணிஞ்சுட்டா?

"உனக்கு பக்க பலமா நாங்க இருக்கோம். அநியாயத்தை யார் வேணாலும் தட்டிக் கேட்கலாம். ஆனா ஒண்ணு... இனிமே பணமெல்லாம் அவளுக்குத் தராதே கவி."

"இத்தனை வயசுக்கு மேல அவங்களை வெளியில் அனுப்பினா... அசிங்கம்! அப்பாவுக்கு இது ரொம்பவே வேதனையைக் கொடுக்கும். வீட்டு விஷயம் வெளியில் தெரிஞ்சு மத்தவங்க சிரிக்கக் கூடாதுன்னு தான்... அப்பா இதுவரை அடங்கிப் போனாரு.

"பாதி சம்பளத்தை நான் தராம இருந்தா... சித்தி பயங் கரமா கத்தி ரகளை பண்ணுவாங்க... நான் இல்லாத நேரத் துல அப்பாவைக் கண்டபடி ஏசுவாங்க... இதனால அப்பா வுக்குத் தான் மன வருத்தம் ஜாஸ்தியாகும்.

"அவரோட மனசு வேதனைப்படக் கூடாதுங்கிற ஒரே காரணத்துக்காகத் தான் நான் பல்லைக் கடிச்சுட்டிருக் கேன். அவர் குணமாகி பழையபடி நடமாடணும்.

"உங்களை ஒரு நடை வந்து பார்த்துட்டுப் போகணும்னு தோணுச்சு. அதான் வந்தேன் அத்தை. இப்போ மனசிலே

இருக்கற பாரமெல்லாம் இறங்கிட்ட மாதிரி... கொஞ்சம் நிம்மதியா இருக்கு?'' முறுவலித்தாள்.

''இந்தச் சின்ன வயசுல எத்தனைப் போராட்டங்கள்? உன்னைப் பார்த்தா ரொம்பவே பாவமாயிருக்கு கவி.''

''வாழ்க்கையே ஒரு போர்க்களம் தானே அத்தை! நாம்ப போராடி தானே ஜெயிச்சாகணும். சரி... நா வரேன் அத்தே! டிபன் பண்ணணும். இட்லிக்கு அரைச்சு வைக்கணும்.

''காய்களை நறுக்கி ஃப்ரிஜிலே வச்சாத்தான்... நாளைக்கு கார்த்தால சீக்கிரமா வேலை முடிக்கலாம். வரட்டுமா?''

''அந்த நித்யா பொண்ணு கூட மாட உனக்கு உதவி செய்யலாம் இல்லியா? அப்படியே பூரணிக்கு தப்பாம பிறந்து தொலைச்சிருக்காளே?'' புலம்பினார் காந்திமதி.

புன்னகையைப் பதிலாகத் தந்துவிட்டு, மவுனமாக படியிறங்கிச் சென்றாள் பார்கவி.

காலத்தின் சக்கரங்கள் திசைகளைக் கிழித்துக் கொண்டு ஓடியதில்... இரண்டு மாதங்கள் மறைந்தன.

* * *

கிரீசனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

''எவ்வளவு தைரியம் இருந்தால் இப்படியொரு காரியத்தைப் பண்ணியிருப்பே?''

''நான் உங்ககிட்டே கை நீட்டி சம்பளம் வாங்கறேன். துரோகம் செய்ய மாட்டேன் சார்'' விசும்பியபடி பேசினாள் அவனது அந்தரங்க காரியதரிசி காவ்யா.

''என்கிட்ட மட்டுமா கை நீட்டி சம்பளம் வாங்கறே? என் எதிரி ராஜன் வர்மா கிட்டயும் நீ கை நீட்டி பணம் வாங்கியிருக்கியே?''

''இ... இ.. இல்லை சார்'' அதிர்ந்து திணறினாள் காவ்யா.



''போதும் நிறுத்து! அந்த ஃபைலை தயார் பண்ணி நான் கையெழுத்துப் போட்டப்போ நீ தான் கூட இருந்தே... நான் குறிப்பிட்டிருந்த தொகையை விட ஒரு ரூபாய் குறைச்சுப் போட்டு.... பத்து கோடி திட்டத்தை அந்த ராஜன் வர்மா தட்டிக்கிட்டுப் போயிட்டான்.

''அவன் கிட்டே ஒரு லட்சம் ரூபாய் வாங்கி உன் குடும்பத்துக் கடனை நீ அடைச்சிருக்கே.''

''சார்! எ... என்னை மன்னிச்சுடுங்க.''

''துரோகிகளை நான் என்னிக்கும் மன்னிக்கவே மாட்டேன்... உனக்கு அஞ்சு நிமிஷம் டைம் தரேன். போயிடு! இல்லேன்னா... நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது'' உறுமினான் கிரீசன்.

உடம்பிலுள்ள ரத்தமெல்லாம் முகத்திற்கு வந்து விட்டாற்போல் சிவந்து போயிருந்தது அவனது முகம்.

இருண்ட முகத்துடன் தலை குனிந்தவாறே வெளியேறினாள் காவ்யா.

## 12

டகடகவென்று ஜகடை உருள கிணற்றிலிருந்து நீரை இறைத்து பித்தளை அண்டாவில் ஊற்றி விட்டு... துவைத்து வைத்திருந்த துணிகளை நீரில் அலச ஆரம்பித்தாள் பார்கவி.

அருகில் நிழலாடியதும் திரும்பிப் பார்த்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

நந்தன் மூக்கு முட்ட குடித்து விட்டு வந்திருந்தான் போலும். குப்பென்று வாடை குடலைப் புரட்டியது.

''என்னைக் கட்டிக்கிறதுக்கு உனக்கு கசக்குதா? சம்பாதிக்கிற திமிராடி? எங்க அடிச்சா உனக்கும் வலிக்கும்னு தெரிஞ்சு... அங்க அடிச்சிருக்கேன். இனிமே

உன்னை எவன் கட்டுவான்னு நான் பார்க்கிறேன்'' சவால் விட்டான் நந்தன்.

'குடித்து விட்டு வந்திருப்பவனிடம் நியாயத்தைப் பேசுவது என்பது பாறையில் முட்டி மோதி மண்டையை உடைத்துக் கொள்வதற்குச் சமம்.'

தாடை இறுக மவுனம் காத்தாள் பார்கவி.

அன்று மதியம் மூணரை மணிக்கெல்லாம் அலுவலகத் தில் அனுமதி கேட்டு வீட்டிற்கு வந்து விட்டிருந்தாள். டாக்டர் வீட்டிற்கு வந்து அப்பாவுக்கு சிகிச்சை அளிக் கும்போது... பெரும்பாலும் அவள் அருகிலேயே இருப் பாள்.

டாக்டர் வருவதற்குள் பார்கவி வீட்டிற்கு வந்து விட் டிருந்தாள். அவள் நுழைந்ததும் விருட்டென்று நந்தன் வெளியேறினான்.

'ஒருவேளை அவனுக்கும் தனக்கும் தொடர்பு இருப்ப தாக கதை திரித்து விட்டானோ? அலுவலகத்திற்கே சென்றிருப்பானோ?'

உள்ளுக்குள் நொறுங்கிப் போனாள். இதயத்தில் அமிலத்தை ஊற்றியதைப் போலிருந்தது.

மறுநாள்... தயங்கியபடி அவள் அலுவலகத்திற்குச் சென்ற போது... அனைவரது பார்வையும் ஊசியாய் தன்னைத் துளைத்தெடுப்பதைப் பார்த்ததும்... தன் தலையை அவர்கள் உருட்டத் தொடங்கி விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவமானத்தின் வலி அவளது தேகமெங்கும் ஊசியாய் குத்தியது.

அந்த வேலையை உதறித் தள்ளி விட வேண்டியது தான் என்ற முடிவுடன் தான் மாலை வீடு திரும்பினாள்.



'வேலையை விட்டு விட்டால்... அப்பாவின் சிகிச் சைக்கு வேண்டிய பணத்திற்கு எங்கே செல்வது?

'சித்தி பணம் தர மாட்டாளே? அவளிடம் மன்றாடி தினமும் மல்லுக்கு நிற்க முடியுமா? வேறு வேலைக்கு முயற்சிக்க வேண்டியது தான்!

'அந்த இடத்திலும் நந்தன் தன் கை வரிசையைக் காட்ட மாட்டான் என்பது என்ன நிச்சயம்? இவனுக்கு பயந்து நாடோடி போல் அலுவலகத்தை மற்றிக் கொண்டே இருக்க வேண்டுமா?

'வரதராஜனின் மாமாவிடம் முறையிட்டு அவனைக் கண்டிக்கச் சொன்னால் என்ன? ஊகூம்... எரியும் நெருப் பில் எண்ணெய் ஊற்றியது போல் நந்தனும் சித்தியும் கொதித்துப் போய் விடுவார்கள்.

'அப்பாவின் ஆரோக்கியம் வேறு நாளுக்கு நாள் சீர் கேடு அடைந்து வரும் தருணத்தில்... இவர்கள் இரு வரையும் எதிர்த்துப் போராடத்தான் முடியுமா?

'அவசரப்பட்டு ராஜினாமா செய்து விடக் கூடாது.'

உள்ளூர, பலவும் எண்ணிக் குமைந்ததில்... பின் மண்டையில் 'மரங்கொத்தி' கொத்தியது போல் வலி 'விண்' என்று குடைந்தது.

''வா கவி! ஆபீசுலேர்ந்து வந்துட்டியா?'' நக்கலாக கேட்டபடி அவளை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டே ஊஞ்சலில் அமர்ந்தான் நந்தன்.

உலக்கையால் அவனது மண்டையில் நாலு போடு போட்டு விட வேண்டும் போலிருந்தது. கஷ்டப்பட்டு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அப்பாவின் அறைக்குள் புகுந்தாள்.

'ட்ரிங்... ட்ரிங்...' செல்போன் திரையில் வரதராஜனின் வீட்டு எண் மின்னி மின்னிச் சிரித்தது.

''சொல்லுங்க மாமா.''

''கவி! ராமநாதன்னு ஒருத்தர்... நம்ம சண்முகத்துக்கும் ரொம்ப தெரிஞ்சவர் தான். 'சங்கீத சாகரம்' அப்படிங்கிற பேர்லே இசைக் குழு வச்சிருக்காரு...

''ஒரு கல்யாண வரவேற்புலே... பார்கவி பக்தி பாடல் கள், மெல்லிசைப் பாடல்களைப் பாடினா நல்லா இருக் கும்னு வலிய வந்து கேட்கிறாரு. நான் என்ன பதில் சொல்லட்டும் கவி?''

ஒரு கணம் யோசித்தவள், ''எனக்கு சம்மதம் மாமா. நான் பாடத் தயார்.''

தனக்கு வந்த வாய்ப்பைத் தவற விடாமல் பார்கவி பாடினாள். அவள் பாடிய நேரம்... அவளது வாழ்க்கைத் தடத்தை முற்றிலுமாகப் புரட்டிப் போட்டது.

## 13

மீன் குஞ்சுக்கு நீந்தவா கற்றுத் தர வேண்டும்? தந்தைக்கு இருந்த இசை ஞானம் அப்படியே பார்கவி யின் ரத்தத்தில் ஊறிப் போயிருந்தது.

அம்மா தெய்வானையின் உருவத்தை மனக் கண்ணில் நிறுத்தி, ''காட்சி தந்து... என்னை ஆட்சி செய்வாயம்மா...'' என்று பார்கவி பாட ஆரம்பித்தாள்.

மணமக்களை வாழ்த்துவதற்காக அண்ணன் கிரீச னுடன் கையில் பெரிய பரிசுப் பார்சலை ஏந்தியபடி மண்ட பத்தினுள் நுழைந்தாள் அம்ருதா. உள்ளே நுழைந்தும்... இருவருமே ஆணி அடித்தாற் போல் அப்படியே நின்று விட்டனர்.

புல்லாங்குழலோசை... வீணையின் நாதம்... குயிலின் குரல்... இவற்றில் இல்லாத இனிமையும் இதமும் இந்த குரலில் வழிந்தோடுகிறதே! அதிசயித்து நின்றான் கிரீசன்



அவளது குரல், மழையில் நனைந்த காற்றாய்... அவனது செவிகளில் பட்டு சில்லிட்டது. நேரம் போனதே தெரியவில்லை.

காதோரத்தில் ஒற்றை ரோஜா... கையில் மைக்கைப் பிடித்தபடி, சரிகை பார்டர் போட்ட இளம் பச்சை வண்ண பருத்தி புடவையில்... கண்களை மூடிக் கொண்டு... எந்தவித அசைவுமின்றி மனம் ஒன்றி லயித்தபடி பார்கவி பாடலானாள்.

**''ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே... வாழ்வென்றால் போராடும் போர்க்களமே...''**

அவளது கண்ணோரங்களில் கசிந்த கண்ணீர்த் துளிகள் முத்துக்களைப் போல்... அந்த வெளிச்ச வெள்ளத் தில் மின்னுவதைக் கண்டு... அம்ருதாவின் இதயம் பாறாங்கல்லாய் கனத்தது. பார்கவியின் குரல் காற்றில் தேனைக் கலக்கியது.

காதுக்குள் விழுந்து ரத்தத்தில் கலந்து உயிர் தடவும் குரலில் லயித்து ஸ்தம்பித்து நின்றிருந்தான் கிரீசன்.

துக்கத்தையும் வேதனையையும் விழுங்கி விட்டு மிக அற்புதமாகப் பாடி முடித்தாள் பார்கவி.

காந்திமதி அம்மாள் முன் வரிசையில் அமர்ந்திருந்தார். பார்கவி சாமானியத்தில் தன் கஷ்டத்தை என்றுமே வெளிப்படுத்த மாட்டாள் என்பதை அம்ருதா அறிவாள். காந்திமதி அம்மாளின் அருகில் அமர்ந்து அனைத்து விபரங்களையும் அறிந்து கொண்ட அம்ருதா... பார்கவி பாடி முடித்ததும் ஓடிச் சென்று அவளைக் கட்டித் தழுவினாள்.

பார்கவியை கைப்பிடியாக அழைத்துக் கொண்டு காரில் ஏற்றி அவளது வீட்டிற்கே வந்து சண்முக நாதனைப் பார்த்தாள் அம்ருதா.

"அப்பா! இவளைப் பாருங்க... நான் ஒருத்தி இருக்கிறப்போ இந்தக் கஷ்டம் தேவையா? இவ்ளோ நடந்திருக்கு... இவ என்கிட்ட மூச்சே விடலை... சுய கவுரவம் ரொம்ப ஜாஸ்தி இவளுக்கு... நீங்க சொன்னாத்தான் இவ கேட்பா... சொல்லுங்கப்பா!

"கிரி அண்ணாவோட அந்தரங்க காரியதரிசியா ஜாயின் பண்ணச் சொல்லுங்கப்பா.. ப்ளீஸ்."

அப்பா கெஞ்சும் பாவனையில் பார்கவியை ஏறிட்டார்.

"பார்கவி! உங்க தோழி இவ்ளோ தூரம் கெஞ்சறா... ஏன் தயங்கறீங்க?" கிரீசன் வற்புறுத்தினான்.

அப்பாவின் விருப்பத்திற்காக தயக்கத்தை உதறி விட்டு... கிரீசனின் அலுவலகத்தில் அவனது காரியதரிசியாக வேலையில் அமர்ந்தாள் பார்கவி.

'அப்பாடா' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட தருணத்தில்... விதி அவளைப் பார்த்து சிரித்தது.

எத்தனை அரும்பாடு பட்டுப் போராடி சிகிச்சை அளித்தும் பலனில்லாமல் அப்பா சண்முகநாதன் 'மீளாத் துயில்' கொண்டார். அதீத கவலை, நோயின் தீவிரம், வயோதிகம்... இவற்றின் முன்னால் மருத்துவச் சிகிச்சை தோற்றுத் தான் போனது. உள்ளூர கதறித் தீர்த்தாள் பார்கவி.

உலகமே திடீரென சூனியமானது போலவும்... அகண்ட பிரபஞ்சத்தின் நடுவில் தான் மட்டும் தன்னந்தனி ஆளாய் நிற்பது போலவும் தோன்ற விக்கித்துப் போனாள் பார்கவி.

வரதராஜனுடன் சேர்ந்து கொண்டு கிரீசன் அப்பாவின் காரியம் செவ்வனே நடைபெற உதவியதைக் காணும் போது... உள்ளூர நெகிழ்ந்து போனாள். தினமும் காலை



யில் காரில் வந்திறங்கி விட்டு... இரவு எட்டு மணிக்கு மேல் தான் அம்ருதா, அவளது வீட்டிற்குச் சென்றாள்.

நந்தனும் சித்தியும் இருக்கும் வீட்டில் தான் மட்டும் யாருடைய ஆதரவின்றி தங்குவது மதியீனம் என்று தோன்றியது.

"எங்க அப்பா இல்லாத வீட்டிலே என்னால இனிமே ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. காரியம் முடியட்டும்னு தான் கம்முனு இருந்தேன். அலுவலகத்துக்குப் பக்கத்துலேயே எனக்கு குவாட்டர்ஸ் கொடுத்திருக்காங்க."

"அதெப்படி வயசுப் பொண்ணு தனியே தங்குவே?" பூரணி கேட்டு முடிக்கும் முன்... சட்டென்று இடைமறித்தாள் அம்ருதா.

"கவிக்கு நாங்க எல்லாரும் இருக்கோம். எங்க டிரைவரோட அம்மா பஞ்சவர்ணம் கொஞ்ச காலத்துக்கு இவ கூட ராத்திரி துணையா இருப்பாங்க... இது தற்காலிக ஏற்பாடு தான்! கூடிய சீக்கிரம் வேற ஒரு நல்ல மாற்றம் வரும்."

தெய்வானை, சண்முகநாதனின் புகைப்படங்களைச் சுற்றி எடுத்துக் கொண்டு வந்த பார்கவியின் கைப்பற்றி அழைத்துச் சென்றாள் அம்ருதா.

பூரணிக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. வரதராஜன், சாந்திமதி அக்கம் பக்கத்து வீட்டினர்கள், கிரீசன், அம்ருதாவின் முன்பு... அவள் பல்லைப் பிடுங்கிய பாம்பாகி விட்டிருந்தாள்.

## 14

கிரீசனின் அலுவலகத்தில் பார்கவி வேலைக்குச் சேர்ந்த நாளிலேயே... மாலையில் அப்பா கண்ணை மூடி விட்டார். அவரது 'காரியம்'

முடிந்து குவார்ட்டர்ஸுக்குள் குடி புகுந்த மறுநாள் தான் மீண்டும் அலுவலகத்திற்குள் அடி எடுத்து வைத்தாள்.

தன் இருக்கையில் அமரும் முன் அதைத் தொட்டு வணங்கிய அவளது செய்கை... கிரியை மிகவும் கவர்ந்தது. 'கணினி' முன்பு அமர்ந்து ஒரு நிமிடத்தைக் கூட வீணாக் காமல் கண்ணும் கருத்துமாய்ச் செயல்பட்டாள்.

அவன் சொல்வதைக் குறிப்பு எடுப்பதிலாகட்டும், பணியை முடிப்பதிலாகட்டும் போனில் அவன் சார்பாக தமிழிலோ, ஆங்கிலத்திலோ பதில் சொல்வதிலாகட் டும்... கிரிக்கு பரம திருப்தி ஏற்பட்டதோடு பிரமித்துத் தான் போனான்.

''பார்கவி.''

''சார்'' சட்டென்று எழுந்தாள்.

''சார்... மோர் வேண்டாமே ப்ளீஸ்... கிரின்னு கூப்

பிடலாமே? நேரமாச்சு சாப்பிட்டு வேலையைத் தொடர லாமே?''

''முடிச்சிட்டே சாப்பிட்டுக்கிறேன். கருத்தரங்கத்திலே நீங்க பேச வேண்டியதற்கான குறிப்புகளை தயார் பண் ணிட்டிருக்கேன். அதான்.''

''எனக்கு பசிக்குதே! எங்க அம்மா அருமையா சமைப் பாங்க. சமீப காலமா அவங்களுக்கு உடம்பு முடியாம போனதால... சமையல்காரர்தான் சமைக்கிறார். அவ சமைக்கிறதிலே உப்பு உறைப்பு மட்டும் தான் இருக்கு சமீப காலமா நான் மதியம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு போறதே இல்லை.

''அன்பா அக்கறையா பாசமா சமைக்கிற சாப்பாட்டுலே தான் அலாதி ருசியே இருக்கும்... அதனாலயோ என் னவோ மதியம் பசிச்சதே இல்லை...



''இன்னிக்கு பசிக்குது. ஏன்னா... உன் கூட உட்கார்ந்து நீ சமைச்சதை சாப்பிடலாம்னு நெனச்சேன்.''

மனம் விட்டுப் பேசியதாலோ என்னவோ... கிரீசனின் கண்களில் இலேசாய் நீர்த் திரையிட்டது.

''ஓ! ஸாரி கிரி! ஒரு நிமிஷம்'' அவசரமாக டிபன் பாக்சை எடுத்துத் திறந்தாள்.

''வெ... வெறும் மணத்தக்காளி வத்தக் குழம்பும், சுட்ட அப்பளமும் தானிருக்கு'' தயங்கினாள். அப்பாவை இழந்த சோகத்தில் இருண்டிருந்த பார்கவியின் முகத்தில்... மின்னல் கீற்றாய் சந்தோஷ ரேகை படர்ந்தது.

ஆசையாக அள்ளி ஒரு வாய் போட்டுக் கொண்ட வனின் புருவங்கள் மேலேறின. ''வாவ்! காரசாரமா சுவையும் மணமுமா ரொம்ப ரொம்ப ருசியா இருக்கு பார்கவி.''

''இன்னும் கொஞ்சம் போட்டுக்கோங்க.''

''அட! முக்கால்வாசியை நானே சாப்பிட்டுட்டேன். எனக்கு ரொம்ப சுயநலம்தான் போ! உனக்கு உணவகத் திலே இருந்து வாங்கிட்டு வரச் சொல்லட்டுமா?''

''வேண்டாம் கிரி! எனக்கு நிஜமா பசிக்கலை. நீங்க சாப்பிட்டதைப் பார்த்து என் மனசு நிறைஞ்சு போச்சு'' முறுவலித்தாள்.

''பார்கவி! சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வரேன். இப்போ ரொம்ப திருப்தியா இருக்கு. நான் சந்தோஷமா இருக்கேன். இது கடைசி வரைக்கும் எனக்கு கிடைக்க ணும்னு ஏக்கமா இருக்கு... ஐ லவ் யூ பார்கவி'' சட்டென்று அவளது கரத்தைப் பற்றினான்.

''என்னைப் போலவே... நீயும் என்னை மனசார விரும்பறேன்னு நெனச்சேன். உண்மையா என்னை

நேசிச்சிருந்தா... உனக்கொரு கஷ்டம் வரும்போது அதை என்கிட்ட சொல்லாம மறைச்சிருப்பியா?

''நானிருக்கேன் உனக்குன்னு தெளிவா உன்கிட்ட சொன்னேனே? அம்ரு கிட்டயாவது உன் கஷ்டத்தைச் சொல்லியிருக்கலாமே? உண்மையிலேயே இதை நெனைச்சு நான் வருத்தப்பட்டேன் பார்கவி.''

''கிரி! நம்ம கடமைகளை நாமதானே செய்யணும்? அம்ரு அடிக்கடி சொல்வாளே? நான் சுய கவுரவம் பிடிச்ச வள்னு... என் கஷ்டத்தை உங்க கிட்ட மறைச்சதுக்கு அது கூட காரணமா இருக்கலாம்.

''விரலுக்கேத்த வீக்கம் தகுதிக்கேத்த ஆசை இருக்க ணும்னு நெனக்கிறவள் நான். என்னையும் மீறி என் மனசு... உங்க கண்ணியமான நடத்தையைப் பார்த்துட்டு நேசிக்க ஆரம்பிச்சுடுச்சு. நீங்களும் நானும் விரும்பினா மட்டும் போதுமா?

''நடைமுறை சிக்கல்கள் இருக்கு... அந்தஸ்து பேதம் காட்டி உங்க அப்பா சம்மதிக்காட்டி என்ன செய்யறது? பெத்தவங்க மனசை என்னிக்கும் நோகடிக்கவே கூடாது. அது மகா பாவம்! நம்ம மனசை அவங்க புரிஞ்சுக்கணும்.

''மனப்பூர்வமா பூரண திருப்தியோட சேர்த்து வச்சு அட்சதை தூவி ஆசீர்வதிக்கணும். உண்மையான காதல் அப்பதான் வெற்றியடையும். மனசு நிறைஞ்ச சந்தோஷம் கிடைக்கும். நம்ம கடமையைச் செய்வோம்.

''பெத்தவங்க மனசை உடைச்சு நொறுக்கிட்டு ஓடிப்போய் சுயநலமா கல்யாணம் பண்ணி வாழறது... மிருகத்தனம்! பகவான் மேல பாரத்தைப் போடுவோம். அதிர்ஷ்டம் இருந்தா ஒண்ணு சேரலாம்... இல்லேன்னா... அடுத்த ஜென்மத்திலாவது சேர்த்து வையின்னு... பகவானை வேண்டிக்கலாம்.''



குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட நா தழுதழுத்தாள் பார்கவி.

சில்லிட்டுப் போய் இலேசாக நடுங்கிய தளிர்க்கரத்தை அழுந்தப் பற்றினான் கிரீசன். கண்ணீரில் மிதந்த அழகிய விழிகளில் பார்வையைப் பதித்தான்.

நான்கு விழிகளிலுமே... தேடலும், தவிப்பும், காதலும், சோகமும், ஏக்கமும் நம்பிக்கையும், பயமும் கலவையாய் பிரதிபலித்தன. அழுந்தப் பற்றிய கரத்தில்... மிக மென்மையாக தன் இதழ்களை ஒற்றினான் கிரீசன்.

பார்கவியின் செல்பேசி அலறியது. கிரீசனின் பிடியி லிருந்த தன் கரத்தை மெல்ல உருவிக் கொண்டு சட் டென்று நகர்ந்தாள்.

செல்லை எடுத்துப் பேசினாள்.

''ஹலோ.''

''ஹலோ! நான் காந்திமதி பேசறேன். நல்லாயிருக்கியா கவி? எனக்கு, சதா உன் நினைப்பு தான். ஒரு முக்கியமான விஷயம்... நம்ம பங்கஜமும் அவ கணவரும் நேத்தைக்கு ஊர்லே இருந்து வந்துட்டாங்க... என்கிட்டே அவங்க சாவியை நீ கொடுத்துட்டுப் போனது நல்லதாப் போச்சு!

''ஒட்டு மொத்தப் பணத்தைக் கறந்ததும் அவங்க பசங்க... பெத்தவங்களை நட்டாத்துல அம்போன்னு தவிக்க விட்டுட்டாங்களாம். கையிருப்பு கரைஞ்சு போனதும் பெத்தவங்களை பாரமா நினைச்சு அங்கேயும் இங்கேயும் பந்தாடிட்டாங்க. துரும்பா நினைச்சு உதாசீனம் பண்ணினதும்... அவங்க கிளம்பி வந்துட்டாங்க... 'வீர பாண்டி'யில இருக்கிற பூர்வீக வீடு மட்டும்தான் அவங் களுக்கு மிஞ்சியிருக்கு... அதை வித்துட்டு ஏதாவது அனாதை ஆசிரமத்துக்குப் போயிடலாம்னு முடிவு பண்ணிட்டாங்க கவி!

''உங்கப்பா இறந்ததைக் கேள்விப் பட்டதும் ரொம்ப வருத்தம் தெரிவிச்சாங்க... உன்னை ஒரு நடை வந்து பார்க்கணும்னு பிரியப்படறாங்க.''

''அடக்கடவுளே! விஷயத்தைக் கேள்விப்பட்டு மனசு ரொம்ப சங்கடப்படுது அத்தே...! சாயந்தரம் அஞ்சரைக் கெல்லாம் நான் குவார்ட்டர்ஸ்லே இருப்பேன்... நீங்களும் சேர்ந்து வரணும். அத்தே'' அழைப்பு விடுத்த பார்கவியின் முகத்தில் குழப்பம் படர்ந்தது.

* * *

'ஆண்டாண்டு அழுதாலும் மாண்டவர் மீண்டும் வருவதுண்டோ?' அந்தப் பெரிய சட்டத்துக்குள் அடங்கி... முகத்தில் கருணை வழிய, இதழோரம் சிறு புன்னகை இழையோட 'நிழற் படமாகி' விட்ட தந்தையைக் கண்டு... அசைவற்று நின்றாள். பார்கவியின் கன்னங்களில் கண்ணீர் வாய்க்கால் போட்டுக் கொண்டு இறங்கியது.

தனித்திருக்கும் வேளையில்... அப்பாவின் ஞாபகம் அதீதமாய் தலை தூக்கி துக்கம் கரை புரண்டது.

'காந்திமதி அத்தை வருவதாக போனில் கூறினாரே?' ஞாபகம் உள்ளூர எட்டிப் பார்த்ததும்... வேகமாக வீட்டைப் பெருக்கி சுத்தப்படுத்தினாள். அன்று வேலை சீக்கிரம் முடிந்து விட்டதால்... மாலை ஐந்து மணிக்கே வந்து விட்டாள்.

தலையை வாரிப் பின்னலிட்டு முடித்தபோது வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

''வாங்க... வாங்க.''

உள்ளே வந்து அமர்ந்தது தான் தாமதம்... பங்கஜம் பார்கவியை அணைத்துக் கொண்டார். ''உனக்கு இந்த



கதியா வரணும் கவி? பெத்தவங்களை இழந்துட்டு இப்படி அனாதையா நிக்கிறியே?'' தேம்பினார்.

''எல்லாம் விதி விடுங்கம்மா. நீங்க இப்படி மெலிஞ்சு உருக்குலைஞ்சு போயிட்டீங்களே அம்மா? வீட்டை வித்துட்டு ஆசிரமத்துக்குப் போயிடலாம்னு முடிவு பண்ணிட்டீங்க இல்லையா?

''கவலைப்பட்டா... அது நம்மை உருத் தெரியாம ஆக்கிடும். மனசிலேர்ந்து எல்லாத்தையும் தூக்கிப் போடுங்க. நான் உங்க சிநேகிதியோட பொண்ணு. பெத்தவங்களை இழந்துட்டு தவிக்கிறேன். உங்களுக்கு பெத்த பிள்ளைங்க சரியில்லை.

''எனக்கு அம்மா அப்பாவா இருந்து நீங்க வழி நடத்தக் கூடாதா? எனக்கு நீங்க... உங்களுக்கு நான்னு உறு துணையா இருந்துட்டுப் போலாம். என்ன சொல்றீங்க?''

கணவன் மனைவி - இருவரது விழிகளிலும் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது.

''கவி! உன்னை எப்படிப் பாராட்டறதுன்னே தெரியலை? நீ அமோகமா இருப்பே ராஜாத்தி'' அவளது கன்னத்தைத் தடவினார் காந்திமதி.

''இப்படியொரு திருப்பம் வரும்னு நான் கனவுலே கூட நெனக்கலைம்மா'' பங்கஜத்தின் கணவர் தழுதழுத்தார்.

பார்கவி சிரித்துக் கொண்டே எழுந்து நின்றாள். ''தோசை மாவு தயாரா இருக்கு. மசால் தோசை வார்க்கிறேன். எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாம்.''

''சரி! மசால் தோசைன்னு சொல்லிட்டே. நாக்குல ஜலம் ஊறுது. உன்னோட கை பாகத்தை சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. ஒரு பிடி பிடிக்கப் போறோம்'' காந்திமதி கூறியதும் அனைவரும் கொல்லென்று சிரித்து விட்டனர்.

பார்கவி சற்று ஒதுங்கி வந்து கிரியின் செல்பேசிக்கு முயற்சித்தாள்.

"ஹலோ! சொல்லு பார்கவி."

விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடித்த பார்கவி, "இந்த குவார்ட்டர்ஸ்லே பங்கஜம் அம்மாவும், அப்பாவும் வந்து இருக்கப் போறாங்க. இதுநாள் வரை பஞ்சவர்ணம் பாட்டியை இரவு துணைக்கு வந்து தங்கச் சொன்னீங்க. நன்றி!"

"பார்கவி! ரியலி யூ ஆர் வெரி கிரேட்... இன்னிக்கு நீ ஒரு அம்மா, அப்பாவை தத்து எடுத்திருக்கேன்னு சொல்லலாம் தெரியுமா? இந்த குணம் தானே காந்தமா ஈர்த்திடுச்சு. ஐ லவ் யூ ஸோ மச்."

## 15

அந்தப் படகுக் கார் மலைப் பாதையில் வளைந்து வளைந்து சுற்றி, பதமாய் முன்னேறி 'தேக்கடி'யை வந்தடைந்து தன் மூச்சை நிறுத்தியது.

அழகான பிரமாண்டமான ஏரியைக் கண்டு வியப்புடன் நின்றாள் பார்கவி.

தொட்டிலாய் அசைந்த விசைப் படகினுள் தாவி ஏறினான் கிரீசன். சற்றே தடுமாறியவளின் முழங்கையை அவன் ஆதரவாய்ப் பற்றினான். படகினுள் கால் வைத்து விதிர்த்து நிமிர்ந்தவளின் தலை அவன் மோவாயில் மோத... விரைந்து விலகியவளை மேலும் இறுக்கினான்.

"பார்த்து... ஜாக்கிரதை பார்கவி" முறுவலித்தவனைக் கண்டதும் சங்கோஜத்துடன் பார்வையைத் தழைத்துக் கொண்டாள். விசைப்படகு நீரைக் கிழித்து முன்னேறியதில் இருபுறமும் ஏரி நீர் சுழித்துச் சிதறியது.



நேற்று தான் கருத்தரங்கம் நடந்து முடிந்தது. வந்திருந்தவர்கள் அத்தனை பேரும் பிஸினஸில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள். கிரீசனை விட வயதில் மூத்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் கிரீசன் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் பேசியது கண்டு மூக்கில் விரலை வைத்தார்கள். அவனுக்கு நல்ல பாராட்டு கிடைத்தது.

அவனது சரளமான பேச்சுக்கு பார்கவியின் நேர்த்தியான குறிப்புகள் தான் முதல் காரணமாக இருந்தது.

"ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்னு இவ்ளோ தூரம் கூட்டிட்டு வந்திருக்கீங்க கிரி? நேற்று உங்க 'ஸ்பீச்' ரொம்ப அருமையா இருந்தது."

"இதுக்கெல்லாம் என்ன காரணம் தெரியுமா? நீ எனக்கு எழுதிக் கொடுத்த குறிப்புகள் தான்."

"நீங்க சொன்னதை சுருக்கி குறிப்பு எடுத்து வச்சேன். அவ்ளோதான். உங்க திறமைக்கு கிடைச்ச பாராட்டு அது."

"செல்வம் குவிஞ்சு கிடந்தாலும்... நிம்மதியில்ல. மனசுல விரக்தியும், வெறுமையும் தான் நிறைஞ்சிருந்தது. எவ்ளோ திறமை இருந்தாலும்... உத்வேகமும் ஆர்வமும் இருந்தாத்தான் ஜெயிக்க முடியும். இதெல்லாம் எனக்கு உன்னால தான் கிடைச்சிருக்கு. என்னோட உந்து சக்தியா நீ இருக்கே பார்கவி."

சிறு தீவுகள் போன்று அமைந்த குன்றுகளை விசைப் படகு சுற்றிச் சுற்றி வர ஆரம்பித்தது. படகு விளிம்பில் நின்றிருந்ததால்... முகத்தில் நீர் எம்பிச் சிதறியது.

கேரளாவுக்குரிய பசுமை... சுற்றிலும் நீர் தழுவியதால் கிளம்பிய குளுமை... தென்னை, ரப்பர், மிளகுக் கொடிகளும் செறிந்த செழுமை... தென் மேற்குப் பருவக் காற்றில் மிதந்து வந்த ஏலச் செடிகளின் வாசம்...

பார்கவியின் மான் விழிகள் இயற்கை அழகை அள்ளிப் பருகின. கிரீசனின் வெளிப்படையான பேச்சைக் கேட்டதும்... அவளது செவிகளில் பாகுக் கரைசல் பாய்ந்தது போலிருந்தது.

''நான் மட்டும் என்னவாம்? என் வாழ்நாள்லே இவ்ளோ சந்தோஷத்தை நானும் அனுபவிச்சதில்ல... இந்த இடம் எவ்ளோ அழகா ரம்யமா இருக்கு கிரி! மனசு ரொம்பவே லயிச்சுப் போச்சு'' குதூகலமாய் சிரித்தாள் பார்கவி.

''உன் முகத்துல எப்பவும் நான் சந்தோஷத்தை மட்டும் தான் பார்க்கணும். நீ எனக்குக் கிடைச்ச அதிர்ஷ்ட தேவதை பார்கவி... உனக்கு முகராசி மட்டுமில்ல கைராசியும் இருக்கு.''

''ஏற்கனவே இந்த இடம் ரொம்ப குளிருது. இதுக்கு மேல் ஐஸ் வச்சா நான் தாங்க மாட்டேன் கிரி'' கலீர் என்று நகைத்தவளை உரிமையாய் இழுத்து இறுக அணைத்துக் கொண்டான்.

ஒரு கணம் விழிகளை மூடி தன்னை மறந்து நின்ற போது... மிக மிகப் பாதுகாப்பான உணர்வு அவனது அணைப்பில் கிடைப்பதை உணர்ந்தாள்.

மறுகணமே தன்னிலை உணர்ந்தவளாய் சட்டென்று விலகி, ''அ... அதோ ஒரு குட்டி யானை பாருங்க கிரி... ரொம்ப லாவகமா குளிக்குது பாருங்களேன்'' என்று நாசுக்காய் நகர்ந்து கொண்டாள். முகம் குங்குமப்பூவாய் சிவந்திருந்தது.

அந்த அழகு முகத்தை ரசித்த கிரியின் முகத்தில் ஒரு குட்டி முறுவல் பூத்தது.

நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

அலுவலகத்தில்... டெண்டர் விஷயமானாலும் சரி! பிராஜெக்ட் விஷயமானாலும் சரி. பார்கவி நல்ல ஆலோசனைகளை வழங்கியதால்... கோடிக் கணக்கில் கிரீசனுக்கு லாபம் கிடைத்தது.



நல்ல உத்வேகத்துடன் உழைத்ததால் கிரீசன் புதிதாய் ஆரம்பித்த 'சாஃப்ட் வேர்' கம்பெனி வெகு வேகமாய் வளர்ந்து சிகரத்தைத் தொட்டது. அந்தக் கம்பெனி உருவாக்கும் 'பிராஜெக்ட்'... உள் நாட்டில் மட்டுமில்லாமல்... வெளி நாடுகளிலும் பேசப்படும் அளவுக்கு உயர்வடைந்தது.

''பார்கவி! இந்த மாசத்துலே இருந்து உன்னோட சம்பளத்தை அதிகப்படுத்தி இருக்கேன். இந்தா காசோலை.''

''மைகாட்! என்ன கிரி இது? ஏற்கனவே நீங்க தர்றதே நிறைவான சம்பளம் தான். என்னோட கடமையை நான் செய்தேன். இது என்னத்துக்கு?''

''இது என்னோட உத்தரவாக்கும்! எதிர்த்துப் பேசப் படாது. நான் உன்னோட பாஸ். நான் சொன்னா நீ கேட்டுக்கணும். புரிகின்றதா?''

''உத்தரவு மகாராஜா'' தலை சாய்த்து பவ்யமாய் அவள் கூறியதும் குபீரென்று சிரித்து விட்டான் கிரீசன்.

''எனக்காக ஒரு பாட்டு பாட வேண்டும் தேவி'' கெஞ்சும் பாவனையில் கேட்டான்.

''பணியாளர்கள் பார்த்தால் எள்ளி நகையாடுவார்கள் சுவாமி.''

இருவருமே சேர்ந்தாற்போல் மனம் விட்டுச் சிரித்தனர். விதியும் பலமாக சிரித்தது. கூடிய விரைவில் ஒரு இடியை இறக்கி அவர்களது நிம்மதியைத் தவிடு பொடியாக்க... தக்க தருணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

## 16

எட்டு மாதங்கள் உருண்டோடி விட்டன.

''குறையொன்றும் இல்லை... மறைமூர்த்தி கண்ணா...'' தேனாக வழிந்த குரல்! மனதை உருக வைத்து உயிரை ஈர்த்தது. விழிகளை மூடியவண்ணம் சிலாகித்துப் பாடினாள் பார்கவி.

விசாலத்தின் விழிகளிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் கசிந்தது. புண்பட்டு, புழுங்கிக் கிடந்த மனதிற்கு மயிற்பீலியால் இலேசாக விசிறி விட்டதைப் போல் இதமாக இருந்தது.

கிரியின் அலுவலகத்தில் பார்கவி வேலைக்குச் சேர்ந்ததிலிருந்து... வாராவாரம் விசாலம் காரை அனுப்பி அவளை வரவழைத்து விடுவார். சில சமயங்களில் கிரியோ அல்லது அம்ருதாவோ அழைத்து வந்து விடுவார்கள்.

பார்கவியிடம் வெகு நேரம் மனம் விட்டுப் பேசுவார் விசாலம். பின்பு ஏதாவது ஒரு பக்திப் பாடலோ... தியாகராஜ கீர்த்தனையோ பார்கவி பாடினால் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருப்பார்.

அவள் பாட ஆரம்பித்தால் போதும்! அம்ருதா பார்கவி யின் கையைக் கோர்த்துக் கொண்டு ஒட்டியே அமர்ந் திருப்பாள். கிரியும் கைகளைக் கட்டியபடி விசாலத்தின் அருகே வந்து நின்று கொள்வான்.

அந்த மாதிரி சமயத்தில்... கிரியின் மனம் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கும். விசாலத்தின் முகத்தில் நிம்மதி நிலவுவதைக் கண்டு அம்ருதாவிற்கும் பரம திருப்தி தான்.

அன்று... பாடி முடித்ததும் பார்கவி எழுந்து நின்றாள். தேனினும் இனிய குரல் மூவரையும் கட்டிப் போட் டிருந்தது. அவள் கிளம்ப ஆயத்தமாகி விட்டாள் என்று புரிந்து... விசாலமும் எழுந்தார்.



''இன்னிக்கு நிறைஞ்ச அமாவாசை. வெள்ளிக்கிழமை வேற... பூஜை அறைக்கு வாம்மா... வெத்தலை, பாக்கு வாங்கிட்டுப் போ'' மறுப்பேதும் சொல்லாமல் அவரைப் பின் தொடர்ந்து சென்றாள் பார்கவி.

விசாலமான பூஜையறை, சாம்பிராணி மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. சுவாமி படங்களுக்கு ரோஜாப்பூ மாலைகள் சாற்றப்பட்டிருந்தன. பெரிய வெள்ளிக் குத்து விளக்குகள் இருபுறமும் வைக்கப்பட்டு சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

மஞ்சள் குங்குமம், மல்லிகைச் சரம், வெற்றிலை பாக்கு, ரவிக்கைத் துணி, நாணயம் ஆகியவற்றை ஒரு தட்டில் வைத்து... பார்கவியை ஏற இறங்கப் பார்த்தார்.

நிலவை சில நட்சத்திரங்களுடன் சேர்த்துப் பிசைந்து வார்த்த சிலை போல் கண்களை வசீகரித்தாள் பார்கவி.

குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் கீற்றாக இட்ட விசாலம், ''சவுபாக்கியவதியா தீர்க்காயுசா இரும்மா'' என்று ஆசீர்வதித்தார்.

சட்டென்று அவரது பாதங்களில் பணிந்தாள். அவளது உச்சந்தலையை வருடியபடி... அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தார் விசாலம்.

'கிரீசன் பார்கவியை மனதார நேசிக்கிறான்' என்று ஆரம்பத்திலேயே விசாலம் புரிந்து கொண்டிருந்தார்.

எப்பாடு பட்டாவது இந்த தேவதையை கிரீசனுக்கு மனைவியாக்கிவிட வேண்டும் என்ற எண்ணம்... விதை போல் விழுந்து விருட்சமாய் வளர்ந்திருந்து.

''நான் கிளம்பறேன்மா'' ஒவ்வொரு முறையும் அவள் விடைபெறும்போது... தன் உயிரே உடலை விட்டுப் பிரிந்து செல்வதைப் போன்றிருக்கும்.

''வாம்மா'' வைத்த கண் வாங்காமல் பார்கவியின் உருவம் மறையும் வரை, அவள் சென்ற திக்கையே வெறித்துப் பார்த்தார் விசாலம்.

அதற்கு அடுத்த தினத்தில்... கிரீசன் சிங்கப்பூருக்குக் கிளம்பி விட்டான். சிங்கப்பூரிலிருந்த ஒரு சாஃப்ட்வேர் நிறுவனம்... கிரியின் சாஃப்ட்வேர் கம்பெனியுடன் 'டீலிங்' வைத்துக் கொள்வதற்காக அவனுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

கிரி சிங்கப்பூருக்குச் சென்றதும்... ஒட்டு மொத்தப் பொறுப்பும் பார்கவியின் தலையில் விழ... பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தாள். வேலை மும்முரத்தில் இருந்த தில் நான்கு நாட்களாக... அம்ருதா அவளுக்குபோன் கூட செய்யவில்லை என்ற விஷயம் மெதுவாகத்தான் ஞாபகத் திற்கு எட்டியது.

அம்ருதா 'செல்'லை அணைத்து வைத்து விட்டாள் போலும். எவ்வளவோ முயற்சி செய்தும் இணைப்பே கிட்டவில்லை.

அன்று வேலையை விட்டு குவார்ட்டர்ஸுக்கு வந்ததும் ''அம்மா! நான் ஒரு நடை போய் அம்ருவைப் பார்த்துட்டு வரேன். நாலு நாளா அவ எனக்கு போனும் பண்ணலை. கண்ணுலேயும் அகப்படலை. அவ இப்படி இருக்க மாட்டாளே? மனசுக்கு சங்கடமா இருக்கு'' பங்கஜத்திடம் தன் ஆதங்கத்தை கொட்டித் தீர்த்து விட்டு கிளம்பினாள் பார்கவி.

தயங்கியபடி பங்களாவுக்குள் புகுந்தாள். வேலைக் காரியைத் தவிர யாரும் கண்ணில் படவில்லை.

''அம்ரு எங்கே?''

'அம்ருதா மேடம் அவங்க அறையில இருக்காங்க'' வேலைக்காரி மாடி அறையைச் சுட்டிக் காட்டினாள்.



மாடியேறி அந்த அறைக்குச் சென்றாள். வலது கை ஆட்காட்டி விரலை மடக்கி கதவைத் தட்டியபடி ''அம்ரு'' என்றாள்.

''உ.. உள்ளே வா கவி'' இரவு விளக்கிலிருந்து நீலவொளி கசிந்து கொண்டிருந்தது.

''அம்ரு... என்ன இது? இந்த நேரத்துல விளக்கு கூட போடாம... படுத்துட்டிருக்கே? உடம்புக்கு முடியலையா? செல்லை வேறு அணைச்சு வச்சுட்டே? ஏதாவது பிரச்சினையா அம்ரு?'' கேட்டபடி அந்த அறையில் மின் விளக்கைப் போட்டாள்.

பளிச்சென்ற வெளிச்சத்தில் அவளை ஏறிட்டபோது பகீரென்றது. அழுதழுது முகம் வீங்கி தலை வாரப் படா மல்... கூந்தல் அலங்கோலமாய்... பல நாட்கள் காய்ச்ச லில் விழுந்து கிடந்தவளைப் போல் தோற்றமளித்தாள் அம்ருதா.

## 17

முழங்காலில் முகம் புதைத்து விசும்பினாள் அம்ருதா. அருகில் அமர்ந்து அவளது கூந்தலைக் கோதி விட்டாள் பார்கவி. சிறிது நேரத்தில் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்ட அம்ருதா மெல்ல பார்கவியை ஏறிட்டாள்.

''கவி! அப்பா எனக்கொரு வரன் பார்த்திருக்காராம். அவரோட - புது நண்பர் ஜனார்த்தனனோட மகன் ஜெகனுக்கு என்னைப் பேசி முடிச்சிட்டாராம். பரம்பரை பணக்காரங்களாம்... 'அந்த கவுரவமான குடும்பத்துல சம்பந்தம் வச்சிருக்கிறதுக்கு... நாம்ப குடுத்து வச்சிருக் கணும்'னு சொல்றார்.

"எனக்கு இந்த வரன் பிடிக்கலை'ன்னு சொன்னேன். காதிலேயே போட்டுக்க மாட்டேங்கிறாரு... அம்மாவுக் கும் இதிலே இஷ்டம் இல்ல... 'சொத்து, சுகம், கவுர வம்னு பார்க்கிறதை விட.... வசதி குறைச்சலா இருந் தாலும் புகுந்த வீட்டு மனுஷங்க நல்லவங்களா இருக் கணும்'னு அம்மா நினைக்கிறாங்க.

"அப்பா அசைஞ்சு கொடுக்காம பிடிவாதமா இருக் கிறாரு... நிறைய பேர் கூடியிருக்கிற சபையில வச்சு ஜனார்த்தனனுக்கு வாக்கு கொடுத்துட்டாராம். 'இன்னும் மூணு நாள்லே நிச்சயம்... அடுத்த வாரம் கல்யாணம்'னு முடிவா சொல்லிட்டு... தடபுடலா ஏற்பாடுகளை செய்ய ஆரம்பிச்சுட்டாரு...

"அம்மா பாவம்! உடம்பு முடியாமப் படுத்துட்டாங்க... கடைசி வரைக்கும் நிம்மதியே இல்லாம கண்ணை மூடிடுவாங்களோ'ன்னு பயமா இருக்கு கவி."

அம்ருதாவின் விழிகள் மீண்டும் உடைப்பெடுத்துக் கொண்டன. அவளது கண்ணீரைத் துடைத்து விட்டு... அவளது விழிகளை ஊடுருவினாள் பார்கவி.

"அம்ரு! இது மட்டும்தான் காரணமா? உன்னோட வருத்தத்துக்கும், வேதனைக்கும்... இதையெல்லாம் தாண்டி ஒரு பெரிய காரணம் இருக்குன்னு என் மனசுக்கு படுது."

அம்ருதா சட்டென்று தனது பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

"சொல்லுடா! என் முகத்தைப் பாரு... என்ன காரணம்? நீ சந்தீப்பை விரும்பலையா?"

'சந்தீப்' என்ற பெயரைக் கேட்டதுமே... அம்ருதாவின் விழிகளில் ஒரு திடுக்கிடல் தெரிந்தது.



"அ... அப்படியெல்லாம் எதுவுமில்ல கவி! நீயா கற்பனை பண்ணிக்காதே... சந்தீப் என்னோட தாய் மாமா நடேசனோட மகன். நடேசன் மாமாவோட மனைவி கற்பகம்... எங்க அப்பாவோட சொந்த தங்கைதான். அதனால ரெண்டு பக்கமும் சொந்தம். நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கிற வரைக்கும் எல்லோரும் பாசமா நேசமா உறவாடிட்டு தான் இருந்தாங்க...

"அந்த சமயத்துல நடேசன் மாமாவுக்கு பிஸினஸ்லே பலத்த அடி! எங்கப்பாவுக்குத்தான் நொடிஞ்சவங்களைக் கண்டாலே ஆகாதே? தங்கச்சியோட கணவர்னுகூடப் பார்க்காம... விட்டேத்தியா மதிக்காம நடந்துகிட்டார்.

"கூடப் பிறந்த அண்ணாவே மதிக்காம உதாசீனப் படுத்தினதாலே... கற்பகம் அத்தையும் மனசு உடைஞ்சு... இந்த வீட்டு வாசற்படியை மிதிக்கவே இல்ல... கிரியோட வயசுதான் சந்தீப்புக்கும்!

"சின்ன வயசுலே ஒண்ணா விளையாடி சந்தோஷமா இருந்ததை நாங்க மறக்கலை. சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு அம்மா... அப்பா கிட்டே மன்றாடிப் பார்த்தும் பிரயோஜனம் இல்ல... நல்லது கெட்டதுக்குக் கூட எட்டிப் பார்க்காம... விரிசல் விலகிக்கிட்டே போய் பெரிய இடைவெளி வந்துருச்சு.

"சந்தீப்... வெளியில பார்த்தா என்கிட்ட பேசறதுண்டு. என்ஜினீயரிங் முடிச்சு பெரிய வேலையில சேர்ந்தப்போ... அவரோட திறமைக்கு பதவி உயர்வு கிடைச்சப்போ... என்கிட்ட சொல்லி சந்தோஷப்பட்டாரு... 'ட்ரீட்'கூட தந்தாரு... அவ்ளோதான்."

சந்தீப்பைப் பற்றிப் பேசுகையில் அம்ருதாவின் விழி களில் கூடுதல் வெளிச்சம் மிளிர்ந்ததை கவனித்தாள் பார்கவி.

''நம்ம கல்லூரிக்குக் கூட அடிக்கடி வந்திருக்கார் இல்லையா?'' என்று கேட்டவளின் மனக்கண்ணில் சந்தீப்பின் உருவம் ஒரு கணம் தோன்றி மறைந்தது.

கண்களில் ஆசையும் ஆர்வமும் கொப்பளிக்க... முகம் கொள்ளாப் பூரிப்புடன்... அம்ருதாவிடம் பேசுவான் சந்தீப். மாநிறம் தான் என்றாலும் களையான முகத்துடன் வாட்ட சாட்டமாய் இருப்பான்.

தூரத்தில் மரத்தடியில் அவனும் அம்ருதாவும் சேர்ந்து நின்று பேசுகையில் 'ஜோடிப் பொருத்தம் பிரமாதம்' என்ற எண்ணம் பார்கவிக்குள் கிளை விட்டுப் பரவும்.

''ஏ... என்ன கவி இது? சின்ன வயசுல நாங்க ஒண்ணா விளையாடி இருக்கோம். அப்புறம்... நண்பர்களா பழகிட்டு வர்றோம். நெருங்கின சொந்தம் வேற... ஒரு சிநேகிதியைப் பார்க்க கல்லூரிக்கு வந்தது தப்பா? உடனே காதல்னு அர்த்தமா? உ... உன்கிட்டப் போய் நான் மறைப்பேனா?''

மிடறு விழுங்கினாள் அம்ருதா.

''அம்ரு! நிஜத்தைச் சொல்லு... விஷயம் விபரீதம போயிட்டிருக்கு. நீ என்கிட்ட விளையாடாதே... ப்ளீஸ் கெஞ்சியபடி அவளது மோவாயைத் தொட்டாள் பார்கவி

அவளது முகத்தில் கலவரமும் திகிலும் படர்ந்திரு பதைக் கண்ட அம்ருதாவுக்கு கண்களில் நீர் ஊ றெடுத்தது.

''அப்பாவுக்கு பிடிவாதம் ஜாஸ்தி. இந்தக் கல்யாண நடக்கலைன்னா... உயிரையே விட்டுடுவார். 'இந் கல்யாணத்துல ஏதாவது தடங்கல் வந்தா... நான் உ ரோடவே இருக்க மாட்டேன். அப்படின்னு வெளிப்ப யாவே மிரட்டிட்டார்.



''அம்மாவோட தாலிக்கு பங்கம் ஏற்படுத்த நான் விரும்பலை. நடக்கிறது நடக்கட்டும். ஆ... அப்புறம்... என்னோட 'வரவேற்பு'லே நீதான் பாடணும். சரியா? எனக்குப் பிடிச்ச பாடல்களைப் பட்டியல் போட்டுத் தரேன். நீ பாடுவியாம்! சரியா கவி.''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு முறுவலித்தாள் அம்ருதா.

'ஊகூம்! இவள் சந்தீப்பை ஆழமாக நேசித்திருக்க வேண்டும். வெறும் நட்பு என்ற பெயரில் பழகியவர்கள் தான்... நாளடைவில் நல்ல நட்பு வேரூன்றி துளிர் விட்டு 'காதலாய்' தழைத்திருக்கும்.

'நட்பு ரீதியில் பழகிவிட்டு... அடுத்த கட்டமான காதல் எனும் உணர்வு தலை காட்டும் தருணத்தில் தான்... விஸ்வநாதன் 'கல்யாணம்' என்ற பெயரில் குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.

அவளால் தோழியின் மன நிலையை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. கிரீசன் வேறு ஊரில் இல்லாததால்... செய்வதறியாது திகைத்தாள்.

''சரி! வா... அம்மாவைப் பார்க்கலாம். உடம்பு முடியாம படுத்து இருக்கிறாங்கன்னு சொல்றே? ஆறுதலா... கிட்ட இருக்க வேண்டாமா? என்ன பொண்ணு நீ?'' அதட்டி எழுப்பி அழைத்துச் சென்றாள் பார்கவி.

''ஆமா... கிரிக்கு போன் பண்ணி இன்னும் மூணு நாள்லே உன்னோட நிச்சயதார்த்தம் நடக்கப் போகுதுன்னு சொல்லிட்டியா?''

''உம்! அப்பா கார்லே பறந்து பறந்து ஏகப்பட்ட 'வி.ஐ.பி.'களை விழாவுக்கு அழைச்சிருக்காரே? கிரி அண்ணாவுக்கு ரெண்டு நாள் முன்னாடியே போன்லே அப்பா சொல்லிட்டார். கிரி அண்ணா நேத்தைக்கு எனக்கு போன் பண்ணி 'விழா அன்னிக்கு நான் அங்கே இருப்பே'ன்னு சொன்னான்.''

"ஏன் அம்ரு? உங்கப்பாவுக்கு உன் மேலே ரொம்பப் பாசம்... உயிரையே வச்சிருக்கார் அப்படின்னு அடிக்கடி சொல்வியே? உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்லைன்னு நீ சொல்லியும்... உனக்குக் கட்டாயக் கல்யாணம் செய்து வைக்கிறாரே?"

உள்ளூர சந்தேகம் அரித்துக் கொண்டிருந்ததால்... ஆற்ற மாட்டாமல் கேட்டு விட்டாள் பார்கவி.

"இதே சந்தேகம் தான் எனக்கும்! மனசு தாங்கலை கவி! இன்னும் கூட இது கனவா? நிஜமா?ன்னு சந்தேகமாகத் தானிருக்கு. அவ்ளோ பாசமானவராச்சே அப்பா? என் னோட உணர்வுகளைப் புரிஞ்சுக்காம... என்னை வற் புறுத்தி வேதனைப்படுத்துறாரே?ன்னு ஆச்சரியமாகத் தான் இருக்கு.

"பாசமானவர் தான். பாசத்தை விட அவருக்கு கவுரவம் பெரிசா போயிடுச்சு. என்ன செய்ய? விடு கவி" அம்ருதாவின் குரலில் விரக்தியும் வேதனையும் தொனித்தன.

பார்கவிக்கு அடிவயிற்றில் அமிலம் சுரந்தது.

'அம்ருதாவின் வாழ்வில்... விதி வெகு நூதனமாக சதி செய்கின்றது' என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

இதயம் பாறாங்கல்லாய் கனக்க, வெளிறிப் போன முகத்தோடு வீட்டை அடைந்தாள். அவளது முகத்தில் வேதனை படர்ந்திருந்ததைக் கண்டதும்... பங்கஜம் துருவித் துருவி கேட்க... பார்கவி எல்லா விவரத்தையும் தெரிவித்தாள்.

"கவி! இது என்னம்மா கூத்தா இருக்கே? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கல்யாணத்துக்கு ஏன் இவ்ளோ அவசரப் படணும்? உடனடியா கல்யாணத்தை நடத்திடலாம்'னு அவங்க சொல்லியிருப்பாங்க.



"அதான் விஸ்வநாதன் இவ்ளோ அவசரம் காட்டறார்னு நினைக்கிறேன். மாப்பிள்ளையோட குணம், நடத்தை எப்படின்னு விசாரிக்கிறதுக்கு கூட அவகாசம் குடுக்காம... துரிதப் படுத்தறாங்க பார்த்தியா? எனக்கு என்னவோ எல்லாமே தப்பா படுது பார்கவி... பாவம் அம்ருதா! நல்ல மனசு உள்ளவ... வெகுளிப் பொண்ணு... அம்மன் தான் அவளைக் காப்பாத்தணும்."

பங்கஜம் பேசிய போது பார்கவிக்கு உள்ளூர உதற லெடுத்தது.

## 18

நந்தனின் மனம் எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்தது. ஏமாற்றத்திலும் அவமானத்திலும் அவனுக்கு அடிவயிறு திகுதிகுவென்று பற்றி எரிந்தது போலிருந்தது.

பின் பக்கத்திலிருந்த தோட்டத்திலிருந்து கீரையைப் பறித்துக் கொண்டு வந்த பூரணிக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. மூச்சிரைத்தபடியே கூடத்து ஊஞ்சலில் வந்து அமர்ந்தாள்.

"பார்கவியை நாம்ப வீட்டை விட்டுப் போகவே விட்டுருக்கக் கூடாதுக்கா... அவ அப்பா படுக்கையில கிடந்தப்பவே... அவளை அதட்டி மிரட்டிப் பணிய வச்சு தாலியைக் கட்டியிருக்கணும்.

"மூக்கணாங் கயிறு மாட்டி விட்டிருந்தா... வெளியே அவ போயிருப்பாளா? நம்மை அடிபணிஞ்சு காலைச் சுத்தி கிடந்திருப்பா... கழுவிய தண்ணில.. நழுவின மீனா... அவ நடந்துக்கும்போதே நெனச்சேன்... அதே மாதிரியே வீட்டை விட்டு ஓடிட்டா பார்த்தியா?"

''டேய் நீ வேறே... பார்கவி தனியா என்கிட்ட வந்து 'நான் வீட்டை விட்டுப் போறேன்'னு சொல்லியிருந்தா... திட்டியோ அடிச்சு மிரட்டியோ... தடுத்திருப்பேன்.

''ஆனா... அன்னிக்கு அந்த காந்திமதி, வரதராஜன், கிரீசன், அம்ருதா... இன்னும் அக்கம் பக்கத்தைச் சேர்ந்த வங்க... எல்லோரும் இருந்தாங்க... அவங்க முன்னாடி தைரியமா அவ சொல்லிட்டு கிளம்பிட்டாளே? அவங்க அத்தன பேரும் இருக்கறப்போ... என் கை வரிசையை நான் காட்டினா அவ்ளோ தான்! இப்பவும் தெருவில நடந்து போனா... எனக்கு கூச்சமாத்தான் இருக்கு நந்தா!

''மூத்த தாரத்துப் பொண்ணை கொடுமை பண்ணி... பெத்த தகப்பனார் இறந்ததும்... அவளை அனாதரவா விரட்டி விட்டுட்டேன்னு என் காதுபடவே பேசறாங்கடா... அத்தோட பார்கவியோட சம்பளப் பணமும் நம்ம கை விட்டுப் போச்சா?

''மனசு தாங்காம அவளுக்கு ரெண்டு வாட்டி போன் பண்ணலாம்னு முயற்சி பண்ணினேன். தயக்கமாகவும் பயமாகவும் இருக்கு. பேசாம போனை வச்சுட்டேன். என்ன பண்றது?''

முறத்திலிருந்த கீரையை ஆய்ந்து கொண்டே பேசி னாள் பூரணி.

''அந்த கிரீசனுக்கு எல்லாமே பார்கவி தானாம்! அலுவலகத்துலே அவ வச்சதுதான் சட்டமாம்... எக்கச் சக்கமா சம்பளம் வாங்கறாளாம்... அந்த பங்கஜமும் அவ கணவரும் கொடுத்து வச்சவங்க. ராஜ யோகம்தான்!

''கவியை வளர்த்தவ நீ.. பாவம்! வயசான காலத்துல கஷ்டப்படறே? எல்லாம் உன் தலையெழுத்து'' நந்தன் அவளது கோபத்தைக் கிளறி விசிறி விட்டான்.



''ஆமா நந்தா! பல வருஷமா அடுக்களை பக்கமே நா எட்டிப் பார்க்காம நிம்மதியா இருந்தேன். வயசாயிடுச்சு. உடம்புலே ஏகப்பட்ட வியாதி வேறே... அடுப்பு முன்னாடி நின்னு வெந்து வேக்காடாகி... சமைக்கிறதுக் குள்ளே போதும் போதும்னு ஆயிடுது.

''மத்த வேலைகளை செய்து முடிக்கும்போது... இடுப்பெலும்பே கழண்டு விட்டுப் போகுதுடா நந்தா! இந்த நித்தி மாடாட்டம் வளர்ந்து நிக்கிறா எதுக்கும் லாயக்கில்லாதவ... துரும்பை நகர்த்த மாட்டேங்கிறா? கவி போனப்புறம் தான் அவ அருமை தெரியுது?

''அவளை எப்படியாவது இங்க வர வைக்கணும்டா நந்தா! நாம ரெண்டு பேரும் நல்லா யோசிச்சு... அவளே திரும்பவும் இங்க வந்து நிக்கும்படி செய்யணும்டா! அவளுக்கு மூக்கணாங்கயிறு மாட்டி விட்டு... அவ மூலமா வர்ற வருமானத்தை நாமளே அனுபவிக்கணும்டா...

''சீக்கிரமா அதுக்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்க ணும்டா நந்தா'' கோபத்தில் ஏகத்துக்கும் மூச்சிரைத்தாள் பூரணி.

''நல்லா நிதானமா யோசித்து தான் காரியத்தில் இறங் கணும். அவசரப்பட்டா... உள்ளதும் போச்சுடா' கதையாயிடும்! இப்ப அவ ரொம்ப உசரத்துல பறந்துட்டிருக்கா... எங்க அடிச்சா அவளுக்கு வலிக்கும்னு புரிஞ்சு அடிக்கணும். அடிக்கிற அடியில வலி தாங்காம 'பொத்'துனு விழுவா...

''அப்ப பாரேன்! போக்கத்துப் போயி... நம்ம வழிக்கே வந்துடுவா'' நந்தன் கோணலாகச் சிரித்தான். அவனது மூளை நரித்தனமாக யோசித்தது.

* * *

கிரியின் 'செல்' பேசிக்கு முயற்சி செய்து ஓய்ந்து விட் டிருந்தாள் பார்கவி. ஒவ்வொரு முறையும் 'நாட் ரீச்சபிள்' அறிவிப்பு வந்து கழுத்தை அறுத்தது.

அம்ருதாவின் திருமண ஏற்பாட்டை கேள்விப்பட்டதி லிருந்து... துக்கத்தில் துவண்டு போனாள். சிநேகிதியின் மேலிருந்த பாசத்தில் அவளது மனம் பாகாய் உருகியது.

'அம்ருவின் வாழ்க்கை சீராக அமையுமா? அவளுக்கு கணவனாக "வரப் போகும் ஜெகன் நல்ல குணம் கொண்டவனா?'

இதைப் போன்ற குழப்பங்கள் மனதிற்குள் தட்டா மாலையாக ஆடியது உண்மைதான். தனிமையில் இருந்த போது தியானம் செய்து... குழம்பிய மனதைத் தெளிய வைத்து கட்டுக்குள் கொண்டு வந்தாள்.

அன்று... விசாலமே அவளுக்கு போன் செய்து வீட்டிற்கு வரவழைத்தார்.

''அம்மாடி பார்கவி! அம்ருதாவுக்கு நாளைக்கு நிச்சய தார்த்தம் நடக்கப் போகுது. அடுத்த வாரமே கல்யாணம்... தினமும் வீட்டுக்கு வந்துட்டுப் போம்மா... அம்ருவுக்கு அலங்காரம் பண்றதிலேர்ந்து சகலத்தையும் நீ பாத்துக்கோ... அவ கூடவே இரும்மா.''

கெஞ்சும் தோரணையில் விசாலம் கேட்டதும்... பார்கவிக்கு அவர் மேல் பச்சாதாபம் ஏற்பட்டது.

''இதை எனக்கு நீங்க சொல்லணுமா அம்மா? அது என் கடமை'' விரக்தியுடன் புன்னகைத்த விசாலம்... அவளது கன்னத்தை வருடிவிட்டு துவண்ட நடையுடன் அங் கிருந்து அகன்றார்.

விஸ்வநாதன், சமூகத்தில் உயர் மட்டத்திலிருந்தவர் களுக்கு மட்டுமே அழைப்பிதழ் கொடுத்து திருமணத் திற்கு வரவேற்றார்.

வழக்கம் போல்... பசையுள்ள பந்துக்களை மட்டும் தேடிப் போனார். கஷ்டப்படும் உறவினர்களுக்கு அழைப் பிதழை அனுப்பிக் கூட வைக்கவில்லை.



அவர் இழுத்த இழுப்பிற்கெல்லாம் ஒரு நடைப்பிணம் போல் அவரது பின்னால் சென்று அழைப்பிதழ் கொடுத்து வந்தார் விசாலம்.

'பணம் பணம்' வெறித்தனமாக ஓடியதில்... அவரிட மிருந்த ஈரம் சுரக்கும் நெஞ்சம், இளகிய மனதும் இறுகிப் பாறையாக... இரும்பாக மாறிப்போன அவலத்தை எண்ணி... உள்ளூர உருகி உருக்குலைந்து போனார் விசாலம்.

உள் மனது ஊமையாய் அழுது புலம்பினாலும்... கருத்தொருமித்த ஆதர்ச தம்பதிகளைப் போல... விதவித மான வைர நகைகள் அணிந்து பட்டுடுத்தி கணவருடன் காரில் பவனி வந்தாலும்... விசாலத்திற்குள் வண்டி வண்டியாய் சோகம் மண்டிக் கிடந்ததை... பார்கவியால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

* * *

தீர்க்க சுமங்கலி கல்யாண மண்டபம்! புதிதாய் கட்டப்பட்ட மிகப் பிரம்மாண்டமான மண்டபம் அது. 'விசாலம் பில்டர்ஸுக்கு' சொந்தமான மண்டபம் தான் அது. மண்டபக் கட்டிடத்தின் உடம்பு முழுவதும் வண்ண வண்ண சீரியல் பல்புகள்.

தங்களுக்குச் சொந்தமான மண்டபத்தில்... கடைக் குட்டி அம்ருதாவின் திருமணம் நடக்கப் போவதை நினைத்துப் பெருமிதத்தில் மிதந்தார் விஸ்வநாதன்.

வெளியே வரிசையாய் கண்ணுக்கு எட்டும் தூரம் வரை நிறுத்தப்பட்டிருந்த கார்கள். 'வரவேற்பு' நடந்து கொண் டிருக்க... ஆர்க்கெஸ்ட்ரா இசை காதைப் பிளக்க... மண்டபம் முழுவதும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

அம்ருதாவின் விருப்பத்திற்கிணங்க... கையில் மைக்கைப் பிடித்தபடி பார்கவி பாடிக் கொண்டிருந்தாள்.

அம்ரு தனக்குப் பிடித்த பாடல்களை பட்டியல் போட்டுக் கொடுத்திருந்தாள்.

**''ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே... வாழ்வென்றால் போராடும் போர்க்களமே.''**

பார்கவி கண் இமைக்காமல் அம்ருதாவின் மீது பார்வையைப் பதித்த வண்ணம் பாடினாள். துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைத்தது. வேதனையை விழுங்கிக் கொண்டு பாடினாள்.

'தோழி அம்ருதாவுக்கு ஏதோ நேரிடப் போகின்றது' என்று அடிக்கடி உள் மனம் எச்சரிக்கை மணி அடித்தது.

போகஸ் லைட் வெளிச்சத்தில் மணமகள் அம்ருதாவும் மணமகன் ஜெகனும் கனமான மாலைகளோடு தெரிந்தார்கள். முக்கிய நபர்கள் பலர் வந்து வாழ்த்தினார்கள்.

அம்ருதா செயற்கையாகப் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டிருந்தாள். அவளது இதயத்தில் ரத்தம் கசிந்து கொண்டிருந்ததை... பார்கவியைத் தவிர வேறு யாரும் உணரவில்லை.

அருகில் யாருடனோ கை குலுக்கிப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த ஜெகனின் முகத்தில் கபடம் தாண்டவமாடியது. கண்களில் ஏதோ ஒரு கள்ளத்தனம் ததும்பியது.

பார்கவியின் நெஞ்சில் நெருஞ்சி முள் 'சுருக் சுருக்' என்று பதம் பார்த்தது.

* * *

கோலாகலமாக திருமணம் நடந்தேறியது. விஸ்வநாதன் தனது கவுரவத்தை நிலை நாட்டும் பொருட்டு... ஏகப்பட்ட சீர்வரிசைகள் செய்திருந்தார்.

ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஒரு பங்களா, வெளிநாட்டுக்கார், ஐநூறு பவுன் நகைகள், வெள்ளிப்



பாத்திரங்கள், எண்ணற்ற பட்டுப் புடவைகள், விலையுயர்ந்த வீட்டு உபயோகப் பொருட்கள், இத்யாதி... என்று வாரி இறைத்து விட்டிருந்தார்.

கம்பம் எஸ்டேட்டுக்கு அருகில் தான் அந்த பங்களா அமைந்து இருந்தது. திருமணமானதும் மணமக்களை சீர்வரிசைகளோடு அந்த பங்களாவுக்கு அனுப்பியதும்... விஸ்வநாதனுக்கு ஏதோ சாதித்து விட்டது போலவும்... வானத்தையே வளைத்து விட்டது போலவும் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

மறு வீட்டிற்கு வருவதும் போவதுமாய் இருந்தாள் அம்ருதா. சில நாட்கள் கடந்த பின் எப்போதாவது வந்தால்... விசாலத்தைப் பார்த்து விட்டு ஒரு மணி நேரத்தில் காரிலேறி போய் விடுவாள்.

இரண்டு மாதங்கள் விரையமாயின. பார்கவி அம்ருதாவைப் பார்க்க முடியாமல் தவித்துப் போனாள்.

''என்ன கவி? எப்படியிருக்கே? இன்னிக்கு நான் வீட்டுக்கு வந்தேன்பா. உன்னைப் பார்க்கணும்னு ஆசை தான். ஆனா.. இவரோட நண்பர் வீட்டுலே விருந்துக்குக் கூப்பிட்டிருந்தாங்க... அதான்! அவசரமா அப்படியே போயிட்டோம். பங்கஜம் அம்மா நல்லாயிருக்காங்களா? சரி... வச்சுடட்டுமா? பை! நாளைக்குப் பேசறேன்.''

அவள் வேண்டுமென்றே தன்னை சந்திக்கும் தருணத்தை தவிர்த்து வருகின்றாள் என்பது மட்டும் பார்கவிக்கு நன்றாகப் புரிந்தது.

'பேச்சைப் பார்! எதையோ மூடி மறைக்கிறாள். நான் போன் செய்தால் இணைப்பே கிடைப்பதில்லை? தாமரை இலை தண்ணீர் போல் பட்டும் படாமலும் பேசி வைத்து விடுகிறாள்? கிரீசனிடம் ஏதாவது வெளிப்படையாகப் பேசினாளா? அவருக்குக் கூடவா ஒரு நெருடல் ஏற்படவில்லை?'

தலைக்குள் வண்டு குடைந்தது. உள்ளூர கேள்விகள் பெருக்கெடுத்தன. இரவில் இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு பட்டென்று போனை வைத்தாள் அம்ருதா.

## 19

மறுநாள் அலுவலகத்தில்...

"என்ன பார்கவி? எதையோ கேட்கணும்னு நினைக்கிறே? ஆனா... உள்ளுக்குள்ளே ரொம்ப தயங்கற மாதிரி தெரியுது?" பைலில் கையெழுத்திட்டபடியே கேட்டான் கிரீசன்.

"அம்ருவை நீங்க பார்த்தீங்களா? வீட்டுக்கு வந்திருந்தாளாமே?"

"உம்! பார்த்தேன். சிரிப்பும் கும்மாளமுமா இருந்தவ எப்படி மாறிட்டா தெரியுமா? இப்ப நிறைய மாற்றம் தெரியுது? பொண்ணுங்களுக்கு கல்யாணம்னு ஒண்ணு ஆயிட்டா... அடியோட மாறிடறாங்க இல்லே?"

"உம்! நான் எதையும் சொல்ல விரும்பலை கிரி."

"ஏன்? என்னாச்சு?"

"உங்க தங்கை விஷயத்துல நீங்க ரொம்ப மெத்தனமா இருக்கீங்க."

"என்ன? ஏதாவது பிரச்சினையா?" பதறினான் கிரி.

"ஏதாவதொரு பிரச்சினை இருக்கும்னு மனசுக்குப் படுது. என்னைப் பார்க்காம தவிர்க்கிறா... எதையோ மறைக்கிறா."

"ப்ளீஸ் பார்கவி? சொல்ல வந்ததை முழுசா சொல்லி முடி... உன் மனசுல ஏதோ நெருடிக்கிட்டு இருக்கு. வெளிப்படையா பேசு." என்றபடி அவளை தீர்க்கமாகப் பார்த்தான் கிரீசன்.

"கிரி! இப்போ அப்பா எங்கே இருக்கார்?"



நெற்றியில் புருவங்கள் முடிச்சுப் போட... பார்கவியை ஏறிட்டான்.

"அவரோட நண்பர்கள் கூட கோவாவுக்குப் போயிருக்காரு... இப்போ எல்லாம் அடிக்கடி சுற்றுலாவுக்குப் போயிடறார். போன மாசம் மொரீஷியஸ் போயிட்டு வந்தாரு.

"வியாபார சம்பந்தமா அவ்வப்போது தன்னோட ஆலோசனைகளை வழங்கி பைல்களை ஆராய்ந்தவர் தான். சமீப காலமா என் மேல நம்பிக்கை வந்துட்டதால... ஒட்டு மொத்தமா எல்லாப் பொறுப்புகளையும் என் தலையில கட்டிட்டாரு.

"அம்ருவோட கல்யாணத்துக்கு அப்புறம் சுத்தமா எதிலேயும் தலையிடறதே இல்ல... உலகம் முழுக்க சுத்தி வரணும்னு ஆர்வமா இருக்கார். ஆமா... எதுக்கு கேட்கறே?"

"பணம்... கவுரவம்... அந்தஸ்த்துனு பேசி இஷ்டமில்லாத பொண்ணை வற்புறுத்தி... தற்கொலை பண்ணிப்பேன்னு மிரட்டி கட்டாயக் கல்யாணம் செய்து வச்சாரே அப்பா?

"பெத்த அப்பாவுக்காக தன் காதலை மனசுக்குள்ளே புதைச்சு சமாதி கட்டிட்டு... கழுத்தை நீட்டியிருக்கா... அம்ரு! கல்யாணத்துக்கு அப்புறம் அவ நிஜமாவே சந்தோஷமா இருக்காளான்னு பார்க்க வேண்டாமா கிரி?"

கிரீசனுக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டது. கண்கள் குபீரென்று பொங்கின.

"அப்பா பிடிவாதம் பண்ணினதெல்லாம் தெரியும். ஆனா அம்ரு... அவ... வேற யாரையாவது விரும்பினாளா? பார்கவி! இது நிஜமா?" படாரென்று எழுந்து அவளது தோளைப் பற்றி அழுத்தினான் கிரீசன்.

''சந்தீப்பும் அவளும் நண்பர்களா பழகியிருக்காங்க... நாளடைவில் அவங்களுக்குள்ளே காதல் அரும்பி மலர ஆரம்பிச்ச தருணத்துல... உங்கப்பா மிரட்டி ஜெகனுக்கு கட்டிக் கொடுத்துட்டாரே? பாவம்! தன் மனசுல அரும்பி யிருக்கிற காதலை முழுசா உணர ஆரம்பிக்கிறதுக் குள்ளே... அம்ருவோட மனக்கோட்டை உடைஞ்சு தூள் தூளாயிடுச்சே?

''இதெல்லாம் உங்ககிட்ட சொல்லி கல்யாண ஏற் பாட்டை நிறுத்தறதுக்கு கூட எனக்கு அவகாசம் இல்ல தெரியுமா? எனக்கு விஷயம் தெரிஞ்சப்போ... அப்பா ஊருக்கே அழைப்பிதழ் கொடுத்து முடிச்சிட்டாரு...

''நிச்சயதார்த்தம் நடக்கிற அன்னிக்கு தான்... நீங்க சிங்கப்பூர்லேயிருந்து வந்தீங்க...''

''பார்கவி! என்னோட இ... இதயத்துல ஈட்டி பாய்ஞ்ச மாதிரி இருக்கும்மா... அம்ருவோட கண்ணுல இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரக்கூடாதுன்னு நினைக்கிற வன் நான். தன்னோட காதலுக்கு சமாதி கட்டிட்டு... மனசுக்குள்ளே எப்படியெல்லாம் துடிச்சிருப்பா அவ?''

கரகரவென்று கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க தொய்ந்து போய் தொப்பென்று சுழல் நாற்காலியில் அமர்ந்தான் கிரீசன்.

''நடந்தது நடந்து போச்சு. இனி நடக்க வேண்டியதைப் பப்ரப்போம் கிரி. கவலைப்படாதீங்க'' அவனது விழிகளின் கண்ணீரைப் பார்த்ததும் நெகிழ்ந்து போனாள் பார்கவி.

''ஸாரி கிரி! உங்க மனசை நான் காயப்படுத்திட் டேன்னு நினைக்கிறேன்'' தழுதழுத்தாள்.

''இல்ல... இல்ல. இப்பத்தான் என் கண்ணை நீ திறந்து விட்டிருக்கே அம்ரு உனக்கு போன் பண்ணி ஏதாச்சு சொன்னாளா?'' ஆர்வமாய்ப் பார்த்தான்.



''ப்ச்! இத்தன நாளா அவ எனக்கு கண்ணா மூச்சி ஆட்டம் காட்டறா... நான் போன் பண்றப்போ எல்லாம் செல்லை அணைச்சே வச்சிருக்கா... வீட்டு எண்ணுக்கு முயற்சி செய்தா... அவளோட மாமியார் 'அம்ரு வெளியில கிளம்பிட்டா' 'அம்ரு தூங்கறா' அப்படின்னு பட்டுனு பதில் சொல்றாங்க.

''எப்பவாவது அவளா ரெண்டொரு வார்த்தை பேசிட்டு வச்சிடறா... அவ முகத்தைப் பார்த்தா... நான் கண்டு பிடிச்சிடுவேன்னு என்னைப் பார்க்காம தவிர்க்கிறா...

''ஆனா... நேத்து இரவுலே போன் பண்ணினா... மறுபடி யும் இன்னிக்கு போன் பண்றேன்னு சொல்லியிருக்கா. நேத்து இரவு அவ என்கிட்ட பேசினதிலேர்ந்து எனக்கு மனசே சரியில்லை கிரி.''

''பார்கவி! எனக்கு இப்பவே என் அம்முகுட்டியை பார்க்கணும்போல இருக்கு. என்னோட அம்ரு உள்ளுக் குள்ளே எவ்ளோ கதறியிருப்பா... இந்த அண்ணா உயி ரோட இருந்து என்ன பிரயோஜனம்? இப்பவே அம்ருவை பார்த்துட்டு வரேன்'' புலம்பியபடி கிளம்ப எத்தனித்தான் கிரீசன்.

''கிரி! நானும் அவளைப் பார்க்க வரட்டுமா? ப்ளீஸ்.''

''சரி... வா'' ஓட்டமும் நடையுமாக விரைந்து இரு வரும் காரிலேறிக் கிளம்பினர். கார் சாலையில் புயல் வேகத்தில் பறந்தது.

மௌனம் இருவருக்கும் நடுவே கெட்டிச் சுவராய் எழும்பி நின்றது. பார்கவியின் கையிலிருந்த 'செல்' கிணரென்று அலறி... அந்த மௌனத்தைக் கலைத்தது. செல்லில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்தாள். அம்ருதா!

கிரீசனை அர்த்த புஷ்டியுடன் ஏறிட்டுவிட்டு பட் டனை அழுத்தினாள் பார்கவி. மறுமுனையில்...

''ஹலோ கவி! ஸாரி... ஸாரி... உனக்கு என் மேல ரொம்ப கோவம் இருக்கும். எனக்குத் தெரியும். எனக்கு உன் மேல அன்பும் உண்டு. பயமும் உண்டு. ஏன்னு கேட்கறியா? என் முகத்தைப் பார்த்தாலே... எனக்குள்ளே என்ன இருக்குன்னு எடை போட்டுருவியே?

''உன்னைப் பார்க்காம நான் ஓடினதுக்கு காரணம் இருக்கு. முதலிரவில ஜெகன் என்கிட்ட வந்து 'நான் ஒரு போதை மருந்துக்கு அடிமையானவன். என் பெற்றோர்கள் இதை மறைச்சு வச்சு கல்யாணம் பண்ணிட்டாங்க. உன்னை எனக்கு பிடிச்சிருக்கு. ஸாரி! கூடிய சீக்கிரம் நான் இதுலேர்ந்து மீண்டு வந்துடுவேன். அதுவரைக்கும் நம்பிக்கையோட எனக்காக காத்திருப்பியா?''ன்னு கேட்டாரு...

''எனக்கு அதிர்ச்சியா இருந்தது. இதுலேர்ந்து மீண்டு வர்றது கஷ்டம்னு தெரிஞ்சும் மனதைத் தேத்திக்கிட்டேன். ஆனா நாளடைவில்... அவருக்கு ஏற்கனவே ஒரு காதலி இருக்கிற விஷயம் தெரிய வந்தது. அவர் நடத்த விளம்பரக் கம்பெனியில 'மாடலிங்' பண்ற பொண்ணாம்... மூணு வருஷமா தீவிரமா காதலிச்சிருக்காங்க...

''பரம்பரை பணக்காரக் குடும்பம்னு நம்பி அப்பா என்னை இங்கே தள்ளி விட்டுட்டாரு... ஆமா... கவி உள்ளே போய் பார்த்ததும் தான் தெரியுது... எல்லாம் வெளி வேஷம்னு... ஏகப்பட்ட கடன்லே தத்தளிக்கிற குடும்பம் இது! எனக்கு 25 லட்சத்துக்கு அப்பா காசோலை கொடுத்திருந்தாரு... அதை வாங்கிட்டாங்க.

''என்னோட ஐநூறு பவுன் நகைகளை கொஞ்சம் கொஞ்சமா எடுத்துட்டுப் போயி... தன்னோட காதலிக்கு கொடுத்துட்டாரு. என்னோட இரக்கத்தை சம்பாதிக்கத்தான் 'போதை மருந்துக்கு அடிமை'ன்னு பொய் சொல்லியிருக்காரு.



''ரெண்டு நாள் முன்னாடி இரவுலே அந்தப் பொண்ணு போன் பண்ணினா. நான் தூங்கிட்டேன்னு நெனச்சு இவர் பேசும்போதுதான்... எல்லாமே வெட்ட வெளிச்சமாச்சு... 'கவலைப்படாதே டியர்! ஊருக்குத் தான் இவ என் மனைவி! ஆனா இவ எங்களுக்கு ஒரு பணங்காய்ச்சி மரம். ஆமா! இவளோட அப்பன் கோடி கோடியா சம்பாதிச்சு வச்சிருக்கான்...

''இவளை வச்சுத்தான் நாங்க அதைக் கறக்கணும்... திட்டம் போட்டு நானும் எங்கப்பாவும் விஸ்வநாதனை கவுத்தோம்... எனக்கு என்னிக்குமே நீ தான் வேணும் டியர்! எங்க வீட்டுலே எல்லோருக்கும் நம்ம விஷயம் தெரியும். என் சந்தோஷத்துக்கு குறுக்கே யாரும் வர மாட்டாங்க டியர்'னு அவர் கொஞ்சினார்.

''என் தலையில இடி விழுந்தது மாதிரி இருந்துச்சு. அதான் வீட்டுக்கு வந்து அம்மாவை ஆசை தீரப் பார்த்தேன். பிறந்த வீட்டிலேயே நான் தங்கிடலாம். ஆனா... அம்மா? வாழா வெட்டியா பொண்ணு வந்து உட்கார்ந்துட்டாளேன்னு பார்த்து அழணுமா? அவங்களுக்கு இருக்கிற கவலை பத்தாதா?

''இனி நான் உயிரோட இருந்தா... என்னை வச்சே இவங்க பணம் கறப்பாங்க.''

''அ... அம்ரு.. அம்ரு! இதென்ன பைத்தியக்காரத்தனம்?''

''இரு... இரு... பதறாதே கவி! நான் முடிவெடுத்துட்டா... அதை யாராலும் மாத்த முடியாது... இன்னும் கொஞ்ச நேரத்துல நான் உலகத்தை விட்டே போயிடுவேன்...''

''ஐயோ! அவசரப்படாதே அம்ரு! அம்மாவைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு...''

''கேளு... கவி! என் சாவுக்கு அப்புறமாவது அப்பா மனசு மாறுவார்னு நான் நம்பறேன். அவரோட ஆணவம் அழியணும்... அகங்காரம் அடங்கணும். உன்னையும் கிரி அண்ணாவையும் அவர் சேர்த்து வைக்கணும். அதான் என் ஆசை! ஏய்... கவி! கதறாதே... அழாதே... உன்னோட வாழ்நாள்லே ரொம்ப அழுது தீர்த்துட்டே... போதும்!

''கு... குட் பை ஃபார் எவர்'' பேசி முடித்துவிட்டு கையிலிருந்த விஷ புட்டியைத் திறந்து விஷத்தைக் குடித்தாள் அம்ருதா.

வாய், தொண்டை, நெஞ்சுக்குழி, வயிறு... இவற்றில் எல்லாம் குபீரென்று தீப்பற்றிக் கொண்டது போல் காந்தியது.

திகு திகுவென்ற எரிச்சலும் வலியும் அதீதமாக... அம்ருதாவிற்கு புரையேறி இருமல் வந்தது. இருமி இருமி குமட்டி கொஞ்சமாப வாந்தி எடுத்துவிட்டு கண்கள் சொருக மயங்கிச் சரிந்தாள்.

நல்லவேளையாக... அம்ருதா பேசி முடித்தபோது கிரீசனின் கார் கம்பம் எஸ்டேட்டை நெருங்கி விட்டிருந்தது. பார்கவி கதறிக் கொண்டே அம்ருதாவிடம் கெஞ்சிப் பேசிய விதத்திலிருந்தே... விஷயம் இன்னது தான் என்று கிரீசன் யூகித்து விட்டான்.

கார் பறக்காத குறையாக விரைந்து வந்து சேர்ந்தது. நாலே பாய்ச்சலில் பங்களாவுக்குள் புகுந்தனர்.

ஜனார்த்தனனும் அவரது மனைவி தங்கமும் ஹாலில் அமர்ந்து சிரித்தபடி 'செஸ்' விளையாடிக் கொண்டிருந்தனர்.

''யூ... ராஸ்கல்! செஸ்ஸா விளையாடறீங்க? உன்னை... வந்து வச்சிக்கிறேன்டா'' ஜனார்த்தனனின் சட்டையைக் கொத்தாகப் பிடித்துத் தள்ளி விட்டு ஓடினான் கிரீசன்.



''அம்ரு எங்கடா?'' நாலாபுறமும் அறைகளில் தேடிக் கொண்டே கேட்டான்.

''மா... மாடியில இருக்கா'' வெலவெலத்துப் போனாள் தங்கம்.

நான்கு நான்கு படிகளாகத் தாவி ஏறி அந்த அறைக் கதவை ஓங்கித் தட்டினான் கிரீசன்.

''அண்ணா வந்திருக்கேன்டா அம்மு குட்டி! கதவைத் திற... கண்ட கண்ட நாய்களுக்கு பயந்து முட்டாள் தனம் பண்றியே அம்ரு...'' கதவை இடித்தான்.

''கிரி! அவ திறக்க மாட்டா... இதோ ஜன்னலை உடைக்கணும். இந்தாங்க'' என்றபடி பெரிய ஸ்டாண்டிலிருந்த பித்தளை பூ ஜாடியை எடுத்துக் கொடுத்தாள் பார்கவி.

ஜாடியை வாங்கி வெறி கொண்டவனைப் போல்... அந்த கண்ணாடி ஜன்னலில் நான்கு போடு போட்டான். உடைத்து வழியேற்படுத்தி குபீரென்று பாய்ந்து சுருண்டு கிடந்த தங்கையை அள்ளித் தோளில் போட்டுக் கொண்டு கதவைத் திறந்து விரைந்தான் கிரீசன்.

அம்ருதா விழுந்து கிடந்த இடத்தின் அருகிலிருந்த 'செல்' பேசியையும், அதனடியில் இருந்த கடிதத்தையும் எடுத்துக் கொண்டு ஓடினாள் பார்கவி.

## 20

கிரீசன் போலீஸ் கமிஷனருக்கு போன் செய்து விட்டிருந்தான். விரைந்து விசாரிக்க வந்த போலீஸாரிடம் அம்ருதாவின் கடிதத்தை ஒப்படைத்து விட்டான். பார்கவியிடம் கூறிய அனைத்து விபரங்களையும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தாள் அம்ருதா.

விஸ்வநாதனிடம், கிரீசனையும், பார்கவியையும் சேர்த்து வைக்கும்படி கடிதத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தாள்.

'பிரபல தொழிலதிபரும் கோடீஸ்வரருமான விஸ்வநாதனின் மகள் அம்ருதா.. தற்கொலைக்கு முயற்சித்தார்... புதுமணப் பெண்ணை மனரீதியாக சித்ரவதை செய்து தற்கொலைக்கு தூண்டிய கணவரும், அவரது குடும்பத்தாரும் கைது செய்யப்பட்டனர்.

'இளம் பெண் தற்கொலை முயற்சி...! கணவர் கைது.'

அன்று மாலை அனைத்து நாளிதழ்களிலும்... அனைத்து டி.வி. சேனல்களிலும் செய்தி வெளியானது.

கோவாவிலிருந்து கண்ணீரும் கம்பலையுமாகப் பறந்து வந்தார் விஸ்வநாதன்.

மதுரை விமான நிலையத்திலிருந்து காரில் விரைந்து வந்தபோது... கடைகளில் தொங்கிய நாளேடுகளின் தலையங்கத்தைப் பார்த்தபோது... புழுவாய் துடித்துப் போனார்.

அம்ருதா இன்னமும் அவசர சிகிச்சைப் பிரிவில் தான் இருந்தாள். கண்ணாடிக் கதவின் வழியே அவளை எட்டிப் பார்த்தார் விஸ்வநாதன்.

அவரது உடம்பிலிருந்து உயிரை உருவி எடுத்து விட்டது போல் இருந்தது. காலடியில் தரை நழுவிச் சென்று விட்டதைப் போன்ற உணர்வில் தள்ளாடினார்.

வேருடன் பறித்துப் போட்ட கீரைத் தண்டாக வாடிக் கிடந்தாள் அம்ருதா.

பார்கவியின் தோளில் தலை சாய்த்தபடி அமர்ந்திருந்தார் விசாலம்.



''அம்மா! தைரியமா இருங்க... அம்ருவுக்கு ஒண்ணுமில்ல... மருத்துவர்கள் போராடி அவ உயிரைக் காப்பாத்திட்டாங்க'' ஆறுதல் கூறினாள்.

குற்ற உணர்வில் பரிதவித்தார் விசுவநாதன். விசாலத்தின் அருகில் வந்து நின்றார். விசாலம் அவரை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை.

''உ... உன்னால தான் என்னோட அம்மு குட்டி உயிர் பிழைச்சிருக்கா... நீ கிரி கிட்ட பேசி... நீங்க அங்க போனதாலேதான் அவளைக் காப்பாத்த முடிஞ்சது. அஞ்சு நிமிடம் தாமதமா போயிருந்தாலும்... என்னோட அம்ரு என்னை விட்டுப் போயிருப்பாளே?... நன்றிம்மா'' தேம்பினார் விஸ்வநாதன்.

''விசாலம்! என்னை நிமிர்ந்து பாரேன்... வாய்க்கு வந்தபடி நாலு வார்த்தை திட்டி விடேன்... எனக்கு மனசாட்சி அறுக்குதே...'' முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு கேவினார்.

''அப்பா! நடந்தது நடந்து போச்சு. தைரியமா இருங்க... அம்மா உடம்பு முடியாம தான் இருக்காங்க... நீங்க வருத்தப்பட்டா... இன்னும் வேதனையா இருக்கும்... நடக்கப் போறதைப் பத்தி யோசிக்கலாமே!''

பேண்ட் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்து விட்டு அப்பால் நகர்ந்தார் விஸ்வநாதன்.

பத்து தினங்கள் கழித்து ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸசார்ஜ்' செய்யப்பட்டாள் அம்ருதா.

விரக்தியில்... கண்களில் ஜீவன் வற்றிப் போய் விட்டத்தை வெறித்துக் கல்லாய் அமர்ந்திருந்தாள்.

'ஓடி ஆடிப் பறந்து திரிந்த பச்சைக்கிளியின் சிறகுகளைப் பிய்த்து என் கையாலேயே அக்னி குண்டத்தில்

போட்டு விட்டேனே?' குற்ற உணர்வில் பரிதவித்துப் போனார் விஸ்வநாதன்.

மகளைப் பார்க்கும் போதெல்லாம் அவரது இதயத்தில் ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போலிருந்தது.

''பார்கவி! நமக்கு அம்ரு தான் முக்கியம். அவ திரும்பவும் குதூகலமா நடமாடணும். அது உன் கையில தான் இருக்கு... நீ சதா அவ கிட்டயே இருந்து அவளைப் பார்த்துக்கோ. சரியா?'' கிரீசன் கண் கலங்க அவளைப் பார்த்தான்.

''அது என் கடமை. நானே இதைப் பத்திக் கேட்கலாம்னு இருந்தேன். நீங்க சொல்லிட்டீங்க கிரி'' அவள் கூறியபடியே அம்ருதாவின் அருகிலேயே இருந்து கவனித்து வந்தாள்.

நாட்கள் பறந்தன. அம்ருதாவின் பிறந்த நாள் வந்தது. பூஜிக்கப்பட்ட குங்குமத்தை அவளது நெற்றியில் இட்ட விசாலம் கதறினார்.

''போன வருஷம் சிரிப்பும் கும்மாளமுமா... கலகலன்னு இருந்தா. இப்போ யார் கிட்டயும் ஒண்ணும் பேசாம விட்டத்தை வெறிச்சுகிட்டு இருக்காளே பார்கவி?''

''டேய் அம்ரு! இந்த வருஷம் உன் பிறந்த நாளுக்கு நேர்லயே வாழ்த்துச் சொல்றேன்டா... என்னைப் பாரேன். பணம் பணம்னு பறந்துட்டிருந்தவனுக்கு சரியான தண்டனை குடுத்துட்டியே அம்மு! என்னைப் பார்க்கவே மாட்டியா?'' புலம்பினார் விஸ்வநாதன்.

சகலத்தையும் மூட்டை கட்டி வைத்து விட்டு மகளின் கதியை நினைத்து வருந்தி வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார்.

''அப்பா! உங்க கிட்டே கொஞ்சம் நான் பேசணும். உங்களோட வாழ்த்தை ஏத்துக்கிற நிலையில அம்ருதா



இல்ல... வாங்க!'' தளர்ந்த நடையுடன் மகளைப் பின் தொடர்ந்தார் விஸ்வநாதன்.

மொட்டை மாடியிலிருந்து பார்த்தபோது... தோட்டத்தில் வித விதமான வண்ணங்களில் பூத்திருந்த ரோஜாக்கள் காற்றுக்கு அழகாய் தலையசைத்து மனதிற்கு இதம் அளித்தன.

தொண்டையை செருமிக் கொண்டு பேச்சை ஆரம்பித்தான் கிரீசன். ''நம்ம அம்ரு சந்தீப்பை விரும்பியிருக்கா அப்பா! இது... பார்கவி சொல்லித்தான் எனக்கே தெரியும்'' குபீரென்று நிமிர்ந்தார் விஸ்வநாதன்.

பார்கவி தன்னிடம் கூறியவற்றை விலாவரியாக அவரிடம் சொல்லி முடித்தான். ஸ்தம்பித்துப் போய் அப்படியே யோசனையில் மூழ்கி விட்டார் விஸ்வநாதன்.

பார்கவி, தினமும் காலை எட்டு மணிக்கெல்லாம் வந்து விடுவாள். இரவு ஏழரை மணி வரையிலும் அம்ருதாவின் அருகிலிருந்து கவனித்து விட்டு... காரில் ஏறி வீட்டிற்குப் போய் விடுவாள்.

நாட்கள் ஜெட் வேகத்தில் பறந்தன.

ரோஜா தோட்டம், தேயிலைத் தோட்டம், ஏலக்காய் தோட்டம்... போன்றவற்றிற்கு அம்ருதாவை அழைத்துச் சென்று... மலைக்காற்றை சுவாசித்தபடி வெகுநேரம் காலாற உலாவ வைத்தாள் பார்கவி.

அடிக்கடி இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் சுருளி மலைக்கு காரில் சென்று... மூலிகைகள் கலந்து வரும் அருவித் தண்ணீரில் திளைக்க திளைக்க அம்ருதாவை நீராட வைத்தாள்.

பழமையான கோவில்களுக்கு அழைத்துச் சென்று தியானிக்க வைத்தாள்.

அன்புத் தோழியின் அருகாமை... அனுசரணையான கவனிப்பு... விடா முயற்சி... எல்லாமாகச் சேர்ந்து அம்ருதாவின் மன இறுக்கத்தை கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்தின.

மெல்ல மெல்ல சகஜ நிலைக்கு மீண்டு வந்தாள்.

'இசை கேட்டால் புவி அசைந்தாடும்' என்பர். மன திற்குப் பிடித்த இசையைக் கேட்டுக் கொண்டிருந்தால்... தீராத வியாதி கூட தீர்ந்து விடும் என்று விஞ்ஞான ரீதியாக சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

அம்ருதாவிற்கு பிடித்த பாடல்களை அடிக்கடி பாடி னாள் பார்கவி. இசையில் அவளை லயிக்க வைத்து... அவளையும் பாட வைத்தாள்.... பழைய நிலைக்குத் திரும்ப வைத்தாள்.

நாளிதழ்களிலும், டி.வி. சேனல்களிலும் அம்ருதாவின் செய்தி வெளியாகி விட்டிருந்ததாலும்... மேலிடத்து விவ காரம் என்பதாலும்... அவளது வழக்கு வெகு சீக்கிரத்தில் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அவளுக்கு முறைப்படி விவாகரத்தும் கிடைத்து விட்டது. ''கிரி! விவாகரத்து தான் கிடைச்சிருச்சே... நீங்க சந்தீப்டை சந்திச்சு பேசுங்க... அம்ரு சகஜ நிலைக்குத் திரும்பிட்டா... கள்ளம் கபடமில்லாத குழந்தை மனசு அவளுக்கு... அவ நல்லா வாழணும்.''

''சந்தீப்போட அவளை சேர்த்து வைக்கணும். சந்தீப் அவளை கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துப்பாரு... ஆமா... கிரி! நான் அவரை கல்லூரியில அடிக்கடி பார்த்திருக்கேன்.

''எனக்கு நம்பிக்கை இருக்கு. அதனால சொல்றேன். இன்னிக்கே நீங்க அவரை சந்திச்சுப் பேசுங்க கிரி'' துரிதப் படுத்தினாள் பார்கவி.



அரை மனதுடன் தான் சென்றான் கிரீசன். மிகவும் மெலிந்து, கண்களில் கரு வளையத்துடன் சோர்ந்து காணப்பட்டான் சந்தீப்.

கிரீசன் மெதுவாக அம்ருதாவின் பேச்செடுத்தது தான் தாமதம்...!

''கிரி.. கிரி! எனக்கு சொத்து பத்து எதுவும் தேவை யில்ல... அம்ரு கிடைச்சாப் போதும். நான் ஒரு பெரிய கம்பெனியில வேலை பார்க்கிறேன். உனக்கே தெரி யுமே? கை நிறைய சம்பளம் வாங்கறேன்.

''கம்பெனி எனக்கு கார், பெரிய வீடு எல்லாம் கொடுத் திருக்கு. அம்ருவை கட்டின புடவையோட அனுப்பி வைங்க... அவளை நான் உள்ளங்கையில வச்சுத் தாங்கறேன். நான் அவளை உயிருக்குயிரா நேசிக்கிறேன் கிரி'' தழுதழுத்தபடி கிரீசனின் கரங்களைப் பிடித்துக் கொண்டான் சந்தீப்.

கிரிக்கு கண்கள் குளமாகி... ஆனந்தத்தில் அப்படியே கூத்தாட வேண்டும் போலிருந்தது.

''பார்கவி! நீ சொன்னது சரிதான். சந்தீப் அம்ருவை ரொம்ப ஆழமா நேசிக்கிறாரு. அம்ரு, சந்தீப்போட அமோ கமா வாழப் போறா... வாழ வைச்ச பெருமை உனக்குத் தான் பார்கவி! கோடி கோடியா கொட்டிக் கொடுத்தாலும்... இந்த சந்தோஷத்துக்கு ஈடாகாது பார்கவி! அப்பா, நடேசன் மாமா வீட்டுக்கு சம்பந்தம் பேசப் போயிருக்காரு.

''இதுக்கெல்லாம் உனக்குத் தான் நன்றி சொல்லணும். தேங்க்யூடா'' சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போன கிரீசன்... சட்டென்று அவளது கரத்தைப் பற்றி முத்த மிட்டான்.

அம்ருதாவிடம் பேசி அவளைத் திருமணத்திற்கு சம்மதிக்க வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி

விட்டது. பார்கவி மிகவும் பிரமபிரயத்தனம் செய்து அவளை சம்மதிக்க வைத்தாள்.

அவளது விருப்பப்படி திருமணம் எளிய முறையில் 'வீரபாண்டி' கோவிலில் நடந்தேறியது.

## 21

விசாலம் ஒட்டு மொத்தமாகப் படுக்கையில் விழுந்து விட்டார். பிரபல மருத்துவர்களும், கை தேர்ந்த நிபுணர்களும் வரவழைக்கப்பட்டனர். விசாலம் விழிகளைக் கூடத் திறக்காமல் படுத்துக் கிடந்தார். அவருக்கு இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டிருந்தன.

''நான் ஓடி ஓடி கோடி கோடியா சம்பாதிச்சு என்ன பிரயோஜனம்? விசாலம் உனக்குத்தானே இத்தனையும் சம்பாதிச்சேன்? காக்கா குருவிங்க கூட தன்னோட குஞ்சுக்கு 'அழகான கூடு' கட்டுது... ஊர் உலகத்துல எல்லோரும் மெச்சற மாதிரி பங்களா கட்டி அதுலே நீ ராணி மாதிரி சொகுசா இருக்கணும்னு ஆசைப்பட்டேன்.

''அழகான கூடு' கட்டி உன் கூடவே இருந்து உன்னையும் குழந்தைகளையும் நேசிக்கத் தவறிட்டேன். 'அழகான கூடு' கட்டறதுக்கு பதிலா... 'அழகான கூண்டு' கட்டி வச்சுட்டேன்.

''கூடு'க்கும் 'கூண்டு'க்கும் நிறையவே வித்தியாசம் இருக்குன்னு நான் புரிஞ்சுக்கிட்டேன் விசாலம்! நான்தான் இப்போ திருந்திட்டேனே?... என்னோட தப்பை உணர்ந்த பிறகும்... ஏன் இவ்ளோ பெரிய தண்டனை குடுக்கறே?'' கதறினார் விஸ்வநாதன்.

''உடனடியா அறுவை சிகிச்சை செய்து மாற்று சிறுநீரகம் பொருத்தணும்னு மருத்துவர்கள் சொல்றாங்களே? விசாலம்... நீ பொழைச்சு திரும்ப வருவியா? உன் உடம்பு அறுவை சிகிச்சையைத் தாங்குமா?'' சன்னமான குரலில் அழுது புலம்பினார்.

''அப்பா ஒரு நிமிஷம்'' திரும்பிப் பார்த்தார்.

கிரீசன், அம்ருதா, சந்தீப், நடேசன், கற்பகம்... இவர்களுக்கு மத்தியில் பார்கவி நின்று கொண்டிருந்தாள்.

''அம்மாவோட மனசுல பெரிய குறையிருக்குப்பா... எல்லா சொந்த பந்தங்களும் வரப்போக இருக்கணும்னு... அம்மா ஆசைப்பட்டாங்க. நல்லது கெட்டதுக்கு... எல்லாரும் ஒண்ணாக் கூடணும். வீடு நிறையணும்.

''கஷ்டப்படறவங்களைக் கை தூக்கி விடணும்னு... அவங்க ஆசைப்பட்டாங்க. அந்த ஆசை ஏக்கமாவே மாறிடுச்சு... என்கிட்ட சொல்லி வருத்தப்பட்டிருக்காங்க'' தயங்கியபடி அவள் கூறியதும் விஸ்வநாதனின் விழிகள் ஒரு கணம் பளிச்சிட்டன.

''நன்றி பார்கவி'' என்றபடி விடுவிடுவென்று வெளியேறினார். போர்டிகோவிலிருந்த காரைப் புயல் போல் கிளப்பிக் கொண்டு மறைந்தார்.

* * *

விசாலத்தின் ஒன்று விட்ட தங்கை தேவகியை முதற்கொண்டு... அனைவரையும் அழைத்து வந்து விட்டார் விஸ்வநாதன். விசாலம் தான் கூட விழிக்காமல் கிடந்தார்.

கிரீசன், அம்ருதா, நடேசன், கற்பகம், தேவகி, சந்தீப், விஸ்வநாதன் போன்றவர்களின் சிறுநீரகங்கள் விசாலத்திற்கு பொருந்தவில்லை.

அவரை மரணத்தின் பிடியிலிருந்து உயிருடன் மீட்ட பெருமையை... பார்கவி தட்டிச் சென்று விட்டாள். ஆம்! தன் சிறுநீரகத்தை தானமளித்து... அந்த அன்புத் தாயைக் காப்பாற்றி விட்டாள் பார்கவி.

அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து... மயக்கம் தெளிந்து கண் விழித்த விசாலம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார்.

தேவகி முதற்கொண்டு ஒவ்வொரு உறவினரும் அவரைப் பார்க்கப் படையெடுத்து வந்ததைக் கண்டு உள்ளூர பூரித்துப் போனார். அவரது முகத்தில் திருப்தி பரவியிருந்தது.

''இத்தனை வருஷமா உண்மையான சந்தோஷத்தைத் தொலைச்சுட்டு பணத்தைத் தேடி ஓடினேனே? நான் ஒரு முட்டாள்!'' என்று விஸ்வநாதன் நெஞ்சம் நெகிழ முணு முணுத்தார்.

அம்ருதா, பங்கஜம், கற்பகம், தேவகி ஆகியோர் விசாலத்தின் அறைக்கும் பார்கவியின் அறைக்கும் மாறி மாறிச் சென்று கவனித்துக் கொண்டனர்.

ஒரு வாரம் கடந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்குச் செல்லும் நேரம் வந்தது.

பார்கவியின் தலைமாட்டிலிருந்த 'செல்' பேசி கிணு கிணுத்ததும்... மெல்ல எடுத்துப் பேசினாள்.

''ஹலோ.''

''ஹலோ! குரல் ஞாபகத்துக்கு வருதா கவி? உனக்கு எப்படி ஞாபகம் இருக்கும்? நீதான் இப்போ உச்சாணிக் கொம்புலே இருக்கிறியே?

''எங்க முகத்துல கரியைப் பூசினே இல்ல... இன்னும் கொஞ்ச நேரத்துல பாரேன்... உன் கதி... அதோ கதிதான்.

''உன்னைப் பத்தி கண்டபடி கடிதம் எழுதி 'கொரியர்'லே அனுப்பியிருக்கேன். பணத்துக்கு ஆசைப்பட்டு கிரீசனை நீ வளைச்சுப் போட்டிருக்கேன்னு எழுதி இருக்கேன்.

''விஸ்வநாதன் விரைவில் உன்னை விரட்டியடிப்பாரு. பாரேன்! உனக்கும் எனக்கும் 'தொடர்பு' இருக்குன்னும் எழுதி இருக்கேன். சமூகத்துல என்னைத் தவிர வேற யாரும் உன் கழுத்துல தாலி கட்ட மாட்டாங்க... பாரேன்'' நந்தன் வயிற்றெரிச்சல் தாளாமல் கொக்கரித்தான்.



பார்கவிக்கு உடம்பெல்லாம் திராவகம் பட்டது போல் திகுதிகுவென்று எரிந்தது.

# 22

பார்கவிக்கு நெஞ்சைக் கூறு போட்டது போலிருந்தது. துடித்துப் போனாள். இரு கைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டு சப்த மில்லாமல் கதறினாள்.

சற்று நேரத்திற்கு முன்பு தான் அம்ருதா அவளது அறைக்கு வந்திருந்தாள்.

''எல்லாம் 'செட்டில்' பண்ணியாச்சு. இராகு காலம் முடிஞ்சதும் கிளம்பிடலாம்னு அப்பா சொல்லிட்டார் கவி! கொஞ்ச நேரத்துல நாம்ப போயிடலாம்'' அவளது தலையை வருடிவிட்டு... மாத்திரைகள், ஹார்லிக்ஸ் பாட்டில், பழங்கள் அடங்கிய கூடையையும், பார்கவியின் துணிகள் அடங்கிய சிறு பையையும் எடுத்துச் சென்று விட்டாள்.

அனைவரும் விசாலத்தின் அறையில் இருக்கிறார்கள் போலும்! பார்கவிக்கு ஒருவரையும் பார்க்கத் தெம் பில்லை. மெல்ல எழுந்து யாரும் அறியாத வண்ணம் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி விட விரும்பினாள்.

தாரை தாரையாக கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

'யாரும் தன்னைப் பார்த்து விடக் கூடாது' என்ற துடிப் பில் தளர்ந்த நடையுடன் ஆஸ்பத்திரி வாசலை அடைந் தாள்.

அங்கு... ஆஸ்பத்திரி வாசலருகே... பங்கஜம், காந்தி மதி, வரதராஜன், அம்ருதா, சந்தீப் ஆகியோர் நிற்பதைப் பார்த்துவிட்டு திகைத்துப் போய் நின்று விட்டாள்.

ஒரு கணம் மலங்க விழித்து விட்டு ''அம்மா? வாங்க சீக்கிரமா போயிடலாம். யாராவது என்னை ஒரு வார்த்தை கேட்டுட்டா... அவ்ளோ தான்! நான் செத்துடுவேன். எதை வேணும்னாலும் நான் தாங்கிப்பேன்... பழிச் சொல்லை தாங்கற சக்தி என் உடம்பிலேயும் இல்ல... மனசிலேயும் இல்ல'' என்று கதறியபடி பங்கஜத்தின் தோளில் சாய்ந் தாள்.

''விஸ்வநாதனோட மருமகளைப் பத்தி ஒரு வார்த்தை பேசறதுக்கு... யாருக்காவது தைரியம் இருக்கா என்ன?'' அந்த கம்பீரமான குரலைக் கேட்டதும்... பார்கவிக்கு தூக்கி வாரிப் போட்டது.

சட்டென்று பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

மந்தகாசம் தவழும் முகத்துடன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தார் விஸ்வநாதன்.

''என்னம்மா அப்படிப் பார்க்கிறே? கடிதம் அனுப்பின அந்த நாயை 'லாக்கப்'லே அடைக்க ஏற்பாடு பண்ணிட் டேன். கடிதம் எழுதின கை இந்நேரம் உடைஞ்சிருக்கும்... அவனோட எலும்பை எண்ணிக் கிட்டிருக்காங்க... தெரியுமா?'' குரலில் கேலியும் கிண்டலும் தொனிக்கப் பேசியபடி நெருங்கி வந்தார்.

''நீ இப்படி ஏடாகூடாமா செய்வேன்னு தெரிஞ்சுதான்... கடிதத்தைப் பார்த்ததுமே இவங்க எல்லாத்துக்கும் போன் பண்ணி வரச் சொன்னேன்!'' சிரித்தான் கிரீசன்.

விஸ்வநாதனே தன் வாயால் 'மருமகள்' என்று கூறி யதும்... பார்கவியின் விழிகள் ஆனந்தத்தில் ஊற் றெடுத்தன.



அவளுக்கு ஒரு கூடைப் பூக்களை வாரித் தலையில் கொட்டியதைப் போன்றிருந்தது. அதுவரை கனன்று கொண்டிருந்த மனதில்... அபிஷேகப் பாலை வார்த்தாற் போல் சில்லென்றிருந்தது.

''உம்! இராகு காலம் முடிஞ்சுடுச்சு. கிரி! பார்கவியைப் பத்திரமா கார்லே கூட்டிக்கிட்டு... நம்ம வீட்டுக்கு வந்துடு. விசாலத்தை அழைச்சுக் கிட்டு நாங்க எல்லாரும் அடுத்தடுத்த கார்களில் வந்துடறோம்.

''என்னம்மா பார்கவி? முழிக்கிறே? பங்கஜம், சிவகாமி தம்பதிகள் நம்ம கூட தான் இருக்கப் போறாங்க. சரியா?''

தன்னையும் அறியாமல் இரு கைகளையும் குவித்தாள் பார்கவி. கைத்தாங்கலாக அவளது தோளைப் பிடித்தபடி பத்தடி தூரம் நடந்து சென்று காரில் அமர வைத்து விட்டு... தானும் அமர்ந்தான் கிரீசன்.

மிதமான வேகத்தில் காரைச் செலுத்தினான். சில நிமிடங்களில்... வானம் இலேசாய் குமுறி தேவப் பிரசாத மாய் மழைத்துளிகளைத் தூவத் தொடங்கியது. தென் மேற்கு பருவக் காற்று மண் வாசனையை சுமந்து கொண்டு வந்து... அவளது முகத்தை இதமாய் வருடிச் சென்றது.

சட்டென்று சாலையோரமாய் அந்த ஆல மரத்தின் அடியில் காரை நிறுத்தினான் கிரீசன். திகைப்புடன் அவனை ஏறிட்டாள் பார்கவி.

''உனக்கு ஏதாவது கஷ்டம் வந்தா... நான் ஒருத்தன் இருக்கேங்கிறதையே மறந்துடுவியா பார்கவி?'' அவளது கண்களை ஆழமாக ஊடுருவினான்.

''ஸா... ஸாரி.''

'''இங்கிவளை யான் பெறவே... என்ன தவம் செய்து விட்டேன்' அப்படின்னு உரக்கப் பாடணும் போல இருக்கு பார்கவி.''

''என்ன இது கிரி? பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிகிட்டு?''

''என்ன அப்படி இலேசா சொல்லிட்டே? நீ என் உயிரிலும் உணர்விலும் கலந்து விட்ட தேவதையாச்சே? அம்ருவைப் பிழைக்க வச்சு... அமோகமா வாழ வைச் சிருக்கே...

''என் அம்மாவை எமன்கிட்டேயிருந்து மீட்டுக் கொடுத்திருக்கே... அப்பாவுக்கு நல்ல மனமாற்றம் வந்திருக்கு. அம்மாவோட ஆசை நிறைவேறியிருக்கு. நானும் பிஸினஸ்லே சாதிச்சு சிகரத்தைத் தொட்டிருக் கேன்.

''இப்பேர்ப்பட்ட குணவதி கிடைக்க நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும் இல்லையா? ஐ லவ் யூ ஸோ மச் பார்கவி.''

நீர் முட்டிய விழிகளோடு அவனை ஒரு கணம் ஏறிட்ட பார்கவி 'ஐ டு லவ் யூ' என்றபடி அவனது பரந்த மார்பில் சாய்ந்து கொண்டாள்.

ஆலமரத்துக் குயில்கள் அழகாய் இன்னிசை கீதம் பாடின.

# உன் விழியில் விழுந்தேன்

## 1

பச்சை மரங்களுக்குள் பதுங்கியிருந்த பறவைகள் 'கீச்... கீச்' என்று இன்னிசைக் கச்சேரியை ஆரம்பித்தன. எங்கிருந்தோ ஒரு சேவல் கன கச்சிதமாய் கூவியது. விடிந் ததே தன்னால்தான் என்று ஏழெட்டு முறை கம்பீரமாய், ஆணவமாய் தனது கழுத்தை உயர்த்தித் தூக்கிக் கூவி விட்டு அடங்கியது.

பனி சாம்பிராணி போட்டது போல் பரவிக் கிடந்தது. உதயா சேலையை உயர்த்திச் செருகி நெளி நெளியாய் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். ஈரக் கூந்தலை டவலால் சுற்றி... கொண்டை போட்டிருந்தாள்.

தந்தத்தைக் கடைந்தாற் போன்று... பளிச்சென்ற நிறம். ரோஜாவின் மென்மையைப் பிரதிபலித்த தேகம்... கை தேர்ந்த ஓவியன் ஒருவன் வரைந்து வரைந்து ஒவ்வொன்றையும் முகத்தில் ஒட்ட வைத்தது போல்... களையாக கவிதை பாடலாம் போலிருந்தாள்.

வாசலருகே நின்ற பவள மல்லிகை மரத்தில்... பூக்கள் பூத்துக் குலுங்கி தன் சுகந்த நறுமணத்தை அந்தத் தெருவெங்கும் விநியோகம் செய்து கொண்டிருந்தது. ஆழ மூச்செடுத்து அந்த சுகந்த மணத்தை ரசித்த உதயா... கோலப் பொடி கிண்ணத்தை நிலைப்படியருகே வைத்துவிட்டு வந்தாள்.

பவள மல்லிகை மரத்தடியில்.. தரையெங்கும் கொட்டிக் கிடந்த பவள மல்லிப் பூக்களைக் கொஞ்சம் அள்ளி யெடுத்தாள். படியேறி கூடம், கம்பி போட்ட முற்றம், தாழ் வாரம், ரேழியைக் கடந்து.. கொல்லைப் புறக் கதவைத் திறந்தாள்.

சில்லென்ற காற்று சுதந்திரமாய் உள்ளே புகுந்து.. அவளது அழகிய முகத்தை இதமாய் ஸ்பரிசித்தது. கிணற்று மேடையிலிருந்து பத்தடி தள்ளி நின்ற துளசி மேடையில் செழிப்பாக வளர்ந்திருந்தது துளசிச் செடி.

துளசி மேடையிலும், செடியிலும் பூக்களைத் தூவி, தொட்டு வணங்கி விட்டு கூடத்திற்கு வந்தாள் உதயா.

கூடத்தில்... சாமி சிலைகளும், படங்களும் வைக்கப் பட்டிருந்த அலமாரிக்கும் கீழே குத்து விளக்கை ஏற்றி வைத்தாள். எதிர்ப்புற சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்தப் புகைப்படத்தருகே வந்து நின்றாள்.

அவளையும் அவளது அக்கா சூரியாவையும் உள்ளங் கையில் வைத்துத் தாங்கிப் பாச மழை பொழிந்த தந்தை நடேசன்.. அந்தப் பெரிய சட்டத்துக்குள் அடங்கி... முகத்தில் சாந்தம் தவழ, இதழோரம் சிறு புன்னகையுடன் அவளை நேர்ப்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

சேர்ந்தாற்போல் இரு நிமிடங்கள் நின்று அவரது படத்தை உற்று நோக்க முடியாதபடி... அவளது அழகிய விழிகளில் நீர்த்திரையிட்டது.



'எங்களை அம்போன்னு தவிக்க விட்டுட்டுப் போயிட் டீங்களே அப்பா?'

அவளது இமைக்கரைகளைத் தாண்டி.. கன்னங்களில் வாய்க்கால் போட்டுக் கொண்டு வழிந்தது கண்ணீர்.

உள்ளறையிலிருந்து வந்த அண்ணன் சபேசனின் இருமல் சத்தம்.. அவளைக் கலைத்தது. சட்டென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அடுப்பங்கரைக்குள் அடைக்கலமானாள்.

பாத்திரத்தைக் கழுவி பாலை ஊற்றி அடுப்பில் வைத் தாள். காய்கறிகளை நறுக்கத் தொடங்கினாள். காலை நேரப் பரபரப்பு தொற்றிக்கொள்ள... கால்களில் சக்கரத்தை மாட்டிக் கொள்ளாத குறையாகப் பம்பரமாகச் சுழன்றாள்.

அண்ணி சுகந்தி தனது அனந்த சயனத்திலிருந்து அவ்வளவு சீக்கிரத்தில் எழுந்து கொள்ள மாட்டாள். ஆனால்.. எழுந்ததுமே காபி, டிபன் எல்லாமே தயாராக இருக்க வேண்டும்.

மதிய உணவையும் தயாரித்து வைத்து விட்டுத்தான் உதயா கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்பது அண்ணியின் உத்தரவு!

''வீரபாண்டி கிராமத்துல பிறந்தவளுக்கு அப்படி யென்ன படிப்பு வேண்டிக் கிடக்கு? பஸ் பிடிச்சு ஊர் விட்டு ஊரு போயி... பெரிய குளம் காலேஜுல பட்டப் படிப்பு படிக்கலையின்னு யார் அழுதா?''

''பொண்ணாப் பொறந்தவ வாய்க்கு ருசியா சமைச்சுப் போடணும். வீட்டு வேலைகளை மாங்கு மாங்குனு இழுத்துப்போட்டு செய்யணும். நாளைக்கு கட்டிக் குடுத்த இடத்துல வேலை செய்யத் தெரியாம... கையைப் பிசைஞ்சுகிட்டு நின்னா.. வளர்த்த லட்சணம் பாருன்னு என்னைத்தான் காறித்துப்புவாங்க...

"உங்க அக்காவைக் கட்டிக் கொடுத்தோம். பெரிய கடமையை செய்து பாரத்தை இறக்கிட்டோம்னு நிம்மதியா இருக்க முடியுதா? ஒழுங்கா லட்சணமா குடும்பம் நடத்தினாளா? துப்பு கெட்ட ஜென்மம்னு பேரெடுத்து.. எங்க மானத்தை வாங்கிட்டிருக்கா...

"கடல் மாதிரி பெரிய வீடு.. பீம சேனன் மாதிரி திடகாத்திரமான புருஷன்.. பத்து தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிட்டாலும் கரையாத சொத்து... எப்பேர்ப்பட்ட எடத்துல நம்ம அண்ணி கஷ்டப்பட்டு... நம்மை மகாராணியா உட்கார்த்தி வச்சாளேங்கிற நன்றி இருக்கா?

"உங்க அக்காளை மாதிரி நீயும் நன்றி கெட்ட ஜென்மமா இருக்காதே? ரெண்டு பொண்ணுங்களைப் பெத்து என் தலையில கட்டிட்டு.. பொசுக்குனு போய் தொலைஞ்சுட்டாரே உங்கப்பா?

"இந்த வீட்டுக்கு வாழ வந்த பாவத்துக்கு.. நான் உழைச்சு ஓடாத் தேய்ஞ்சுட்டேன்..."

அண்ணி சுகந்திக்கு நல்ல சரீரம்.. அளந்து பார்க்க இன்ச் டேப் போறாது. வெண்கலத் தொண்டை வேறு... எதற்கோ ஆரம்பித்து எங்கெங்கோ சென்று.. அனைவரையும் இழுத்துத் தூற்றி விட்டுத் தான் அடங்குவாள்.

அண்ணியின் உபயத்தால் உதயாவுக்கு அந்த வீட்டில் தினப்படி லட்சார்ச்சனை நடக்கும்.

அண்ணன் சபேசன் எதையும் கண்டு கொள்ள மாட்டான். சத்தம் இல்லாமல் நகர்ந்து விடுவான். சுகந்திக்கு மூன்று முடிச்சு போட்ட தினத்திலிருந்தே அவன் 'தலையாட்டி பொம்மை'யாகி விட்டிருந்தான்.

சபேசனை விட பதினைந்து வயது இளையவள் உதயா. அக்கா சூரியா இவளை விட ஏழு வயது மூத்தவள்.



உதயா பெரிய குளம் கல்லூரியில் பி.எஸ்.சி மூன்றாமாண்டு படித்துக் கொண்டிருந்தாள். கல்லூரியை விட்டு வரும் வழியில் தேனியில் இறங்கி கம்ப்யூட்டர் சென்டருக்குச் சென்று... கம்ப்யூட்டர் கோர்ஸும் கற்று வந்தாள்.

அவள் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் தருணத்தில்... அந்த ஞாயிற்றுக் கிழமை நெஞ்சு வலியால் துடித்தார் நடேசன்.

அண்ணன் சபேசன் டாக்ஸியைப் பிடித்தக் கொண்டு வந்தான். தேனியிலிருந்த பிரபல மருத்துமவனையை நோக்கி டாக்ஸி பறந்தது.

மகனின் மடி மீது தலைவைத்துப் படுத்தபடி வலியால் துடித்த நடேசன் திக்கித் திணறிப்பேசியது... இன்றளவும் உதயாவின் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டு தானிருந்தது.

"ச.. சபேசா! உங்கம்மா என்னைக் கூப்பிடற மாதிரி இருக்குப்பா... நா.. நான் கண்ணை மூடிட்டா.. தங்கைகளை நீ தான் கரையேத்தணும். உ... உ... உங்கம்மாவோட நகைங்க இருக்கு... நான் சேர்த்து வச்சதே.. அவங்க எதிர்காலத்துக்கு எதேஷ்டமா இருக்கும். எந்த விதத்துலேயும் அவங்க உனக்கு பாரமா இருக்க மாட்டாங்க...

"அவங்களை நல்லாப் படிக்க வைச்சு.. ந.. நல்ல... எடத்துல பிடிச்சுக் கு.. குடுத்துடுப்பா.. தாயில்லாப் பொண்ணுங்களுக்கு... இனிமே... இ.. இனிமே எல்லாமே நீ தான்."

"உ... உங்களுக்கு ஒண்ணும் ஆகாதுப்பா.. கவலைப்படாதீங்க" சபேசன் பதறிப்போய் விசும்பிக் கொண்டிருந்த தங்கைகளை ஏறிட்டான்.

மருத்துவமனைக்குப் போய் சேர்வதற்குள்.. எமன் முந்திக் கொண்டு அவரது உயிரைப் பாசக் கயிற்றை வீசி எடுத்துக் கொண்டு விட்டான்.

இரண்டு பெண்களை நல்லவிதமாகக் கரை சேர்ப்ப தற்குள்.. நடேசன் போய்ச் சேர்ந்து விட்டிருந்தார். ஆனால் அந்த பாரத்தை மகன் சபேசனின் தலையில் சுமையாக ஏற்றி விடவில்லை என்பது நிஜம்.

நடேசனுக்கு அந்த வீரபாண்டி கிராமத்தில்... நஞ்சை, புஞ்சை நிலங்கள் கொஞ்சம் இருந்தன. பட்ட பாட்டுக்குப் பயனாக.. மண்மாதா மகசூலை அள்ளித் தந்தாள். கட்டும் செட்டுமாக வாழ்ந்து.. அக்ரஹாரத்திலிருந்த அந்த வீட்டை வாங்கிச் செப்பனிட்டுக் குடி புகுந்தார்.

முழுவதுமாக அவர் விவசாயத்தை மட்டுமே நம்பி இருந்து விடவில்லை. உரக்கடை ஒன்றையும் நடத்தி வந்தார். மருமகள் சுகந்தி அவருக்கு தூரத்து சொந்தம் தான்... வெகு காலமாய் முதிர் கன்னியாய் வீட்டோடு முடங்கிக் கிடந்தவளை.. பைசா வரதட்சணை வாங்காமல் பெருந்தன்மையோடு தமது மருமகளாக்கிக் கொண்டார்.

மருமகளின் நெஞ்சில் என்றென்றும் நன்றி குடியிருக் கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அவளது நெஞ்சில் நஞ்சும் வஞ்சமும் தான் சூழ்ந்திருந்தன. அடி மட்டத்தி லிருந்து வந்தவளின் குணம்.... பெருந்தன்மை சிறிது மின்றி படு மட்டமாகவே இருந்தது.

மகள்களின் எதிர்காலத்திற்குத் தேவையான கணிச மான பணத்தை பேங்கில் நடேசன் போட்டு வைத்திருந் தார். ஆனால் அவரது மறைவுக்குப் பின், "வயசுப் பொண் ணுங்களை எங்க தலையில கட்டிட்டுப் போயிட்டாரு பாவி, மனுஷன். விவசாயத்துல வருமானமே இல்லை... உரக்கடையும் நஷ்டத்துல ஓடுது" என்று அபாண்டமாகப் பழியைப் போட்டாள் மருமகள் சுகந்தி.

அனைத்தையும் சுருட்டி வாய்க்குள் போட்டுக் கொண்ட தோடு நாத்தனார் சூரியாவைப் பாழும் கிணற்றுக்குள்



தள்ளிவிட்டாள், அண்ணி சுகந்தி. உதயாவையும் அதே போல் தள்ளி விட தக்க தருணம் பார்த்துக் கொண் டிருந்தாள் என்பது தான் நிஜம்.

## 2

"ஏய்.... உதயா! கொஞ்சம் இங்க வாயேன்டி" அண்ணி சுகந்தியின் குரல்... அந்த அக்ரஹாரத்து வீட்டையே கிடுகிடுக்க வைத்தது.

இட்லிக் குக்கரை அடுப்பிலேற்றி விட்டு கொத்த மல்லி சட்னியை அம்மியில் அரைத்துக் கொண்டிருந்த வளுக்கு திக்கென்றிருந்தது.

அண்ணிக்கு மிக்ஸியில் சட்னி அரைத்தால்... தொண் டைக்குள் இறங்காது. அவளுக்கு நாக்கு நான்கு முழந்தான். 'மிக்ஸியில் அரைத்தால் சுவையும் மணமுமாக இல்லை' என்று கூறி சட்னியைத் கிண்ணத்தோடு அப்பால் தள்ளி விடுவாள்.

"தூத்தேறி! உடம்பு வளைஞ்சு வேலை பாக்கணும்டி. துவையலை அம்மியில ரெண்டு இழுப்பு இழுத்து அரைச்சா அதோட டேஸ்டே தனி. அம்மியில அரைக்கிற துக்கு மேனி வலிக்குது. இல்ல? பொம்பளையா லட் சணமா குனிஞ்சு நிமிர்ந்து வேலை பாரு..

"வாக்கப்பட்டு போற இடத்துல அசிங்கப்பட்டு நிக்க ணும். எல்லாம் உங்கப்பனை சொல்லணும். தாயில்லாப் பொண்ணுங்கன்னு செல்லம் குடுத்து குட்டிச் சுவராக் கிட்டு நிம்மதியா போய் சேர்ந்தாச்சு.. நான் கட்டிக்கிட்டு அழ வேண்டியிருக்கு."

'காலை நேரப் பரபரப்பில் ஆத்திர அவசரத்திற்கு மிக்ஸியில் அரைத்தால்.. அவள் மட்டுமா மண்டகப் படிவாங்கிக் கட்டிக் கொள்வாள்?

'நேர்மையான நல்ல மனிதர்' என்று பெயரெடுத்து விட்டுப் போன நடேசனின் மீதும்... அண்ணி புழுதி வாரித் தூற்றி விடுவாளே?'

இதற்கு பயந்தே அண்ணி 'எள்' என்று சொல்வதற்குள்... உதயா எண்ணெயாக நிற்பாள்.

ஆனால், அண்ணியோ படு சாமர்த்தியக்காரி.. கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு குற்றம் குறை கண்டு பிடித்து விளாசித் தள்ளி விடுவாள்.

குற்றம் குறை எதுவும் கண்ணில் அகப்படாவிட்டாலும்... அன்றாடம் உதயாவை தாளித்துக் கொட்டினால் தான் அவளுக்குத் தூக்கமே வரும்.

ஈரக் கையை சேலைத் தலைப்பில் துடைத்துக் கொண்டே தயங்கியபடி கூடத்திற்கு வந்தாள் உதயா.

கூடத்து சோபாவில் புதைந்து போய் அமர்ந்திருந்த அண்ணி சுகந்தி அவளை ஏறிட்டாள்.

''அ.. அண்ணி! இட்லி வெந்துகிட்டிருக்கு.. கொத்தமல்லி சட்னி அம்மியில அரைச்சுட்டிருக்கேன், மதியத்துக்கு மாங்காய், கத்தரி, முருங்கைக்காய் போட்டு சாம்பார் வச்சுட்டேன். தொட்டுக்க உருளைக்கிழங்கு பொடி மாஸும்.. காரசாரமா தக்காளித் தொக்கும் பண்ணிட்டேன்.

''அண்ணா அடிக்கடி இருமிக்கிட்டிருக்காருன்னு.. மிளகு ரசம் வச்சிருக்கேன். போதுமா அண்ணி?''

''அரிசியை ஒரு டம்ளர் கூடுதலா போடு.. நான் சாயந்தரம் எங்கம்மா வீட்டுக்குப் போயிடுவேன். அதனால நைட்டுக்கு டிபன் எதுவும் பண்ணாதே.. நீயும் உங்கண்ணாவும் நைட்லே சாதமே சாப்பிட்டுக்கோங்க.. கேஸை சிக்கனம் பண்ணணும்.



''விலைவாசி கிர்ருனு ஏறிப்போச்சு! மூணு வேளைக்கும் சமைச்சா.. நாம்ப தலையில துண்டைப் போட்டுக்க வேண்டியதுதான். சரியா?''

''சரி அண்ணி'' சிக்கனத்தைப் பற்றி இவ்வளவு அழகாக.. லெக்சர் அடிக்கும் அதே அண்ணி.. நாளை காலை தாய் வீட்டிலிருந்து திரும்பியதும் தலைகீழாகப் பேச ஆரம்பித்து விடுவாள்.. என்பது உதயாவுக்கு நன்கு தெரியும்.

''மதியம் சமைச்ச வச்சதை சூடு பண்ணி நைட்டுக்கும் ஒப்பேத்திடலாம்னு நினைக்காதே... எனக்கு குமட்டலா வரும். மிச்சம் மீதி இருக்கறதை நீ சாப்பிட்டுக்கோ.. பழையதை சூடு பண்ணி சாப்பிட்டா.. எனக்கு ஒத்துக்காதுன்னு.. உனக்கே தெரியுமே? சப்பாத்தி பண்ணிடு.. சன்னா மசாலா வச்சு கொஞ்சம் தேங்காய் சட்னியை அரைச்சுடு என்ன?''

இதே வசனத்தை அட்சரம் பிசகாமல் அண்ணி நாளைக்குப் பேசுவாள் என்பது உதயாவுக்கு அத்துபடியாயிற்றே?

இதை நினைத்த போதே உதயாவின் அழகிய இதழ்களில் ஒரு குட்டி முறுவல் பூத்தது.

''என்ன சிரிக்கிறே?''

''ஒ.. ஒண்ணுமில்ல அண்ணி! சாதம் மட்டும் தான் குக்கர்லே ஏத்தணும். நா கிச்சனுக்குக் போகட்டுமா?''

''அண்ணி அந்தண்டை நகர்ந்ததும்.. ஆட்டம் போடலாம்னு பாக்கிறியா? நீ காரணமில்லாம சிரிக்க மாட்டியே? சூரியா அக்காவை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து கொட்டமடிக்கலாம்னு மட்டும் பிளான் பண்ணாதே... எனக்கு கெட்ட கோபம் வந்துடும். புக்ககத்தை விட்டுட்டு அடிக்கடி பிறந்தகத்துக்கு ஒரு பொம்பளை ஓடி வந்தா.. அது மரியாதையா இருக்காது சரியா?''

''சரி அண்ணி'' அவசரமாய் நகரப் போனவளைத் தடுத்து நிறுத்தியது சுகந்தியின் குரல்!

''இரு. இந்தப் புடவையைக் களைஞ்சு தரேன். உடனே துவைச்சுடு.''

''நா.. நாளைக்குச் சேர்த்து துவைச்சுடறேனே அண்ணி.''

''ஊகூம்! இப்போ காபி குடிச்சேன்ல.. அப்போ புடவையில சிந்திடுச்சு... இந்த சந்தனக்கலர் புடவை எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு... இதைக் கட்டிக்கிட்டுத்தான் எங்கம்மா வீட்டுக்குப் போவேன். இப்போ துவைச்சுப் போட்டாத்தான்... சாயந்தரமா கட்டிக்கிட்டுப் போக ரொம்பத் தோதா இருக்கும்.''

''ச... சரிங்க அண்ணி'' திகிலுடன் அவளது விழிகள் சுவர்க் கடிகாரத்தில் படிந்து மீண்டன.

''என்னை எங்கம்மா வீட்டுல விட்டுட்டு இவர் திரும்பி வர்றதுக்கு கொஞ்சம் லேட்டாகும். ராத்திரி பத்திரமா தாழ்ப்பாள் போட்டுக்கிட்டு படிச்சுட்டு இரு.. உங் கண்ணன் வந்துடுவாரு.. சுதந்திரம் கிடைச்சிருச்சுன்னு அக்கம் பக்கம் சுத்தப் போயிடாதே... ஏற்கனவே இந்தக் குடும்பத்துல உங்கத்தை... அந்தக் காலத்துலேயே களங்கத்தை உண்டு பண்ணினது.. உனக்குத் தெரியும்ல? ஜாக்கிரதை.''

அனல் கங்குகளாய் வார்த்தைகளை உதிர்த்தாள் சுகந்தி.

குப்பென்று அவமானத்தில் முகம் சிவந்து போன உதயா.. பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு சட்டென்று கிச்சனுக்குள் புகுந்து கொண்டாள்.

அத்தை..? நடேசனின் உடன் பிறந்த தங்கை.. அந்த அத்தையை உதயாவே பார்த்தது இல்லையே?

போன தலைமுறையை இழுத்துப் பேசி இவள் மனதைப் புண்படுத்திக் குதறி அலாதி சுகம் காணும்



அண்ணியின் அடாத செயலை எண்ணி.. மனம் குமைந்து போனாள் உதயா.

உதயா பிறப்பதற்கு முன்பே... காதல் திருமணம் செய்து கொண்டு குடும்பத்திற்கு பெரும் தலைகுனிவை ஏற்படுத்திய தங்கையை தலை முழுகி விட்டிருந்தார் நடேசன்.

அவரே உதறித் தள்ளிவிட்ட உறவு.. என்றோ அறுந்து போன பந்தம்.. அந்த அத்தையின் முகம் எப்படி இருக்கும் என்பது கூட உதயாவுக்குத் தெரியாது.

உதயாவைப் பெற்று விட்ட திருப்தியில்.. கண்ணை மூடி விட்டிருந்தாள் அவளது தாயார் காமாட்சி.

இரண்டாம் திருமணம் செய்து கொள்ளாமல்..கர்ம யோகியைப் போல் வாழ்ந்து மூன்று குழந்தைகளையும் வளர்த்து ஆளாக்குவதற்குள் திணறித்தான் போனார் நடேசன்.

வருடா வருடம் வீர பாண்டித் திருவிழாவின் போது.. அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து உறவுத் தலைகள் திரண்டு.. நடேசனது வீட்டை ஆக்கிரமிப்பது வழக்கம்.

''ஏம்ப்பா... நடேசா! உன் சின்னப் பொண்ணு உதயா... அப்படியே அச்சு அசலா உன் தங்கச்சியை உரிச்சுக்கிட்டு வந்திருக்கில்ல? முகத்துல அப்படியே களை சொட்டுது இல்ல?''

தூரத்து உறவுக்கார பாட்டியோ.. யாராவதோ கேட்டு விட்டால் அப்படியே முகம் சிறுத்துப் போய் விடுவார் நடேசன்.

''விடுங்கம்மா! அவ மேல உசுரையே வச்சிருந்தேன். என் தலையில கல்லைத் தூக்கிப் போட்டுட்டாளே? அவளை ஞாபகப்படுத்தாதீங்க'' முணுமுணுப்பார் நடேசன்.

ஒப்புக்கு இப்படி விட்டேற்றியாகப் பேசினாலும்.. தங்கையின் ஜாடையை உரித்துக் கொண்டு வந்திருக்கும்

இளைய மகள் உதயாவின் மீது உயிரையே வைத்திருந்தார் நடேசன்.

குக்கரின் விசில் சப்தத்தால்.. உதயாவின் நினைவுச் சங்கிலி பட்டென்று அறுந்தது.

அந்த அக்ரஹாரத்தில்... ஒவ்வொரு வீட்டின் பின்புறமும் தோட்டம் உண்டு. ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திற்கும் இடையே கம்பி வேலி போடப்பட்டிருக்கும். தோட்டத்தின் முடிவில் நீண்ட படித்துறை... படியைத் தொட்டுத் தழுவிக் கொண்டு நுப்பும் நுரையுமாய் சுழித்துக் கொண்டு ஓடியது முல்லை ஆறு.

பக்கெட்டிலிருந்த துணிகளை நீரில் முக்கிய உதயா... படிக்கட்டில் அமர்ந்தபடி... பக்கத்து வீட்டுத் தோட்டத்தை வெறித்தாள்.

பக்கத்து வீட்டு அம்புஜத்திற்கு... கிட்டத்தட்ட அறுபத்தைந்து வயதிருக்கும். அவள் துணி துவைக்க வரும் சமயங்களில்.. அம்புஜமும் துவைக்க வந்து விடுவார்.

அவரிடம் பேசிக் கொண்டே துணி துவைப்பாள் உதயா. மனதிலுள்ள பாரம் எல்லாம் இறங்கியது போன்ற நிம்மதி ஏற்படும்... இன்று ஏனோ அவரைக் காணவில்லை...

சேலை ரவிக்கையைத் துவைத்து அலசியவள்... எதேச்சையாக எதிர்ப்புறம் நிமிர்ந்து பார்த்தாள்.

அக்கரையில்... அந்த பருத்த ஆலமரத்தினடியில் நின்றபடியே இவளை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டு இருந்தான் ரங்கன்.

குபீரென்று தூக்கி வாரிப் போட்டது உதயாவுக்கு.

ரங்கனுக்கு வாட்ட சாட்டமான உடம்பு. அமாவாசை நிறத்தில் இருப்பவனின் விழிகளில் அலட்சியமும் ஆணவமும் தெறிக்கும். முகத்தில் சண்டியர்தனம்



ததும்பிக் கொண்டிருந்தது. சுண்டு விரல் பருமனிலிருந்த செயினில் புலி நகம் பதிக்கப்பட்டிருந்தது. வெளியில் தெரியும் வண்ணம் சட்டைப் பொத்தான்களை அவிழ்த்தபடி அலையும் ரகம்...

ரங்கன்... அக்கா சூரியாவின் மைத்துனன்... வைத்த கண் வாங்காமல் உதயாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்... சேலையை முறுக்கிப் பிழிந்து பக்கெட்டில் போட்டுக் கொண்டு படிக்கட்டுகளில் ஏறியவளுக்கு உடம்பு தந்தியடித்தது.

## 3

தோட்டத்தில் கம்பிப் பந்தலில் படர்ந்திருந்த மல்லிகைக் கொடியிலிருந்து மொட்டுக்களைக் கிள்ளிக் கொண்டிருந்தாள் உதயா.

'சரக்... சரக்' என்று சருகுகள் மிதி படும் சப்தம் கேட்டதும்... திரும்பிப் பார்த்தாள்.

பக்கத்து வீட்டுத் தோட்டத்தில்... இலேசாக நொண்டியபடி நடந்து வந்த அம்புஜம் மாமி... உதயாவைப் பார்த்துப் புன்னகைத்தபடியே கம்பி வேலியருகே வந்து நின்றார்.

''என்ன மாமி? நொண்டி நொண்டி நடக்கறீங்களே?'' கரிசனத்துடன் கேட்டாள்.

''கால்லே முள்ளு குத்திடுச்சும்மா... இன்னிக்கு பத்து மணிக்கு மேல துணி துவைக்கப் போனேனா... வர்றச்சே முள்ளு காலைப் பதம் பாத்துடுச்சு.''

''ஒண்டி மனுஷி எதுக்கு மாமி கஷ்டப் படறீங்க? நாளைக்கு என்னோட டிரஸ்ஸை எல்லாம் துவைக்கிறப்போ... உங்க துணியையும் சேர்த்து துவைச்சுப் போடமாட்டேனா?''

நெகிழ்ந்து போனார் அம்புஜம் மாமி.

"உங்க அண்ணி உன்னைச் சக்கையாப் பிழியறா... இதுலே நான் வேற உனக்கு சிரமத்தைத் தரணுமா? மூணு பசங்களைப் பெத்துக் கஷ்டப்பட்டு படிக்க வைச்சேன். அவனவன் பொண்டாட்டியோட ஆளுக்கொரு ஊர்லே செட்டிலாயிட்டானுங்க...

"மாட்டுப் பொண்ணுங்களுக்கு மாமியார் ஒண்டி மனு ஷியா இருக்காளேன்னு... கிஞ்சித்தும் அக்கறை இல்ல... எந்த இரத்த பந்தமும் இல்லாத நீ... பெத்த பொண் ணுக்கும் மேலா பாசம் காட்டறே... உனக்கு ஒரு குறையும் வராது உதயா நீ நன்னா இருக்கப் போறே... ஒரு முக்கிய மான விஷயத்தை உன்னண்ட சொல்லலாம்னு வந்தேன்."

சற்றுத் தயங்கி விட்டு பரிதாபத்துடன் உதயாவை ஏறிட்டார் மாமி.

"உதயா... உதயா... வீட்டைத் திறந்து போட்டுட்டு எங்கே போயிட்டா?... உதயா..."

"கொஞ்சம் இருங்க மாமி! சூரியா அக்காவோட குரல் கேக்குதே" நான்கடி நகர்ந்தவள் மீண்டும் திரும்பிப் பார்த் தாள்.

"நாம்ப நாளைக்குப் பார்ப்போம் மாமி... அக்கா வந்திருக்கா... இந்தவாட்டி என்ன பிரச்சினையோ? எனக்கு அடிவயிறு கலங்குது" என்று கூறிவிட்டுக் கொல்லைப் புறத்தைத் தாண்டி உள்ளே வந்தாள்.

சூரியா தனது இரு குழந்தைகளுடன் நின்றிருந்தாள். அவளுக்கு ஐந்து வயதிலும் மூன்று வயதிலுமாக இரு பெண் குழந்தைகள்.

"அட... அம்மு குட்டிங்களா? சித்தியைத் தேடி வந்தீங்களா?" சூரியாவின் இடுப்பிலிருந்த குழந்தை இரு கைகளையும் நீட்டித் தாவியது.



குழந்தையை வாரி அணைத்து அதன் குண்டு கன்னத் தில் இச் பதித்த உதயா... அக்காவை ஏறிட்டாள்.

சூரியாவின் சிவந்த கண்களும், வீங்கிய கன்னமும் அவளுக்கு திகிலை வரவழைத்தன.

சூரியாவின் கணவன் கேசவன் பணம் படைத்தவன் தான். ஆனால் கடுகளவு கூட அவனிடம் குணம் கிடை யாது. குடி, சூதாட்டம், மட்ட ரகப் பெண்களுடன் தொடர்பு என்று அவனிடம் எல்லாக் கெட்டப் பழக்கங்களும் குடியிருந்தன.

அவனைப் பெற்ற சிவசாமியும், தேவகியும் தங்களது இரு மகன்களைக் கண்டித்ததே இல்லை. கேசவனும், ரங்கனும் காளை மாடுகளாய், சண்டியர்களாய் ஊரைச் சுற்றி வந்தனர்.

ஏழைகளும் நலிந்த விவசாயிகளும் தங்களது நிலத் தையும் வீட்டையும் சிவசாமியிடம் அடமானம் வைப்பது வழக்கம்... அவற்றை யாரும் மீட்டதாக இதுவரை சரித் திரமே இல்லை. அவர்களது தரித்திரத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்ட சிவசாமிக்கு... பாதி கிராமமே சொந்தமாகி விட்டிருந்தது.

வரும் மருமகள் தங்களுக்கு அடங்கி அடிபணிந்து அப்பிராணியாய் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட சிவசாமி தம்பதியினரின் கண்களில் சிக்கியவள் தான் சூரியா.

'அப்பா நடேசன் உயிருடன் இருந்திருந்தால்... கேசவன் போன்ற மூர்க்கனுக்கு அருமை மகளை தாரை வார்க்க சம்மதிப்பாரா?'

பெருமூச்சு விட்டாள் உதயா.

அம்மாவின் முப்பது பவுன் நகைகளை பீரோவில் வைத்துப் பூட்டி விட்டதோடு... நடேசன் பேங்கில் போட்டு வைத்த கணிசமான தொகையை எடுத்து... சற்று வட்டிக்கு விட்டிருந்தாள் சுகந்தி.

''உங்க வீட்டுப் பொண்ணை எங்க மருமகளாக்கிக் கணும்னு ஆசைப்படறோம்... கட்டின புடவையோட அவளை அனுப்பினா போறும்'' என்றதும்... வந்த வரைக்கும் லாபம் என்று நாத்தனார் சூரியாவை படு குழிக்குள் தள்ளி விட்டாள் சுகந்தி.

''அண்ணி... அந்த மனுஷன் பொல்லாதவனாமே... ஊரே சொல்லுதே... அந்தக் கெட்டவனுக்கு கழுத்தை நீட்ட... எனக்கு பயமா இருக்கே... எனக்கு விருப்ப மில்லை... அண்ணா! நீயாவது அண்ணிக்கு எடுத்துச் சொல்லேன்.''

சூரியா கண்ணைக் கசக்கத்தான் செய்தாள். அண்ணன் சபேசன் அசைந்து கொடுக்காமல் குத்துக்கல்லாய் நின் றான்.

''பெரியவங்க நாங்க கை காட்டற இடத்துல... கழுத்தை நீட்ட வேண்டியது உன் கடமை... மகாராணி மாதிரி நீ வாழப்போறே... ஆம்பிளைங்க அப்படி இப்படி இருக்கத்தான் செய்வாங்க... கால் கட்டுப் போட்டுட்டா அடங்கிடுவாங்க...

''புருஷனை கைக்குள்ளே போட்டுக்கிட்டு முந்தானை யில முடிஞ்சிக்கணும் அது தான் சாமர்த்தியம்... மறுத்து பேசாதே... என்ன? உன் மனசுல வேற யாராவது இருக் கானா? உங்கத்தை மாதிரி நீயும் ஓடிப் போகப் போறியா சூரியா?''

சூரியாவுக்கு இதயத்தில் குத்தீட்டியை செருகி இழுத்தது போலிருந்தது. தேம்பி அழுதபடி கிச்சனுக்குள்



புகுந்து கொண்டாள். அண்ணி சுகந்தி வெற்றிக்கொடி நாட்டி விட்டாள்.

கேசவன் கரிக்கட்டை மாதிரி இருப்பான். சூரியாவோ பறித்து எடுத்த புது மஞ்சள் கிழங்கு போலிருப்பாள். விளைவு... பால்காரன், காய்கறி வண்டிக்காரனோடு பேசினால் கூட சந்தேகப்பட்டான்.

குடித்துவிட்டு வந்து போதை இறங்கும் வரை... சொல்லம்புகளால் அவளது மென்மையான இதயத்தைக் குத்திக் கிழித்து... அமிலத்தை ஊற்றினான். கோபம் உச்சிக்கு ஏறும்போது வெளுத்து வாங்கி விடுவான்.

மாமனார் - மாமியாரிடம் தனது மனக்குறையை இலே சாகக் கோடிட்டுக் காட்டி விட்டால்... அவ்வளவு தான்!

''கொஞ்சம் பொறுமையா எல்லாத்தையும் சகிச் சுக்கோ... காலப் போக்குல சரியாயிடும்'' என்று இவளிடம் கூறுவார்கள். ஆனால் மகனிடமோ, ''புருஷனை புகார் சொல்லுற அளவுக்கு திமிரெடுத்துத் திரியறா... அடக்கி வை கேசவா!'' என்பார்கள்.

நாளடைவில் அடியும் உதையும் திட்டும் வாங்கி வாங்கி... உடம்பும் மனதும் மரத்துத் தான் போயின. ஆறுதல் தேடி பிறந்தகத்துக்கு ஓடி வந்தால்... அண்ணி அவளை வாட்டி வதைத்தாள்.

''ஒண்ணும் எதிர்பாக்காம உன்னைக் கட்டிக்கிட்ட துக்கு... அவங்க காலைச் சுத்தி கெடக்கணும். நீ கண்ணைக் கசக்கிட்டு இங்க வாழாவெட்டியா வந்துட லாம்னு நெனச்சா... உன் அருமை தங்கச்சி கால முச் சூடும் கரையேறாம நிக்க வேண்டியது தான்.''

உணர்வுகள் செத்து நடைப் பிணமாய் வாழக் கற்றுக் கொண்டாள். இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயா

னதும்... அவர்களின் வருங்காலத்தை கருத்தில் கொண்டு... மண் புழுவாய் மாறிப் போனாள். நத்தையாய் சுருண்டு போனாள்.

''அக்கா! கன்னம் வீங்கியிருக்கே? அத்தான் அடிச்சுட்டாரா?'' கேட்கும்போதே உதயாவின் கண்கள் ஊற்றெடுத்தன.

''ப்ச்! இதெல்லாம் எனக்கு ரொம்பவே பழகிடுச்சு உதயா... அண்ணி எங்க வீட்டுக்கு வந்தாங்க... என்கிட்ட ரொம்ப பாசமா பேசிட்டு குழந்தைகளை கொஞ்சுனாங்க... எங்க மாமியார் அண்ணியை மாடிக்குக் கூட்டிட்டுப் போனாங்க... ரொம்ப நேரம் ரெண்டு பேரும் தனியா பேசிட்டிருந்தாங்க உதயா... எனக்கு ரொம்ப பயமா இருக்கு.''

''பேசினா பேசிட்டுப் போகட்டும்... எதுக்கு பயந்து சாகறே?''

''இல்ல... உதயா! கூனியும் சகுனியும் ஒண்ணாச் சேர்ந்தா... அது நல்லதுக்கு இல்ல... நீ... நீயாவது நல்லாயிருக்கணும் உதயா. அதான் என் வேண்டுதல்... நான் இங்க வந்தது தெரிஞ்சா... அந்த அண்ணி ராட்சசி உன்னைப் பிடுங்கி எடுத்துடும். அண்ணியை விட்டுத் தள்ளு... கூடப் பிறந்த தங்கைகள் மேல துளி பாசம் கூட இல்லாம இருக்கானே அண்ணா? சரியான தீவட்டி தடியன்.

''நா... நா வரேன் கண்ணு. நீ ஜாக்கிரதையா இரு. உஷாரா இரு... ஏதோ சதி நடக்குது... அம்மனை வேண்டிக்கோ... வரட்டுமா?''

இரு குழந்தைகளுடன் சூரியா சென்று விட்டாள். உள்ளுக்குள் திகில் ஊறியது.



## 4

கார் வருவதைக் கண்டதும் அவசர அவசரமாய் கேட்டைத் திறந்தான் காவலாளி. திறந்த கையோடு ஒரு 'சல்யூட்' வைத்தான்.

கார் போர்டிகோவில்... ஏற்கனவே இருந்த மூன்று கார்களுக்கு பக்கத்தில் போய் நின்று மூச்சை நிறுத்தியது. ஓட்டுநர் இறங்கி பின் பக்கத்து கதவைத் திறந்துவிட.... படு கம்பீரமாய் இறங்கினான் சந்துரு.

ஆறடி உயரத்தில் உடைத்த கோதுமை நிறத்தில் ஆஜானுபாகுவாய் இருந்தான். பசுமையான அழகான தோட்டத்திற்கு நடுவில் அமைந்திருந்தது அந்த பங்களா.

உள்ளே... ஆடம்பர, அலங்காரப் பொருட்கள் சமர்த்தாய் அதனதன் இடத்தில் அமர்ந்திருக்க... அதுக்கு கொஞ்சமும் சம்பந்தமின்றி எவ்வித பரபரப்புமின்றி படு அமைதியாய் இருந்தது வீடு.

''வணக்கம் சின்னய்யா'' சமையல்காரர் முத்துவின் தோளில் கிடந்த துண்டு கண்ணிமைக்கும் நேரத்தில் இடுப்புக்கு வந்தது.

''வணக்கம் முத்து!... டாக்டர் வந்து... அம்மாவுக்கு பிஸியோ தெரபி குடுத்தாரா? அப்பா ஏதாச்சும் சாப்பிட்டாரா?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் டாக்டர் வந்துட்டுப் போனாரு... பெரிய அய்யா ஒரு டம்ளர் ஜூஸ் மட்டும் தான் குடிச்சாரு... டிபன் எதுவும் வேணாம்னு சொல்லிட்டாரு.''

கவலை தோய்ந்த முகத்துடன் வலது பக்கத்திலிருந்த அந்த விஸ்தாரமான படுக்கை அறைக்குள் நுழைந்தான் சந்துரு.

படுக்கையில் அம்மா சந்திராவின் தலை மாட்டில் அமர்ந்திருந்த பத்மநாபன்... நடைச் சப்தம் கேட்டுத் திரும்பினார்.

மகன் சந்துருவைக் கண்டதும் இருண்டிருந்த முகத்தில் பளீரென மின்னல் வெட்டியதைப் போல... சந்தோஷ ரேகை ஒரு கணம் தோன்றி மறைந்தது.

''வாப்பா... மும்பையில் நடந்த கான்ஃபரன்ஸ்ல கலந்துக்கப் போனியே? என்னாச்சு?''

''பிஸினஸ்லே நாம்ப சிகரங்களைத் தொட்டாச்சு... விடுங்கப்பா அம்மாவுக்கு இப்போ எப்படி இருக்கு?''

''ஹூம்! இருக்குப்பா... தொடர்ந்து பிஸியோ தெரபி குடுத்துட்டு வந்தா... குணமாயிடும்னு டாக்டர் சொல்றாரு... ப்ச்! அவளை இந்த நிலைமையில பார்க்கவே எனக்கு சகிக்கலைப்பா... எத்தனை இடிகளைத் தான் இந்த நெஞ்சு தாங்கும்னு சொல்லு? பேசாம போய்ச் சேர்ந்துடலாம்னு இருக்கு.''

துக்கம் பந்தாய் எழும்பி அவரது தொண்டையை அடைத்தது.

''நம்பிக்கையைத் தளர விட்டுரக் கூடாதுப்பா... எல்லாம் சரியாயிடும்...'' பத்மநாபனின் வலது கரத்தை ஆதுரமாக இறுகப் பற்றினான் சந்துரு.

எதிர்ச் சுவரில் அக்கா பூர்ணிமா அத்தான் ராஜசேகருடன் ஜோடியாக நின்று சிரித்தபடி போஸ் கொடுத்த... அந்தப் புகைப்படத்திற்கு சந்தன மாலை அணிவிக்கப்பட்டிருந்தது.

''அப்பா! அருண் அடம் பண்ணாம ஸ்கூலுக்குப் போனானா?''

''எங்க? தினமும் அக்கப் போரா இருக்குப்பா... பெத்தவங்களை பறி கொடுத்துட்டான்... பாசத்தைக் கொட்டற பாட்டியும் படுத்துக்கிட்டா? பிஞ்சு மனசு எவ்வளவு தான் தாங்கும்? அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிடறான்.''



தழுதழுத்தார் பத்மநாபன்.

பத்மநாபன் பணம் படைத்தவர் தான். ஆரம்பத்தில் சுமாரான வசதியுடன் இருந்தவர் தான். பட்டணத்து வாசியாக இருந்த அவர்... தன்னுடன் சேர்ந்து படித்த நண்பனின் கிராமத்திற்கு ஒரு முறை சென்றிருந்தார்.

பச்சைப் பசேலென்ற கிராமத்தின் அழகில் சொக்கிப் போய்... சில நாட்கள் அங்கு தங்கியிருந்தபோது தான்... சந்திராவை சந்திக்க நேரிட்டது.

அந்த கிராமத்து அழகியைக் காதலித்து மணம் செய்து கொண்ட நேரம்... அவருக்கு அதிர்ஷ்ட தேவதையின் தரிசனம் கிடைத்தது. அவர் தொட்டதெல்லாம் பொன்னாகி அவரை உச்சிக்கு உயர்த்தியது.

மனைவியை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினார். அவர்களது அன்புக்கு அடையாளமாக பூர்ணிமாவும் சந்துருவும் பிறந்தார்கள்.

பூர்ணிமாவை நல்ல அந்தஸ்துள்ள குடும்பத்தில் தான் கட்டிக் கொடுத்தனர். பேரன் அருணும் பிறந்தான்... வாழ்க்கையில் எந்தக் குறையுமில்லாமல் நிறைந்த மனதுடன் பூரித்துப் போயிருக்கையில் தான்... அந்த இடி விழுந்தது.

கோடை காலத்தை ஊட்டியில் கழித்து விட்டு ஜாலியாக சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர் பூர்ணிமா குடும்பத்தினர். செங்கல்பட்டை சமீபிக்கும் சமயத்தில்... அந்தக் கார் விபத்துக்குள்ளாகியது.

சம்பவ இடத்தலேயே பூர்ணிமாவும் ராஜசேகரும் மாண்டு போக... அருண் அதிர்ஷ்ட வசமாக சில காயங்களுடன் உயிர் தப்பினான்.

சந்துருவின் பெற்றோர்கள் நிலை குலைந்து போயினர். கவலை சந்திராவை செல்லாக அரிக்கத் தொடங்கியது. பேரன் அருணை வளர்த்து ஆளாக்க வேண்டுமே என்ற வைராக்கியம் தான்... சந்திராவை சற்றேனும் நடமாட வைத்தது.

பி.பி., சுகர், நெஞ்சு வலி மாத்திரைகளை அள்ளிப் போட்டுக் கொண்டு நடைப்பிணமாய் நடமாடிக் கொண்டுதான் இருந்தார்.

திடீரென்று என்ன காரணத்தினாலோ... அவருக்கு பி.பி. கன்னா பின்னாவென்று எகிறி... பாரலிட்டிக் அட்டாக் வந்து வலது பக்கம் முழுவதும் செயலிழந்து விட்டன.

பேச முற்படும்போது வலது பக்கம் வாய் கோணி... நாக்கு இழுத்துக் கொள்வதால்... அவர் பேசுவது பெரும் பாலும் யாருக்குமே புரிவதில்லை.

"திடீர்னு ஏதோ பலத்த அதிர்ச்சிக்கு ஆளாயிருக்காங் கன்னு தோணுது... இல்லன்னா... அதீதமா எதுக்காகவோ வருத்தப்பட்டிருக்கணும். அதான் இவ்ளோ மோசமா பி.பி. எகிறி பக்கவாதத்துல கொண்டு விட்டுருக்கு... எனி பிராப்ளம்?" குடும்ப மருத்துவர் நிஜமான அக்கறையுடன் நெற்றி சுருங்க கேள்விக் கணையைத் தொடுத்தபோது... சந்துரு பேந்த விழித்தான்.

'அக்கா இறந்த அதிர்ச்சியை விழுங்கி ஜீரணம் பண்ணப் பழகிக் கொண்ட அம்மாவுக்கு... திடீர்னு என்ன நேர்ந்தது?'

அன்று அப்பா பத்மநாபன் தனது நண்பனைச் சந்திக்க எங்கோ சென்று விட்டிருந்தார்.

பேரன் அருணின் நச்சரிப்பு தாங்காமல் போகவே... அவனைக் காரிலேற்றிக் கொண்டு... மகாபலிபுரத்திற்கும்,



முதலைப் பண்ணைக்கும், முட்டுக் காட்டிற்கும் சென்று வேடிக்கை காண்பித்து விட்டுத் திரும்பினாள் சந்திரா.

வீட்டிற்கு வந்த ஒரு மணி நேரத்தில் தலை சுற்றி மயங்கி விழுந்தவருக்கு... ஒரு பக்கம் முழுவதும் செய லிழந்து போனது.

"ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்" செல் போன் சிணுங் கியது.

திரையில் மின்னி மின்னிச் சிரித்த பெயரைப் பார்த்தான் 'பவித்ரா'... அவனது அந்தரங்கக் காரியதரிசி!

"ஹலோ... சொல்லு பவி."

"மார்னிங் சந்துரு... மும்பையிலிருந்து வந்துட்டீங்ளா? அம்மாவுக்கு இப்போ எப்படி இருக்கு?" அவளது குரலில் அக்கறையும் கரிசனமும் ஏகத்திற்கும் தொனித்தன.

"ப்ச்... இருக்கு... நான் இன்னும் ஒன் அவர்லே ஆபீசுக்கு வந்துடறேன். பிராஜெக்ட் ரிப்போர்ட் ரெடியா இருக்குல்லே?"

"உம்! எல்லாம் தயாரா இருக்கு சந்துரு... நா வச்சுடட் டுமா?"

"யாரு பவித்ராவா? நல்ல பொண்ணு... சமீப காலமா நம்ம வீட்டுலே கெட்டதா நடக்குது... அந்தப் பொண்ணு மருமகளா இந்த வீட்டுக்கு வந்துட்டா... ஒரு நல்ல மாற்றம் வந்துடும்னு நா நம்பறேன்... நீ தான் கல்யாணத் துக்கே சம்மதிக்க மாட்டேங்கிறே..."

"மணமேடையில உட்கார... என் மனசு இன்னமும் தயா ராக மாட்டேங்குதே? கொஞ்சம் நாள் போகட்டும் அப்பா..."

தூக்கம் கலைந்து அவர்களது சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரா... 'பவித்ரா'வின் பேச்சு அடிபட்டதும் திகிலடைந்தார்.

முகத்தில் பீதி படர்ந்தது. எதையோ சொல்ல முற்பட்டார். வாய் கோணி நாக் குழறியது. கண்களிலிருந்து பொங்கிய கண்ணீர் கோடு போட்டுக் கொண்டு வழிந்து தலையணையை நனைத்தது.

அவரது இந்த நிலைமைக்கு அந்த பவித்ரா தான் காரணம்... என்பதை மகனிடமும் கணவரிடமும் வெளிப்படுத்த முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்தார்.

பவித்ரா விரித்த வலையில் சந்துரு மாட்டிக் கொண்டானே? 'கடவுளே... அந்தப் பாவியிடமிருந்து என் மகனைக் காப்பாற்று.'

உள்ளம் உருக வேண்டிக் கொண்டார். தாயின் உள்ளக் கிடக்கை உணராத சந்துரு... அவசர அவசரமாக அலுவலகத்திற்குக் கிளம்பினான்.

## 5

சூழல் நாற்காலியில் அமர்ந்து பிராஜெக்ட் ரிப்போர்ட்டை சரி பார்த்து சந்துரு கையெழுத்திட்டான். கேபினின் கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உரிமையாய் உள்ளே நுழைந்தவனை ஏறிட்டான்.

அட... நண்பன் ரகு! பிஸினஸ் விஷயமாய் அடிக்கடி சிங்கப்பூர்... மலேசியா என்று வெளிநாடுகளுக்குப் பறந்து கொண்டிருப்பவன். கடந்த இரு மாதங்களாக இவன் கண்ணிலேயே அகப்படவில்லை.

''எப்படிடா இருக்கே'' கேட்டபடி டேபிளின் மேல் அமர்ந்து கொண்டான்.

''ஏன் கேட்க மாட்டே? ஃபாரின் ட்ரிப்புன்னா... போன் கூட பண்ண மாட்டியா? ஆளை அடியோடு மறந்துட்டு... இப்ப வந்து கேட்கிறான்பார்.''



''படு பிஸியா இருந்தேன்டா... ஸாரி... வேறன்னடா விசேஷம்?''

''ரெண்டு விஷயங்கள் இருக்கு... ஒண்ணு... அம்மா எனக்கு பொண்ணு பாத்து முடிவு பண்ணினாங்க.''

''டேய்... யார்ரா அவ?''

''என்னோட பி.ஏ. பவித்ரா.''

''என்னது? பவித்ராவா?''

''அருணை நாங்க தான வளர்த்துட்டு வரோம். எனக்கு வரப் போற மனைவி... என்னை நல்லாப் புரிஞ்சுகிட்டு அனுசரணையா நடந்துக்கிறவளா இருக்கணும்னு... அம்மா ஃபீல் பண்ணினாங்க.

''நான் அடிக்கடி பவித்ராவைப் பத்தி வீட்டுலே சொல்றதுண்டு. அவளோட புத்திசாலித்தனம், அவளது அணுகுமுறை, விரல் நுனியில் விவரங்களை அடக்கி இருக்கற விதம்... இதை எல்லாம் சிலாகிச்சு சொல்லி இருக்கேன்.

''அம்மா என்ன நினைச்சாங்களோ? பவித்ராவோட அட்ரஸை வாங்கி... அவ வீட்டுக்குப் போயி... அவ அம்மா கிட்டப் பேசி முடிச்சு... பவியோட தலையில பூவும் வச்சுட்டு வந்துட்டாங்க...

''அக்காவும் அத்தானும் அகால மரணமடைஞ்சுட்டாங்க... அந்த அதிர்ச்சியை விட்டு இன்னமும் நான் வெளியில வரல... அதான் கல்யாணத்தை ஒத்திப் போட்டுட்டே வரேன்.''

''அது சரி சந்துரு... நீ பவியை லவ் பண்றியா?''

நெற்றியைச் சுருக்கி ஒரு கணம் யோசித்த சந்துரு, மலர்ந்த முகத்துடன் ஏறிட்டான்.

''திறமை கண்ணுல பட்டுருச்சுன்னா... மனம் திறந்து பாராட்டுவேன். பவியோட டேலண்ட்டை அப்ரிஷியேட்

பண்ணி அடிக்கடி பேசினதை வச்சுக்கிட்டு... நா அவளை விரும்பறேன்னு எங்கம்மா கற்பனை பண்ணிக்கிட்டாங் களாம். நீயும் அதே மாதிரி தப்பர்த்தம் பண்ணிக்கிட்டே."

"சரி... இதை ஒபனா அம்மாகிட்ட சொல்லி பவி வீட்டுக்குப் போகாம நீ தடுத்திருக்கலாமே?"

"ஒபனா சொல்லிட்டேன்... 'இதுக்கு மேல உங்க இஷ்டம்'னு அவங்க சாய்ஸுக்கே விட்டுட்டேன். அப்புறமா அம்மாவும் அப்பாவும் கலந்து பேசி அவ வீட்டுக்குப் போனாங்க... என் மனசுல யாருமில்ல... க்ளீன் சிலேட்டா வச்சிருக்கேன். அதனால... அவங்க மருமகளை... அவங்களே செலக்ட் பண்ணட்டும்னு விட்டுட்டேன்."

ரகுவின் முகம் கூம்பிப் போனது.

"சரி... ரெண்டாவதா ஏதோ சொல்ல வந்தியே?"

"அம்மாவுக்கு பாரலிட்டிக் அட்டாக் வந்துடுச்சுடா."

"தி... திடீர்னு... எதுக்கு இப்படி ஆச்சு?" படாரென்று எழுந்து நின்றான்.

"அதீதமான கவலைப்பட்டிருக்கணும்... இல்ல பலத்த அதிர்ச்சி அடைஞ்சிருக்கணும்னு டாக்டர் ஃபீல் பண்றார். மருந்து மாத்திரை எல்லாம் ஒழுங்கா தான் எடுத்துக்கிட்டிருந்தாங்க... எதனால இப்படி ஆச்சுன்னு தெரியல..."

"கிளம்புடா... நான் அம்மாவை உடனடியா பார்த்தாகணும்."

கார் வீட்டை நோக்கிப் பறந்தது.

ரகுவின் மனதில் புயல் வீசிக் கொண்டிருந்தது.

ரகு சிறந்த மதியூகி! எடுத்த எடுப்பிலேயே ஒருவரைப் பற்றி நன்கு எடை போட்டு விடுவான்.

அவனுக்கு அந்த பவித்ராவைப் பார்த்த மாத்திரத்திலேயே பிடிக்கவில்லை.



'சந்துரு நல்லவன் தான். திறமை சாலி தான். இளகிய உள்ளமும் பரந்த மனப்பான்மையுடன் கொண்டவன் தான். பிஸினஸில் பல சிகரங்களைத் தொட்டு முன்னேறி முன்னணியில் நிற்பவன் தான்...

'ஆனால் வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி விடுபவன் ஆயிற்றே? எதையும் கண் மூடித்தனமாக நம்பி விட்டு... பின்னால் அதற்காக வருத்தமும் பட்டிருக்கிறானே.'

யோசனையில் மூழ்கிப் போனான் ரகு.

"அடடே! ரகு... வாப்பா... பாத்து ரொம்ப நாளாச்சே? நல்லா இருக்கியாப்பா? வா... உட்காரு" உபசரித்தார் பத்மநாபன்.

"உங்க ஆசீர்வாதத்துலே நான் நல்லா இருக்கேன் அங்கிள். ஆன்ட்டிக்கு இப்படியொரு நிலைமையா? ச்சே."

"எல்லாம் விதிப்படிதானப்பா நடக்கும்?"

"அட... ஆன்ட்டி முழிச்சுட்டுதான் இருக்காங்களா? என்ன ஆன்ட்டி இது? உங்க கையால காரசாரமா வத்தக்குழம்பும், பருப்பு உசிலியும், உருளைக் கிழங்கு கறியும் சாப்பிடலாம்னு... ஃபாரினிலிருந்து நாக்கை சப்புக் கொட்டிக்கிட்டு வந்தேன். ஏமாத்திட்டீங்களே?"

ரகுவைப் பார்த்ததுமே சந்திராவின் முகம் பூவாய் மலர்ந்தது.

"'நீயும் எனக்கொரு பிள்ளை தான்டா' அப்படின்னு சொல்வீங்களே? நான் இல்லாத நேரமா பாத்து... சந்துருக்கு பொண்ணு பாத்து முடிவு பண்ணிட்டீங்களே? நியாயமா? பவித்ராவைப் பேசி முடிச்சிருக்கோம்னு... போன்ல கூட ஒரு தகவல் தரலையே? உங்களுக்கே இது நல்லாயிருக்கா?"

உரிமையுடன் பிலுபிலுவென்று சண்டை பிடித்தான்.

''இழ்ழே... இழ்ழே.. வழ்ழு'' சந்திரா ஏதோ பதில் சொல்ல முற்பட்டாள். அவரது முகம் மிக்க வேதனையையும் திகிலையும் அப்பட்டமாக வெளிப்படுத்தியதை உன்னிப்பாக கூர்ந்து பார்த்தான் ரகு.

''சரி... சரி விடுங்க ஆன்ட்டி! டேய்... சந்துரு... எல்லா வியாதிகளுக்கும் காரணமே மனசு தான்டா... மனசு சந்தோஷமா இருந்தா... ஒரு வியாதியும் அண்டாது.

''முதல்லே எதிர்த்தாப்பல இருக்கற அக்கா, அத்தானோட போட்டோவை... ரிமூவ் பண்ணு. ஆன்ட்டியை கிட்டயே இருந்து கவனிக்க ஒரு நர்ஸை அப்பாயின்ட் பண்ணுவோம்.

''அப்புறமா... பிஸியோ தெரபியோட ஸ்பீச் தெரபியும் குடுத்தோம்னா... ஆன்ட்டி சீக்கிரமா நல்லாவே பேச ஆரம்பிச்சிடுவாங்க..

''பிஸினஸ் வேலைகளை மூட்டை கட்டி வைச்சுட்டு... ஆன்ட்டி அங்கிள், அருணை அழைச்சுகிட்டு எங்கேயாவது போயிட்டு வரணும்டா...

''ஆன்ட்டிக்கு ரொம்பப் பிடிச்ச இடம் எது அங்கிள்? மீன் அடிக்கடி போய் பாக்கணும்னு பிரியப்படற ஊர் எது?''

''தேனிக்குப் பக்கத்துல இருக்கற வீரபாண்டி கிராமம்... வருஷத்துல ரெண்டு வாட்டியாவது வீரபாண்டி அம்மனை தரிசிக்கணும்னு ரொம்பவே ஆசைப்படுவா... அவ பிறந்து வளர்ந்ததே அந்த கிராமத்தில் தான்.''

''அப்போ தேனியில 'ஸ்டே' பண்ணிக்கிட்டு... வீரபாண்டிக்கு மட்டுமில்லாம சுருளி, தேக்கடின்னு பல இடங்களுக்கு ஆன்ட்டியை அழைச்சுட்டுப் போகணும். அவங்க



சதா படுக்கையிலே படுத்தே தான் இருப்பாங்களா? இல்ல...''

''இல்லல்ல... யாராவது கைத்தாங்கலா பிடிச்சுக்கிட்டு வாக்கிங் ஸ்டிக்கை கையில குடுத்தோம்னா... மெதுவா நடக்கவும் செய்வாங்க.''

''அப்பாடா... முதல்லே கிளம்பறதுக்கான ஏற்பாட்டை பண்ணு... இப்படியே கவலைப் பட்டுக்கிட்டே இருந்தா... ஆன்ட்டிக்குப் பக்கத்துலேயே ரெண்டு பெட்டை போட்டு நீயும் அங்கிளும் படுத்துக்க வேண்டியது தான்.''

பக்கென்று சிரித்து விட்டார் பத்மநாபன். சந்திராவின் முகத்திலிருந்த இறுக்கம் தளர்ந்து ஒரு முறுவல் வந்து அமர்ந்தது.

விரைவில் தனக்குள் மிகப் பெரிய இரசாயன மாற்றம் ஏற்படப் போகின்றது... என்பதை சந்துரு சற்றும் உணரவில்லை.

## 6

தோட்டத்தில் உள்ள மரங்கள் சளைக்காமல் சாமரம் வீசிக் கொண்டிருந்தன.

தோட்டத்தைக் கடந்து படித்துறைக்கு வந்த உதயாவின் விழிகள் ஆவலுடன் பக்கத்து வீட்டுத் தோட்டத்தைத் துழாவின.

அன்று ஞாயிற்றுக்கிழமை!

சாவகாசமாக படிக்கட்டில் அமர்ந்து அரை மனதுடன் அழுக்குத் துணிகளுக்கு சோப்புப் போட்டவள்... கைகளை ஆற்று நீரில் கழுவிக் கொண்டு... நீண்ட படிக்கட்டில் மெல்ல நடந்து பக்கத்து வீட்டுத் தோட்டத்திற்குள் புகுந்தாள்.

'இன்று காலை அம்புஜம் மாமி கோலம் போடுவ தற்குக் கூட எழுந்து வரவில்லையே? என்னிடம் சொல் லிக் கொள்ளாமல் வெளியூருக்கும் எங்கும் செல்ல மாட்டாரே?'

கொல்லைப்புறக் கதவில் கை வைத்ததுமே... உட்புறம் தாழிடப் படாததால் படக்கென்று திறந்து கொண்டது.

''மாமி!... மாமி'' குரல் கொடுத்துக் கொண்டே தயங்கி நடந்தாள்.

புழக்கடை தாழ்வாரத்தில் தலைக்கு ஒரு மணைப் பலகையை வைத்துக் கொண்டு சுருண்டு படுத்திருந்தார் அம்புஜம் மாமி.

''என்ன மாமி? உடம்புக்கு முடியலையா?'' அவரருகே குனிந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

''ஒண்ணுமில்லைடா ராஜாத்தி. இலேசா தலை சுத்துச்சா... அப்படியே சுருண்டு படுத்துக்கிட்டேன். மூட்டு வலி வேறே குடையுது. வயசாகுது இல்லையா?''

''மணி பத்தரை ஆகுது. ஏதாச்சும் சாப்பிட்டீங்களா மாமி?''

''இல்லம்மா... பசிக்கவே இல்ல.''

''இப்படி சொன்னா எப்படி மாமி? உங்களுக்கு பி.பி வேற இருக்கு. மாத்திரை போட்டுக்க வேணாமா? ஒரு டம்ளர் சாதத்தைக் குக்கர்லே வச்சுடறேன். மிளகு ரசமும் தொட்டுக்க பருப்புத் துவையல் பண்ணிடறேன். அஞ்சே நிமிஷம் தான்... அப்படியே உங்க அழுக்குத் துணிங இருந்தா குடுங்க... சேர்ந்தாப்பல துவைச்சு அலசி றேன்.''

மாமி மறுத்ததைக் காதில் போட்டுக் கொள்ளாமல் வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கி விட்டாள்.



மாயமாய் சமைத்து வைத்து விட்டு அழுக்குத் துணிகளை அள்ளிக் கொண்டு நடக்க முற்பட்டவளின் கைகளைப் பற்றிக் கொண்டார் மாமி.

''உங்க அண்ணிக்கு இதெல்லாம் தெரிஞ்சா... திட்டப் போறா எனக்கு சங்கடமா இருக்கு உதயா.''

''டிபனை ஒரு பிடி பிடிச்சுட்டு குறட்டை விட்டுத் தூங் கறாங்க அண்ணி... அப்படியே அவங்களுக்கு தெரிஞ்சு என்னைத் திட்டினாலும் நான் கண்டுக்க மாட்டேன் மாமி... உங்களுக்கு உதவ முடிஞ்சதே என் பாக்கியம்னு நான் நெனக்கிறேன் மாமி.''

மந்தகாசமாய் முறுவலித்தாள்.

''உன்னண்ட ஒரு விஷயத்தைச் சொல்லணும் உதயா. அதைக் கேட்டுட்டு உன் மனசு ரொம்ப வருத்தப்படு மேன்னு தான்... நான் தயங்கறேன்.''

''எதுவா இருந்தாலும் சொல்லுங்க மாமி... நான் தாங் கிப்பேன். எல்லாமே பட்டுப் பட்டு என் மனசு மரத்துப் போச்சு மாமி சொல்லுங்க'' விரக்தியாய் பேசியவளை ஏறிட்டுப் பார்க்கவே... மாமிக்கு மிக்க வேதனையாகவும் தர்ம சங்கடமாகவும் இருந்தது.

''போன வாரம் சாயரட்சை வேளையில அம்மன் கோவிலுக்குப் போயிருந்தேன். அங்க கோவில்லே வச்சு என் சிநேகிதியை சந்திச்சேன். நேரம் போறதே தெரியாம பேசிட்டிருந்தோம். அப்புறமா அவளை பஸ் ஏத்தி விட்டுட்டு... ஒட்டமும் நடையுமா வீட்டை நோக்கி வந் துண்டிருந்தேன்.

''திடீர்னு அந்தப் பயல்... அதான் ரங்கன் இல்ல? என் முன்னாடி வந்து நின்னான்... தறுதலைப் பயல் மூக்கு

முட்ட நன்னா குடிச்சிருந்தான் போல... குப்புனு கெட்ட வாடை குடலைப் புரட்டுச்சு...

''என்ன மாமி கோவிலுக்குப் போயிட்டு வரீங்களா?'ன்னு கேட்டான். ''ஆமாண்டா அம்பி... ஏன் நந்தி மாதிரி குறுக்கே வந்து நிக்கறே... வழியை விடேன்னு'' சொன்னேன்.

''என் பொண்டாட்டியை எங்க காணோம்?''னு கேட்டான்.

''ஏண்டாப்பா... உனக்குத்தான் இன்னமும் கல்யாணமே ஆகலையே?''ன்னு கேட்டேன்.

''உதயா தான் என் பொண்டாட்டி''ன்னு வாய் கூசாம அவன் சொன்னதும்... எனக்குத் தூக்கி வாரிப் போட்டுடுத்து... ''அபச்சாரம்... அக்கிரமம்... கல்யாணமாகாத வயசுப் பொண்ணு உதயா... பாவம் பெத்தவங்களை இழந்துட்டு அண்ணி கிட்ட படாத பாடு படறா குழந்தை... நீயும் ஏண்டா அவ வயித்தெரிச்சலைக் கொட்டிக்கறே?'' அப்படின்னு கேட்டுட்டேன்.

''தாலி கட்டினாத்தான் பொண்டாட்டியா? ஏய்... மாமி கிழவி சில வருஷமா கற்பனையிலேயே அவ கூட வாழ்ந்து... குடும்பம் நடத்தி குழந்தை குட்டிங்களைக் கூடப் பெத்துட்டோம் தெரியுமா? சரி... உன் வழிக்கே வர்றேன்.

''என்னைத் தவிர வேற யாரும் அவ கழுத்துல தாலி கட்டவே முடியாது. கட்டணும்னு எவனாவது நெனச்சாக் கூட... அடுத்த நிமிஷமே அவன் தலையை உருட்டிடுவேன்... உதயா என் பொண்டாட்டி... கூடிய சீக்கிரமே அவ கழுத்துல நான் தாலி கட்டுவேன். அட்சதை போட்டு வாழ்த்து...

''என்ன வாயைப் பிளந்து பாக்கறே கிழவி? பெரியவங்க பேச்சு வார்த்தை நடத்திட்டிருக்காங்க... கூடிய



சீக்கிரம் ஊரை அடைச்சுப் பந்தல் போட்டு... சுத்தி இருக்கற எட்டுப்பட்டி கிராமமும் மூக்கு மேல விரலை வைக்கிறாப்பல... ஜாம் ஜாம்னு அமர்க்களமா எங்க கல்யாணம் நடக்கப் போகுது'' அப்படின்னான்.

''குடிகாரப் பயல் கிட்ட... நான் என்ன பேசினாலும் அது செவிடன் காதுல சங்கு ஊதின மாதிரி தான். இந்த அக்கிரமக் காரனுக்கு பகவான் தான் சரியான கூலி கொடுக்கணும்னு... பல்லைக் கடிச்சுக்கிட்டு மௌனமா வந்துட்டேன் உதயா.''

''எ... என்ன மாமி இது? ஐயோ... அந்த சண்டியர் ஊருக்குள்ளே எத்தன பேரு கிட்ட இதை மாதிரி சொல்லிட்டுத் திரியறானோ... தெரியலையே?

''இதைக் கேட்கிறவங்க என்ன நெனைப்பாங்க? அன்னிக்கு சூரியா அக்கா வீட்டுக்கு வந்தாளே... அப்பவே பூடகமா இதைப் பத்தி தான் சொல்லி புலம்பிட்டுப் போனா...

''எங்க அண்ணியும் அண்ணாவும் சூரியா அக்காவோட புக்ககத்துக்குப் போனாங்களாம். அவ மாமியார் கிட்டே ரொம்ப நாழி எங்க அண்ணி தனியா பேசிட்டிருந்தாங்களாம்...

''ஏதோ நடந்திருக்கு மாமி... அதான் இந்த ரங்கனுக்கு குளிர் விட்டுப் போச்சு.. இவ்ளோ துணிச்சலா என்னைப் பத்தி சொல்லிட்டு அலையறான்.''

தழு தழுத்தாள் உதயா.

''எதுக்கும் நீ உஷாரா இரு உதயா. இல்லேன்னா சூரியாவை மாதிரி உன்னையும் அந்த நரகத்துலேயே கொண்டு தள்ளிடுவா உங்கண்ணி...''

கண்களைச் சிமிட்டி துளிர்க்கத் தொடங்கிய கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டாள்.

''அம்பாள் பேர்ல பாரத்தைப் போட்டுட்டேன் மாமி. கண்டிப்பா அவ என்னைக் கைவிட மாட்டா... இந்த அனாதைக்கு அந்த அம்மனை விட்டா... வேற கதி?

''சரி மாமி! முதல்லே சாப்பிட்டுட்டு மாத்திரை போட் டுக்கோங்க. நான் துவைச்சுட்டு துணிகளை கொடியில காயப் போட்டுடறேன். நீங்க ஒய்வெடுங்க...

''எதைப் பத்தியும் கவலைப்படாதீங்க. நடக்கிறது நடக்கட்டும்.''

வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் அவரை ஏறிட்டு விட்டு... விருட்டென்று நடந்தாள்.

மாமிக்கு ஆறுதல் சொல்லி விட்டாள். ஆனால் உதயா வின் இதயமோ ஆற்றாமை தாளாமல் குமுறிக் கொண் டிருந்தது.

இன்னமும் மூன்றே மாதங்களில் அவளது படிப்பு முடிந்து விடும். கூடுதல் தகுதிக்காக சில கம்ப்யூட்ட கோர்ஸ்களை வேறு படித்து வைத்திருக்கிறாள்.

அவள் படிப்பில் கெட்டிக்காரி. எப்படியும் டிஸ்டிங் ஷனில் தேறி விடுவாள். கண்டிப்பாக அவளது தகுதிக்கு வேலை கிடைத்து விடும்.

வேலை கிடைத்ததும் அண்ணியின் முகத்தில் விழி காமல்... வீட்டை விட்டு வெளியேறி விட வேண்டும் ஏதாவது லேடீஸ் ஹாஸ்டலாகப் பார்த்து அதில் தங்கி கொள்ள வேண்டியது தான்.

'ஆனால் அக்கா சூரியாவின் கதி?

'தினமும் அந்த நரகத்தில் சித்திரவதை அனுபவித் வருகின்றாளே? அந்தப் போக்கிரியுடன் வாழ்ந்த போதும்... குழந்தைகளுடன் நம் வீட்டுக்கு வந்து நிம்மதி யாக இரு' என்று என்னால் இதுவரை சொல்ல முடிந்தத



அவள் படும் வேதனையைப் பார்த்து உள்ளுக்குள் மருகி இரத்தக் கண்ணீர் வடித்தது தான் மிச்சம்.

அந்த அதல பாதாளத்திலிருந்து அக்காவை எப்படி யாவது கை தூக்கி விட வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருக்கையில்... இவளையும் அதில் தள்ளி விட சதி நடக்கிறதே!

அண்ணியிடம் மறுத்துப் பேசினால் என்ன நடக்கும்? ஊகூம்... ரண களம் தான்!

நாக்கில் விஷத்தைத் தடவிக் கொண்டு சவுக்கைப் போல் சுழற்றி விளாசித் தள்ளி விடுவாளே?

என்ன செய்யப் போகிறேன் நான்?

ஒரு வழியும் புலப்படாமல் கண்ணைக் கட்டிக் காட் டில் விட்டாற் போலிருந்தது.

ஆற்றோர மரங்களின் கிளைகள் காற்றுக்குத் தலை யசைத்துக் கொண்டிருந்ததால்... பூக்கள் பொலபொல வென்று உதிர்ந்து ஆற்று நீரில் மலர்ப் படுக்கையாக மெல்ல மிதந்து வந்தன.

துணிகளை அலசிப் பிழிந்த உதயா... சட்டென்று அவற்றை பக்கெட்டில் போட்டு விட்டு... நீரின் மேற்பரப் பில் அசைந்து மிதந்து வந்த பூக்களை விழிகள் விரியப் பார்த்தாள்.

நாளை என்ன நடக்கப் போகின்றதோ? அது பகவா னுடைய சித்தம்... ஆனால் இன்று... இப்பொழுது இந்த கணத்தில்... கண்ணையும் கருத்தையும் கவர்ந்த இயற்கை அழகை ரசித்து அனுபவிப்பதில்... லயித்துப் போனாள் உதயா.

கோபம் வந்தாலும் சரி... கவலைகள் ஆட்டிப் படைத் தாலும் சரி... சற்று நேரத்திற்கெல்லாம் அதைத் தூக்கி

எறிந்து விட்டு நிகழ்கால நிதர்சனத்தை ஏற்று நடப்பவள் உதயா.

சேலையின் அடிமுனை நனையாத வண்ணம் சற்றே உயர்த்திப் பிடித்துக் கொண்டு கீழ்ப்படியில் கால் வைத்தாள்.

பூக்களோடு ஆங்காங்கே வெங்காயத் தாமரைகளும் தயங்கித் தயங்கி மிதந்து வந்தது... கொள்ளை அழகாய் இருந்தது.

குனிந்து பூக்களை சிறிது வாரியெடுத்தவளின் அருகில் நிழலாடவே... திரும்பி ஏறிட்டவளுக்கு பகீர் என்றிருந்தது.

ரங்கன்... கோணல் சிரிப்புடன் அவளருகே நின்று கொண்டு இருந்தான்.

'இவன் எப்படி இங்கே வந்தான்?'

'சமீபத்தில் பெய்த மழையில் வேரோடு சாய்ந்த இரு மரங்களை சேர்த்துக் கட்டி அக்கரைக்கும் இக்கரைக்குமாக பாலம் அமைத்து... சிறுவர்கள், விடுமுறையில் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தார்களே?

'அந்தப் பாலத்தில் நடந்து இக்கரைக்கு வந்து விட்டான் போலும்...'

"என்ன உதயா? உனக்கு பூவுன்னா அவ்ளோ இஷ்டமா? மல்லித் தோட்டம், ரோஜாத் தோட்டம், கனகாம்பரத் தோட்டம் அத்தனையையும் உனக்காக வளைச்சுப் போட்டுடறேன்... இன்னும் வேறென்ன பூ பிடிக்கும் உனக்கு?"

"வரம்பு மீறி பேசிட்டிருக்கீங்க... எங்கக்காவோட மைத்துனராச்சேன்னு பல்லைக் கடிச்சுட்டிருக்கேன்... மாமி கிட்டே கன்னா பின்னான்னு பேசியிருக்கீங்க... இதெல்லாம் எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கலை... நகர்ந்து வழியை விடுங்க."

அழகிய விழிகளில் தீப்பொறி பறந்தது.

"உனக்குப் பிடிச்சிருந்தா என்ன... பிடிக்கலைன்னா எனக்கென்ன? எனக்கு உன்னை ரொம்பவே பிடிச்சிருக்கு... உன்னை நெனைச்சு நெனைச்சு பித்துப் பிடிச்சு அலையறேன்... என் மனசு புரியலையா உதயா?"

சட்டென்று அவளது தோளில் கை வைத்து... தன்னருகே இழுத்தான் ரங்கன்.



## 7

அம்புஜம் கூறியதைக் கேட்டதிலிருந்து... ரங்கனை நினைத்தாலே உதயாவுக்குள் உலை கொதித்துக் கொண்டிருந்தது.

'பொறுக்கி ராஸ்கல்... பேயை நினைத்த மாத்திரத்தில் வந்து நிற்கும் என்பார்களே? சற்று முன்பு தான் இவனைப் பற்றி மாமி பேசினார்...

'ஓசைப் படாமல் இவ்வளவு கிட்டத்தில் வந்து நிற்கிறானே தடியன்?

'இவன் பெரிய பணக்காரனாக இருக்கலாம். மிராசுதாராக இருக்கலாம்... ஆனால் என்னை... என் மனதை எப்படி இவனால் விலைக்கு வாங்க முடியும்?

'முறையாக எச்சரிக்கை செய்தும்... என்ன தெனாவெட்டாகப் பேசுகிறான்? சல்லிப் பயல்...

'என்ன ஒரு ஆணாதிக்கத் திமிர்?'

உள்ளுக்குள் அதுவரை குமுறிக் கொண்டிருந்த ஆத்திரமும் கோபமும் எரிமலையாய் வெடித்தன.

கையை இழுத்து ஓங்கி ஒரு அறை வைத்தாள்.

''அப்பப்பா... கையா இது? இடி இறங்கியது போலிருக்கிறதே?' எதிர்பாராத தாக்குதலில் நிலை குலைந்தான் ரங்கன்.

பெண் என்பவள் மலர் போன்று அழகானவள் தான். மென்மையானவள் தான். தென்றலைப் போன்றவள் தான்.

ஆனால் அவளைச் சீண்டினால்... புயலாக மாறுவாள். எரிமலையாக வெடிப்பாள்.

அவன் சுதாரித்து வெறி கொண்டு நிமிர்வதற்குள்... கை விரல்களை மடக்கி முஷ்டியால் ஓங்கி அவனது மூக்கில் குத்தினாள்.

''ஐயோ... ஆ... ஆ'' மூக்கிலிருந்து கொட கொடவென்று இரத்தம் வழிந்தது.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவனது புஜத்தைப் பற்றி ஆற்றுக்குள் தள்ளினாள்.

''இன்னிக்கு உன்னோட சில்லு மூக்கு தான் உடைஞ்சிருக்கு... இனிமே என் வழியில குறுக்கிட்டா... என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது... ஜாக்கிரதையா இருந்துக்கோ...

''செத்தாலும் சாவேனே தவிர... உனக்கு கழுத்தை நீட்ட மாட்டேன்டா ராஸ்கல்.''

படிக்கட்டுகளில் மூச்சிரைக்க ஏறியவள்... தோட்டத்திற்குள் புகுந்து ஓடி கொல்லைப்புறக் கதவை ஓங்கி சாத்தினாள்.

கதவில் சாய்ந்து நின்றிருந்தவளின் இதயம் எகிறித் துடித்துக் கொண்டிருந்தது.

அப்படியே சரிந்து அமர்ந்து முழங்காலில் முகம் புதைத்து விம்மினாள்.



ரங்கன் அத்து மீறி அவளது தோளில் கை வைத்ததும்... கோபம் தலைக்கேறி அவனை அடித்து விட்டிருந்தாள்.

ரங்கன்... அடிபட்ட பாம்பாயிற்றே? கொத்தாமல் விடுவானா?

'பெற்றோர்களை இழந்த அனாதை நான்.. அடைக்கலம் தர வேண்டிய அண்ணன் ஒரு மண் குதிரையாய் இருக்கிறான்.

'அண்ணி அம்மாவிற்கு சமமானவள். ஆனால் அவளுக்கு வாய்த்த அண்ணி சுகந்தி... அவளது வாழ்வில் மண்ணள்ளிப் போடுவதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாளே?

சொந்த வீட்டிலேயே அந்நியமாய்... அனாதையாய் பாதுகாப்பில்லாமல் வாழும் நிலைமை ஏற்பட்டிருக்கிறதே?

எப்படி மீளப் போகிறேன் நான்? சூரியாவுக்கும் எனக்கும் விடிவு காலமே பிறக்காதா?

ஒரு பெரிய மலையே மறித்துக் கொண்டு நின்றாற் போல்... மலைப்பாக இருந்தது.

தேற்றுவாரின்றி தேம்பி அழுதாள் உதயா.

* * *

இரவு ஏழரை மணி!

சுகந்திக்கு மிகவும் பிடித்தமான வெங்காய ரவா தோசையை முறுகலாக வார்த்துக் கொண்டிருந்தாள் உதயா.

காரசாரமான தக்காளி சட்னிக்கு தாளித்துக் கொட்டிய போது... ''ஏய்... உதயா! இங்கே வாயேன்'' என்று அண்ணன் சபேசன் கோபமாய் இரைந்தான்.

திடுக்கிட்டு நிமிர்ந்தவள்... அடுப்பை சட்டென்று அணைத்து விட்டு அடுக்களையை விட்டு வெளியில் வந்தாள்.

சபேசனின் முகத்தில் கோபம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது "என்ன அண்ணா?"

"உன் மனசுல என்னதான் நெனச்சுட்டிருக்கே? அதிகம் படிச்சுட்டோம்கிற திமிரா? இல்ல... ரொம்பவே அழகா இருக்கோம்கிற அகம்பாவமா? எவ்ளோ தைரியம் இருந்தா... நீ இதைப் பண்ணியிருப்பே?"

"எனக்குத் திமிரும் இல்ல... அகம்பாவமும் இல்ல... ஒரு அகதியைப் போல அண்டி... அனாதை மாதிரி வாழ்ந்துட்டு இருக்கேனே? எனக்கெப்படி திமிரும் அகம்பாவமும் இருக்கும்?"

"பார்த்தீங்களா...? பார்த்தீங்களா? சந்தடி சாக்கில நம்பளை எப்படிக் குத்திக் காட்டறா பாருங்களேன்... இதை... இதைத் தான்டி திமிருன்னு சொல்றாரு... என்னங்க... நல்லாக் கேளுங்க... உங்க தங்கச்சியை... பெத்த மகளுக்கும் மேலா அவளை நான் உள்ளங்கையில் தாங்கியும்... என்ன பிரயோஜனம்?

"அனாதை மாதிரி நடத்தறோம்னு பேசிட்டா பாத்தீங்களா?"

மனைவி சுகந்தி வேப்பிலை அடித்ததும்... சபேசனின் ஆவேசம் ஜிவ்வென்று உச்சிக்கு ஏறியது.

"வர வர உனக்கு வாய்த் துடுக்கு ரொம்ப ஜாஸ்தியாயிடுச்சு... மட்டு மரியாதை தெரியலை... ஏன் மனசு புண்படும்படியா பேசறே?

"உறவுக்காரங்கன்னு உரிமையா வீடு தேடி வந்திருக்காரு ரங்கன்... எவ்ளோ பெரிய பணக்காரரு... எப்படி பந்தா இல்லாம சகஜமா பழகுறாரு... அவருக்கு காபி குடுத்திருக்கே... டம்ளரை கை நீட்டி வாங்கும்போது... தவறுதலா. உன் கையைத் தொட்டுட்டாருன்னு... மூர்க்கத்



தனமா அவரோட முகத்தைக் காயப் படுத்தியிருக்கியே? நீயெல்லாம் படிச்ச பொண்ணு தானா? டீஸண்டா நடந்துக்க வேணாம்?"

"என்னது? ரங்கன் வீட்டுக்கு வந்தாரா? நான் காபி குடுத்து உபசரிச்சேனா?... அண்ணா இது அபாண்டம்! நான் இன்னிக்கு துணி துவைக்கப் படித்துறைக்குப் போயிருந்தபோது... அந்த ரங்கன் அத்து மீறி பேசினதுமில்லாம... கிட்ட நெருங்கி வந்து... அதான் கோபத்துல அடிச்சுட்டேன்.

"அ... அண்ணி! நான் என்ன பாவம் செய்தேன்? எதுக்கு இப்படி அப்பட்டமான பொய்யைச் சொல்றீங்க?"

அழுகையும் ஆத்திரமுமாக கேட்டு விட்டாள் உதயா.

"பாத்தீங்களா... பாத்தீங்களா? உங்க முன்னாடியே என்னை எப்படி ஏசறான்னு பாருங்களேன்... நீங்க இல்லாதப்ப என்னவெல்லாம் சொல்றா தெரியுமா?

"இவளையும் இவ அக்கா சூரியாவையும் நான் ரொம்ப கொடுமைப் படுத்திட்டேனாம்... அதான் 'உங்க வயித்துல ஒரு புழு பூச்சி கூட தங்காம போச்சு... மலடியா நிக்கிறீங்க" அப்படின்னு வாய் கூசாம சொல்றாங்க...

"அண்ணி... அம்மாவுக்கு சமானம்... ஆனா இவளுங்க என்னை எதிரியா நெனச்சு... வெந்த புண்ணுல வேலைப் பாய்ச்சறாங்க... எல்லாம் என் விதி."

முகத்தில் அறைந்து கொண்டு அழ ஆரம்பித்தாள் சுகந்தி.

"வீடு தேடி வந்த மனுஷனை அவமானப்படுத்தினதும் இல்லாம அப்பட்டமா பொய் சொல்றதுமில்லாம... என் கண் முன்னாடியே சுகந்தியை எடுத்தெறிஞ்சு பேசறியே? எவ்ளோ தைரியம்?

"பெத்த பொண்ணுங்களுக்கும் மேலா உங்களை சீராட்டினவளைப் போய்... நா கூசாம 'மலடி'ன்னு சொல்லி இருக்கியே?"

சுகந்தி கதறத் தொடங்கியதும் சபேசனுக்கு சர்வமும் பதறிவிட்டது.

'பளார்... பளார்' என்று உதயாவின் கன்னதில் மாறி மாறி அறைந்தான்.

"மன்னிப்பு கேளுடி... அண்ணி கிட்ட.... இப்படிப் பேசினதுக்கு மன்னிப்பு கேளு... இனிமே பேச மாட்டேன்னு சொல்லு."

அறை பட்ட கன்னங்கள் ஜிவு ஜிவு என்று தீயாய் காந்தின. கண்களில் பூச்சி பறப்பது போலிருந்தது.

"மா... மாட்டேன்... நான் அந்த வார்த்தையைச் சொல்லி அவங்களை நோகடிக்கலை... நான் ஏன் மன்னிப்பு கேட்கணும்?"

"ஒரு பொண்ணுக்கு இவ்ளோ திமிரு ஆகாதுடி..." மீண்டும் அறைந்தான்.

அறை பட்ட வேகத்தில் கீழுதட்டில் பல் பட்டு இரத்தம் கசிய ஆரம்பித்தது.

"அப்பாமேல ஆணையா சொல்றேண்ணா... நான் அண்ணியை அந்த மாதிரி பேசவே இல்ல... செய்யாத தப்புக்கு நான் எப்படி மன்னிப்பு கேட்பேன்?"

கரகரவென்று கண்களிலிருந்து அருவியாய் கண்ணீர் வழிந்தது.

'அப்பா' என்ற வார்த்தையைக் கேட்டதும்... சபேசனுக்கு இதயத்தில் 'சுருக்' என்று தைத்தது போலும்.

குற்றவுணர்வுடன் தலை குனிந்தபடி விருட்டென்று உள்ளறைக்குள் புகுந்து கொண்டான்.



கண்களிலிருந்து சுரந்த கண்ணீருடன் காயம் பட்ட உதட்டை சேலைத் தலைப்பால் ஒற்றியபடியே.. அப்பா நடேசனின் படத்தருகே சென்றாள்.

படத்தின் கீழே சரிந்து அமர்ந்து... அப்படியே சுவரில் தலை சாய்த்துக் கொண்டாள்.

"பண்றதையும் பண்ணிட்டு இப்படி நீலிக் கண்ணீர் வடிச்சா எல்லாம் சரியாயிடுமா...?. நீ ரங்கனோட முகத்துல தானே காயப்படுத்திருக்கே... ஆனா உங்க அக்காவுக்கு அங்க என்னாச்சு தெரியுமா?"

எகத்தாளமாகக் கேட்டவளை திகிலுடன் ஏறிட்டாள் உதயா.

"அ... அக்காவுக்கு என்னாச்சு அண்ணி?"

அடிவயிற்றில் ஒரு பயப் பந்து வேகமாய் உருண்டது.

"இவ்ளோ பயம் இருக்குல்ல?... ரங்கனோட மூக்குல இரத்தம் வர்ற மாதிரி குத்தியிருக்கியே... அதுக்கு முன்னாடி கொஞ்சமாச்சும் யோசிச்சியா? உங்கக்காவோட முதுகுத் தோல் உரியறாப்பல... பெல்ட்டைக் கழட்டி விளாசித் தள்ளிட்டானாம் கேசவன்.

"இந்த விஷயத்தை ரங்கன் தான் போன் பண்ணி எனக்கு சொன்னாப்பல."

"ஐயோ அக்கா..." அதிர்ச்சியில் ஆடிப் போய் விட்டாள் உதயா.

'அக்காவைப் பார்த்துவிட்டு வரலாமா? ஊகூம்... அண்ணி அனுமதிக்க மாட்டாள்... இரவு நேரத்தில் அந்த வீட்டிற்குச் செல்வதும் சரியல்ல... கேசவனும் ரங்கனும் கொந்தளித்துப் போய் மிருகங்களாகவே மாறி இருக்கிறார்கள்.

'பிறந்த வீட்டில் நாதியற்றுப் போனவள் என்ற தைரியத்தில் குளிர் விட்டுப் போய் அப்பாவி சூரியாவை இம்சித்துக் குதறுகின்றார்கள்.

'தந்தை ஸ்தானத்தில் நின்று தட்டிக் கேட்க வேண்டிய அண்ணன்... அவர்களது அந்தஸ்தையும் பணத்தையும் பார்த்து கூழைக் கும்பிடு போட்டால்... அந்த தடியன்கள் ஏன் கொட்டமடிக்க மாட்டார்கள்?' மருகிப் போனாள் உதயா.

'பெரிய இக்கட்டில் விரைவில் மாட்டிக் கொள்ளப் போகின்றோம்' என்று உள்ளூர பட்சி எச்சரித்தது.

## 8

செல்போன் சிணுங்கியது.

லாப் டாப்பில் மும்முரமாக மூழ்கிப் போயிருந்த சந்துரு 'செல்'லை ஆன் செய்து பேசினான்.

"டேய்! சந்துரு! எப்படா கிளம்பப் போறீங்க? பயணத்திற்கான ஏற்பாட்டை பண்ணிட்டியா?" ரகுவின் குரலில் ஆர்வம் ததும்பியது.

"ப்ச்! இல்லடா... ஆடிட்டிங் வேற இருக்கு... டென்டர் ஃபைலை அனுப்பிச்சாகணும். பிராஜெக்ட் ரிப்போர்ட்ஸ் சரி பார்க்கணும்... இதெல்லாம் முடிச்சுட்டோம்னா கொஞ்சம் ரிலாக்ஸ்டா கிளம்பலாமேன்னு பார்க்கிறேன்."

"பெரிய பிஸினஸ் மேன் நீ... ஒண்ணு மாத்தி ஒண்ணு வேலை இருந்துகிட்டே தான் இருக்கும்... ஆனா ஃபேமிலியையும் கவனிச்சாகணும்டா... அலை எப்போ ஓயறது? தலை எப்போ முழுகறதாம்?

"அம்மா, அருண் பயல், அப்பா இவங்க மூணு பேருக்குமே ஒரு மாற்றம் அவசியம்டா... அதை ஏன் நீ புரிஞ்சுக்கவே மாட்டேங்கிறே?"



"டேய் ரகு... ஏண்டா டென்ஷனாகுறே? நான் 'டிலே' பண்றதுக்கு ஒரு முக்கியமான காரணம் இருக்குடா."

"அது என்ன காரணமோ?"

"தேனிக்குப் பக்கத்துல வீரபாண்டி கிராமத்துல... பழைய ஜமீன் பங்களா ஒண்ணு விலைக்கு வந்திருக்குடா... அதை வாங்கறதுக்கான முயற்சியில ஈடுபட்டிருக்கேன்... ஒரு ஏஜண்ட் மூலமா அந்த ஏற்பாட்டை செய்திருக்கேன்.

"அந்த பங்களாவை சீரமைச்சு இந்தக் காலத்துக்கு ஏத்தபடி நவீனமா மாத்தியமைச்சுடணும்... அப்புறமா... தேனியில நஷ்டத்துல போயிட்டிருக்கற ஒரு நிறுவனத்தை நான் பேசி முடிச்சுட்டேன்டா...

"என்ன ரகு சப்தத்தையே காணோம்?"

"உம். புரியுது! அம்மாவை அழைச்சுட்டுப் போறோமே... கொஞ்சம் காலம் அங்க தங்கணுமே? லாட்ஜ்லே 'ஸ்டே' பண்ணினா அவ்ளோ நல்லாயிருக்காதுன்னு தானே இப்படி முடிவு எடுத்திருக்கே? குட் ஐடியா!

"ஆமா... இங்க இருக்கற நிறுவனங்களைக் கட்டி ஆளவே உனக்கு நேரம் பத்தலையே... குடும்பத்துக்குக் கூட டயத்தை ஒதுக்க முடியாம இறக்கை கட்டிட்டுப் பறந்துட்டிருக்கே?

"இந்த லட்சணத்துல தேனியில... நஷ்டத்துல ஓடற நிறுவனத்தை என்னத்துக்காக வாங்கினே?"

ரகுவின் குரலில் எரிச்சலும் அதிருப்தியும் ததும்பி வழிந்தன.

நண்பனின் உண்மையான கரிசனமும் அக்கறையும் சேர்ந்து சந்துருவின் முகத்தில் புன்முறுவலை பூக்க வைத்தன.

''அவசரப்படாதப்பா... எங்கம்மாவுக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை... அவங்க பிறந்த ஊருக்குப் பக்கத்துலேயே ஒரு நிறுவனத்தைத் தொடங்கணும். அங்க இருக்கறவங்களுக்கு குறிப்பா... பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரணும்'னு அடிக்கடி சொல்வாங்க.

''அப்போ... இதைப் பெரிய விஷயமா நான் எடுத்துக்கலை. ஆனா.. சமீப காலமா அம்மாவுக்கு இந்த நிலைமை ஏற்பட்டதும்... அவங்களோட ஆசையை நிறைவேத்தியே ஆகணும்னு நான் தீர்மானிச்சுட்டேன்.

''எல்லா ஏற்பாடுகளும் மளமளன்னு நடந்துட்டிருக்கு... கூடிய சீக்கிரமே கிளம்பிட* வேண்டியதுதான்... இங்கிருந்து மதுரை வரைக்கும் ஃபிளைட்... மதுரையிலிருந்து தேனிக்கு கார்லே போயிடலாம்... ஒண்ணும் பிரச்சினை இருக்காது.''

''அப்பாடா! என்னடா இவ்ளோ மெத்தமான இருக்கியேன்னு நெனச்சேன். ஆனா இவ்ளோ தெளிவா யோசிச்சபிளான் பண்ணி இத்தனை ஏற்பாடுகளையும் செய்துவிட்டு இருக்கே... சந்தோஷமா இருக்கு சந்துரு.''

பரிவு, நேசம், பாசம், அக்கறை, கண்ணியம், கடமை, கட்டுப்பாடு, அன்பு, மனிதாபிமானம், இரக்கம்... போன்ற அத்தனை நல்ல குணங்களின் இருப்பிடமாக சந்துரு திகழ்ந்தான்.

'இப்பேர்ப்பட்ட நல்லவனுக்கு ஒரு குறையும் நேராமல் இருக்க, வேண்டுமே... நல்ல மண வாழ்க்கை அமைய வேண்டுமே...' என்ற எண்ணம் ரகுவுக்குள் மீண்டும் எழும்பியது.

திரும்பத் திரும்ப மனதுக்குள் சுழன்றது... அலை மோதியது.



மறுமுனையில் நெஞ்சம் கனக்க மௌனித்தான் ரகு.

* * *

தோளில் மாட்டியிருந்த ஹேண்ட் பாக்கை எடுத்து மார்போடு அணைத்தபடி அந்தப் பெரிய வீட்டிற்குள் மெல்ல நுழைந்தாள் உதயா.

தயக்கத்திலும் பயத்திலும் அவளது கால்கள் பின்னின.

அந்த பிரமாண்டமான ஹாலைப் பார்வையால் வலம் வந்தாள்.

ஒருவரையும் காணோம்!

''அக்கா... அக்கா'' என்றழைத்தபடியே ஹாலை ஒட்டியிருந்த அந்த அறைக்குள் புகுந்தாள்.

மூன்று வயது குட்டிப் பாப்பா மரக் குதிரையில் ஏறி அமர்ந்து நிச்சலனமாய் 'டொடக்' 'டொடக்' என்று ஆடிக் கொண்டிருந்தது.

சுவரோரமாய் பாயை விரித்து அதில் குப்புறப் படுத்திருந்தாள் அக்கா சூரியா.

''அய்... சித்தி... உதயா சித்தி'' உற்சாகமாய் கூவியபடி குழந்தை மரக் குதிரையை விட்டு இறங்கி ஓடி வந்து உதயாவின் கால்களைக் கட்டிக் கொண்டது.

ஹேண்ட் பாக்கை கீழே வைத்துவிட்டு குழந்தையை வாரியணைத்துக் கொண்டாள்.

''என் பட்டு குட்டி... என் தங்கம்... ரோஜாப்பூ... அக்கா எங்கடா செல்லம்?''

''எங்க அக்காவா? உன் அக்காவா?'' தலையைச் சரித்து கேட்டவளின் குண்டு கன்னத்தில் முத்தமிட்டாள்.

''உங்க அக்கா தான்.''

''அது அம்மா கிட்டயே அழுதுகிட்டே இருந்துச்சா? பாட்டி வந்து நாலு மொத்து மொத்தி.... அ.. அவளை ஸ்கூலுக்கு அனுப்பிட்டாங்க.''

மழலை மாறாத குரலில் தெளிவாக எடுத்துக் கூறியது.

யாரோ கொடிய அரக்கன் தனது வலிய கரங்களால் மெல்லிய இதயத்தைக் கசக்கிப் பிழிவது போல்... வேதனையில் துடித்துப் போனாள் உதயா.

குழந்தையின் உச்சந்தலையை முகர்ந்து விட்டு அதைக் கீழே இறக்கி விட்டாள்.

''நீ விளையாடு செல்லம்... நான் அம்மா கிட்ட பேசிட்டு வரேன்.''

பேச்சு அரவம் கேட்டதும் மெல்ல எழுந்து அமர்ந்தாள் சூரியா.

''அ... அக்கா... நான் கேள்விப்பட்டது நிஜமாக்கா?''

அவளது தோளில் மெல்லக் கையை வைத்து முதுகுப் பக்கம் பார்வையால் துழாவினாள்.

ரவிக்கையைத் தாண்டி தெரிந்த வெற்றுடம்பில் வரி வரியாக பெல்ட்டால் அடித்து உருவாக்கப்பட்ட இரத்தக் கோடுகள் கன்றியிருந்தன.

''ஐயோ! இந்தக் கொடுமைக்கு ஒரு அளவே இல்லையா? மாட்டை அடிக்கிற மாதிரி அடிச்சுப் போட எப்படி அக்கா மனசு வந்தது?

''கடவுளே? உன்னை பெல்ட்டால விளாசித் தள்ளறப்ப... இந்த பச்சைக் குழந்தைங்க கிட்ட இருந்திருப்பாங்களே... பிஞ்சுக் குழந்தைங்க மனசு என்ன பாடுபடும்?

ஐயோ! எல்லாம் என்னால தானே? நீ இந்த ரணத்தை அனுபவிக்கிறதுக்கு... நான் தானே மூல காரணம்?



''அக்கா! என்னால... தா... தாள முடியலையே?'' மடை திறந்த வெள்ளமாய் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் கொட்டியது.

''உதயா! தோ... பாரு... எல்லாம் என் விதிடா ராஜாத்தி... அண்ணனும் அண்ணியும் என்னிக்கு என்னை இங்கே கொண்டு தள்ளினாங்களோ... அன்னிக்கு இருந்தே கிரகச் சாரம் என்னைப் பிடிச்சு ஆட்டுது...

''இதுக்கு நீ எப்படிக் காரணமாவே? என்ன நடந்திருக்கும்னு நேத்தே நான யூகிச்சுட்டேன். அந்த ரங்கன் உன்னண்ட அத்து மீறி நடந்திருப்பான்... என்ன நடந்தாலும் சகிச்சுட்டுப் போற குணம் உனக்கு... உன் பொறுமையை அளவுக்கு மீறி அவன் சோதிச்சுட்டான் போல... அதான் ஆத்திரம் தாளாம அவனை நீ அடிச்சிருக்கேன்னு நான் புரிஞ்சுகிட்டேன்

''நீ செஞ்சது சரி தான்! அதை நெனச்சு வருத்தப்படாதே. நேத்து உங்க அத்தான் என்னை விளாசித் தள்ளறப்போ... ரங்கன் வேடிக்கை பாத்துட்டிருந்தான்.

''என்னிக்கு இருந்தாலும் நான் தான் 'அவ கழுத்துல தாலி கட்டப் போறேன்.. வேற யாராவது அவளை மனசால நெனச்சாக் கூட... அவனோட தலையை உருட்டிடுவேன்... அவ கழுத்துல மூக்கணாங்கயிறை மாட்டிட்டு... என்னை அடிச்சதுக்கு... இதே மாதிரி... எங்க அண்ணன் மாதிரியே நானும் பாடம் கத்துக் குடுக்கறேன் பாருங்க'' அப்படின்னு கத்தினான்.

''எனக்கு அதை நெனச்சாத்தான் பயமா இருக்கு உதயா... ஆமா... என்ன... உன் உதட்டுல காயம் பட்டிருக்கே என்னாச்சு உதயா?''

''அத விடு அக்கா... உலகத்துலேயே எது ரொம்பக் கஷ்டம் தெரியுமா? எத்தனை கஷ்டம் வந்தாலும்

சோதனை வந்தாலும் கொஞ்ச காலம் கழிச்சு எப்படியாவது நமக்கு விடிவு காலம் பிறக்கும்னு குருட்டு நம்பிக் கையில... எல்லாத்தையும் சகிச்சுக்கலாம். ஆனா நம்மைச் சார்ந்தவங்களுக்கு கஷ்டம் வந்தாலோ... உடம்பு முடியாம போனாலோ... அதைத் தாங்கிக்கவே முடியாது... அது ஒரு பெரிய துக்கம் தெரியுமாக்கா?''

''என்ன தத்துவமெல்லாம் பேசறே? யார் உன்னை அடிச்சாங்க? அண்ணி.... ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியிலே உன்னைக் கை நீட்டி அடிக்க ஆரம் பிச்சுட்டாளா...? ராட்சசி இல்ல... அந்த தலையாட்டி பொம் மைக்கு சாவி கொடுத்து உன்னை அடிக்க வைச்சுட்டாளா?''

''விடுக்கா... முதுகுலே இரத்தக் களரியா இருக்கே? ஏதாவது மருந்து போட்டியாக்கா?'' தழுதழுத்தபடி கேட் டாள் உதயா.

''உம்! அதுல எல்லாம் எங்க புக்ககத்து மனுஷங்களை மெச்சிக்கணும் முதுகுல நல்லா விளாசித் தள்ளிட்டு... மருந்துக் கடைக்குப் போயி களிம்பு வாங்கிக் குடுத்துட்டு தான் அத்தான் போனாரு... சரி உதயா! மாமியார் மாடியில இருக்காங்க... ஆம்பிளைங்க வெளியில போயிருக்காங்க... நீ கிளம்பு! உனக்கு காலேஜுக்கு நேரமாகலையா? பஸ் போயிடப் போகுது. சீக்கிரம் கிளம்பும்மா.

''என்ன அப்படிப் பார்க்கறே? நீ சொன்னது மாதிரி என் னிக்காவது நமக்கு விடிவு காலம் பிறக்கும் உதயா! போ.''

கண்ணீர் மல்க சிரித்தாள் சூரியா.

சேலைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்த படியே அரை மனதுடன் எழுந்து ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு அந்த அறை வாசலை நெருங்கினாள்.

''சித்தி... டாட்டா.''



அண்ணாந்து பார்த்து பூவாய் மலர்ந்து சிரித்த குட்டி யின் நெற்றியில் முத்தமிட்டு விட்டு... விருட்டென்று திரும்பி நடந்தாள்.

அந்த அறை வாசலை மறித்தாற் போல் நின்று... நிலைக் கதவின் இருபுறமும் இரு கைகளைப் பதித்தபடி நின்றிருந்தான் ரங்கன்.

உதயாவுக்கு பகீரென்றிருந்தது. நாக்கு மேலண்ணத் தில் ஒட்டிக் கொள்ள விதிர்த்தபடி ஏறிட்டாள்.

## 9

வழியை மறித்துக் கொண்டு நின்றிருந்த ரங்கனின் தலையில் சம்மட்டியால் நாலு போடு போட்டு விட வேண்டும் போன்ற ஆத்திரம்... உதயாவுக்குள் பீறிட்டுக் கொண்டு கிளம்பியது.

திகில் ஒரு பக்கமும் ஆவேசம் ஒரு பக்கமும். அவளைப் பிடுங்கித் தின்றன.

சல்லித் தனமாக பார்வையால் அளவெடுத்தவனைக் கண்டு அருவெருப்பில் முகம் சுளித்தாள்.

தணல் மேல் நின்று கொண்டிருப்பதைப் போன்று... அவஸ்தையாக இருந்தது.

''பாத்தியா உதயா? நீயே என் வீடு தேடி வந்துட்டே பாத்தியா? நான் விரிச்ச வலையில சிக்காத கிளிகளே... கிடையாது. ஆனா நீ மட்டும் ரொம்ப ஸ்பெஷல் உதயா... ஆமா... நீ... நீ என்னோட பஞ்ச வர்ணக் கிளியாச்சே?

''ஆரம்பத்துல முரண்டு பண்ணினாலும் கடைசியிலே இந்த முரட்டு அத்தானை நீ தேடி வருவேன்னு... எனக்கு நல்லாத் தெரியுமே?''

''இப்படிப் பேச வெட்கமா இல்லே? நான் உன் முகத்துல காயப்படுத்தினதுக்கு... இங்க உங்கண்ணா கிட்ட வத்தி வச்சு... அப்பாவி சூரியாவோட முதுகுத் தோலை உரிக்க வச்சிருக்கியே? உனக்கு மனசாட்சியே கிடையாதா?

''ஒரு குடிகாரன் கிட்ட... பொம்பளைப் பொறுக்கிகிட்ட பேசி என்ன நியாயத்தை நிலை நாட்ட முடியும்?

''வழியை விடு.. எனக்கு காலேஜுக்கு டயமாச்சு! கிளி, புறா, மயில்னு பினாத்திகிட்டு திரியாதே... நான் உதயா... நீ நெனக்கிறது எதுவும் ஈடேறாது.''

ஹேண்ட் பாக்கால் அவனது கையை நெட்டித் தள்ளி விட்டு... விடு விடுவென்று வெளியேறினாள்.

''எங்க தட்டினா நீ அடங்குவேங்கிற சூட்சுமம்... எனக்கு நல்லாத் தெரியும் உதயா செல்லம்... பாத்துகிட்டே இரு... இந்த ரங்கனோட காலடியிலே... நீயே வந்து சரணாகதி அடையத்தான் போறே...''

வெற்றி வாகை சூடி விட்ட பூரிப்பில் கடகடவென்று நகைத்தான்.

திரும்பிக்கூட பார்க்காமல் ஓட்டமும் நடையுமாக பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள் உதயா.

'புதை மணலில் கொஞ்சம் கொஞ்சமாக அமிழ்ந்து செத்துக் கொண்டிருக்கிறாள் சூரியா. அதிலிருந்து அவளை மீட்கும் வழி வகை தெரியவில்லை. ஏதாவது ஒரு உபாயம் கண்டு பிடித்து அவளை மீட்பதற்குள்... உதயாவே அந்தப் புதை மணலுக்குள் விழுந்து புதைந்து விடுவாள் போலிருக்கிறதே.'

இதயம் பாறாங்கல்லாய் கனக்க... அவள் பஸ் ஸ்டாப்பை அடைந்தபோது... அங்கே அம்புஜம் மாமி கையில் சிறு மஞ்சள் பையைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தார்.



''அட... என்ன மாமி? எங்கே கிளம்பிட்டீங்க? இப்போ உடம்பு கொஞ்சம் தேவலாமா?''

''நாலு சுவத்துக்குள்ளேயே அடைஞ்சு கிடந்தா... மனசுல கண்டதையும் போட்டுக் குழப்பிண்டு இருக்கேன். அதான்... தேனியில இருக்கற என்னோட சிநேகிதி ஆத்துக்கு கிளம்பிட்டேன்.''

அவரது முகத்தில் ஏகத்திற்கும் சோகமும் சோர்வும் படர்ந்திருந்தன.

''மாமி! இதோ நாம்ப போக வேண்டிய பஸ் வந்தாச்சு... பார்த்து... ஜாக்கிரதையா ஏறுங்க...'' அவ்ரை ஏற்றிவிட்டு தானும் ஏறிக் கொண்டாள் உதயா.

பஸ் தேனியை அடைந்ததும் எழுந்து கொண்ட மாமி இறங்க முற்படுவதற்குள் தள்ளாடித்தான் போனார்.

''ஏய்... கிழவி! சீக்கிரமா இறங்கித் தொலை... தள்ளாத வயசுல தனியா கிளம்பிடுதுங்க... ச்சே! சாவு கிராக்கிங்க'' கண்டக்டர் ஈவு இரக்கமில்லாமல் இரைந்ததும்... உதயாவுக்கு இருப்பே கொள்ளவில்லை.

சட்டென்று அவளும் மாமியைத் தொடர்ந்து இறங்கி விட்டாள். ''என்ன உதயா? இங்கேயே இறங்கிட்டே? காலேஜுக்குப் போகலை?''

''காலேஜுக்கு ஒரு அரை மணி நேரம் லேட்டாப் போனா ஒண்ணும் தப்பில்லை மாமி... உங்களைத் தனியா அனுப்ப எனக்கு மனசில்லை... உங்க உடம்பு இன்னும் சரியாகலையே? அதான்.''

மாமியின் கையைப் பிடித்தபடி நடந்தாள். பத்து நிமிடத்தில் 'தாயார் மெஸ்' என்ற போர்டை பார்த்ததும் ஆச்சரியத்துடன் மாமியை ஏறிட்டாள் உதயா.

''வா... உதயா! என்ன மெஸ்சுக்கு அழைச்சுட்டு வந்துட்டேன்னு பாக்கறியா? என் சிநேகிதி தைலாம்பாள் மெஸ் நடத்திண்டு இருக்கா... ஒரு நிமிஷம் உள்ளே வந்துட்டுப் போயேன்.''

ஏக காலத்தில் அந்த ஹாலில் இருபத்தைந்து பேர் அமர்ந்து சாப்பிடலாம். அதையொட்டிய ஓட்டு வீட்டில் தான் தைலாம்பாள் இருக்கிறார் போலும்.

''மாமி! நீங்க உங்க பிரண்டை பார்த்துட்டு உடனே கிளம்பிடாதீங்க... சாயந்தரம் மூணு மணிக்கெல்லாம் காலேஜை விட்டு வந்துடுவேன். தினமும் தேனியில இறங்கி கம்ப்யூட்டர் சென்டருக்குப் போயிட்டு தான் வருவேன்னு... உங்களுக்கே தெரியுமே?

''கம்ப்யூட்டர் கிளாஸை முடிச்சுட்டு வந்து உங்களை அழைச்சுட்டுப் போறேன். சரியா?''

''என் சிநேகிதி மேல இவ்ளோ பாசமா கரிசனமா இருக்கியேம்மா... நேக்கு உன்னை ரொம்பவே பிடிச்சிருக்கு குழந்தே.''

அந்த தைலாம்பாள் இவளது கன்னத்தை வருடியபோது சிறு புன்னகையை சிந்தி விட்டு விரைந்தாள் உதயா.

அன்று மாலை கம்ப்யூட்டர் வகுப்பை முடித்து விட்டு... நேராக தைலாம்பாள் வீட்டை அடைந்தாள்.

''பாத்தியா உதயா? எனக்கு மகன்களும் மாட்டுப் பொண்ணுங்களும் சரியில்லை. அதனால நான் வேதனைப் பட்டுண்டு இருக்கேன். ஆனா தைலாவுக்கு எல்லாமே நன்னா அமைஞ்சு இருக்கு... ஒரே ஒரு பிரச்சினை? நீ ஏதாவது ஐடியா சொல்லேன்.''

''வாங்க... மாமி! நாம்ப போயிக்கிட்டே பேசலாம். லேட்டாயிட்டா அண்ணி திட்டுவாங்களே?''



வீரபாண்டிக்குச் செல்லும் பஸ்ஸில் அவரை ஏற்றி விட்டு தானும் ஏறிக் கொண்டாள்.

''அந்த தைலா ரொம்ப வருஷமா மெஸ் நடத்திண்டு இருக்கா. ஆம்படையான் போனப்பறம் மெஸ் நடத்தி தான் குடும்பத்தை ஓட்டினா... பசங்களை நன்னா படிக்க வைச்சா... ஒருத்தன் டெல்லியிலும் ஒருத்தன் ஹைதரா பாத்திலும் நல்ல பதவிகள்ல இருக்காங்க.

''மாட்டுப் பொண்ணுங்க மாமியாரை உள்ளங்கையில தாங்கறதுக்குத் தயாரா இருக்காங்க. 'வயசாயிடுத்து... எல்லாத்தையும் விட்டுட்டு வந்துடு'ன்னு கூப்பிடறாங்க.

''தைலாவுக்கு மனசு கேட்கலை. அறுபது பேர் கிட்ட தினமும் வந்து சாப்பிடறாங்களாம். அம்போன்னு விட மனசில்லை. அத்தோட இந்த இடத்தை விக்கவும் விருப்பமில்லை.

''இந்தக் காலத்துல யாரையும் நம்பி ஒப்படைக்கவும் பயமாயிருக்காம். என் காலம் முடியற மட்டும் இதை நான் விக்க மாட்டேன்னு சொல்றா... நம்பிக்கையா நல்லவங்க யாராச்சும் வந்தா... மெஸ்ஸை ஒப்படைக்கத் தயாரா இருக்கா.

''கஸ்டமர்ஸூம் 'உங்களைத்தான் 'தாயாரா' நம்பிண்டு இருக்கோம். கொஞ்ச காலத்துக்கு மெஸ்ஸை நடத்துங் கோன்னு கெஞ்சறாளாம்.

''என்ன முடிவெடுக்கிறதுன்னு தெரியாம தவிச்சுண்டு இருக்கா... அவா அவாளுக்குத் தகுந்த மாதிரி ஒரு கவலையை வச்சுடறார் பகவான். அப்பத்தானே மனுஷாள் நாம்ப பகவானை நெனைச்சுப் பார்க்கிறோம். இல்லையா உதயா?''

அங்கலாய்த்துக் கொண்டார் அம்புஜம் மாமி.

உதயாவுக்கு எங்கோ பொறி தட்டியது.

"தைலா மாமியை இன்னொரு வாட்டி சந்திக்கப் போறப்போ... என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லுங்க மாமி. நானும் வரேன்."

"இனி இப்பக்குள்ளே நான் போறாப்பல இல்லடியம்மா... வர்ற பிரதோஷத்தன்னிக்கு கண்ணீஸ்வரமுடையார் கோவிலுக்கு... தைலா வர்றதா சொல்லியிருக்கா... அங்க பாத்துக்க வேண்டியதுதான்."

உதயாவின் முகத்தில் திடீரென்று விளக்கு போட்டாற் போல்... வெளிச்சம் பரவியது.

அந்தகார இருட்டில் குபீரென்று மின்னல் வெட்டியதைப் போல்... நம்பிக்கை கீற்று ஒன்று முளை விட்டது நிஜம்.

* * *

நாட்கள் ஜெட் வேகத்தில் பறந்தன.

தோட்டத்தில் பூத்திருந்த குண்டு மல்லிகை மொட்டுக்களைப் பறித்து சரமாய்த் தொடுத்து, பந்தாகச் சுருட்டி... அதை வெண்கல அர்ச்சனைக் கூடைக்குள் வைத்து எடுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள் உதயா.

"அண்ணி! நான் கோவிலுக்குப் போயிட்டு வந்துடறேன்."

"உம்! சீக்கிரமா வந்துடு... ராத்திரி டிபனை நான் நேரத்துக்கு சாப்பிட்டாகணும். மசமசன்னு நிக்காம வேகமா வந்துடணும்."

"சரிங்க அண்ணி."

"ஆங்! மொத்த பூச்சரத்தையுமா எடுத்துட்டுப் போறே? நாளைக்கு ஒரு விசேஷத்துக்குப் போகணும்."

"உங்களுக்கு ஒரு முழம் பூவை தனியா ஃபிரிஜ்லே... டிபன் பாக்ஸ்லே வச்சிருக்கேன் அண்ணி."



"சரி போ" முகத்தில் திருப்தி பரவ தலையாட்டினாள் சுகந்தி.

கோவிலில் அன்று கூட்டம் அதிகமில்லை. அவள் கொடுத்த பூச்சரத்தை கௌமாரி அம்மனின் கிரீடத்திலிருந்து பாதம் வரை மாலையாக அணிவித்து விட்டு... ஆரத்தி காட்டினார் பூசாரி.

கண்ணீர் மல்க கரம் குவித்து அம்மனை கண் குளிர சேவித்து விட்டு ஆரத்தியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு... பிரகாரத்தை மூன்று முறை வலம் வந்தாள் உதயா.

முன் மண்டபத்துத் தூணில் சாய்ந்தமர்ந்து விட்டு... பிரதான வாசலை நோக்கி நடந்தாள்.

மனம் முழுவதும் சூரியா அக்காவின் ஞாபகம் தான் வியாபித்திருந்தது.

யோசனையில் மூழ்கிப் போயிருந்தவள்... எதிரே நெருங்கி வந்த உருவத்தை சிறிதும் கவனிக்கவில்லை.

தலைவாசலில் இருந்த படிக்கட்டில் கால் தடுக்கி... தடுமாறி தலைகுப்புற விழப் பார்த்தாள் உதயா.

சட்டென்று அவள் விழாத வண்ணம் தாங்கிப் பிடித்தவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய்... களை பொருந்திய முகத்தில் புன்னகை ததும்ப... நெருங்கி அவளது தோள்களைத் தாங்கி நின்றிருந்த... அந்த வாலிபனைக் கண்டு... பதற்றமாய் விலக முற்பட்டு மீண்டும் பின்னால் சரியப் பார்த்தாள்.

"பார்த்து... பார்த்து... கோலஸ்ஸா விழுந்திருந்தா... இந்நேரம் அடிபட்டிருக்கும் இல்லையா?" கரிசனம் கலந்த கம்பீரமான குரல்... பட்டு போன்று இதமாய் அவளது செவிகளை ஸ்பரிசித்தது.

அவளது இதயக் கூட்டிற்குள் புறா சிறகடிக்கத் தொடங்கியது.

## 10

தயாவின் இதயம் தடதடத்தது. காது மடல்களில் சூடேறி குப்பென்று முகம் குங்குமப் பூவாய் சிவந்து போனது.

அவனது பிடியிலிருந்து சுதாரித்து விலகினாள். இரண்டடி தூரத்தில் போய் விழுந்திருந்த அர்ச்சனைக் கூடையை குனிந்து எடுத்துக் கொண்டாள்.

கற்சிலை போல் ஸ்தம்பித்து நின்றபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனை மிகுந்த தயக்கத்துடன் ஏறிட்டாள்.

"தேங்க் யூ."

வீணை மீட்டியது போன்ற இனிய குரல்... அவனைக் கலைத்தது.

"ஓ... இதில் என்னங்க இருக்கு? பை தி பை... அயாம் சந்துரு... வெள்ளிக்கிழமை அம்மனுக்கு அபிஷேகம் பண்றதுக்கு பணம் கட்டணும். தேவஸ்தான அலுவலகம் பூட்டியிருக்கு... எப்போ திறப்பாங்க? குருக்கள் கிட்ட கேட்க லாமான்னு தான் நான் திரும்பவும் உள்ளே வந்தேன்..."

அவன் வாய் தான் பேசியதே தவிர... அவன் மனமோ ஆச்சரிய வெள்ளத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண டிருந்தது.

"கோவில்லே கூட்டம் அதிகமில்லேன்னா... ஆபீஸை மூடிட்டுப் போயிடுவாங்க... அதோ எதிர்த்தாப்பல இருக் கற பூக்கடை கிட்ட சிவப்பு சட்டை போட்டுட்டு நின்னு



பேசிட்டிருக்காரே? அவர்தான் ரசீது கொடுக்கிறவர்... அவர் கிட்டே கேளுங்க."

சுட்டிக் காட்டி விட்டுத் திரும்பினாள். நான்கு விழிகளும் மோதிக் கொண்டபோது மின்னல் வெட்டியது.

பின்னலிட்ட நீண்ட கூந்தல் அசைந்தாடி அவள் செல்லும் அழகை ரசித்தபடி நின்றிருந்தான் சந்துரு.

'யாரிந்த தேவதை? இவளை இதற்கு முன் ஒரு நாள் கூட பார்த்ததில்லை. ஆனால் பல காலம் நெருங்கிப் பழகியது போன்ற உணர்வு ஏற்படுகின்றதே?

'நிலவைப் போன்ற வட்ட முகமும் அழகிய விழிகளும் யாரை ஞாபகப்படுத்துகின்றன?

'கோடி மலர்கள் கொட்டிக் கிடக்கும் நந்தவனம் போன்று மனதை காந்தமாக ஈர்த்து விட்டாளே?

'யாரவள்? பெயர் என்ன? குடும்பப் பின்னணி என்று எதுவுமே தெரியாது. ஆனால் பார்த்த மாத்திரத்தில்... மனதை வருடி திருடிச் சென்று விட்டாளே? இந்த உணர்வுக்கு என்ன பெயர்?

'இதற்குப் பெயர் தான் காதலா?'

அவனது இதயம் எம்பிக் குதித்து 'ஆமாம்' என்று மறுமொழி கூறியது.

'ஐயோ! என்னது இது? எனக்குள் ஏனிந்த மாற்றம்? என்ன காரியத்திற்காக இந்த ஊருக்கு வந்திருக்கிறேன் என்பதை மறந்து விட்டு... இதென்ன பைத்தியக்காரத் தனம்?' மனதைத் தட்டி அடக்கி விட்டு... இயந்திரத்தன மாய் நடந்தான் சந்துரு.

தேனியில் அந்த நிறுவனத்தை சொந்தமாக வாங்கிய கையோடு... பழைய ஜமீன் பங்களாவின் சீரமைப்பு வேலைகளும் துரிதமாக முடிந்து போக... கை தேர்ந்த

நர்ஸ் ஒருத்தியை நியமித்து, அம்மா சந்திரா, அப்பா பத்ம நாபன் அருண் ஆகியோருடன் கிளம்பி வந்திருந்தான்.

சென்னையில் உள்ள நிறுவனங்களோடு... இங்கு தேனியில் வாங்கிய நிறுவனத்தை கவனிக்கும் பொறுப்பும் சேர்ந்து கொண்டதால்... இனி சென்னைக்கும் இங்குமாக மாறி மாறி 'ஷண்டிங்' அடிக்க வேண்டியது தான்' என்று தீர்மானித்திருந்தான்.

அம்மாவின் உடல்நலம் தேறும் வரை இங்கேயே குடும்பம் இருக்கட்டும் என்று முடிவும் எடுக்கப்பட்டிருந்தது.

அருண் பிரி கே.ஜி. செல்லும் சிறுவன் என்பதால்... படிப்பு பாழாகி விடும் என்ற கவலையும் இல்லை.

டாக்ஸி பங்களாவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. ஆனால் சந்துருவின் மனமோ உதயாவையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

'ச்சே! என்னது இது? நான் பார்க்காத அழகிகளா? எனது நிறுவனங்களிலேயே பல அழகிகள் இருக்கின்றனரே?

'ரிசப்ஷனிஸ்ட் காவ்யா... கம்ப்யூட்டர் என்ஜினீயர் ஸ்வேதா... ஏன் பவித்ரா ஆகியோர் அழகிகள் தானே?

'பவித்ரா... மைகாட்! அவளை எப்படி மறந்தேன்?

'அவளை நான் விரும்புகிறேன் என்று நினைத்து என் பெற்றோர்கள்... பெண் பேசி முடிவு செய்து விட்டு பூ வைத்து விட்டு வந்துள்ளனர்.

'அதை எப்படி மறந்தேன் நான்?

'இதுவரை மனதை க்ளீன் சிலேட்டாகத்தானே வைத்திருந்தேன். ஆனால் இப்போது இந்த கிராமத்துப் பேரழகியின் உருவம் அழுத்தம் திருத்தமாகப் பதிந்து விட்டதே?

'அம்மா, அப்பா இருவருமே... எனக்குத் தெரிந்து வாக்குத் தவறியவர்கள் இல்லையே?



'அம்மாவின் உடல்நலம் தேறியதும் பவித்ராவை திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துவார்களே?

'என்ன செய்யப் போகிறேன் நான்?

'இந்த அழகு தேவதைக்கு என் இதயத்தில் இடமளித்து விட்டேனே?

'இனி பவித்ராவை எப்படி ஏற்றுக் கொள்ள இயலும்?

'பவித்ராவுக்கும் என்னைப் பெற்றவர்களுக்கும் என்ன பதில் சொல்லப் போகிறேன்?

'எப்படித் தட்டிக் கழிப்பேன்?

'அப்படியே தட்டிக் கழித்தாலும் அம்மாவும் அப்பாவும் மிகுந்த வேதனைக்குள்ளாவார்களே?

'எனது ஆசையைப் பூர்த்தி செய்வதாக எண்ணித் தானே... பவித்ராவைப் பேசி முடித்தார்கள்?

'சதா சர்வ காலமும் என் நலனையும், எதிர்காலத்தைப் பற்றியும் அக்கறை காட்டும் பெற்றோர்களை அடைய நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

'என் இதயத்தில் நுழைந்து ஓசையின்றி புல்லாங்குழல் இசைக்கத் தொடங்கிய காதலுக்காக... அவர்கள் வாக்குத் தவற வேண்டுமா?

'அப்படியொரு நிர்ப்பந்தத்தை நான் எப்படி ஏற்படுத்துவேன்?

'ஐயோ! இதென்ன புதுக் குழப்பம்? நான் ஏன் இந்த ஊருக்கு வர வேண்டும்?

'இப்படியொரு இரசாயன மாற்றம் எனக்குள் ஏன் ஏற்பட வேண்டும்?

'இதன் முடிவு தான் என்ன?'

ஓராயிரம் கேள்விகளைச் சுமந்து கொண்டு வந்த எண்ண அலைகள்... அவனது இதயத்தில் பலமாய் மோதின.

டாக்ஸி பங்களாவின் காம்பவுண்டுக்குள் மெதுவாக நுழைந்தது.

வேக வேகமாக மாடியேறினான் சந்துரு.

பால்கனியில் போடப்பட்டிருந்த அலங்கார ஊஞ்ச லில் சாய்ந்து அமர்ந்திருந்தார் அம்மா சந்திரா.

சாய்வு நாற்காலியில் அமர்ந்து பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தார் பத்மநாபன்.

சொந்த ஊரில் வெகு காலம் கழித்து நிச்சலனமாய், காற்றாட அமர்ந்திருந்த சந்திராவின் முகத்தில் நிம்மதியும் திருப்தியும் பரவியிருந்தன.

முகம் முன்பைவிட பொலிவுடன் மிளிர்ந்தது.

உற்றுப் பார்த்த சந்துருவுக்கு உள்ளுக்குள் எங்கோ பொறி தட்டியது.

'அட... கோவிலில் நாம் சந்தித்த அழகி நம் அம்மாவின் ஜாடையில் இருக்கிறாளே?

'அந்த முகமும் விழிகளும் யாரையோ ஞாபகப் படுத்துவதாக மூளையைக் கசக்கினேனே?

'அம்மா இளம் வயதில் அவளைப் போன்று தான் இருந் திருப்பாள் என்கிற விஷயம் இப்போது தானே புத்திக்கு எட்டுகின்றது.

'அப்படியென்றால்... அந்த அழகி அம்மாவுக்கு மிகவும் நெருங்கிய உறவுக்காரப் பெண்ணாக இருக்க வேண்டும்.

அம்மாவுக்கு ஒரே அண்ணன் தான் என்று கேள்விப் பட்டிருக்கிறோம்... அவர் கூட சில வருடங்களுக்கு முன்பு மறைந்து விட்டதாகக் கேள்வி!



'இவள்... இந்த அழகி நம் தாய் மாமனின் மகளா?

'எனது முறைப் பெண் தானா?

'எனக்கு உரிமைப்பட்ட பெண் தானா?

'ஆம்! சந்தேகத்திற்கு இடமில்லாமல்... அந்த ஜாடை இதைத்தானே உறுதிப்படுத்துகிறது.

'இந்த விஷயம் அம்மாவுக்குத் தெரிந்தால்... மகிழ் வாரா? அல்லது எப்போதோ அறுந்து போன பந்தத்தை ஒட்ட வைக்கத் தயங்குவாரா?

'முறைப் பெண் என்று தெரிந்தும் கூட முழுவதுமாக சந்தோஷத்தை அனுபவிக்க முடியாமல்... சூழ்நிலை தடுக்கிறதே?

'அவளை மீண்டும் சந்திக்க முடியுமா?

'முயற்சி செய்தால் சந்தித்து விடலாம்.

'நான் யாரென்று தெரிந்தால்... அந்தப் பெண்ணின் மனநிலை எப்படி இருக்கும்?

'அவளும் என்னை நேசிப்பாளா?

'ஒருவேளை... மனதில் மொட்டு விட்டு அரும்பிய காதல் ஒரு தலையாகவே கருகி விட்டால்?'

நினைக்கும்போதே ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போலிருந்தது.

அப்பப்பா... என்ன வேதனை?

ஒரே நாளில்... அவளை சில விநாடிகள் பார்த்த மாத்திரத்தில் முகிழ்த்த காதல் தான்!

மீண்டும் அந்த தேவதை அவனது மனக் கண் முன் தோன்றினாள். மனதிற்குள் சந்தோஷ மழை பூப்பூவாய் தூற ஆரம்பித்தது.

'எதிர்பாராத இக்கட்டான தருணத்தில் மீண்டும் அவளைச் சந்திக்கப் போகிறோம்' என்று சந்துரு சற்றும் எதிர்பார்க்கவில்லை தான்!

## 11

இருதலைக்கொள்ளி எறும்பாய் தவித்துக் கொண்டிருந்தாள் உதயா.

சமீப காலமாய் சாயந்தரம் ஆகி விட்டால் அண்ணி சுகந்தி வீட்டிலேயே தங்குவதில்லை.

டிப்டாப்பாக டிரஸ் செய்து கொண்டு கிளம்பி விடுகிறாள். பூனைக்குட்டி போல் இருண்டு போன முகத்துடன் அவள் பின்னாலேயே செல்லும் அண்ணன் சபேசனைக் கண்டு... உதயாவுக்கு சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை.

தினப்படி அர்ச்சனையைக் கேட்டுக் கொண்டு சகித்து வாழக் கற்றுக் கொண்டு விட்டாள். ஆனால்... அண்ணி ஏதோ சதி செய்கிறாள் என்று அப்பட்டமாகத் தெரிந்த பின்... தொடர்ந்து அதே வீட்டில் வசிக்க அவளுக்கு சற்றும் விருப்பமில்லை.

''விருப்பமில்லை என்று வீட்டை விட்டு வெளியேறவும் முடியாது. வயதுப் பெண் யார் வீட்டில் சென்று அடைக்கலமாய் தங்குவதாம்?

''சூரியாவின் நிலைமையைப் பற்றி கேட்கவே வேண்டாம் படு மோசமாக இருக்கிறதே?

'செமஸ்டர் எக்ஸாம் வேறு தொடங்கியிருந்தன. படிப்பு சீக்கிரம் முடிந்து விடப் போகின்றது... துணிந்து ஒரு முடிவை எடுக்க வேண்டியது தான்!

'வீரபாண்டித் திருவிழா வேறு நெருங்கி வருகின்றதே?



'அண்ணி அவ்வப்போது பூடகமாகப் பேசுவதைப் பார்த்தால்... சித்திரைப் பண்டிகையை ஒட்டியே திருமணத்தை நடத்தி விடுவாளோ?

'பண பலமும் ஆள் பலமும் கொண்ட ரங்கன் கோஷ்டியை இந்த அபலைப் பெண்ணால் சமாளிக்க முடியுமா?

'வேறு வழியின்றி அவனுக்கே கழுத்தை நீட்டும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டால்...?'

அடிவயிற்றில் பயம் ஊறியது.

''ட்ரிங்... ட்ரிங்.., ட்ரிங்.''

சிந்தனையில் சிக்கித் தவித்தவள்... சட்டென்று கலைந்து ரிசீவரை எடுத்தாள்.

''ஹலோ... உதயா! நான் சூரியா பேசறேன்மா.''

''என்னக்கா... ஏ... ஏதாவது பிரச்சினையா?'' திகிலில் அவளது நா உலர்ந்து போனது.

''பிரச்சினை உனக்குத்தான்... அண்ணி அண்ணா... எங்க மாமனார் மாமியார் எல்லாரும் உட்கார்ந்து பேசி முடிவு பண்ணிட்டாங்க... உன்னோட பரீட்சை முடிஞ்ச உடனே கல்யாணம்.

''முத நாள் நிச்சயதார்த்தமாம்... நாளெல்லாம் குறிச்சு முடிச்சுட்டாங்க... என்னை விட்டுத் தள்ளு... உன் கிட்ட யாவது இதப் பத்தி ஒரு வார்த்தை சொன்னாங்களா உதயா?

''இப்பக்கூட சிரிப்பும் கும்மாளமுமா வீடு ரெண்டு படுது. அண்ணிக்கு வாயெல்லாம் பல் தான். அவங்க எல்லாரும் பேசிட்டிருக்காங்க... எனக்கு வயித்தெரிச்சல் தாளலை... வயித்துல புளி கரைச்ச மாதிரி இருக்கு... மெல்லமா மாடிக்கு வந்து உனக்கு போன் பண்ணினேன். அக்காங்கிறவ... அம்மாவுக்கு சமானம்னு சொல்வாங்க. உன்னை ஒரு நல்ல இடத்துல... நல்ல பையனுக்கு நான்

தான் கட்டிக் கொடுக்கணும்... ஏன்னா நமக்கு அண்ணன் சரியில்லையே?

"உனக்கொரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்க முடியாத பாவியா இருக்கேனே உதயா? இந்த துப்புக் கெட்ட ஜென்மம் உயிரோட இருந்து என்னத்தை சாதிக்கப் போறேன் சொல்லு."

மறுமுனையில் உடைந்து போய் சூரியா கதறினாள்.

"அ... அக்கா! நம்பிக்கையை மட்டும் தளர விடாதக்கா... எப்படியாவது நமக்கு விடிவு காலம் பொறக்கும். எத்தனையோ சித்திரவதைகளை அனுபவிச்சுட்டே... சகிச்சுக் கிட்டே... இன்னும் கொஞ்ச நாள் பொறு... கடைசி நிமிஷம் வரைக்கும் பொறுத்துப் பாத்துடலாம்."

"அது சரி உதயா விஷயம் கை மீறிப் போயிட்டே இருக்கே? கடைசி நேரத்துல கடவுள் கை விட்டுட்டார்னா... என்ன செய்றது?"

"அக்கா... மனுஷனா பொறந்துட்டா இரண்டு நம்பிக்கையோட வாழ்ந்தாகணும்... ஒண்ணு தன்னம்பிக்கை... ரெண்டு கடவுள் நம்பிக்கை... இது ரெண்டும் இருந்தா... எப்படியும் போராடி ஜெயிச்சுடலாம் அக்கா...

"நீ பாத்துட்டே இரேன். அவங்க எல்லாரும் போடற திட்டம் எதுவும் நடக்காது. கூடிய சீக்கிரம் இந்த நரகத்துல இருந்து உனக்கும் விடுதலை கிடைக்கப் போகுது பாருக்கா... போனை வச்சுட்டு தைரியமா போ... சகஜமா இரு... இல்லேன்னா... இதுக்கும் உனக்கு மண்டகப்படி கிடைக்கும். மூஞ்சியைத் தூக்கி வச்சுக்காம நார்மலா சிரிச்சபடி நடந்துக்கோ... சரியா?"

"ச... சரி உதயா! என்னவோ நம்பிக்கையாப் பேசறே... எல்லாம் நல்லபடியா நடந்தா... எனக்கு சந்தோஷம் தான்."



அரை மனதுடன் போனை வைத்தாள் சூரியா.

தமக்கைக்கு ஆறுதல் கூறி விட்டாளே தவிர... உதயாவுக்கு உடம்பு உதறித் தான் போட்டது.

கனத்த இதயத்துடன் கொல்லைப்புறக் கதவை மூடிவிட்டு சாமி மாடத்தின் அடியில் இருந்த குத்து விளக்கை ஏற்றி வைத்தாள்.

"உன்னை ஒரு நல்ல பையனுக்கு... நான் தானே கட்டிக் கொடுக்கணும் உதயா."

அக்கா பேசிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது செவிகளில் எதிரொலித்தன.

திடு திப்பென்று கோவில் வாசலில் தன்னைத் தாங்கிப் பிடித்த சந்துருவின் முகம்... அவளது ஞாபகத்திற்கு வந்தது.

கண்ணியமாக இதமாக அவன் பேசிய விதம்... அவளது நெஞ்சைத் தொட்டிருந்தது.

அவனை நினைத்த மாத்திரத்தில்... உள்ளுக்குள் சிலிர்ப்பு பொங்கியது நிஜம்!

'எவ்வளவு பெரிய ஆபத்து எனக்காக காத்திருக்கிறது. அது புரியாமல் மனம்... முன் பின் அறிமுகமில்லாத வாலிபனை நோக்கித் தாவி ஓடுகின்றதே?

'இது என்ன மதியீனம்?

'வெளிப்படையாக நெருங்கி வரும் ஆபத்தைக் கூட சமாளித்து விடலாம். ஆனால் என்னைப் போன்ற இளம் பெண்கள்... மனதை இப்படிப் புரள விடுவது ஆபத்தாயிற்றே?'

சண்டிக் குதிரையாய் தாவப் பார்த்த மனதிற்கு கடிவாளம் போட்டு இழுத்து அடக்கினாள்.

''உதயா! உதயா... அம்மாடி இங்க வாயேன்'' உள்ளே நுழைந்த அண்ணியின் குரலில் பாசம் வழிந்தோடியது.

''என்ன அண்ணி?'' சாமி மாடத்தருகே தன்னை மறந்து நின்றிருந்த உதயா திடுக்கிட்டுப் பார்த்தாள்.

''நாளைக்கு நாம்ப எல்லாரும் சுருளிக்குப் போறோம் உதயா... அஞ்சு மணிக்கே வேன் வந்துடும். தயாரா இரு என்ன? பக்கத்து வீட்டு அம்புஜம் மாமியை வேணா... கூட அழைச்சுக்கோயேன். நாளைக்கு சன்டே உனக்கும் லீவு தானே?''

''என்ன அண்ணி திடீர்னு சுருளிக்கு வேன்ல கிளம்ப றோம்?''

''ஓ... வேன் எதுக்கு அநாவசியமான்னு யோசிக்கிறியா? நம்ப சம்பந்தியம்மா தான் வேன் அனுப்பறாங்க. அவங்க சுருளி ஆண்டவர் கோவில்லே படையல் வைக்கிறதா வேண்டிக் கிட்டாங்களாம். ரெண்டு வேன் பிடிச்சு கிளம்ப றாங்க... கண்டிஷனா நாம்ப எல்லாரும் வந்தாகணும்னு சொல்லிட்டாங்க... போ! மாமிகிட்ட வேணா சொல்லிட்டு வந்துடு.''

'அவர்களுடன் வருவதற்கு உதயா சம்மதிக்க மாட்டாள் என்று தெரிந்து தான் தாராளமாக... அம்புஜம் மாமியையும் அழைக்கச் சொன்னாள் போலும்.

'சரி... இதற்கு மேல் வரமாட்டேன் என்று முரண்டு பிடித்தால் ரசாபாசமாகி விடும். இங்கு திட்டு விழுவ தோடு... அங்கு சூரியாவுக்கும் பிரச்சினையாகி விடும்.

'அம்புஜம் மாமியும் உடன் வரப் போகிறாரே? சுருளி மலை ஆண்டவரை தரிசித்து பாரத்தைப் போட்டுவிட்டு வரவேண்டியது தான்!'



பெருமூச்செறிந்தபடியே... அம்புஜம் மாமியின் வீட் டிற்குச் சென்றாள். சுருளி மலையில் ஒரு இனிய அதிர்ச்சி அவளுக்காக காத்துக் கொண்டிருந்தது.

* * *

இருபதே நாட்களில் சந்திராவின் உடல்நிலையில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருந்தது.

தேனியிலிருந்த பிரபல மருத்துவமனையிலிருந்து தினமும் ஒரு டாக்டர் வீட்டிற்கே வந்து பிஸியோ தெரபியும் ஸ்பீச் தெரபியும் அளித்துக் கொண்டிருந்தார்.

ஜமீன் பங்களாவைச் சுற்றியுள்ள தோட்டத்து மரங்கள் சுத்தமான காற்றைப் பிரசவித்துக் கொண்டிருந்தன.

ஆரோக்கியமான சூழ்நிலை... சொந்த மண்ணில் கால் பதித்திருக்கிறோம் என்ற தெம்பு எல்லாமாகச் சேர்ந்து... சந்திராவுக்கு சிறிது சிறிதாக ஆரோக்கியத்தை மீட்டுத் தரத் தொடங்கின.

இடையில் சந்துரு சென்னைக்குச் சென்று விட்டு... ஐந்து நாட்கள் கழித்து திரும்பியிருந்தான்.

''அப்பா! நாளைக்கு நாம்ப சுருளிக்கு கிளம்பலாம். ஜிலு ஜிலுன்னு பொழுது விடியறப்ப... நாம்ப அங்க இருக்கணும். சுருளி அருவியில மூலிகைகள் கலந்து வருதாம்... சுருளித் தீர்த்தம் தீராத வியாதிகளையும் தீர்த்து வைக்குமாம்... எல்லாரும் சொல்லிக்கிறாங்க... நர்ஸ் கிட்டேயும் சொல்லிடுங்க... சீக்கிரமா கிளம்பிடலாம்.''

''முன்ன எல்லாம் உன்னால் ஒரு அரை நாளைக் கூட குடும்பத்துக்காக ஒதுக்க முடியாது... அவ்வளோ பிஸியா இருப்பே... ஆனா இப்போ... சதா எங்களுக்காக எல்லாத் தையும் ஒதுக்கி வச்சுட்டு மெனக்கெடறே... அங்க பிஸினஸ் வேலைங்க நிறைய பாதிக்கப்படுமே சந்துரு?''

''அதை எல்லாத்தையும் நான் மேனேஜ் பண்ணிப்பேன் அப்பா! நீங்க ஏன் வீணா விசனப் படறீங்க? எனக்கு நம்ப குடும்பத்தோட நிம்மதி தாம்ப்பா முக்கியம்...''

மகன் பேசியதைக் கேட்டதும்... சந்திராவின் விழிகளில் கண்ணீர் துளிர்த்தது.

''இந்தக் காலத்தில் இப்படியொரு பாசமான பிள்ளை! அவசரப்பட்டு தப்புக் கணக்குப் போட்டு... அவனுக்கு சிக்கலை ஏற்படுத்தி விட்டேனே? அந்த சிக்கலிலிருந்து அவனை மீட்க வேண்டுமே?' கண்களை மூடி சுருளி ஆண்டவரை மனதார வேண்டிக் கொண்டார்.

## 12

இயற்கை எழில் கொஞ்சும் சுருளி மலை! வானளாவ வளர்ந்த அடர்ந்த மரங்களில் பறவைகள் 'கலகலத்வனி' செய்து கொண்டிருந்தன.

வேனை விட்டு இறங்கிய உதயா தனது கவலைகளை எல்லாம் மறந்து இயற்கை அழகில் லயித்து விட்டிருந்தாள்.

பாலத்தின் அடியில் சலசலத்து ஓடிய ஆற்றில் நாரைகளும் கொக்குகளும் சிறகுகளை சடசடத்தபடி மும்முரமாய் மீன்களைத் தேடின.

கூ... குக்கூ... என்று எங்கிருந்தோ குயில்கள் இன்னிசை கீதம் பாடின.

பாக்கு மரத்திலிருந்து ஏழெட்டு கிளிகள் சொல்லி வைத்தாற் போன்று குபீரென்று பறந்தோடின.

''அம்மாடி உதயா.''

சூரியாவின் மாமியார் பெருமிதமாய் வந்து நின்றாள்.

''என்ன அத்தே?''

''இன்னிக்குத் தான் உன் முகத்துல தனிக் களையே வந்துருக்கு. பத்து மணிக்கு மேல தான் படையல்... நீயும் சூரியாவும் ஜாலியா அருவியில குளிச்சுட்டு வாங்க... பெரியவங்க நாங்க எல்லா ஏற்பாட்டையும் பாத்துப் போம்... கிளம்புங்க.''

''அத்தே... குழந்தைங்க வேற இருக்கு... நானும் இங்கேயே இருக்கேன்'' சூரியாவுக்கு தயக்கமாக இருந்தது.

''அட நீ வேறே... உதயா கூட கிளம்பு... அந்த பெட்ஷீட்டை இந்த மரத்தடியில விரிச்சுப் போடு.. நானும் உங்க அண்ணியும் உட்காந்துகிட்டு குழந்தைகளை கவனிச்சுப்போம்... உறவுக்காரப் பொண்ணுங்க இத்தினி பேரு வந்திருக்காங்களே... எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு செஞ்சிடுவாங்க... மருமகப் பொண்ணுங்க நீங்க ஜாலியா போயிட்டு வாங்க.''

''அதான் பெரியவங்க இவ்ளோ தூரம் சொல்றாங்கல்ல... போயிட்டு வாங்களேன்'' அண்ணி சுகந்தி உரிமையாய் அதட்டினாள்.

''வயசுப் பொண்ணுங்களுக்குத் துணையா நானும் போயிட்டு வரேன்டியம்மா'' அம்புஜம் மாமி நடக்க ஆரம்பித்து விட்டார்.

பச்சைப் பசேலென்ற மரங்களுடன் சுருளி மலை மனதைக் கொக்கி போட்டு ஈர்த்தது.

வெள்ளியை உருக்கி வார்த்தாற்போல் பாலாய் அருவி கொட்டிக் கொண்டிருந்தது.

''மாமி! கொள்ளை அழகா இருக்குல்ல?''

''இது சித்தர்கள் வாழும் புண்ணிய வனப் பகுதியாச்சே? சின்னக் குழந்தைங்க கூட அருவியில குளிக்கலாம்... காய்ச்சல் ஜுரம்னு எதுவும் வராது... ஏன்னா அருவித் தண்ணியில மூலிகைங்க கலந்து வருதே... வாங்க பொண்ணுங்களா அருவியில ஸ்நானம் பண்ணலாம்.''

திளைக்க திளைக்க அருவியில் குளித்துவிட்டு விரித்த கூந்தலுடன் நனைந்த ஆடையுடன் படிக்கட்டுகளில் இறங்கத் தொடங்கினர்.

சந்திராவைக் கைத்தாங்கலாகப் பிடித்தபடி ஏறி வந்து கொண்டிருந்தார்கள் சந்துருவும், பத்மநாபனும்!

''அட... இவர் சந்துரு தானே?''

உதயா ஆச்சரியத்துடன் பார்த்தபோது... மாமி வியப்பில் உரத்துப் பேசினார்!

''அம்மாடி உதயா! அதோ பாரேன் அதிசயத்தை... அது யாருன்னு தெரியுதா சூரியா? உங்களுக்கு எப்படித் தெரியும் பாவம்? அந்த பொம்மனாட்டி உங்கத்தை... சந்திரா! உங்கப்பாவோட தங்கை.''

''அவங்ககிட்ட எங்கப்பாவோட சாயல் தெரியுது மாமி. நம்ம உதயாவோட ஜாடையிலும் இருக்காங்கல்ல?''

''போடி மக்கு! உதயா தான் உங்கத்தை ஜாடையைக் கொண்டிருக்காள்னு சொல்லு'' சூரியாவின் கன்னத்தில் செல்லமாக இடித்தார் அம்புஜம் மாமி.

திக் பிரமை பிடித்தவள் போல் வாயடைத்து நின்று விட்டாள் உதயா.

இவர்களது சம்பாஷணையைக் கேட்டபடி ஏறி வந்த மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு... எதிர்பாராத இன்ப அதிர்ச்சியில் உறைந்து விட்டிருந்தனர்.

''என்னடி சந்திரா அப்படிப் பாக்கறே? இவா ரெண்டு பேரும் உங்க அண்ணாவோட பொண்கள்தான். இவ பெரியவ சூரியா இவ சின்னவ உதயா...''

பாசம் பொங்க கையை உயர்த்தினார் சந்திரா. மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் பெருகியது.



''அத்தே...'' சூரியாவும் உதயாவும் கண்ணீர் மல்க ஓடிச் சென்று சந்திராவின் தோள்களில் முகம் புதைத்தனர்.

பத்மநாபனும், சந்துருவும் சற்று விலகி நின்றனர்.

''வெளிப்படையாகத் தான் அப்பா உங்களைத் திட்டறாப்பல பேசுவாரே தவிர... உள்ளூர உங்க மேல அளவு கடந்த பாசம் வச்சிருந்தாரு அத்தை'' சூரியா விசும்பினாள்.

'தெரியும். எங்கண்ணா என் மேல உசுரையே வச்சிருந்தான் நான் தான் அவன் தலையில கல்லைத் தூக்கிப் போட்டுட்டேன்.'

என்று சொல்லத் துடித்தார் சந்திரா. அது அவரது முக பாவனையிலேயே நன்கு தெரிந்தது.

''எங்கப்பா இறந்தது உங்களுக்குத் தெரியுமா அத்தை?'' சூரியா கேட்டது தான் தாமதம்... தேம்பி அழ ஆரம்பித்தார் சந்திரா.

''இளைய தலைமுறையைச் சேர்ந்த பொண்ணுங்க நீங்க மனசுக்குள்ளே எந்த கசப்புணர்வும் வச்சுக்காம... பாசமா உறவாடறது ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா.''

பத்மநாபன் தழுதழுத்தார்.

''நான்... இவங்களை... உதயாவை கோவில்லே வச்சு அன்னிக்கே பாத்துட்டேன்மா... முக ஜாடையை வச்சு உங்க அண்ணனோட.... ஸாரி என் மாமாவோட மகள் தான்னு ஊகிச்சேன். அது கரெக்டா இருக்கு.''

குதூகலமாய் பேசியவனைக் கண்டு முகம் மலர்ந்தாள் உதயா.

'சந்துரு... எனது அத்தையின் மகனா? முன்பின் அறிமுகம் இல்லாத யாரோ ஒருவர் என்று அசட்டையாக இருந்தேனே? கடைசியில்... இவர் எனது அத்தானா?'

அதுவரை வறண்ட பாலைவனமாய் இருந்த மனதில்... சலசலவென்று நீரோடை பாய்ந்தது போலிருந்தது.

நான்கு விழிகளும் சந்தித்து கண நேரத்தில் நயன பாஷையில் ஓராயிரம் கதைகளைப் பேசின.

உதயாவுக்கு குற்றாலச் சாரலில் நனைவது போன்று இதமாய் இருந்தது.

'இந்தச் சிறையிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்குமா?

'இந்த இக்கட்டிலிருந்து என்னை சந்துரு மீட்பாரா?

'இந்த அபலைக்கு வாழ்வு தருவாரா?

'அந்த விழிகளில் அன்பும் காதலும் ததும்புகின்றனவே... ஆம்... அவரும் என்னை விரும்புகிறார் என்பது ஊர்ஜிதமாகத் தெரிகிறது.'

உள்ளம் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது.

அடுத்த கணமே பொங்கிய பாலில் தெளித்த நீராய்... அவளது மகிழ்ச்சி வற்றி வறண்டது.

'ஐயோ! ரங்கனை எப்படி மறந்தேன் நான்?

'உன்னை யாராவது கட்டணும்னு மனசுலே நெனச்சாலே... அவனோட தலையை எடுத்துடுவேன்.'

'என்று சூளுரைப்பானே?

'அவனுக்கு இந்த விவரமெல்லாம் தெரிந்தால் விட்டு வைப்பானா?

'அந்த நயவஞ்சகப் பாவியால் சந்துருவின் உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமே?

'வேண்டாம்... என் துரதிர்ஷ்டமும் துக்கமும் என்னோடு போகட்டும்.

'சந்துரு வாழ வேண்டியவர். என் பொருட்டு அவருக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டால்... என்னால் அதைத் தாள முடியுமா?'



அதை நினைக்கும்போதே... அவளது இதயத்தைக் கூறு போட்டது போன்ற வேதனையில் துடித்துப் போனாள்.

அவளது மெல்லிய இதழ்கள் நடுங்கின.

நீர்த் திரையிட்ட விழிகளைத் தழைத்துக் கொண்டு... கீழுதட்டை அழுந்தக் கடித்தாள் உதயா.

''அதோ நிக்கிறானே... அவன் தான் எங்க பேரன் அருண்'' பத்மநாபன் சுட்டிக் காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தாள்.

மரங்களுக்கிடையில் தாவித் திரிந்த குரங்குகளைப் பார்த்து மகிழ்ச்சியில் குதூகலித்தபடி இருந்த சிறுவனின் அருகே... நின்றிருந்த பெண்ணின் மீது யோசனையுடன்... உதயாவின் பார்வை படிந்து மீண்டது.

''அவங்க ஒரு நர்ஸ்! அம்மாவைக் கவனிச்சுக்க அப்பாயிண்ட் பண்ணியிருக்கோம்.''

சந்துரு... அவளது மனதை வாசித்துப் புரிந்து கொண்ட தினுசில் பதிலளித்தான்.

''அருண்... எங்க பொண்ணு பூர்ணிமாவோட பையன்...'' என்று கரகரத்த குரலில் ஆரம்பித்த பத்மநாபன் விலாவாரியாக தங்களது குடும்பத்தில் நடந்த துக்க கரமான சம்பவத்தைப் பற்றிக் கூறினார்.

''அந்த அதிர்ச்சி தான் சந்திராவை நிலை குலைய வச்சுடுத்தா?'' பச்சாதாபப் பட்டார் மாமி.

''ஜமீன் பங்களாவை வாங்கி வீரபாண்டிக்கு குடி வந்ததிலேர்ந்து... கொஞ்சம் தேறியிருக்கா... திக்கித் திணறி மெல்லமா பேசவும் ஆரம்பிச்சுட்டா... அண்ணன் பொண்ணுங்களைப் பாத்துட்ட சந்தோஷமும் இப்ப சேர்ந்துடுச்சு... இல்லையா சந்திரா?''

பத்மநாபன் கேட்டதற்கு மெல்லத் தலையாட்டினார் சந்திரா.

''சந்திரா! உங்க அண்ணன் பொண்ணுங்களை...'' சொல்லத் தொடங்கிய அம்புஜம் மாமியின் கரத்தை சட்டென்று அழுந்தப் பற்றினாள் உதயா.

''மாமி!... அ... அங்க பாருங்க... ரங்கன் வர்றான்'' உண்மையில் ரங்கன் தனது சகாக்களுடன் ஏறி வந்து கொண்டிருந்தான்.

''அக்கா! நாம்ப கிளம்பலாம்'' துரிதப் படுத்தினாள்.

''உங்கண்ணனுக்கு மருமகளா வந்தவளோட குணம் சரி இல்லை சந்திரா... ரொம்ப நாழி இங்க நின்னுட்டிருந்தா... கன்னா பின்னான்னு திட்ட ஆரம்பிச்சுடுவா... நாங்க கிளம்பறோம்.''

அடிக் குரலில் முணுமுணுத்து விட்டு நடந்தார் மாமி.

''மலைக்காத்து அள்ளிண்டு போறதில்லையா? அதான் ஈரப் புடவை எல்லாம் உலர ஆரம்பிச்சுடுத்து.''

''திரும்பப் போறதுக்கு மனசே இல்ல மாமி... அவ்ளோ ரம்யமான இடம்... மாசக் கணக்கா இந்த வனத்துலே தங்கினாலும்... சலிக்கவே சலிக்காது.''

பேசியபடி இறங்கினாள் உதயா.

விரித்துப் போட்ட நீண்ட கூந்தலுடன் தேவதையாய் மிளிர்ந்தாள்.

''என்ன உதயா கண்ணு! அருவியில குளிச்சுட்டு வர்றீங்களா? அம்மா சொன்னது சரிதான். இப்பவே உனக்கு கல்யாணக் களை வந்துடுச்சு தெரியுமா? தினமும் உன்னை எனக்கு இராத் தூக்கமே போச்சு... கண்ணை மூடினா கனவுலேயும் வந்து இம்சிக்கிறியே?''



சற்றும் லஜ்ஜையில்லாமல்... சுற்றிலும் நின்றிருப்பவர்களைக் கூட சட்டை பண்ணாமல் அவன் பேசிய போது... பெரிய கல்லைத் தூக்கி அவனது தலையில் ஒரே போடாகப் போட்டு விட வேண்டும் என்ற ஆத்திரம் தான் ஏற்பட்டது.

தடதடவென்று படிகளில் வேகமாய் இறங்கிச் சென்றாள்.

''கல்யாணத்துக்கு இன்னும் விரல் விட்டு எண்ணுற நாட்கள் தான் இருக்கு உதயா... கல்யாணமாகட்டும்... ஊட்டி கொடைக்கானல் பெங்களூர்னு குளுகுளு பிரதேசங்களுக்குப் போய் ஹனிமூன் கொண்டாடலாம் உதயா கண்ணு.''

அவன் இரைந்து கத்தியதும்... உடம்பெல்லாம் திராவகம் பட்டது போல் திகுதிகுவென்று எரிந்தது.

## 13

''தைலாவைப் பத்தி கவலையே படாதே உதயா... அவளை நான் ஒத்துக்க வச்சிடுவேன். என் வார்த்தையை அவ என்னிக்கும் மீறவே மாட்டா... ஏன்னா... நன்னா வாழ்ந்த குடும்பம் எங்களோடது...

''கஷ்டப்பட்ட அவ குடும்பத்துக்கு நிறைய பண உதவி செஞ்சிருக்கோம். நாம்ப குடுத்ததை மூலதனமா வச்சுத்தான் மெஸ்ஸையே ஆரம்பிச்சா... அந்த நன்றி உணர்ச்சி அவளுக்கு நிறையவே உண்டு.

''அதனால மெஸ்ஸை கண்ணை மூடிக்கிட்டு நம்ம கிட்ட ஒப்படைச்சுட்டுப் போயிடுவா... நான் எதுக்கு பயப்படறேன்னா... ரங்கன் பயல் சும்மா இருக்க மாட்டானே? வலை வீசித் தேடுவான். உங்க அத்தான், அண்ணி, அண்ணன் இத்தன பேத்தையும் சமாளிக்கணுமே... அதான் கலவரப் படறேன்.''

''நாளை மதியமே கடைசி எக்ஸாமை முடிச்சிடுவேன். நீங்களும் என்னோட வாங்க... தைலா மாமி கிட்ட ஒப்புதல் வாங்கிடலாம். இன்னும் சில நாள்லே வீரபாண்டி திருவிழா தொடங்கிடும்.

''சூரியா அக்கா, குழந்தைங்க, நீங்க, நான்... எல்லாரும் திருவிழா அமளி துமளிப் படற சமயமா பாத்து... தேனிக்குப் போயிடலாம். தாயார் மெஸ்ஸை நாம்ப தொடர்ந்து நடத்துவோம்.

''அதுக்கு மேல எந்தப் பிரச்சினை வந்தாலும் தைரியமா போராடி சமாளிக்கலாம். இப்போதைக்கு பயந்து நடுங்கிட்டு இருந்தா... ரங்கன் என்னோட கழுத்துல தாலியே கட்டிடுவான்... அப்புறம் நான் உயிரோடவே இருக்க மாட்டேன் மாமி.''

அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

''ஐயோ! ஏண்டிம்மா கண் கலங்கறே? எனக்கொரு யோசனை தோணுது உதயா! உங்க நிலைமையை சந்திரா கிட்ட எடுத்துச் சொல்லுவோம்... தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்னு சொல்வாங்க...

''இதையெல்லாம் கேட்டா... சந்திரா தாள மாட்டா... நிச்சயமா உன்னை சந்துருவுக்கு கட்டி வைச்சு தன்னோட மாட்டுப் பொண்ணாக்கிப்பா... நீ சந்துருவோட கையைப் பிடிச்சிட்டா... எல்லாக் கஷ்டங்களும் சூரியனைக் கண்ட பனி போல விலகிடாதா? அதை விட்டுட்டு என்னத்துக்கு இவ்ளோ ரிஸ்க் எடுக்கணும்?''

ஆர்வமாய் உதயாவின் முகத்தை ஊன்றிப் பார்த்தார்.

''என்ன மாமி இது? மூத்த பொண்ணையும் மருமகனையும் பறி கொடுத்துட்டு, துக்கத்துல இருந்து மீண்டு வர முடியாம தத்தளிக்கிறாங்க சந்திரா அத்தை.



''இந்த நிலைமையில நம்ம கஷ்டத்தை வேற அவங்க கிட்ட சொல்லி வேதனையை அதிகப்படுத்தணுமா?

''சூரியா அக்கா, அவ குழந்தைங்க இத்தன பேரும் அவங்களுக்கு பாரமாகணுமா?

''அதுக்கு என்னோட தன்மானம் இடங்குடுக்கலை மாமி. மனசுல தன்னம்பிக்கை இருக்கு. உழைச்சு மானத்தோட வாழலாம்... கொத்தடிமைத் தனமா வாழ்ந்து மனசு மரத்துப் போச்சு மாமி... இனிமேலாவது நானும் சூரியாவும் நிம்மதியா மூச்சு விடலாம் இல்லையா?

''அக்கா பாவம்... ரொம்பவும் நொறுங்கிப் போயிருக்கா... அவளை சொந்தக் கால்லே நிக்க வைச்சு தலை நிமிர வைக்கணும். அவ குழந்தைகளை நல்லாப் படிக்க வைக்கணும் இதான் என் ஆசை மாமி.

''எல்லாத்துக்கும் மேலா... சந்திரா அத்தைக்கு அதிர்ச்சியைத் தாங்கற சக்தி இல்லை. இப்பத்தான் தேறிக்கிட்டு வர்றாங்க... அப்புறம்... நாங்க அவங்க கிட்ட அடைக்கலமா போனா... கேசவன் அத்தானும் ரங்கனும்... அவங்களுக்கு பிரச்சினை குடுப்பாங்க... இது தேவையா?

''நம்மால யாருக்கும் எந்த உபத்திரவமும் இருக்கப் படாது மாமி.''

''நீ சொல்றதும் சரிதான் உதயா... தெளிவான முடிவைத் தான் நீ எடுத்திருக்கே... ஆகட்டும்... நாளைக்கே நாம்ப தைலா கிட்ட பேசி முடிச்சுடலாம்.''

மனதிலிருந்து பெரும் பாரம் இறங்கியது போலிருந்தது.

* * *

தேனியைச் சுற்றியிருக்கும் எட்டுப்பட்டி கிராமங்களும் திரண்டு திருவிழாவைக் காண வந்து குவிந்ததால்... 'வீரபாண்டி'யே திமிலோகப்பட்டது.

கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் எண்ணற்ற கடைகள் திடீரென்று முளைத்து விட்டிருந்தன. அடிக்கொரு மூங்கில்கள் நடப்பட்டு விளக்குகள் பொருத்தப்பட்டு... பார்ப்பதற்கு தேவலோகம் போல் ஜெகஜ்ஜோதியாக இருந்தது.

மிகுந்த தயக்கத்துடன் சூரியாவின் புக்ககத்திற்குள் புகுந்தாள் உதயா.

''அடடே... வாம்மா உதயா! இன்னும் ஒரு வாரத்துல இந்த வீட்டுக்கு விளக்கேத்த வரப் போறே... என்ன தயக்கம்? உள்ளே வா'' சூரியாவின் மாமியார் வாய் நிறைய வரவேற்றார்.

''வீட்டுலே உறவுக்காரங்க நிறைய பேர் வந்திருக்காங்க... நாளைக்கு தீச்சட்டி எடுக்கப் போறாங்க... பெரியவங்க நீங்க... சூரியா அக்காவை ரெண்டு நாளைக்கு அனுப்பி வச்சீங்கன்னா... நாங்க எல்லாரும் சந்தோஷப்படுவோம்.

''உங்க அனுமதி கேட்கலாம்னு வந்தேன். உங்களுக்கு ஆவக்காய் ஊறுகாய்னா உசிராமே... நேத்து வீட்ல ஊறுகாய் போட்டேன். அப்படியே குடுத்துட்டுப் போலாம்னு வந்தேன் அத்தே.''

''அட... ரங்கனுக்கும் ஆவக்காய் ஊறுகாய் ரொம்பப் புடிக்கும்... நீ போட்டதுன்னு தெரிஞ்சா சோத்துல போட்டு பிசைஞ்சே சாப்பிட்ருவான் பாரேன்'' சிரித்தார்.

''அத்தே... சூரியா அக்காவையும் குழந்தைகளையும் கையோட கூட்டிட்டுப் போயிடட்டுமா?''

''ரெண்டு நாளு என்ன? உங்க கல்யாணம் முடியற மட்டும் அங்கேயே இருக்கட்டும்'' சூரியாவின் மாமியாருக்கு உச்சி குளிர்ந்து போய் 'பச்சைக் கொடி' காட்டி விட்டார்.



அடுக்களையிலிருந்து முகத்தில் பீதி படர எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சூரியாவுக்கு ஆச்சரியம் தாளவில்லை.

''என்னக்கா மசமசன்னு நிக்கிறே? சீக்கிரமா தேவையான துணிங்களை எடுத்துட்டுக் கிளம்பு... சின்னக் குட்டியை நான் தூக்கிட்டு வரேன்.''

பாப்பாவை வாஞ்சையுடன் தூக்கியபடி... சூரியாவின் மாமியார் அருகே பவ்யமாய் வந்து நின்றாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குத் தேவையான துணிமணிகளை அள்ளி சிறு கூடைக்குள் திணித்துக் கொண்டு வந்தாள் சூரியா.

''சூரியா... குழந்தைங்களை கண்ணும் கருத்துமா கவனிச்சக்கோம்மா... அஜாக்கிரதையா இருந்துடாதே'' மிகுந்த கரிசனத்துடன் எச்சரித்த மாமியாரிடம் இருவரும் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினர்.

''என்னக்கா இப்படி வியர்த்து வழியறே? டென்ஷனாகியே காட்டிக் குடுத்துடுவே போலிருக்கு... நார்மலா இரு'' கிசுகிசுப்பாய் பேசினாள் உதயா.

''போறதுக்கு முன்னாடி மாட்டிக்கிட்டோம்னா அவ்ளோதான். என்னை மொத்தமா ஒழிச்சுக் கட்டிடுவாங்க... அதான் திகிலா இருக்கு உதயா... இது சரியா வருமா?''

''எல்லாம் சரியா வரும். வீரபாண்டி அம்மன் நமக்கு எப்பவும் துணையா இருப்பா... இனி நமக்கு விடிவு காலம் தான்... நம்பு.''

மறுநாள் அதிகாலை மூன்று மணிக்கே பேருந்து நிறுத்தத்திற்கு வந்து விட்டனர்.

அவர்களது பதட்டத்தை அதிகப்படுத்தாமல் வந்து சேர்ந்த மினி பஸ்ஸில் வேகமாய் ஏறி அமர்ந்தனர்.

பஸ்ஸில் சொற்ப பயணிகளே அமர்ந்திருந்தனர். தெரிந்தவர்கள் யாராவது தென்படுகின்றார்களா? என்று பார்வையால் துழாவினாள் உதயா.

'அப்பாடா' பெருமூச்சு விட்டாள்.

பஸ்தேனியை அடைந்தபோது அந்தக் காலை நேரத்திலும் வியர்த்து தொப்பலாய் நனைந்து விட்டிருந்தாள் சூரியா.

''வாங்கோ... இனிமேலாவது உங்களுக்கு நல்ல காலம் பொறக்கட்டும். கொஞ்ச காலத்துக்கு வெளிவாசலுக்கு எங்கேயும் நீங்க போக வேணாம்... இதோ இவரு சின்னையா... மளிகை காய்கறி சாமான் இத்யாதி எல்லாத்தையும் இவரே வாங்கிப் போடுவாரு... இவங்க தங்கம்... சின்னையாவோட சம்சாரம்.

''கறிகாய் நறுக்கித் தந்து சமையல்லே உதவுவாங்க. இந்த தம்பதிகளுக்கு குழந்தைங்க இல்ல. பக்கத்துலதான் குடியிருக்காங்க...

''இவங்களை உதவிக்கு வச்சுக்கலாம்... நான் இன்னிக்கு சாயந்தரமே கிளம்பறேன்.''

தைலா மாமி ஆசீர்வதித்து விட்டுச் சொன்னபடியே கிளம்பி விட்டிருந்தார்.

இவர்கள் தலை மறைவானது தெரிந்ததும்... கேசவனும் ரங்கனும், சுகந்தியும் ரௌத்ரமாகி கொந்தளித்துக் கொண்டு இருந்தனர்.

## 14

'உதயா... என் கண்ணே... என்னுயிரே... எங்கே சென்றாய் நீ?

'இருமுறை எனக்கு தரிசனம் தந்து இதயத்தில் நிரம்பியவளே...?



'உள்ளத்தை உன்னிடம் தொலைத்து விட்டு உருகி மருகிச் சாகின்றேனே... அறிவாயா பெண்ணே?

'உன் கஷ்டத்தை எல்லாம் என்னிடம் ஒரு கோடி காட்டியிருந்தால் போதுமே? என்னுயிரையும் உனக்காக தாரை வார்க்கத் தயாராக இருப்பவன் நான்...

'என்னிடம் ஏன் மறைத்தாய்?

'நீயும் என்னை விரும்புகின்றாய் என்பதை... சுருளி அருவியின் அருகேயே நான் புரிந்து கொண்டேனே!

'உன் விழிகளிலே... நிந்தன் காதலை நானறிந்து கொண்டேனே! மணிக்கணக்காய் நின்று மனம் விட்டுப் பேசவில்லை தான்...

'ஆனாலும் நம் மனங்கள் சங்கமித்தனவே? பின் ஏன் என்னை அந்நியனாய் நினைத்து ஒதுங்கினாய்?'

சந்துருவின் உள்ளம் ஊமையாய் அழுது புலம்பியது. அன்று காரை எடுத்துக் கொண்டு குடும்பத்துடன் உதயாவின் வீட்டிற்குச் சென்றபோது தான்... அந்த விபரமே தெரிந்தது. உச்சஸ்தாயியில் அண்ணி சுகந்தி கத்திக் கொண்டிருந்தாள்.

''ஐயோ! கல்யாணத்துக்கு நாள் குறிச்ச பின்னாடி அக்காளும் தங்கச்சியுமா தலைமறைவாயிட்டாங்களே? எங்களை இப்படித் தலை குனிய வச்சிட்டாளுங்களே? பாவிங்க...''

காரை விட்டு இறங்காமல் ஸ்தம்பித்து விட்டான் சந்துரு. இதயத்தைக் கோடரியால் பிளந்தது போன்ற வேதனையில் பரிதவித்தபடி... காரைத் தெருமுனையில் நிறுத்தி ஒரு முதியவரிடம் விசாரித்தான்.

''அந்தப் பொண்ணு உதயா அவ அண்ணிக்காரி கிட்ட படாத பாடு பட்டா... மூத்தவளை ஒரு பொறுக்கிப்

பயலுக்கு கட்டிக் குடுத்த மாதிரி... இவளையும் அதே குடும்பத்துலே ஒரு ரவுடிப் பயலுக்கு கட்டி வைக்கப் பார்த்தா... ஏற்கனவே அக்கா படற சித்திரவதையைப் பார்த்து துடிச்சப் பொண்ணு... பாவம்! கட்டாயக் கல்யாணம் பிடிக்காம... அக்காவையும் அவ குழந்தைங்களையும் அழைச்சுக்கிட்டு எங்கியோ கண் காணாமப் போயிடுச்சு.

''நடேசன் ரொம்ப நல்ல மனுஷன். பாவம்! அவன் பெத்த பொண்ணுங்களுக்கு இந்த கதியா வரணும்? எல்லாம்.. கலி காலம்.''

புலம்பியபடி நகர்ந்த முதியவரைப் பார்த்து... சந்துரு உட்பட அனைவருக்கும் கண்கள் பொங்கின.

''என் கண்ணே உதயா! பல இன்னல்களை அனுபவித்தாயா? நாதியின்றி அனாதையாக அபலையாக இதுநாள் வரை வாழ்ந்து வந்தாயா?''

நினைக்கும்போதே பச்சாதாபமும் கழிவிரக்கமும் ஜனித்தன.

''ஐயோ! எங்... எங்... எங்கண்ணா பொ... பொண்ணுங்க என்... என்ன க.. கதியானாங்களோ தெ... தெரியலியே?'' திக்கித் திணறிப் பேசியபடி கண்ணீர் உகுத்தார் சந்திரா.

''அன்னிக்கு சுருளி அருவிப் பக்கத்துல பாத்தோமே... அந்த மாமி கூட ஏதோ சொல்ல வந்தாங்க... அப்பவே நாம்ப அந்தப் பொண்ணுங்களை நம்ம கூட அழைச்சுட்டுப் போயிருக்கணும். நாம எல்லாரும் இருக்கறப்போ... பாவம்!

''அனாதைங்க மாதிரி எங்கேயோ போயி கஷ்டப்படறதை நெனச்சா... மனசு தாங்கலை சந்துரு.''

''எப்... எப்டியாவது தேடிக் கண்... கண்டு பிடிச்சு நம்... நம்ம கூட கூட்டிட்டுப் போயிடணும்பா.''



''அதை நீ சொல்லணுமா சந்திரா? அவங்க நம்ம வீட்டுப் பொண்ணுங்க... நாம்ப விட்டுக் கொடுத்துடுவோமா? சந்துரு எல்லாம் செய்வான்... நீ மனசைப் போட்டு அலட்டிக்காதே.''

அதன் பிறகு... அவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக சந்துரு எடுத்துக் கொண்ட முயறசிகளை சொல்லி மாளாது. பிரைவேட் டிடெக்டிவ் ஏஜன்ஸியைக் கூட அணுகி... அவர்களது உதவியையும் நாடியிருந்தான்.

ஆனால் நாட்கள் தான் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தனவே தவிர... அவர்களைப் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை.

கடந்த ஐம்பது நாட்களாக... கிணற்றில் போட்ட கல்லாகத் தான் இருக்கிறது.

உண்ணப் பிடிக்கவில்லை... உறங்கவும் பிடிக்கவில்லை சென்னைக்குச் சென்று மற்ற நிறுவனங்களை கவனிக்கவும் பிடித்தமில்லை.

முக்கியமான கோப்புகள், பிராஜெக்ட் ரிப்போர்ட் ஆகியவற்றைக் கொரியரில் வரவழைத்து கையெழுத்து இட்டு அனுப்பி வைத்துக் கொண்டிருந்தான்.

சந்திராவின் உடல்நிலை நன்கு தேறிவிட்டதோடு... இலேசாகத் திணறினாலும் புரியும்படி பேசவும் ஆரம்பித்து விட்டார்.

'இனி... இங்கே இருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

'உதயா, சூரியா குழந்தைகள் கிடைத்து விட்டால் போதும்... கிளம்பிவிட வேண்டியது தான்.

'அவர்கள் திரும்பவும் கிடைப்பார்களா?

'தமையனின் பெண்கள் மீது எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார் அம்மா.

'சதா அவர்களை நினைத்து வேதனையில் வெம்பித் தவிக்கிறாரே?

'உதயாவை எனக்கு மணம் முடித்து வைத்து மருமகளாக்கிக் கொள்வாரா?

'பவித்ராவுக்கு அளித்த வாக்கு என்னாவது? என்று வாதிடுவாரா?

'உதயாவை உயிருக்கு உயிராக நான் நேசிப்பதை எப்படி எடுத்துச் சொல்வது?

'உதயா திரும்பக் கிடைத்தாலும்... இந்தப் பெரும் சிக்கல் தீராது போலிருக்கிறதே?'

நினைக்க நினைக்கத் தலைவலி தான் அதிகரித்ததே தவிர... எந்த வழியும் புலப்படவில்லை.

* * *

''நான் இதைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை உதயா.''

சல்லடையில் சலித்த மாவை சம்புடத்தில் கொட்டிய உதயா நிமிர்ந்து பார்த்தாள்.

''இப்படி துணிச்சலா வெளிநடப்பு செய்து இந்த மெஸ்ஸை நடத்தி... யாரு தயவுமில்லாம நிமிர்ந்து நிக்கலாம்னு நீ சொன்னப்போ... இது எப்படி சரிப்பட்டு வரும்னு உள்ளூர தயக்கமா இருந்துச்சு.

''ஆனா இப்போ நெனச்சுப் பார்த்தாலே... மலைப்பா இருக்கு உதயா... உங்க உழைப்பு, அக்கறை, உத்வேகத்தால... கடந்த அம்பது நாட்கள்லே கஸ்டமர்ஸோட எண்ணிக்கை உசந்திருக்கு.

''தாயார் மெஸ்லே சுவையும் தரமும் அபாரமா இருக்குன்னு நல்ல பேரும் கிடைச்சிருக்கு... பார்க்கவே பெருமிதமா இருக்கு... சீமந்தம், பிறந்த நாள் விழான்னு...



மெல்ல மெல்ல கேட்டரிங் ஆர்டர்ஸூம் கிடைக்க ஆரம்பிச்சுடுச்சு... குறுகின காலத்துக்குள்ளே கிடுகிடுன்னு ஒரு முன்னேற்றம்.''

சிலாகித்துப் பேசினார் அம்புஜம் மாமி.

''அதுக்கெல்லாம் காரணம் உங்க ஆசீர்வாதம் தான் மாமி... நீங்க ஒரு வார்த்தை சொன்னதால தான... தைலா மாமி இந்த தாயார் மெஸ்ஸை நடத்தற உரிமையை எங்களுக்குக் குடுத்தாங்க...''

சப்பாத்தி மாவில் வெந்நீரும், பாலும் ஊற்றிப் பிசைந்து கொண்டே பேசினாள் சூரியா.

''உதயாவோட குணம் அப்படியே உன்னண்டயும் இருக்குடி. எல்லாம் உதயாவோட முகராசிம்மா... பட்டதாரி பொண்ணு தான்... படிச்ச படிப்புக்கேத்த வேலைக்குத்தான் போகணும்னு நெனக்காம... துணிஞ்சு மெஸ்ஸை நடத்தலாம்னு களத்துல இறங்கினா... பாரு! ஒவ்வொரு பொண்ணுக்கும் இந்த தன்னம்பிக்கை இருக்கணும்... இதோ... உனக்கும் அவளோட சேர்ந்து தைரியமும் துணிச்சலும் வந்திருக்கே... போராடி ஜெயிச்சுடலாம்கிற நம்பிக்கை பிறந்திருக்கே... சந்தோஷமா இருக்குடி சூரியா.''

''கரெக்டா சொன்னீங்க மாமி! அக்காவோட முகத்துல இப்பத்தான் புதுப் பொலிவு வந்திருக்கு... சொந்தக் கால்லே நிக்கிறோம்கிற தெம்பு கண்ணுல மின்னுது. எனக்கு இப்பத்தான் நிம்மதியா இருக்கு மாமி!''

''ஹூம்! அவரோட பென்ஷன் பணத்துல... நானா சமைச்சு சாப்பிட்டு... ரொம்ப விரக்தியா நாட்களைக் கடத்திண்டிருந்தேன். ஆனா உதயா எனக்கு முக்கியத்துவம் கொடுத்து அழைச்சுண்டு வந்து கல்லாவுல உட்கார்த்தி வச்சுட்டா...

''வாழற வாழ்க்கைக்கு இப்பத்தான் புது அர்த்தம் கிடைச்சிருக்கு... முன்னெல்லாம் பூமிக்கு பாரமா இருக்கேனே... சீக்கிரமா கொண்டு போயிடு பகவானேன்னு வேண்டிப்பேன். ஆனா இப்போ... 'இந்தக் குழந்தைகள் அமோகமா வாழணும். அவங்க நன்னா வாழறதை நான் கண் குளிரப் பார்க்கணும். அதுவரைக்கும் எனக்கு ஆயுசைக் குடுன்னு வேண்டிண்டிருக்கேன்.''

கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை மெல்ல முந்தானையால் துடைத்துக் கொண்டார் அம்புஜம் மாமி.

மாவு சலிப்பதை நிறுத்தி விட்டு அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் உதயா.

''உதயா! இதெல்லாம் இன்னும் எத்தன நாளைக்கி? இது சாஸ்வதமா? ஆயிரந்தான் தைரியமா போராடினாலும் நீ ஒரு பெண்... உன்னோட அம்மா ஸ்தானத்துல இருந்து கேட்கிறேன். பதிலைச் சொல்லும்மா.''

''நல்லாக் கேளுங்க மாமி'' தூண்டி விட்டாள் சூரியா.

உள்ளுக்குள் ஒரு குட்டி பயம் ஜனிக்க தலை குனிந்தாள் உதயா.

## 15

வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள்ளேயே சிக்கிக் கொண்டன.

எலிப் பொறிக்குள் சிக்கிக் கொண்டதைப் போன்று... இருப்புக் கொள்ளாமல் பரிதவித்தாள் உதயா.

மாமி எழுப்பிய கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று திருதிருத்தாள்.

சதா உள்ளுக்குள் அலை அலையாய் எழும்பிய எந்த வினாவிற்கும்... இதுவரை அவளால் விடையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.



''எத்தன நாளைக்கு இந்த அஞ்ஞாத வாசம்? உனக்குன்னு ஒரு கல்யாணம் காட்சி நடக்க வேணாமா? சூரியா புலம்பிண்டே இருக்கா... நான் என்ன நினைக்கிறேன்னா... அந்த சந்துரு மெயின் ரோட்டுல தான் நிறுவனம் தொடங்கி இருக்கானாம்.

''அன்னிக்கு பத்மநாபன் சொன்னார் இல்லையா? சந்துரு குடும்பமே உன்னைத் தேடிண்டு இருக்கும். நெருங்கின உறவுக்காரங்க இல்லையா? சந்திரா பாவம்... துக்கிச்சுப் போயிருப்பா...

''அவங்ககிட்ட ஒரு வார்த்தை... நாம்ப 'தாயார் மெஸ்'ஸை நடத்திண்டு இருக்கிறதை தெரியப்படுத்திட்டா நல்லதுன்னு நெனக்கிறேன்.

''ரொம்ப அலை பாய்ஞ்சுண்டு இருப்பா... அதான்.''

''தயவு செஞ்சு இந்தப் பேச்சை எடுக்காதீங்க மாமி! நான் அன்னிக்கே இதுக்கான பதிலைச் சொல்லட்டேன். மறுபடியும் வற்புறுத்தாதீங்க... நம்மால யாருக்கும் எந்த உபத்திரவமும் வந்துடக் கூடாது பாருங்க... நீங்களும் சரி... சூரியா அக்காவும் சரி... மறுபடியும் இந்தப் பேச்சை எடுக்காதீங்க...

''எ... எனக்கு வருத்தமா இருக்கு... தர்ம சங்கடமாகவும் இருக்கு... அக்காவோட குழந்தைங்களை நல்லபடியா வளர்த்து ஆளாக்கணும். அதான் என் லட்சியம்.... அக்கா பட்ட கஷ்டத்தைப் பாத்து பாத்து என் மனசு ரணமாயிருக்கு.

''கல்யாணம்கிற வார்த்தையைக் கேட்டாலே... நாராசமா இருக்கு மாமி... என்னை இப்படியே விட்ருங்க... ப்ளீஸ்.''

அவளுக்கு சுருதி இறங்கி விட்டது.

ஈரச் சுமையினால் கனத்த இமைகளை உயர்த்தி அவர்களை ஒரு முறை பார்த்துவிட்டு சிறு குழந்தை

போல்... புறங்கையினால் அழுந்தத் தேய்த்துக் கொண்டாள்.

தனக்குள் ஏதோ ஒரு குழப்பத்தை கோட்டைச் சுவராய் எழுப்பிக் கொண்டு... அதிலிருந்து வெளியே வரத் தெரியாமல் அவள் சுற்றிச் சுற்றி வருவதை... அம்புஜம் மாமியால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

'மாமி சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டால் என்னவாகும்?

'உயிரிலும் உணர்விலும் கலந்த சந்துருவுக்கும் அவனது குடும்பத்தாருக்கும் பல சங்கடங்கள் ஏற்படுவதோடு...

'சந்துருவின் உயிருக்கே உலை வைத்து விடும் அபாயம் நேரலாம்.

'கல்யாணம் என்ற சடங்குக்கே என் வாழ்வில் இடமில்லை... சந்துருவுக்கு இதயத்தில் இடமளித்து விட்டு... மாற்றானுக்கு என்னால் கழுத்தை நீட்டவும் முடியாது.

மனதில் முகிழ்த்து மொட்டாய் அரும்பிய காதலை... காதலனிடமே வெளிப்படுத்த இயலாத துர்பாக்கியம்... வேறு எந்தப் பெண்ணிற்கும் ஏற்படக்கூடாது.'

மலை உச்சியின் மீது ஏறி நின்று 'சந்துரு! ஐ லவ் யூ ஸோ மச்' என்று இரைந்து கத்திவிட மனம் துடித்தது நிஜம்!

கஷ்டப்பட்டு பிரம்மப் பிரயத்தனம் செய்து காதலெனும் சுகமான உணர்வை... மனமாகிய அலிபாபா குகைக்குள் அழுத்தி இறுக மூடி விட்டிருந்தாள்.

ஆயிரம் துக்கமிருந்தாலும்... சந்துருவை நினைக்கும்போதே... மனசுக்குள் மத்தாப்பூ சிதறத்தான் செய்தது.

ஆனந்தச் சாரலில் நனைவது போன்றிருந்தது.



வெந்த புண்ணில் மயிலிறகால் மருந்து தடவியது போலிருந்தது.

சோகத்திலும் ஒரு இதமான சுகம்!

'இந்த சுகம் போதும்... மீதி வாழ்நாளை இப்படியே கழித்து விடுவேன் சந்துரு... அடுத்த ஜென்மத்திலாவது ஆசைப்பட்டவனைக் கட்டிக் கொள்ளும் பாக்கியத்தை... அம்மன் எனக்குத் தரணும்னு வேண்டிக்கிறேன்.'

மானசீகமாக அடிக்கடி பேசிக் கொண்டாள் உதயா.

ஆனால் சூரியாவுக்கும், அம்புஜம் மாமிக்கும் நெஞ்சில் ஈவா முள் உறுத்தலாய் இருந்தது உண்மை!

## 16

சபேசனுக்கு நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல இருந்தது.

வெளியில் தலைகாட்ட முடியவில்லை.

''பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு தங்கச்சிகளை படாத பாடு படுத்தினான்பா.. பெரியவளை குடிகாரப் பயலுக்கு கட்டிக் குடுத்து... தண்ணி தெளிச்சு விட்டுட்டான்.

''அவுங்க என்ன கொடுமை பண்ணினாலும் கண்டுக்கிறதில்ல... பொண்டாட்டி தாசனுக்கு கண் அவுஞ்சு போச்சு போல... சின்னவளை சித்ரவதை பண்ணிட்டிருந்தான். அதே குடும்பத்துல பொறுக்கிப் பயலுக்கு இவளையும் கட்டிக் குடுக்கணும்னு பாத்தான்.

''பாவம்... பொறுக்க மாட்டாம அக்காளும் தங்கச்சியுமா எங்கயோ போயிட்டாங்க... செத்துக் கித்து போனாலும் போயிருக்குங்க... யார் கண்டா நடேசன் பாவம்! நல்ல மனுஷன்... ஓடி ஓடி சம்பாதிச்சு பொண்ணுங்க

எதிர்காலத்துக்கு எல்லாம் சேத்து வச்சுட்டுத்தான் போனாரு...

''அப்படியே அவரு அம்போன்னு விட்டுட்டுப் போயிருந்தாலும் அண்ணன்காரன் தானே தங்கைகளுக்கு ஆதரவா பாசமா இருந்து பொறுப்பா கட்டிக் குடுக்கணும்.

''த்தூ! இவனெல்லாம் ஒரு மனுஷன்.''

கிணற்றடியிலும், குழாயடியிலும், டீக்கடையிலும், ஆலமரத்தடியிலும் கூடியிருக்கும் கிராமத்து ஜனங்கள்... சபேசனின் காதுபடவே தூற்றினார்கள்.

அவனது மனசாட்சியே ரம்பமாக அறுக்கத் தொடங்கியது.

'அப்பா இறக்கும் தறுவாயில் தங்கைகளை என்னிடம் தானே ஒப்படைத்துச் சென்றார்.

'பாசத்தை துணி கொண்டு துடைத்தது போல்... கொஞ்சம் கூட அவர்களிடம் அனுசரணையாக நான் நடக்கவில்லையே?

'என் கூடப் பிறந்த தங்கைகளை... மாற்றாந்தாய் கொடுமைப் படுத்துவது போல் சுகந்தி ஆட்டிப் படைத்தாளே?

'கண்டும் காணாதது போல் நடந்து கொண்டதுமில்லாமல்... இளையவளைக் கை நீட்டி அடித்தேனே?

'எவ்வளவு கேவலமான மனிதன் நான்? பெரிய பழி பாவம் வந்து சேர்ந்து விட்டதே?

'ஒரு வேளை என் இரு தங்கைகளும் தற்கொலை செய்து கொண்டார்களோ?

'ஐயோ அப்பா! என்னை மன்னிப்பீங்களா? இதுநாள் வரை சுயநலப் பிசாசாய் வாழ்ந்துவிட்டேனே? தங்கைகள்



திரும்பக் கிடைக்கணும். இனிமேல் அவர்களை தகப்பன் ஸ்தானத்துலே இருந்து பார்த்துப்பேன்... இது சத்தியம்!'

உள்ளுக்குள் அழுது புலம்பினான்.

சுகந்தி தன் பருத்த உடம்பைத் தூக்கிக் கொண்டு... ஒண்டி மனுஷியாய் சமைத்து வீட்டு வேலைகள் அத்தனையையும் செய்து முடிப்பதற்குள் மூசு மூசென்று மூச்சிரைத்தாள்.

அன்றும் அப்படித்தான்... சமைத்து விட்டு துவைத்து முடிப்பதற்குள் அவளது பெண்டு கழண்டு விட்டதைப் போன்று வேதனையில் துடித்தவள்... எரிச்சலில் கத்த ஆரம்பித்தாள்.

''உங்க பாழாய் போன தங்கச்சிங்க தலையில இடி வந்து விழுக... ஓடுகாலிங்க.. வீட்டு மானத்தை கப்பலேத் திட்டாங்களே? என்ன குறை வச்சோம் நாம்ப? கொழுப் பெடுத்துப் போயி ஓடியிருக்காளுங்க... ஏங்க... உங்கத்தை முன்ன ஓடிப் போனாங்களாமே? அது மாதிரி உங்க சின்னத் தங்கச்சியும் ஓடியிருப்பாளோ?''

அவ்வளவுதான்! எங்கிருந்து தான் இவ்வளவு கோபமும் ஆவேசமும் பீறிட்டுக் கொண்டு வந்ததோ?

''யாரைப் பத்தி... யாரு கிட்ட பேசறே? பிச்சைக்கார நாயே! உதயா சொக்கத் தங்கம்டி... உன் பேச்சைக் கேட்டுக்கிட்டு அவளைக் கை நீட்டி அடிச்சேன் பாரு... படுபாவி!

''என் புத்தியை செருப்பால அடிக்கணும். தீராத பழி பாவத்துக்கு ஆளாகி நிக்கிறேன்டி... எல்லாம் உன்னால தானே?

''இப்ப நான் சொல்றேன். பண்ணின பாவத்துக்குத் தான் உன் வயித்துல புழு பூச்சியே ஜனிக்கலை.

''இனிமே நாக்குல நரம்பில்லாம என் தங்கைகளை ஒத்த வார்த்தை பேசினே... கொலையே பண்ணிடு வேன்டி... என் தங்கச்சிங்க மட்டும் கிடைக்கட்டும்... அவங்க கால்லே விழுந்து பாத பூஜை பண்ணினாலும் நாம்ப பண்ணின பாவம் தீராதுடி.''

கண்கள் கோவைப் பழமாய் சிவக்க... பற்களை நற நறத்த வண்ணம் சுகந்தியின் கன்னங்களில் மூர்க்கத்தன மாய் மாறி மாறி அறைந்தான் சபேசன்.

''உன்னை எல்லாம் வைக்கிற எடத்துல வச்சிருக் கணும்டி... நான் தப்பு பண்ணிட்டேன்... அதான் குற்ற உணர்வுல கொஞ்சம் கொஞ்சமா செத்துக்கிட்டிருக்கேன்.

''ராட்சசி! பீரோ சாவியைக் குடு... என் தங்கச்சிகளுக்கு சேர வேண்டிய... எங்கம்மாவோட நகைங்களை எங்க வச் சிருக்கே? ஒரு கிராம் குறையாம எல்லாத்தையும் எடுத்து வைக்கணும்... எனக்கு உதயா சூரியா கிடைச்சுட்டா போறும்... தங்கச்சிங்கன்னுகூட பார்க்க மாட்டேன். கால்லே விழுந்து மன்னிப்பு கேட்பேன்.

''இனிமே பீரோ சாவியை இடுப்புல சொருகிட்டு திரிஞ்சே... மென்னியை முறிச்சிடுவேன்.''

பேசிக்கொண்டே மீண்டும் காட்டுத்தனமாக ஓங்கி அறைந்தான்.

சப்தநாடியும் ஒடுங்கிப் போனாள் சுகந்தி.

''இ... இந்தாங்க'' இடுப்பில் செருகியிருந்த சாவிக் கொத்தை எடுத்து நீட்டினாள்.

சாவிக் கொத்தை வாங்கியவன் விருட்டென்று உள் ளறைக்குள் புகுந்து கொண்டு கதவைச் சாத்திக் கொண் டான்.



# 17

சந்துருவின் மனதில் புயல் வீசிக் கொண்டிருந்தது.

பைலைப் புரட்டிக் கொண்டிருந்தவனின் மனம், வேலையில் ஈடுபடாமல் சண்டித்தனம் செய்தது.

மாலை மணி ஆறரையைத் தாண்டியிருந்தது.

வீட்டிற்குச் செல்லவும் மனமில்லை.

'ஒருவேளை... உதயாவும் சூரியாவும் தற்கொலை செய்து கொண்டிருந்தால்...?'

நினைக்கும்போதே... அந்த ஏ.ஸி. அறையிலும் அவனுக்கு குப்பென்று வியர்வை முத்துக்கள் முகத்தில் அரும்பின.

'கடவுளே... அப்படியெல்லாம் நடந்திருக்கக் கூடாது.

'ஊகூம்! உதயா எதிர் நீச்சல் போடக் கூடிய பெண். அத னால் தான் இத்தனை காலமும் போராடியிருக்கின்றாள்.

'சூரியாவுக்கு இரு குழந்தைகள் வேறு இருக்கின்றன. அந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் முகங்களைப் பார்த்தால்... தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் வராது.

'கண்டிப்பாக அந்த அரும்புகளுக்காக... எங்கேயாவது சொந்தக் காலில் நின்று போராடி வாழ்ந்து கொண்டு தான் இருப்பார்கள்.'

தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டான் சந்துரு.

''என்ன நண்பா? எப்படி இருக்கே?'' என்ற குரலைக் கேட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றான்.

''டேய் ரகு... நீ எப்படா வந்தே?''

''மதியமே வந்துட்டேன்... பிஸினஸ் விஷயமா முக்கியமான நபரை மதுரையில பாத்துட்டு... அப்படியே

கிளம்பினேன். உங்க வீட்டுக்குப் போயிட்டு அங்கிள் அருண், ஆன்ட்டியை பாத்துட்டுத் தான் வரேன்.''

''எனக்கொரு போன்கூட பண்ணாம சர்ப்ரைஸா வந்திருக்கே? நீ எப்பவும் இப்படித்தான்'' ரகுவைக் கண்ட மகிழ்ச்சியில் செல்லமாக அவன் வயிற்றில் குத்தினான் சந்துரு.

''என்ன நண்பா? கண்கள்லே கருவளையம்... ஏகத்திற்கும் இளைச்சிருக்கே? தாடி ஒண்ணு தான் பாக்கி... காதல்லே தோல்வியடைஞ்ச தேவதாஸ் மாதிரியே இருக்கே?''

''அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல... நீ வேற கிண்டல் பண்ணாதே.''

''சந்துரு... கமான்! உதயா காணாம போயிட்டாளேங்கிற துக்கம் தானே உனக்கு? அப்பா எல்லாம் சொல்லிட்டாரு... உதயா கிடைச்சுட்டா... நீ நார்மலாயிடுவியா?''

தனது எக்ஸ்ரே விழிகளால் சந்துருவின் இதயத்தைத் துளைத்தெடுப்பதைப் போன்று... ஊன்றிப் பார்த்தான் ரகு.

''அ... அது வந்து.''

''உம்! சொல்லு சந்துரு... ஐ திங்க்... யூ லவ் உதயா, ஆம் ஐ கரெக்ட்.''

''எஸ்... ஐ லவ் ஹர் ஸோ மச்... ஆனா...''

''என்ன ஆனா?... உதயாவை லவ் பண்ற விஷயத்தை எப்படி பேரண்ட்ஸ் கிட்டே சொல்றதுன்னு திணறிக்கிட்டிருக்கே? பவித்ரா குறுக்கே நிக்கிறாளே... பெத்தவங்க ஏதாச்சும் சொல்லிடுவாங்களோன்னு பயப்படறே... அப்படித்தானே?''

''ஆமாண்டா ரகு... இதுவொரு பெரிய சிக்கல்... விடுபட முடியாமத் தவிச்சுட்டிருக்கேன்.''



''அது ஒரு பெரிய சிக்கலே இல்ல... பிராப்ளம் சால்வ் ஆயிடுச்சு நண்பா... கவலையே படாதே... இனிமே பவித்ரா உன் லைப்லே குறுக்கே வர மாட்டா... போதுமா?''

''எ... எப்படி ரகு? இது எப்படி சாத்தியம்? நீ சொல்றதெல்லாம் நிஜமா?''

விழிகளில் ஆர்வம் பொங்கி வழிய பரிதாபமாக நின்றிருந்த நண்பனைக் கண்டு நேசத்தில் மனம் பாகாய் கரைந்தது.

''ரிலாக்ஸ்! பவித்ராவை உனக்குப் பேசி முடிச்சுட்டாங்கன்னு நீ சொன்னப்பவே... எனக்கு 'பக்'குனு பட்டுச்சு! ஏன்னா... அந்தப் பொண்ணைப் பார்த்தா... ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு மாதிரியே எனக்குப் படலை...

''பவித்ராவைப் பத்தின பேச்சை எடுத்தாலே... ஆன்ட்டியின் முகத்துல கலவரமும் பீதியும் படர்ந்ததை கவனிச்சேன். பவித்ராவைப் பத்தி ஏதோ அதிர்ச்சியான தகவலை அறிஞ்ச பின்னாடி தான்... ஆன்ட்டிக்கு பக்கவாதம் ஏற்பட்டிருக்குமோன்னு... எனக்கு பொறி தட்டுச்சு!''

''டேய்... என்னடா சொல்றே? பவித்ராவைப் பத்தின ஏதோ ஒரு விஷயம் அம்மாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துச்சா? அதை நம்ம கிட்ட அப்பவே சொல்லியிருக்கலாமேடா?''

''இரு... அவசரப்படாதே! அதை அவங்க நம்மகிட்ட சொல்றதுக்கு முன்னயே அவங்களுக்கு பி.பி. எகிறி இந்த நிலைமை வந்துடுச்சே? அவங்களால அந்த அதிர்ச்சியை உள் வாங்கி ஜீரணிக்கவே முடியலை... அதான் அவங்களுக்கு 'பாரலிட்டிக் அட்டாக்' வந்துருக்கு.''

''மைகாட்.''

''அன்னிக்கு அருணை கூட்டிக்கிட்டு கார்லே மகா பலிபுரத்தைச் சுத்தி காண்பிக்க அம்மா போனாங் கல்லியா?''

''ஆமா... அங்க அப்படி என்னதான் பார்த்தாங்க? இதுவரைக்கும் அம்மா அதைப்பத்தி என்கிட்ட பேசவே ரொம்பத் தயங்கினாங்க ரகு.''

''பவித்ரா யாரோ ஒருத்தனோட பைக்லே நெருக்கமா உட்கார்ந்துட்டு வந்து இறங்கியிருக்கா... ஒரு காட்டே ஜுக்கு பக்கத்துல காரை நிறுத்திட்டு உள்ளே உட்கார்ந்த படி அம்மா, அருண் பயலுக்கு சாதம் ஊட்டினாங்களாம்...

''அப்போ பவியை பாத்துட்டு அதிர்ந்து போய் இறங்கி யிருக்காங்க... ரெண்டு பேரும் நெடுநாள் காதலர்கள் மாதிரி அரவணைச்சபடி காட்டேஜுக்குள்ளே புகுந்துட் டாங்களாம்.

''அம்மா திக்பிரமை பிடிச்ச மாதிரி நின்னதைப் பார்த்த... அந்த காட்டேஜ் ஊழியர் ஒருத்தர் கிட்ட வந்து... 'நீங்க எதுக்கும்மா இங்க நிக்கிறீங்க? இது இளசுங்க ஜோடியா வந்து தங்கற காட்டேஜ் அம்மா... உங்க மாதிரி நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள்... இங்க வரதுக்கே தயங்குவாங்க' அப்படின்னு அடிக்குரலில் முணுமுணுத்து விட்டு நகர்ந்தானாம்.

''இப்படியொரு பெண்ணைப் போய் சந்துருவுக்குப் பேசி முடிச்சு பூ வச்சுட்டு வந்துட்டோமேன்னு அதிர்ச்சி யில கலங்கி ஆடிப் போயி... எப்படியோ வீடு வந்து சேர்ந்திருக்காங்க... வெளியில சொல்றதுக்கு முன்ன... அவங்களுக்கு அந்த நிலைமை ஏற்பட்டுப் போச்சு.''

''நேர்லே பாத்த மாதிரி கோர்வையா சொல்றியே? இந்த விவரமெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?''



''உங்களை இங்க அனுப்பி வச்சதுக்கு அப்புறமா... நம்பகமான ஆட்கள் மூலமா... பவித்ராவை ஃபாலோ பண்ணி சில தகவல்கள் சேகரிச்சேன். நான் ஊகிச்ச மாதிரியே பவி நல்ல டைப் இல்லைன்னு... கன்ஃபார்மா தெரிஞ்ச பின்னாடி... நானே ஃபாலோ பண்ணினேன். ரெண்டு நாளைக்கு முன்னாடி தான்...

''கோவளம் பீச்சுல பாய் பிரண்ட் கூட அவ வசமா என் கிட்ட மாட்டிக்கிட்டா... போலீசுக்குப் போயிடுவேன்னு மிரட்டினேன்... ஜாப்பை ரிஸைன் பண்ணிட்டுக் கண் காணாம போயிடறதா ஒத்துக்கிட்டா...

''பெரிய முடிச்சை அவிழ்த்தாச்சு! உனக்கு இனி எந்தவொரு பிராப்ளமும் இல்லை... இங்க அம்மாகிட்ட இதைப் பத்தி சொன்னப்போ தான் திக்கித் திணறி அவங் களும் விலாவாரியா அன்னிக்கு நடந்த மேட்டரை... மனசு விட்டுச் சொல்லிட்டாங்க.

''உன்னோட காதலுக்கு முன்னாடி இருந்த பெரிய தடைக்கல்லை தகர்த்தாச்சு... இனி என்ன?''

புன்னகைத்தான் ரகு.

''உதயா எங்கே இருக்காள்னே தெரியலையேடா... என்னடா பண்றது?''

''முதல்லே என்கூட போலீஸ் ஸ்டேஷனுக்கு வா... ஒரு கம்ப்ளைண்ட் குடுப்போம்... உதயாவோட அக்கா ஹஸ்பெண்ட் மேல அவங்க ஆக்ஷன் எடுக்கட்டும்.''

''டேய் ரகு! நான் பிரைவேட் டிடெக்டிவ் ஏஜன்ஸி மூலமா முயற்சி பண்ணிட்டிருக்கேன்... போலீசுக்குப் போனா... உதயாவோட குடும்பத்து பேர் அடிபடுமேன்னு தயங்கறேன்.''

''ப்ச்! அதெல்லாம் பாத்தா... நம்ம காரியம் நடக்க வேணாமா? எல்லாம் முறைப்படி செஞ்சிட்டா... நமக்கு

தானே பெனிஃபிட்! நான் சொன்னாக் கேளு... எல்லாம் சரியா நடக்கும்... வா நண்பா.''

கிட்டத்தட்ட சந்துருவை இழுத்துக் கொண்டு நடந்தான் ரகு.

அடுத்த அரை மணி நேரத்தில் உதயாவை சந்திப்போம் என்று சந்துரு நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்பது நிஜம்!

## 18

போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளிப்பட்ட சந்துருவும், ரகுவும் காருக்குள் பரவினார்கள்.

''சந்துரு! உதயாவோட அக்கா ஹஸ்பண்டையும் அவனோட தம்பியையும் அள்ளிக்கிட்டு வந்து ரெண்டு தட்டு தட்டினா... பொட்டிப் பாம்பா அடங்கிடுவாங்க... பாரேன்.''

''ப்ச்! உதயா எங்கே இருக்கிறான்னே தெரியலையேடா.''

''எனக்கு நம்பிக்கை இருக்கு சந்துரு... அவங்க இந்த சுத்து வட்டாரத்துல தான் எங்கியோ இருக்காங்கன்னு... பட்சி சொல்லுது.''

''ஹூம்! உன் வாக்கு பலிக்கட்டும்டா!''

''ஆமா... நாம்ப எங்க போயிட்டிருக்கோம்... வீட்டுக்குப் போகலையா சந்துரு?''

''இல்லடா... சமையலுக்கு நியமிச்ச ஆள் திடீர்னு ரெண்டு நாளா வரலைடா... வீரபாண்டிலே ஹோட்டல்ஸ் அவ்வளவு சரி இல்லை... தேனியில இருந்து வாங்கி ப்யூன் கிட்டே அனுப்பிட்டிருந்தேன்... இன்னிக்கு மதியம் கூட ப்யூன் தான் சாப்பாடு வாங்கிட்டுப் போய்... வீட்டுலே கொடுத்தாப்பல.''



''அந்த எடுப்பு சாப்பாட்டை நானும்தான் சாப்பிட்டேன் சந்துரு... சுமார்தான்.''

''மெயின்ரோட்டுக்குப் பக்கத்துல... பகவதி அம்மன் கோவில் தெருவுல ஏதோ ஒரு மெஸ் இருக்காம்... ஹோம்லியா சுவையும் மணமுமா டேஸ்ட் அபாரமா இருக்காம். ப்யூன் மதியம் சொல்லிட்டிருந்தான்.

''நைட் டிபன் அங்கே வாங்கி சாப்பிட்டுப் பாத்துட்டு... பிடிச்சிருந்தா.. மூணு வேளைக்கும் அங்கேயே வாங்கிக்கலாம் பாரு... மட்டம் போட்ட சமையல்காரனை நிறுத்திட்டு... இங்கே இருக்கற வரை அந்த மெஸ்லேயே அரேஞ்ஜ் பண்ணிடலாம் பாரு... ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டா அருணுக்கு ஒத்துக்கலை... அதான்.''

பகவதி அம்மன் கோவில் தெருவில்... 'தாயார் மெஸ்' என்ற போர்டு மாட்டியிருந்த வாசலருகே வந்ததும்... அவர்களது கார் தனது மூச்சை நிறுத்தியது.

சின்னையாவும் தங்கமும் மளிகை சாமான்களும், காய்கறிகளும் வாங்கி வருவதற்காக... சந்தைக்குச் சென்று விட்டிருந்தனர்.

மாமி கல்லாவில் அமர்ந்திருக்க... சூரியா அடுக்களையில் தோசை வார்த்துக் கொண்டிருந்தாள்.

உதயா சாம்பார் வாளியைத் தூக்கிக் கொண்டு... கஸ்டமர்களுக்கு பரிமாறிக் கொண்டிருந்தாள்.

நெற்றியில் பொடித்திருந்த வியர்வைத் துளிகளை புடவை முந்தானையால் ஒற்றியபடி... அடுக்களையை எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தாள்.

''இன்னும் நாலு ஊத்தாப்பம் போடு அக்கா'' கூறி விட்டுத் திரும்பியவளுக்கு.... தூக்கி வாரிப் போட்டது.

மாமிக்கு மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடியது. சந்தோஷம் தாளாமல் அப்படியே எழுந்து நின்றார்.

''உதயா! நாங்க எல்லாரும் இருக்கறப்ப... ஏன் இந்த முடிவுக்கு வந்தீங்க? உதயா... என்னை அந்நியனா நெனச்சுட்டியா? உங்களைக் காணாம... நாங்க எப்படித் தவிச்சுப் போயிட்டோம் தெரியுமா? உ... உதயா இ... இப்போ எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

அளவு கடந்த மகிழ்ச்சியில்... சந்துருவின் இதயம் மான் குட்டியாய் எம்பிக் குதித்தது. அவனைப் பார்த்ததும் அவளது இதயம் கப்பென்று நின்று துடிக்க மறந்து... அப்புறம் இயங்கியது.

'குபுக்' என்று கண்களில் வெப்ப ஊற்று பொங்கியது.

கீழுதட்டை அழுந்தக் கடித்த உதயா சற்று நிதானித்து... ''சாரி! கொஞ்சம் வெயிட் பண்ணுங்க... இந்த கஸ்டமர்ஸை கவனிச்சு அனுப்பிட்டு வந்துடறேன்... ப்ளீஸ்! உட்காருங்க.''

கடமையே கண்ணாக அவள் செயல்பட்ட விதம்... மனதை ஈர்ப்பதாக இருந்தது.

அவனின் ஏக்கப் பார்வையின் இலக்கு... அவளைப் பின் தொடர்வதாகவே இருந்தது. அவளின் கண்ணுக்குள் நுழைந்து உள்ளிறங்கி இருதயத்தைத் துளைத்துச் சிம்மாசனமிட்டு அமர்ந்து கொண்டது அவனின் பார்வை!

உதயா விலகி விடத் தான் பார்த்தாள். காந்த ஊசி பிடித்துக் கொண்ட இரும்புத் துகளாய் விடாமல் ஒட்டிக் கொண்டிருந்தது.

சந்துரு பேசிய வார்த்தைகள்... அவளது காதுகளில் மீண்டும் ரீங்காரமிட்டன.



அடி வயிற்றிலிருந்து கிளம்பி உயிரின் வேரை அசைத்துப் பார்க்கும் கம்பீரக் குரல்... காதுகளில் பாகுக் கரைசலாய் வழிந்தது.

அவளது மனம் குழைந்தது.

அரை மணி நேரம் அவஸ்தையில் கரைந்தது.

சந்துருவின் டென்ஷனைப் புரிந்து கொண்ட தினுசில்... 'எல்லாம் நல்லபடியா நடக்கும்... கவலைப் படாதே' என்ற ரீதியில் சமிக்ஞை செய்தார் அம்புஜம் மாமி.

ரகுவுக்கு இருப்பு கொள்ளாமல்... அவ்வப்போது வெளியில் சென்று யாருடனோ 'செல்'லில் பேசி விட்டு வந்தமர்வதும் போவதுமாக இருந்தான்.

''உதயா... போறும்! ரெகுலர் கஸ்டமர்ஸை கவனிச்சு அனுப்பியாச்சுல்ல? சூரியா! வாம்மா'' உரிமையுடன் அதட்டினார் மாமி.

''உங்களைக் காணாம... அங்க அம்மா பரிதவிச்சுட்டிருக்காங்க... உங்களுக்கு என்ன விதியா? இப்படி கஷ்டப்படணும்னு அவசியமே இல்ல...

''அம்மாவுக்கு உடம்பு ஓரளவு தேறிடுச்சு! நீங்களும் கிடைச்சுட்டீங்க... இனி நாம்ப எல்லாரும் சென்னைக்குக் கிளம்ப வேண்டியது தான்.''

''உங்களை மறுத்துப் பேசறதுக்கு மன்னிக்கணும். நாங்க இப்ப ரொம்ப சந்தோஷமா திருப்தியா இருக்கோம். உழைச்சு முன்னேறிக் காட்டணும்னு உத்வேகம் வந்திருக்கு... அதுலே ஒரு தனி சுகமே இருக்கு...

''யாருக்கும் பாரமா நாங்க இருக்க விரும்பலை.''

உதயா அழுத்தம் திருத்தமாகப் பேசினாள்.

''எ... என்ன பேச்சு இது? நீங்க திரும்பக் கிடைச்சதை நெனச்சா... என்னமோ சுவர்க்கமே கிடைச்ச மாதிரி

அவ்ளோ சந்தோஷமா இருக்கு... கொடிக்கு காய் எப்படி பாரமாக முடியும் உதயா?''

''உங்க அன்பையும், பெருந்தன்மையையும் நெனச்சா... ரொம்ப பூரிப்பாத்தான் இருக்கு... ரொம்ப நன்றி! ஆனா... எங்களை வற்புறுத்தாதீங்க... ப்ளீஸ்! இப்படியே விட்ருங்க.''

''அங்க சென்னையில நம்ம நிறுவனத்துக்குப் பக்கத்திலேயே ஒரு உணவகத்தைத் தொடங்கிடலாம். உத் வேகத்தோட உழைச்சு பெரிய லெவலுக்கு வாங்களேன். எங்களுக்கும் நிம்மதியா இருக்கும்... ப்ளீஸ்... உதயா! புரிஞ் சுக்கோ ஐ லவ் யூ ஸோ மச்... வெளிப்படையா கேட்கறேன்.

''என்னை ஏத்துப்பியா? எங்கம்மாவோட சொந்த அண் ணன் பொண்ணுங்க நீங்க... யாரையும் அவங்க பாரமா நெனைக்க மாட்டாங்கடா... உங்களுக்கு காவல் தெய்வமா இருந்த மாமியும் நம்ம கூட வரட்டும்.

சந்துருவின் குரல் பிசிறடித்தது.

உதயா ஏதோ பேச முற்படும் முன்... மீண்டும் குறுக் கிட்டுப் பேசினான்.

''எங்க அக்கா பூர்ணிமா அகாலமா மரணமடைஞ் சுட்டா... அந்த துக்கத்துல இருந்து இன்னமும் நாங்க விடுபடலை... சூரியா உனக்கு மட்டும் அக்கா இல்ல... அவங்களை நானும் எனது சகோதரியாவே நினைக்க ஆரம்பிச்சுட்டேன்.

''அருணோட சேர்த்து சூரியா அக்காவோட குழந்தை களையும் நாம்ப வளர்த்து ஆளாக்கலாம். நீ வந்து...''

''ப்ளீஸ்... மன்னிச்சுடுங்க! எங்க அக்கா பட்ட நரக வேதனையைப் பாத்துட்டு... எனக்கு கல்யாணம்கிற வார்த்தையைக் கேட்டாலே அலர்ஜியா இருக்கு... நீங்க வெளிப்படையா உங்க ஆசையை சொல்லிட்டீங்க... ஆனா அதுலே எனக்குத் துளிகூட உடன்பாடு இல்ல...

''அக்காவோட குழந்தைங்களை நல்லபடியா வளர்த்து ஆளாக்கணும். அதுதான் என் லட்சியம்... எங்க அத்தான் குடும்பத்தைப் பத்தி உங்களுக்கு சரியாத் தெரியாது. அவங்க பிடியிலிருந்து அக்கா முழுமையா விடுபடணும்.''

''மிஸ். உதயா! நாங்க இப்போ போலீஸ் ஸ்டேஷனுக் குப் போயிட்டுத்தான் வரோம். உங்க அக்காவை டார்ச்சர் பண்ணினதைப் பத்தி நாங்க புகார் குடுத்திருக்கோம். சட்டப்படி நடவடிக்கை எடுப்பாங்க... நல்ல லாயர் மூலமா சீக்கிரமா டைவர்ஸ் வாங்கவும் ஏற்பாடு செஞ்சிடலாம்.

''அதுவொரு பெரிய பிரச்சினையே இல்ல... பின்னே என்ன தயக்கம்? ஒண்ணுக்குள்ளே ஒண்ணு வேற... அது வும் சந்துரு மாதிரி கண்ணியமான நேர்மையான இளை ஞன் கிடைக்க... நீங்க ரொம்பக் குடுத்து வச்சிருக்கணும்.''

ரகு இதமான குரலில் தனது நண்பனுக்குப் பரிந்து கொண்டு பேசினான்.

''ஆமாண்டி உதயா! சந்துரு மாதிரி நல்ல பையன் உனக்கு கிடைக்கும்போது... அதை நீ மறுக்கிறது பெரிய முட்டாள் தனம்... ரொம்பவும் நெருங்கின பந்தம் வேற ஏன் அந்நிய மனுஷங்களா நெனச்சுத் தயங்கறே?''

மாமி அதட்டினார்.

''எனக்காக என் குழந்தைகளுக்காக... வாழ்நாள் முழுவதும் நீ இப்படியே கரையேறாம இருக்கேன்னு சொல்றியே? என் மனசு என்ன பாடுபடும்னு நீ யோசிக் கவே மாட்டியா?'' சூரியா கேவினாள்.

''நல்லாக் கேளும்மா சூரியா'' என்றபடி பத்மநாபன் சந்திராவைக் கைத்தாங்கலாகப் பற்றியபடி... அருணுடன் உள்ளே நுழைந்தார்.

''ரகு போன் பண்ணினான் மாமி. உடனே டாக்ஸியில அரக்கப் பரக்க ஓடி வரோம்... இத்தன பேரும் கெஞ்சறோம் மறுத்துப் பேசாதே உதயா...

''நீங்க வந்தீங்கன்னா... கனன்ற மனசுல பாலை வார்த்தாப்பல இருக்கும்... அதுவும் நீ நம்ம வீட்டுலே விளக்கேத்தினா... சந்தோஷமும் நிம்மதியும் கிடைக்கும்மா.

''சந்துரு உன்னை மனசார விரும்பறான்மா.''

''அப்புறம் என்ன தயக்கம் உதயா? 'சூரியா சொந்தக் கால்லே நிக்கிறா... அவ முகத்துல தெம்பும் நிம்மதியும் தெரியுது' அப்படின்னு சந்தோஷப் பட்டியே? சென்னைக்குப் போனாலும்... அங்கேயும் சூரியா நிமிர்ந்து நிப்பா... அதுல எந்தத் தடையும் இல்ல.

''சந்துருவும் உன்னை விரும்பறப்போ... நீ இப்படித் தட்டிக் கழிக்கலாமா?'' மாமி ஆதங்கப்பட்டார்.

''ஆனா... அவரை நான் விரும்பலையே? ஏன் என் மனசை யாரும் புரிஞ்சுக்கவே மாட்டேங்கிறீங்க... இதுக்கு மேல யாரும் வற்புறுத்தாதீங்க... ப்ளீஸ் அத்தை... நீங்களும் கட்டாயப் படுத்தாதீங்க... இதுக்கு மேலா என்னை நீங்க போர்ஸ் பண்ணினா... நான் தற்கொலை பண்ணிப் பேன்.

## 19

அனைவரும் ஆடிப் போய் விட்டனர்.

''உதயா! இதுக்கு மேல யாரும் உன்னை வற்புறுத்த... நான் அனுமதிக்க மாட்டேன்... தூங்கறவங்களை எழுப்பிடலாம். ஆனா தூங்கற மாதிரி நடிக்கிறவங்களை எழுப்பறது ரொம்பக் கஷ்டம்... எனக்குத் தெரியும்... உன் மனசுல எனக்கு இடம் இருக்குன்னு நல்லாத் தெரியுது...



ஆனா வறட்டுப் பிடிவாதம் பிடிக்கிறே... இதுக்கு மருந்து கிடையாது.''

சந்துருவின் வார்த்தைகள் சோகம் சுமந்து வந்தன.

''ஒரு நல்ல விஷயம் நடக்கப் போகுதேங்கிற ஆர்வத்துல காத்திருந்தோம்... ஏமாற்றம் தான் மிஞ்சியிருக்கு! நெஞ்சு நிறைய பாரத்தோட வெளியே போறதுக்கு முன்னாடி... இன்னொரு நல்ல காரியம் நடக்கறதுக்கான பிள்ளையார் சுழியை இப்போ நான் போடப் போறேன்.''

பீடிகை போட்டுப் பேசிய ரகுவை... அனைவரும் சீரியஸான முகபாவனையுடன் ஏறிட்டனர்.

''மாமி! வயசுல பெரியவங்க நீங்க... உங்ககிட்டேயே கேட்டுடறேன்... இதோ இந்த பத்மநாபன் சாரும் எங்கப்பாவும் பால்ய சிநேகிதர்கள்... சந்துருவை விட வயசுல நா மூத்தவன். சந்திரா ஆன்ட்டி என்னைத் தனது மூத்த மகனாத்தான்... இது வரை நடத்தியிருக்காங்க...

''காலேஜ்ல படிக்கிற காலத்துல ஒரு பொண்ணை உயிருக்கு உயிரா நேசிச்சேன். மதம் குறுக்கே நின்னுச்சு... மதவெறி புடிச்ச அந்தப் பொண்ணோட அப்பா... எங்களைப் பிரிச்சு அவளுக்கு கல்யாண ஏற்பாட்டை பண்ணினாரு...

''என்னோட ஸ்டெல்லா தற்கொலை பண்ணிக்கிட்டா... மனசொடிஞ்சு ரொம்ப காலம் நான் நடைப் பிணமா திரிஞ்சேன்... அப்புறம் தேறி என்னோட கவனத்தை பிஸினஸ்லே திருப்பி... வெறித்தனமா அதுலேயே இறங்கிட்டேன்.

''அப்பா... 'வீட்டுக்கு விளக்கேத்த ஒரு மருமகள் வரணும்டா'ன்னு அனத்திக்கிட்டே இருந்தாரு... நான் காதுலயே போட்டுக்கலை... அந்த ஏக்கத்துல திடீர்னு அவர் போனதுக்கு அப்புறம் தான் எனக்கு மனசாட்சி அறுக்க ஆரம்பிச்சது.

"சந்திரா ஆன்ட்டி கூட ரொம்ப வற்புறுத்தினாங்க... 'சரி கல்யாணம் செய்துக்கறேன்... என்னோட வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கணும் ஆன்ட்டி... எனக்கு வரப் போறவ... ஒரு ஊனமுற்ற பொண்ணு... இல்ல... அநாதரவா நிக்கிற பொண்ணு... இல்ல... ஒரு விதவை... இல்ல... கணவனால கைவிடப்பட்ட பொண்ணு... இந்த மாதிரி ஒரு பெண்ணைத் தான்... நான் மனைவியா ஏத்துக்கணும்னு இருக்கேன் ஆன்ட்டி' அப்படின்னு சொன்னேன்.

"அந்த மாதிரி பொண்ணா பார்க்கட்டுமா?'ன்னு கேட்டாங்க... கடவுளா பார்த்து அது மாதிரி பொண்ணை... என் முன்னால கொண்டு வந்து நிறுத்துவாரு... அவளைப் பார்த்ததும்... இவளைக் கட்டினா வாழற வாழ்க்கைக்கு ஒரு புது அர்த்தம் கிடைக்கும்னு... உள்ளூர பட்சி எப்போ சொல்லுதோ, அப்போ நான் அந்தப் பொண்ணை இவ தான் மனைவின்னு சொல்லி... உங்க முன்னாடி கொண்டு வந்து நிறுத்தறேன்னு பதில் சொன்னேன்.

"சூரியாவைப் பார்த்ததுமே எனக்குள்ளே பட்சி சொல்லிடுச்சு 'நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? நல்முத்தோட அருமை தெரியாம... குப்பையில வீசியிருக்காங்க...

"சூரியா சம்மதிச்சா நான் அவங்களைக் கல்யாணம் செய்துக்கத் தயாரா இருக்கேன். நண்டும் சிண்டுமா இருக்கற ரெண்டு பிஞ்சுகளுக்கு நான் நல்ல தகப்பனா இருப்பேன்.

"சூரியாவுக்கு நல்ல ஆத்மார்த்தமான சிநேகிதனா இருப்பேன். சூரியாவை உள்ளங்கையில் வச்சுத் தாங்குவேன்.

"எங்கப்பா கூட போயிட்டாரு... ஓடி ஓடி சம்பாதிச்சு என்ன பிரயோஜனம்? வாழ்க்கை... வறண்ட பாலைவனமா



இருக்கு... சூரியா எனக்குக் கிடைச்சா... அது லட்சோப லட்சம் பூக்கள் பூத்துக் குலுங்கற சோலைவனமா மாறும்னு நா நம்பறேன்.

"மாமி! சூரியா இதுக்கு சம்மதிப்பாளா? சந்திரா ஆன்ட்டி நான் உங்க மூத்த மகனாச்சே? உங்க அண்ணன் பொண்ணையே உங்க முன்னாடி நிறுத்தியிருக்கேன். இனிமே உங்க பொறுப்பு.

"உதயா பிடிவாதமா இருக்காங்க இல்ல... விட்டுத் தள்ளுங்க எங்க விஷயத்தை முதல்லே கவனிங்க...." என்று கூறிவிட்டு சூரியாவின் இரு குழந்தைகளையும் வாரி அணைத்துத் தூக்கியபடி... சூரியாவின் அருகில் வந்தான் ரகு.

"பெண்மையை மதிக்கிறவன் நான். ஒரு நல்ல மனைவி... ஒரு ஆணுக்கு மனைவியாகவும், தாயாகவும், மகளாகவும், மந்திரியாகவும், நல்ல சிநேகிதியாகவும் இருக்க முடியும்.

"ஒரு நல்ல கணவனும் அப்படித்தான்... கணவனாகவும், சிநேகிதனாகவும், தந்தையாகவும், வழிகாட்டியாகவும், மகனாகவும் இருக்க முடியும்... நான் உனக்கு நல்ல கணவனா இருக்க ஆசைப்படறேன்.

"காதல்லே தோல்வியடைஞ்சு ரணப்பட்டவன் நான். நீயும் நிறையவே காயப்பட்டிருக்கே... ஒருத்தருக்கொருத்தர் மருந்தா இருப்போம்... ஆதர்ச தம்பதிகளா வாழ்ந்து காட்டுவோம்.

"நீ எனக்கு மனைவியானா... கிச்சனுக்குள்ளேயே உன்னை முடக்கிப் போட மாட்டேன். முடங்கிப் போகவும் அனுமதிக்க மாட்டேன். உனக்குள்ளே இருக்கற திறமைகளை வெளிக் கொணர்ந்து உசந்து காட்டணும்.

''உன்னைக் கால்லே போட்டு நசுக்கின தறுதலைங்க முன்னாடி வாழ்ந்து காட்டணும்.''

சூரியா கல்லாய் சமைந்து நின்றாள். உதயாவுக்குள் மகிழ்ச்சிக் கொப்புளங்கள் வெடிக்க ஆரம்பித்தன.

'சூரியாவுக்கு இப்படி ஒரு திருப்பமா?... அக்காவுக்கு விடிவு காலம் பிறந்து விட்டதே... வீரபாண்டி கவுமாரி தாயே... அக்கா இதுக்கு சம்மதிச்சா... உனக்கு குளிரக் குளிரப் பாலாபிஷேகமும், இளநீர் அபிஷேகமும் பண்றேன்.

''இப்படி ஒரு உத்தமரோட அக்கா அமோகமா சந்தோஷமா வாழணும். அதை நான் கண்ணாரப் பார்க்கணும் தாயே.''

உள்ளம் உருக மனதார அம்மனை வேண்டிக் கொண்டாள் உதயா.

''இப்படியொரு தங்கமான பிள்ளை கிடைக்க... நீ கொடுத்து வச்சிருக்கணும் சூரியா... நீயாவது எங்க வார்த்தைக்கு மதிப்பு குடுத்து இதுக்கு சம்மதிச்சா... ரொம்ப சந்தோஷப்படுவோம்டா.''

கெஞ்சும் தொனியில் பேசினார் பத்மநாபன்.

சந்திராவின் விழிகளில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. சூரியாவின் அருகில் வந்து அவளது உச்சந்தலையை இதமாக வருடினார்.

நடுங்கும் கரத்தால் சில்லிட்டுப் போன சூரியாவின் வலது கையைப் பற்றி... ரகுவை சமிக்ஞையால் அருகில் அழைத்து... அவனது கையுடன் சேர்த்துப் பிடித்தார்.

''சூரியா! நீ ஒரு இளம் வயசுப் பொண்ணுடி... ரெண்டு பெண் குழந்தைகளை வச்சுக்கிட்டு... இந்த சமுதாயத்துலே தனியாப் போராடவே முடியாதும்மா...



''கடவுள் உன் கஷ்டத்தைப் பார்த்து மனம் இளகி கண் திறந்து பார்த்திருக்காரு... உன் வாழ்க்கை சரியா அமையலேங்கிறதுக்காக... உன் குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக... தனக்கொரு வாழ்க்கையே வேணாம்கிறா உதயா... தனி மரமா கடைசி வரை நிக்கிறேன்னு சொல்றா பாத்தியா?

''உன் தங்கைக்காக... எங்களுக்காக... உன் பெண் குழந்தைகளுக்காக... நீ இதுக்கு சம்மதிக்கணும் சூரியா... இது இருபத்தொண்ணாம் நூற்றாண்டு... நாம நமக்காக வாழறதுல தப்பில்லைம்மா.''

அம்புஜம் மாமி பேசிக் கொண்டே விரைந்து வந்தார்.

சூரியா தனது கையை உருவிக் கொள்ளாத வண்ணம்... சூரியா, ரகுவின் கைகளை சந்திரா இறுகப் பற்றி இருந்தார்.

அம்புஜம் மாமியும் அவர்களது கைகளைப் பிடித்துக் கொண்டபடி பேசிய காட்சி... அனைவரது மனதையும் பாகாக உருக வைத்தது.

சூரியாவுக்கு வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளிவராமல் புரட்சி செய்தன.

## 20

உதயாவின் இதயம் இரும்பு குண்டாய் கனத்துக் கொண்டிருந்தது.

மறுநாள் அவளுக்கு எந்த வேலையும் ஓடவில்லை. நேற்றிரவு மாமி பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் தீங்கங்குகளாய்... அவளது மனதை பொசுக்கிக் கொண்டிருந்தன.

''அக்கா மேல இவ்ளோ பாசம் வச்சிருக்கற பெண்ணை... உலகத்துலேயே பார்க்க முடியாதுன்னு... உன்னைப் பத்தி

பெருமையா நெனச்சுண்டிருந்தேன். ஆனா அக்காவுக்கு கிடைக்கற புது வாழ்க்கைக்கு நீயே முட்டுக் கட்டையா இருப்பேன்னு... நான் நெனக்கலைடி உதயா.''

''ஐயோ! என்ன மாமி சொல்றீங்க?''

''நீ சந்துருவைக் கட்டிக்க சம்மதிச்சாத்தான்... சூரியா மறு கல்யாணத்துக்கு ஒத்துப்பாளாம். அக்காவோட கண்டிஷனுக்கு ஒத்துக்கோயேன்.''

''மாமி! என்னை அடைய முடியலேங்கிற வெறியில ரங்கன்... சந்துருவை ஏதாச்சும் பண்ணிடுவானோன்னு பயமாயிருக்கு...''

''போடி மக்கு! சந்துருவும் ரகுவும் கம்ப்ளைண்ட் பண்ணினதால... கேசவனை போலீஸ்காரங்க அள்ளிண்டு போய் 'நல்லா' கவனிச்சாங்களாம்... ரங்கன் இனிமே வாலைச் சுருட்டிண்டு பதுங்கிக்குவான்.''

''இல்ல மாமி! அவன் பதுங்கிக்கற டைப் இல்ல... வேணாம் மாமி... வீண் தர்க்கம் வேணாம்... சந்துருவைக் கட்டிக்க எனக்கு இஷ்டமே இல்ல மாமி... விட்ருங்க.''

''சூரியா மேல உனக்குப் பாசமே இல்லைடி... நீயும் கரையேறாம... அவளையும் வாழ விடாம பண்ணிட்டிருக்கே...'' முனகியபடி முதுகு காட்டிப் படுத்துக் கொண்டார்.

தலையணை நனையும் வண்ணம் வெகு நேரம் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள் உதயா. மறுநாள்...

அரைத்த சட்னியில் உப்பைப் போடுவதற்கு பதிலாக... சர்க்கரையைப் போட்டு விட்டு திருதிருத்தாள்.

''ஐயோ! உதயா சந்துருவோட ஆபீஸ்லே ரங்கன் நுழைஞ்சு கத்தியால... கத்தியால... ஐயோ நான் எப்படி சொல்வேன்? இப்போத்தான் பத்மநாபன் சாரோட டிரைவர் வந்து சொல்லிட்டுப் போறான்... சந்துருவோட கதி இப்படியா ஆகணும்?''

அலறியடித்துக் கொண்டு ஓடி வந்த மாமி பெருங் குரலில் புலம்பினார்.

''நான் பயந்தது மாதிரி ஆயிடுச்சே? சந்துரு... என்னால தானே உங்களுக்கு இந்த கதி?'' குமுறி அழுதபடி தன்னை மறந்து புலம்பிய வண்ணம்... தெருவில் இறங்கி ஓடினாள்.

தேம்பிக் கொண்டே மூச்சைப் பிடித்தபடி ஓடோடிச் சென்றவள்... மெயின் ரோட்டிலிருந்த சந்துருவின் நிறுவனத்தை அடைந்தாள்.

ரிசப்ஷன் ஹாலில் சோகமே உருவாக நின்று கொண்டிருந்தார் பத்மநாபன்.

சிவந்த விழிகளுடன் அவரது அருகில் நின்றிருந்த ரகுவின் அருகே வந்தாள் உதயா.

''ச... சந்துருவுக்கு என்னாச்சு? உ.... உயிருக்கு ஏதாச்சும் ஆபத்தா?'' இதைக் கேட்டு முடிப்பதற்குள்... அவளது உடம்பிலிருந்த உயிரை யாரோ உருவி எடுத்து விட்டது போலிருந்தது.

அவள் கேட்ட கேள்விக்கு பதிலொன்றும் சொல்லாமல்... முகத்தை கர்ச்சீப்பால் மூடிக் கொண்டு உடல் குலுங்கினான் ரகு.

அவன் சுட்டிக் காட்டிய அறையின் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்த சந்துரு... டேபிளின் மீது தலை கவிழ்ந்தபடி கிடந்தான். விம்மிக் கொண்டே அருகில் சென்றாள்.

'ஐயோ! கத்திக் குத்து பட்டு குற்றுயிரும் கொலையுயிருமாகக் கிடக்கிறீங்களே?

'உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறதா? அல்லது ஒரேயடியாக என்னை விட்டுப் போயிட்டீங்களா?'

துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''சந்துரு! என்னை விட்டுட்டுப் போயிட்டீங்களா? நான் உங்களை மனசார விரும்பறேன்... உங்களுக்கு இப்படியொரு கதி ஏற்பட்டுடும்னு பயந்து தான்... நான் கல்யாணத்துக்கு சம்மதிக்கலை. உங்களை உயிருக்கு உயிரா நேசிக்கிறேன்.

''உங்க நெனப்புலேயே... அந்த சுகத்துலேயே காலம் எல்லாம் வாழ்ந்துடலாம்னு இருந்தேனே? என்னால தானே உங்களுக்கு இந்த கதி?

''இனி நான் யாருக்காக வாழணும்? யாருக்கும் முட்டுக் கட்டையா நான் இருகக மாட்டேன்... இனி இந்த பூமிக்கு பாரமா நான் வாழறதுலே... அர்த்தமே இல்ல...

''நீங்க இல்லாத இந்த உலகத்துல... நான் வாழவே மாட்டேன் சந்துரு.''

முகத்திலறைந்து கொண்டு கோவென்று கதறினாள் உதயா.

சட்டென்று எழுந்து நின்றான் சந்துரு. கதறிக் கொண்டிருந்தவளின் புஜத்தில் கை வைத்தான்.

''ச... சந்துரு! உ.... உங்களுக்கு ஒண்ணும்...'' அதற்கு மேல் பேசத் திராணியற்றவளாய்... கதறி அழுதபடி அவனது தோளில் சாய்ந்தாள் உதயா.

அவளது கரங்கள் அவனது கழுத்தில் மாலையாயின.

''கண்ட்ரோல் யுவர் செல்ஃப் உதயா! எனக்கு ஒண்ணும் ஆகலை... என் மேல உயிரையே வச்சிருக்கே... உன் மனசுல பொங்கற அன்புக்கு அணை போட்டே வச்சுட்டியே?'' அவளது கூந்தலை வருடினான்.



''ரங்கனால உங்க உயிருக்கு...'' திணறினாள்.

''குலைக்கிற நாய் கடிக்காது உதயா... கேசவனையும் ரங்கனையும் போலீஸ் நாலு தட்டு தட்டினதுமே... அவன் பொட்டிப் பாம்பா அடங்கிட்டான்... இனிமே நீங்க இருக்கிற திசைப் பக்கம் கூட தலை வச்சுப் படுக்க மாட்டேன்னு சொல்லிட்டான்... போதுமா?''

''நிஜமாவா?''

''சத்தியமா... சரி... இப்ப சொல்லு... சிரிச்ச முகத்தோட இந்த அத்தானைப் பார்த்து 'ஐ லவ் யூ'ன்னு சொல்லேன்.''

''நீங்களும் ரகுவுமா சேர்ந்து... என்னை இப்படிக் கலங்க வைச்சுட்டீங்களே?'' வெட்கத்தில் முகம் குங்குமமாய் சிவக்க... மெல்ல விலகப் பார்த்தாள்.

''பேச்சை மாத்தப்படாது... பதில் சொல்லு'' விழிகளில் அன்பு ததும்பி வழிய... அவனை ஏறிட்டாள் உதயா.

''கோவில் வாசல்லே... முதன் முதலா உன்னை சந்திச்சப்போ விழப் பாத்தியே? அப்போ தாங்கிப் பிடிச்சேன் பாரு... உண்மையிலே அப்போ நான் தான் நிலை தடுமாறி விழுந்துட்டேன் தெரியுமா உதயா?''

''நீங்க விழுந்தீங்களா?'' முகத்தில் திகைப்பு பரவ அலங்க மலங்க விழித்தாள்.

''உம்... உன் விழியில் விழுந்தேன்... விண்வெளியில் பறந்தேன்... கண் விழித்துச் சொப்பனம் கண்டேன் உன்னாலே...''

முத்துப் பல் வரிசை தெரிய 'களுக்' என்று சிரித்தாள் உதயா.

"மனசுலே இவ்ளோ ஆசையை வச்சுக்கிட்டு இஷ்டமே இல்லைன்னு பொய்யா சொன்னே?" என்று கேட்டபடி உள்ளே நுழைந்தாள் சூரியா.

"நல்லாக் கேளும்மா" சூரியாவின் இளைய மகளைச் சுமந்தபடி ரகு வந்தான்.

குழந்தை அருண் குடுகுடுவென்று ஓடி வந்தான்.

பின்னாலேயே... பத்மநாபனும் சந்திராவும் மலர்ந்த முகங்களோடு வந்தனர்.

மடிசார் சரசரக்க அம்புஜம் மாமியும் ஆஜரானார்.

"அக்கா! கிராமத்துலே பொறந்து வளர்ந்தவ நீ... மறு கல்யாணத்துக்கு நீ சம்மதிக்க மாட்டியோன்னு... நான் ரொம்ப பயந்துட்டேன். நீ சம்மதிச்சதே பெரிய விஷயம் அக்கா... புதை மணல்லே இருந்து கடவுள் புண்ணியத்துல தப்பிச்சுட்டே."

சூரியாவை அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டாள் உதயா.

"நமக்கு காவல் தெய்வமா இருக்கற மாமி, பத்மநாபன் மாமா... நம்ம அப்பா ஜாடையில இருக்கற நம்ப அத்தை... இத்தனை பேரும் சொல்றப்போ நான் மறுக்க முடியுமா? முதல்லே அவங்க மனசைக் காயப்படுத்த விரும்பலை... இரண்டாவதா... இப்பேர்ப்பட்ட விசாலமான மனசு படைச்ச மனிதரை மறுக்க முடியுமா?

"அதான் ஒத்துக்கிட்டேன்!" முறுவலித்தாள் சூரியா.

"எங்க சந்துரு அங்கிளை நீங்கதான் கல்யாணம் செய்துக்கப் போறீங்களா?" அண்ணாந்து பார்த்த அருணை வாரி அணைத்துக் கொண்டாள் உதயா.

சூரியாவையும் உதயாவையும் அருகில் அழைத்து ஆசையுடன் உச்சி முகர்ந்தார் சந்திரா.



"சரி... மனசுக்கு நிறைவா இருக்கு... நேரா வீரபாண்டி அம்மனை சேவிச்சுட்டு சென்னைக்குக் கிளம்ப வேண்டியது தான்" சிரித்தார் பத்மநாபன்.

"மாமி! அப்போ 'தாயார் மெஸ்' என்னாகறது?"

"நான் தைலாவுக்கு போன் பண்ணிட்டேன். சின்னையா தங்கம் தம்பதிகள் கிட்ட ஒப்படைச்சுக்கிட்டுக் கிளம்பச் சொல்லிட்டா."

"தைலா மாமிக்கு நன்றி தெரிவிக்கணுமே மாமி?"

"உம் கல்யாணமாகட்டும்! தம்பதி சமேதரா... ரெண்டு ஜோடிகளுமா போய் அவளண்ட ஆசீர்வாதமே வாங்கிக் கோங்களேன்."

"டன்! அப்படியே பண்ணிடலாம்" ரகுவும் சந்துருவும் கோரஸாய் சொன்னதும் அனைவரும் கலகலவென்று சிரித்தனர்.

மந்தகாசமாய் சிரித்த சூரியாவின் முகத்தில் சோபையும் பொலிவும் போட்டி போட்டுக் கொண்டு தாண்டவமாடின.

விழிகள் விரிய தமக்கையின் அழகு முகத்தைப் பார்த்த உதயாவின் மனம் இறகு போல் இலேசானது.

அவளது அழகிய இதழ்களில் ஒரு குட்டி முறுவல் வந்து அமர்ந்தது.